# என் பரலோக தரிசனங்கள்



**Dr. டி.ஜி.எஸ். தினகரன்**

அவர்களுக்கு கர்த்தரால் அருளப்பட்ட
பரலோகத்தைக் குறித்த
இயற்கைக்கப்பாற்பட்ட
தரிசனங்களின் ஓர் தொகுப்பு

en

# என்

# பரலோக

# தரிசனங்கள்

சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன்

ஸ்தாபகர் இயேசு அழைக்கிறார் ஊழியங்கள்

All Rights Reserved
under international copyright law.
Contents and / or cover may not be reproduced
in whole or in part in any form without the express written
consent of the publisher.

**Copyright 2008 by Mrs. Stella Dhinakaran**

***Published by :***
**JESUS CALLS**
16, Greenways Road,
Chennai - 600 028.
Ph: +44-2495 5555
Web: www.jesuscalls.org

Marketed by : Rainbow Vision

Printed at : Vasanth Prints, Chennai, India
E-mail : t.simonpeter@yahoo.co.in

# பொருளடக்கம்


| | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | V |
| | அணிந்துரை | VII |
| | நன்றியுரை | XI |
| 1. | கிருபையின் தொடுதல் | 1 |
| 2. | இயற்கைக்கப்பாற்பட்ட தொடுதல் | 17 |
| 3. | மகிமையின் தொடுதல் | 35 |
| 4. | நித்திய வாழ்வின் தொடுதல் | 49 |
| 5. | ஆறுதலின் தொடுதல் | 73 |
| 6. | வாழ்வின் இறுதிவரை தொடுதல் | 89 |
| 7. | நம் பரம தகப்பனின் தொடுதல் | 109 |
| 8. | தேவதூதர்களின் தொடுதல் | 121 |
| 9. | சோதனைக்காரனின் தொடுதல் | 139 |
| 10. | உண்மையுள்ள உத்தமரின் தொடுதல் | 159 |

# முகவுரை



Dr. D.G.S. தினகரன் அவர்களை நான் அநேக ஆண்டுகளாக அறிந்திருக்கிறேன். அவரோடுகூட இருக்கும்போதெல்லாம், அவருடைய தாழ்மையான ஆவியைக் கண்டு தேவன் அவருக்கு தருகிற ஆழமான வெளிப்படுத்துதல்களைக் கேட்டு, நான் எப்பொழுதும் பரவசமடைந்திருக்கின்றேன்.

அவர் தனது சரீர சுகவீனங்கள் மத்தியிலும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை இந்தியாவிற்கும், உலகின் பல நாடுகளுக்கும் கொண்டு செல்வதற்காக விடாமுயற்சியுடன் கடுமையாக உழைத்திருக்கிறார். உலகில் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும், ஜனங்களில் மிகவும் தாழ்மையானவர்களுக்கும் அவர் ஆசீர்வாதமான வார்த்தைகளையும், உற்சாகமான வார்த்தைகளையும் கூறியிருக்கிறார்.

**'என் பரலோக தரிசனங்கள்'** என்ற இந்த புத்தகம் முற்றிலும் வியப்புக்குரியதே! இது பூமியில் வாழும் நமக்கு, தேவத்துவத்தின் தன்மையையும், அருமை இரட்சகராகிய பரம தகப்பன் காண்பிக்கும் கரிசனையையும், நம் மனக்கண்களுக்குமுன் அழகிய காட்சிகளாக காண்பிக்கிறது. தேவாதி தேவனோடு இத்தனை ஆழ்ந்த, பரந்த அறிவும், அனுபவங்களும் பெற்றுக் கொண்ட ஒரு நபரை பழைய, புதிய ஏற்பாடுகளிலிருந்தும்கூட என்னால் நினைவுகூர இயலவில்லை. இந்த புத்தகத்தை வாசித்து முடித்தபின், பக்தி பரவசத்தோடுகூட "நம் தேவன் எத்தனை பெரியவர்!" என்று நம்மை வியந்து போற்ற தூண்டும்.

Dr. M.G. பேட் ராபர்ட்சன்
தலைவர் மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி
கிறிஸ்தவ ஒளிபரப்பு மையம் U.S.A.

# அணிந்துரை

ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன், மாபெரும் நற்செய்தி கூட்டம் ஒன்று, உலகப்பிரசித்தி பெற்ற சென்னை மெரீனா கடற்கரையின் வெள்ளி மணற்பரப்பில் நடைபெற்றது. ஜனங்களுக்கு ஊழியம் செய்ய, என்னுடைய நேரத்திற்காக நான் காத்துக் கொண்டிருக்கையில், Dr. வசந் எட்வர்டு என்ற தேவ மனிதர், தன் இருக்கையை என்னருகில் இழுத்துப் போட்டு அமர்ந்தார். "நான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்" என்று பாசமான குரலில் பின்வருமாறு தொடர்ந்தார். "என் அருமை சகோதரனே, பரலோகத்திற்கு போகிறவர்கள் மீண்டும் திரும்புவதேயில்லை. ஆனால், நீங்கள் அதற்கு விதிவிலக்கு. பரிசுத்த ஆவியானவர் கிருபைகூர்ந்து, பலமுறை உங்களை பரலோகம் கொண்டு சென்று, ஒவ்வொருமுறையும் ஒரு புதிய அனுபவம், வெளிப்பாடு பெறச்செய்து மீண்டும் இவ்வுலகிற்கு திரும்பி வர செய்திருக்கிறார். ஆகவே, இவ்வுலக வாழ்வின் மறுபக்கத்தில், அதாவது, பரலோகத்தில் நீங்கள் பார்த்தவற்றை யெல்லாம் முழு உலகுக்கும் தெரிவிப்பது உங்களுடைய கட்டாய கடமையாகும். ஆண்டவர் உங்களுக்கு பரலோகத்தில் காண்பித்த வற்றை தொகுத்து, ஒரு புத்தக வடிவில் உங்களால் வெளியிட முடியும் என்று நான் உறுதியாய் உணருகிறேன். அப்போது, **மரணத்திற்கு பின் இருக்கின்ற வாழ்வை** குறித்த தவறான கருத்துக்களையும், அடிப்படை இல்லாத தேவையற்ற பயங்களையும், மக்களின் உள்ளத்திலிருந்து விரட்ட உதவும். எப்படியாவது பரலோகத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் என்கிற தணியாத தாகத்தை அவர்களில் உருவாக்கும். இவ்வுலக ஓட்டம் ஒரு நாளில் முடிந்தவுடன், பரலோகம் சென்று, அங்கு வாசம் செய்வதற்காக, எந்த விலை கொடுத்தாவது தங்களை தகுதிப்படுத்தும்படி முயற்சிசெய்ய தொடங்குவார்கள்" என்றார். உலகில் வழிதவறிய ஆத்துமாக்கள்மீது அவர் கொண்டுள்ள கரிசனையுள்ள வார்த்தைகளாய் அவை எதிரொலித்து, என்னில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

இதேபோன்று பல தேவ ஊழியர்களும் அநேக ஆதரவாளர்களும் கேட்டுக் கொண்டேயிருந்தனர்.

2002ஆம் ஆண்டு, என்னுடைய பரலோக தரிசனங்களையெல்லாம் நினைவிற்குக் கொண்டுவந்து, அவைகளை வரிசைப்படுத்தி, என் அலுவலக ஊழியர்கள் திரு.A.V.சாம்ஸன், திரு.V.சஜீத் பிரவீன் பிரிஸ்டல், திரு.M.ரோமியோ இவர்களின் துணைகொண்டு ஒளி நாடாக்களில் பதிவுசெய்ய முற்பட்டேன். எனினும், அதற்குமேல் எந்த

முயற்சியிலும் ஈடுபடவில்லை. சுமார் 5 வருடங்களுக்குப் பின், ஆண்டவர் இரக்கமாய் அன்புமிக்க போதகர் ஜோ ஸ்வீட் அவர்களை (Shekinah Worship Centre), C.A. 93534, USA, எங்கள் நண்பரான திரு. சாது செல்வராஜ் (Trinity Television Private Limited, சிங்கப்பூர்) அவர்கள் மூலமாக கொண்டு வந்து, இதை எழுதவும் வெளியிடவும் அவரால் நான் உற்சாகப்படுத்தப்பட்டேன். எல்லா விதங்களிலும் அவர் முழு உள்ளத்துடன் தன் ஆதரவை அளித்தார். அவரிடமிருந்தும், அவருடைய அற்புதமான சபை மக்களிடமிருந்தும் நான் பெற்ற ஆதரவினாலும், உதவியினாலுமே இப்புத்தகம் வெளியிடப் பட்டுள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை.

கீழ்க்கண்ட 'இயேசு அழைக்கிறார்' அலுவலக ஊழியர்களும் என்னோடு சேர்ந்து இரவு பகலாக அநேக நாட்கள் இந்த பணியில் ஈடுபட்டனர்.

1. Dr.ஜாக்குலின் எர்னஸ்ட்
2. திரு. H.ரஜீவ்
3. திரு. G.மெல்வின் ராஜதுரை

இயேசு அழைக்கிறார் ஊழியத்தை சார்ந்த திரு. P.தேவதாஸ், திரு. P.பிரதீப் ஜான், திரு. சாம் ஆடம் பக்தராஜன், திரு.S.பிலிப் தேவநேசன் ஆகியோரும் இதில் உழைத்திருக்கிறார்கள்.

திரு.E.D.செல்லதுரை, மொழிபெயர்ப்பு மையம், இந்திய சர்வதேச வேதாகம சங்கம், பெங்களூர், திரு.J.வரதராஜன், ஆல்ஃபா, சர்வதேச ஊழியங்கள், பெங்களூர் இவர்களும் உதவிகரம் கொடுத்தார்கள்.

அதற்குபிறகு ஆண்டவர், திருமதி மிஸ்பா மைக்கேல் (மிஸ்பா பிரசுரிப்பு சேவைகள் தனியார் லிமிடெட், சென்னை, இந்தியா), அவர்களை ஈவாக எனக்குக் கொடுத்தார். இப்புத்தகத்தை சர்வதேச தரத்திற்கேற்ப வெளியிடுவதற்கான அனைத்து உதவிகளையும் அவர்கள் செய்தார்கள். தன் சொந்த அலுவலக பளுவின் மத்தியிலேயும் இதை செய்து முடிக்க இரவு பகலாய் கடினமாய் உழைத்தார்கள்.

அதோடுகூட என் இல்லத்திலும், ஆண்டவரால் எனக்கு அருளப்பட்ட என் மனைவி திருமதி ஸ்டெல்லா தினகரன், மகன் பால் தினகரன், அவனுடைய அருமை மனைவி திருமதி இவாஞ்சலின் பால் தினகரன், மிகுந்த ஜெபத்தோடுகூட, ஞானமுள்ள மற்றும் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளினால் என்னை ஊக்குவித்து, மனதார என்னை அரவணைத்து தாங்கினார்கள். என் பேரப் பிள்ளைகள் சாமுவேல், ஷேரன், ஸ்வீட்டியும்கூட அவர்களுக்கே உரித்தான முறையில் இப்புத்தகத்தைக் குறித்து அக்கறையுடன் விசாரிப்பதுண்டு.

இவற்றின் வெற்றி மகுடமாக, டாக்டர் M.G.பேட் ராபர்ட்சன், தலைவர் மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி, கிறிஸ்தவ ஒளிபரப்பு

மையம், வெர்ஜீனியா பீச், VA23463, USA அவர்களின் அற்புதமான 'முகவுரையை' ஈவாக பெற்றேன். எப்பொழுதெல்லாம் இதை வாசிக்கிறேனோ அப்பொழுதெல்லாம் என்மீதும் என் ஊழியத்தின் மீதும் அவர் கொண்டிருக்கிற ஆழ்ந்த பாசத்தையும், பாராட்டுதலை யும் உணர்ந்து, நான் நன்றிக் கண்ணீர் வடிப்பதுண்டு.

நமது அருமை ஆண்டவர் தாமே இந்த அன்பானவர்களை யெல்லாம் கீழ்க்காணும் வசன்த்தின்படியே அபரிமிதமாய் ஆசீர்வதிப்பாராக.

> ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.
>
> தானியேல் 12:3

இப்புத்தகத்தின்மூலம் பயனடையட ் உலகம் முழுவதிலு முள்ள கோடான கோடி மக்களின் ஆசீ ளும் அவர்கள்மேல் வருவதாக. இந்த புத்தகம் தனித்தனியே ஒ ்வாரு வாசகருக்கும், கிருபையுள்ள ஆண்டவரின் மாட்சிமையான வருகைமட்டும் மெய்யான பாக்கியத்தை அருளுவதாக! எல்லா மகிமையும் மகத்து வமும் சிலுவை நாதர் இயேசுவுக்கே! ஒருநாளில் நாம் பின்வருமாறு பாடுவோம்.

1. ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
   விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
   நம் பிதா அழைக்கும் பொழுது
   நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்.

      இன்பராய்... ஈற்றிலே...
      மோட்சக்கரையில் நாம் சந்திப்போம்
      இன்பராய்... ஈற்றிலே...
      மோட்சக்கரையில் நாம் சந்திப்போம்

2. அந்தவான் கரையில் நாம் நின்று
   விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
   துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
   சுத்தரின் ஆறுதல் அடைவோம்.

# நன்றியுரை

ஜனவரி 2008-ல், சகோதரர் தினகரன் அவர்கள் இப்புத்தகத்தினை ஆங்கில மொழியினின்று தமிழாக்கம் செய்வதற்கென, **"அன்றன்றுள்ள அப்பம்" ஊழியத்தின் ஸ்தாபகர் சகோதரர் J.சாம் ஜெபத்துரை** அவர்களிடம் தன்னுடைய விருப்பத்தை தெரிவித்த போது, உடனடியாக அவர் அதை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார். ஆனால், இந்த புத்தகம் தமிழில் வெளிவருவதற்கு முன்பதாகவே, சகோதரர் டி.ஜி.எஸ்.தினகரன் அவர்கள், பெப்ரவரி 20ஆம் தேதியன்று, நித்தியத்திற்குள் பிரவேசித்து விட்டார். எனினும், எங்கள் உடன்பிறவா சகோதரரும், தேவ ஊழியருமான சகோதரர் J.சாம் ஜெபத்துரை அவர்கள், தன்னுடைய அளவற்ற ஆவிக்குரிய அலுவல்கள் மத்தியிலும், இப்பெரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டதோடு அதை வெகுவிரைவில் முடித்துக் கொடுத்த அவருடைய மெய்யான அன்பிற்காக, ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

மேலும், இந்த புத்தகம் நேர்த்தியான நடையில் வெளிவர பேருதவியாக இருந்த அன்பு **சகோதரி ஈடித் ஹோப் குணசிங்** அவர்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றி. **அருட்தந்தை டாக்டர் S.T.நோவா** அவர்களுக்கும், **போதகர் P.குமார்** அவர்களுக்கும் எங்கள் வாழ்த்துக்கள். இந்த புத்தகத்தை அச்சிட்டு வெளியிடுவதற்கான தொகையின் ஒரு பகுதியை நன்கொடையாக வழங்கிய அன்பு **சகோதரி Dr. சௌந்தரவல்லி ஹாரீஸ்** அவர்களுக்கும், **சகோதரர் பிரபாகர் டேவிட்** குடும்பத்தினருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

> **"...நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்"**
>
> ஏசாயா 32:20

என்ற வேத வாக்குப்படியே, ஆயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களில், பரலோக இரகசியங்கள் விதைக்கப்படுவதற்கு ஏதுவாக, தங்கள் உழைப்பின் ஒரு பகுதியை விதைத்திருத்திருக்கிற இந்த அன்பான மக்களையும், அவர்கள் பிரயாசங்கள் யாவற்றையும் தேவன் தாமே மென்மேலும் ஆசீர்வதிப்பாராக!

மே 2008 — சகோதரர் தினகரன் குடும்பத்தினர்

# கிருபையின் தொடுதல் 1

*ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்;...*

*I கொரிந்தியர் 15:10*

**என் பரலோக தரிசனங்கள்** என்ற இந்நூலிலுள்ள ஆழங்களை தியானிக்கும் முன் இப்புத்தகத்தை புதியதொரு முறையில் தொகுத்தளிக்க ஏன் துணிந்தேன் என்பதை நீங்கள் அறிய என்னையும் என் அனுபவச் சான்றுகளையும் பற்றிய ஓர் அறிமுகம் தேவை என்று என் உள்ளத்தில் உணர்ந்தேன். என் ஆவிக்குரிய வாழ்வை பொறுத்த மட்டில், நான் ஒரு எளிய மனிதன். **கிருபையால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவி.** இருபது வயது நிரம்பிய இளைஞனாயிருக்கும்போதே, படிப்பில் தோல்வி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற கடுமையான தாக்குதல்களுக்குட்பட்டு தற்கொலை செய்ய தீவிரமாகத் திட்டமிட்டு முயன்றவன் நான். கர்த்தர் என் வாழ்வில் கிருபையாக இடைபட்டு என்னைப் பாதுகாத்தமையால், என் வாழ்வு முற்றிலும் மாறியது மட்டுமல்ல, தெய்வீக சமாதானம் என் உள்ளத்தை நிரப்பியது. இவ்வுலக வாழ்வின் ஓட்டத்தை தொடர்ந்து ஓட இயற்கைக்கப்பாற்பட்ட ஓர் உறுதியான நம்பிக்கை எனக்குள் எழுந்தது.

## ஆத்துமாக்களுக்கான தீவிர பாரம்

அந்நாள் முதல், இதேவிதமான காரணங்களாலும், பல்வேறு வற்புறுத்தல்களாலும் தங்கள் வாழ்வையே முடித்துக்கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களைப் பற்றிய பாரம் என்னுள்ளத்தை அழுத்தியது. **இப்படியாக அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களைப் பற்றிய தீராத வாஞ்சை என் ஆத்துமாவை பற்றிக் கொண்டது.** இந்த தீராத தாகமே, நான் தேவனை அயராது தேடவும், ஆவிக்குரிய கனியோடும், வரங்களோடும் கூடிய பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நாடுவதற்கும் எப்பொழுதும் என்னை உந்திக் கொண்டேயிருந்தது. இவ்வுலகில், இதைப் போன்று நம்பிக்கையிழந்த திரளான ஆத்துமாக்களை சந்தித்து, "கர்த்தருக்குள் இன்னும் உங்களுக்கு நம்பிக்கை உண்டு" என்று பகிரங்கமாக பிரஸ்தாபம் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டேன்.

எந்த இறையியல் கல்லூரியிலும் சேரும் வாய்ப்புகளோ, வசதியோ எனக்கு கிடைக்கவில்லை. ஆகவே, என் வேதாகம அறிவெல்லாம், திருமறையின் பக்கங்களை தியானிப்பதிலும்,

ஆண்டவருடைய பரிசுத்த ஆவியின் நேரடி தொடர்பின் மூலமாக வும் அருளப்பட்டவையே. இதையே அப்போஸ்தலனாகிய பவுல் பின்வரும் வசனத்தில் கூறுகிறார்.

> நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப் படுத்தினார்.
>
> *கலாத்தியர் 1:12*

**என் பரலோக தரிசனங்கள்** அதேவிதமான முறையிலேயே எனக்கு அருளப்பட்டது. 28 ஆண்டுகளாக வங்கியில் ஒரு பொறுப் புள்ள பதவியை வகித்துக்கொண்டிருந்தேன். அந்த நாட்களில், ஆண்டவரின் அன்பின் செய்தியை பரப்புவதிலும் ஈடுபட்டிருந்ததால், **இரண்டு எஜமான்களுக்கு** ஊழியம் செய்யும் ஒரு நிலைமையில் இருந்தேன். கடினமாக உழைத்த அந்த நாட்களில் நான் பெற்ற பரலோக தரிசனங்களே இந்த நூலில் நினைவு கூறப்பட்டுள்ளது. அந்த பாதையிலே என்னை ஏந்தி, தொடர்ந்து வழிநடத்தியது **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையே.** சுருங்கச் சொன்னால், **'நான் இருக்கிறது' ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலேயே** (I கொரிந்தியர் 15:10). இதே கருத்து பின்வரும் வேத வசனத்திலும் பிரதிபலிக்கிறது.

> நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் (தேவனை) துதியுங்கள்; அவர் கிருபை **என்றுமுள்ளது.**
>
> *சங்கீதம் 136:23*

## என் கடினமான இளமை பருவம்

என் பெற்றோரின் பின்னணி பற்றிய சில குறிப்புகளை நான் இங்கு சமர்ப்பிக்கிறேன். தமிழ் நாட்டில் சுரண்டை என்று அழைக்கப்படும் ஒரு எளிய குக்கிராமத்தில், 1935ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியில் பிறந்தேன். என் தந்தை திரு.எஸ்.துரைசாமி அவர்கள் கிறிஸ்தவ திருச்சபை நடத்தும் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக் கையில், அங்கு அன்பளிப்பாக அவர் பெற்ற ஒரு புதிய ஏற்பாடு புத்தகத்தின் மூலமாக ஆண்டவராகிய இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டார். ஆண்டவராகிய இயேசுவின் வாழ்க்கையில் அவர்களை வெகுவாய் கவர்ந்த மிக முக்கியமான பண்பு, அவரது மாசற்ற தூய வாழ்க்கையேயாகும். ஆகவே, கிறிஸ்துவினால் ஈர்க்கப்பட்டவராக, எல்லாவிதத்திலும் அவரைக் குறித்து மென்மேலும் அறிய ஆவல் கொண்டார். மறுபக்கம், என் தாயார் திருமதி ஃபேனி ஹெப்சிபா, பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்திலிருந்து வந்தவர்கள். என் தந்தை, தன் விலைமதிப்பான கர்த்தரைப் பற்றி கூடுதலான செய்தியை தனக்கு



சகோதரர் தினகரன் அவர்கள் தன் பெற்றோர் துரைசாமி தம்பதியர் மற்றும் திருமதி ஸ்டெல்லா தினகரன், மகன் பால்தினகரன் ஆகியோருடன்.

கொடுக்கக்கூடிய ஒரு வாழ்க்கைத் துணைவியை தேடிக் கொண்டிருந்த படியால், என் தாயாரை திருமணம் செய்வதில் பேரார்வம் கொண்டார்.

எனது தாத்தா திரு.வி.அப்பாத்துரை அவர்கள், அரசாங்க சேவையில் மிக உயர்ந்த பதவி வகுத்தாலும், வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள ஏனோக்கு, நோவாவைப் போன்று தேவனோடு சஞ்சரித்த ஒரு தேவ மனிதர் (ஆதியாகமம் 5:24; 6:9). சமுதாய வாழ்வில், அவர் பாரம்பரிய வயலின் வித்வானாக நற்பெயர் பெற்றிருந்தார். தேசிய அளவில் பிரபலமான இசை வல்லுநருக்கு பக்க வாத்தியம் வாசிப்பவராகவும் இருந்தார். அதே சமயம், எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் தவறாமல் தேவாலயத்தில் பக்தியுடன், ஆர்கன் இசைக் கருவியை வாசிப்பதுண்டு. இப்படியாக திருச் சபைக்கும் மிகுந்த ஆசீர்வாதமாயிருந்தார்.

எனது தாத்தாவின் நற்பண்புகள் அனைத்தும் என்னை வெகுவாய் கவர்ந்தன. அதிகமான அன்பே உருவானவர். அவரும், என் தாயாரும் தான் வேதாகமக் கதைகளையும், நமது ஆண்டவரைப் பற்றியும் எனக்கு கற்பித்தவர்கள். இருவரும் சபையின் ஞானப்பாடல்களையும், கீர்த்தனைகளையும் என்னை கற்றுக்கொள்ள வைத்தனர். அவற்றை கற்றுக்கொள்வதிலும், பாடுவதிலும், பேரானந்தம் கொண்டேன்.



சகோதரர் தினகரன் பிறந்து வளர்ந்த வீடு, சுரண்டை – தென் இந்தியா

இன்றும் பொதுக் கூட்டங்களில், திரளான மக்களின் முன்பாக என் பிரசங்கங்களுக்கிடையே மிக பரவசத்தோடும் பக்தியோடும் அப்பாடல்களை பாடுவதுண்டு. என் பாடல்களைக் கேட்கும்போதே கணக்கற்ற உடைந்த உள்ளங்கள் குணமாக்கப்பட்டு, தேவனிடம் இழுக்கப்படுகின்றனர். அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். ACD, VCD, DVD மூலமாக பல மொழிகளில் வெளியிடப்படும் சாதாரண இப்பாடல்கள், உலகம் முழுவதிலும் உள்ள லட்சக் கணக்கான சோர்வடைந்த மக்களுக்கு ஆசீர்வாதங்களையும், பேரானந்தத்தையும் கொடுக்கிறது. தேவனுடைய மகிமைக்காக எப்போது பாடினாலும் என் அருமையான தாத்தாவையும், என் அன்பு தாயையும் நினைப்பதுண்டு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## என் கடினமான பள்ளி பருவம்

என் படிப்பைப் பற்றிய சுவையான காரியங்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். என் தந்தை, கணக்குப் பாடத்தை பொறுத்தமட்டில் புகழ்பெற்ற ஆசிரியராவார். அதற்கு மாறாக, நானோ என் பெற்றோருக்கு ஒரு புதிராகவேயிருந்தேன். ஏனெனில், கணக்குப் பாடத்தில் என் மதிப்பெண் என்றும் ஒரே நிலையில் பெரிய பூஜ்ஜியமாகவே *"0"* இருந்தது. அவர்கள் இருவரும், கணக்குப் பாடத்தில் எனக்கிருந்த புரிந்து கொள்ளும் திறனைப் பற்றிய



சகோதரர் தினகரன் (வலது) தனது சக மாணவருடன்
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை, தென் இந்தியா (1952).

நம்பிக்கையை முழுவதும் இழந்தனர். ஆனாலும், தப்பித்துக் கொள்ள ஒரு போக்கையும் ஆண்டவர் தந்தார். அதை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன்.

என் தாத்தா, வேதாகமத்தை பல மொழிகளில் வாசித்து அதன் பின் ஜெபிப்பதை, நான் ஒவ்வொருநாள் அதிகாலையிலும் கவனித்திருக்கிறேன். ஆகவே, ஆண்டு இறுதி கணிதத் தேர்வை நான் சந்திக்கும்பொழுதெல்லாம், என் தாத்தாவின் அறைக்குள் அவர் இல்லாதபோது மெதுவாக நுழைவேன். அங்கு ஆண்டவரிடம், **இந்த ஒருமுறை** அவர் எனக்கு தேர்ச்சிக்குரிய மதிப்பெண் கொடுத்தால் இனி நான் எந்த பழைய குறும்புகளிலும் ஈடுபடாமல் விலகி, எப்பொழுதும் நல்ல பையனாக இருப்பேன் என்று பயபக்தியுடன்கூடிய பொருத்தனைகளை செய்வேன். என்ன ஆச்சரியம்! உண்மையில் விடைத்தாளில் எதையோ கிறுக்கியிருப்பேன், எனினும் தேர்ச்சிபெற நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண்களை கணக்குப் பாடத்தில் ஒவ்வொரு ஆண்டு இறுதித் தேர்விலும் பெற்று விடுவேன். எப்படி இந்த வரையறுக்கப்பட்ட மதிப்பெண்களைப் பெற்றேன் என்பது உண்மையில் அதிசயமாகவும், புரியாத புதிராகவும் இன்றுவரை உள்ளது. எப்படியோ, **தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார்** என்ற உறுதியான நம்பிக்கையை என் மனதின் ஆழத்தில் அது பதித்துவிட்டது.

தேவனுடன் தான்கொண்ட உண்மையான நேரடி சந்திப்புகளின் விவரங்களை என் தாயார் எடுத்துரைத்ததின் பலனாக, ஜெபத்தின் மேலுள்ள வாஞ்சை எனக்குள் பெலப்பட்டது. என் வாழ்வில் இடர்ப்பாடு மிக்க முக்கியமான திருப்பு முனையின் போதெல்லாம், என் தாய், இரண்டு குறிப்பிட்ட சம்பவங்களைப் பற்றி திரும்பத் திரும்ப கூறுவார்கள். அவ்விரு நிகழ்ச்சிகளையும் நான் உங்களுக்கு சொல்லு கிறேன்.

## குழந்தைப் பருவத்தில் போராட்டம்

என் தாயார் தன்னுடைய கர்ப்பத்தில் என்னைச் சுமந்து கொண்டிருக்கும்போது, பிரசவ வேளை நெருங்குகையில், அவர்கள் இளவயதினராக இருந்தபடியால், தனக்கு சுகப்பிரசவமாகுமா என்ற இனம்புரியாத ஒரு திகில் அவர்களைப் பிடித்து வாட்டியது. ஒருநாள் அவர்கள் எங்களுடைய ஆலயத்தில் யாரும் இல்லாத வேளையில் உள்ளே சென்று கர்த்தருடைய சந்நிதியில் முழங்கால்படியிட்டு, வேத புத்தகத்தில் I சாமுவேல் *1:10,11*-இல் உள்ள அன்னாளைப் போல தன் இருதயத்தை ஆண்டவரிடம் ஊற்றினார்கள். “ஆண்டவராகிய இயேசுவே, நீர் எனக்கு சுகப் பிரசவம் அருளி, அந்த குழந்தை ஆண் மகனாக இருக்குமென்றால், அவனுக்கு ‘சாமுவேல்’ என்று பெயரிட்டு, **தேவனுடைய தீர்க்கதரிசியாக** உம் சேவை செய்ய வேதாகமத்தின் தீர்க்கதரிசியாகிய சாமுவேலைப் போல அர்ப்பணிப்பேன்” என்று ஆண்டவரிடம் பொருத்தனை செய்தார்கள் *(*I சாமுவேல் *1:20)*.

கர்த்தர் அவர்கள் மன்றாட்டுக்கு செவிகொடுத்தபடியால், தான் அளித்த வாக்கின்படி ‘சாமுவேல்’ என்று பெயரிட்டார்கள். ஆலயத்தில் பெயர் சூட்டும் நிகழ்ச்சியின்போது, என் தாய் உள்ளத்தின் ஆழத்தில் என்னை ‘தேவனுடைய தீர்க்கதரிசி’ என்று அர்ப்பணித்தார் கள். மிகவும் பாசமுள்ள என் பாட்டியம்மா, தன் பேரன் ஒருநாளில் பேரும் புகழும் பெற்று சூரியனைப்போல் பிரகாசிப்பான் என்று பகிரங்கமாக அறிக்கையிட்டார்கள். (எப்படியும் ஒவ்வொரு பாட்டியும் இவ்வாறு செய்வதுண்டு). ஆகவே, சூரியன் என்று பொருள்படும் ‘தினகரன்’ என்னும் பெயரை, சாமுவேல் என்ற பெயருடன் இணைத்து வைத்தார்கள்.

அடுத்த நிகழ்ச்சியும் என் தாயாரின் விசுவாசத்தின் நேரடி போராட்டமாகவே அமைந்தது. நான் ஒன்றரை வயது குழந்தையாயி ருக்கும்போது, என் வலது கால் இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்டது. அந்த நாட்களில் இதுபோன்ற நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் அளவுக்கு மருத்துவ வசதிகள் முன்னேற்றமில்லா மலிருந்தது. அந்த கால் இயல்பான நிலையை அடையவே முடியாது

என்று மருத்துவர்கள் என் தாயாரிடம் தெரிவித்து விட்டார்கள். என் தாயின் உள்ளம் உடைந்தது. எனினும், என் வாழ்வு ஒருநாளில் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டதை நினைவுகூர்ந்தார்கள். ஆகவே, உதவிக்காக மீண்டும் தேவனை நோக்கி பார்த்தார்கள். எங்கள் தேவாலயத்திற்குள் சென்று இறைவனிடம், "அருமை ஆண்டவரே, என் மகனை ஒரு தீர்க்கத்தரிசியாக உம்முடைய ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறேனே, இந்த பாதிக்கப்பட்ட காலுடன் வாழ்க்கை முழுவதும் இழுத்துக்கொண்டு நடந்தால், உமக்காக அவன் என்ன செய்ய முடியும்? தயவு செய்து அவனைக் குணப்படுத்தும். அப்பொழுது நான் கொடுத்த வாக்குப்படியே அவனை உமது கரங்களில் அர்ப்பணிப்பேன்" என்று இவ்விதமாக கெஞ்சினார்களாம்.

இம்முறையும் கர்த்தர் தம் மிகுந்த மனதுருக்கத்தினால், அவர்களின் கதறுதலைக் கேட்டார். என் வலது காலில் சிறிய குறை இருந்தாலும், நாளடைவில் என் கால் படிப்படியாக நல்ல பெலனடைந்தது. **நான் வாலிபனாக வளர்ந்தபோது, என் கிராமத்திலேயே மிக வேகமாக ஓடுபவனாகவும், வளைகோல்பந்து வீரனாகவும் மாறிவிட்டேன்.** என்னுடைய கால் பாதிக்கப்பட்டிருந்தது என்று ஒருவராலும் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை. எல்லா மகிமையும் தேவனுக்கே.

## என் வாழ்வின் போராட்டங்களும், சோதனைகளும்

*வாழ்க்கைப் பயணத்தை துவங்குகிறாய் என் மகனே,*
*பிரமாண்டமான நெடும் பாதையிலே:*
*ஆயிரமாயிரம் சோதனைகளை நீ சந்திப்பாய்*
*ஒவ்வொரு நகரமும் உள்ளது தீமை நிறைந்ததாய்.*
*இவ்வுலகம் ஒரு கனமான மேடையே,*
*ஆபத்து எங்கும் உண்டு போகும் வழியிலே;*
*சோதனைகளுண்டு மாமிச பெலவீனத்திலே,*
*'வேண்டாம்' என்று கூற திடன்கொள் என் மகனே.*

இந்த அற்புதமான பாடலில் குறிப்பிட்டபடியே, நான் மேற் படிப்புக்கு கல்லூரியில் நுழைந்தபொழுது சகலவித சோதனைகளும் என்னை சூழ்ந்து கொண்டன. சோதனைகள் என்னை மேற்கொண்டதால், என் படிப்பை புறக்கணித்தேன்.

நான் படிப்பை அசட்டை செய்ததற்கு மற்றுமொரு காரணம் உண்டு. எனது பெற்றோருக்கும் எனக்கும் நான் **பொறியியல் பட்டம்**

பெற்று சிறந்த பொறியாளராக வேண்டுமென்பது வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது. எந்த பொறியியல் கல்லூரியிலும் எனக்கு இடம் கிடைக்காததால், இந்த பேராவல் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, மனக் கசப்பின் மிகுதியினாலும், **கணிதம் பட்டப்படிப்பு** (B.Sc.) வகுப்பில் மட்டுமே எனக்கு இடம் கிடைத்ததாலும், படிப்பில் உள்ள ஆர்வத்தை முற்றிலும் இழந்துபோனேன். என் பழைய எதிரியாகிய 'கணிதம்' எனக்கு முதன்மைப் பாடமாக அமையவே, அதையே 'படித்து, வெற்றி பெற' வேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டதால், வகுப்புக்கு போவதையே வெறுத்தேன். **பல்கலைக்கழகத் தேர்வு களில், ஒரு முறையல்ல, இருமுறையும் தோல்வியடைந்தேன்.** என் பெற்றோரின் எதிர்பார்ப்புகள் முழுவதும் மறுபடியும் உடைந்து நொறுங்கிப் போயின.

குழப்பமடைந்த ஒரு வாலிபனாய், எங்கேயாவது ஒரு பணியில் சேரலாம் என்று முயற்சி செய்தும், அதிலும் வெற்றி கிட்டவில்லை. இந்த வேதனையான சூழ்நிலையில், என் தாயார் தீர்க்க முடியாத ஒருவித வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டார்கள். குடும்பத்தை நிர்வகிக்க கூடுதலான பொருளாதார சுமை ஏற்பட்டதால் என் தந்தை 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில், என் தந்தைக்கு ஒருவித விடாத இருமல் தோன்றி, சில சமயங்களில் நுரையீரலிலிருந்து இரத்தத்தையே கக்கும் அளவுக்கு அவரைக் கொண்டு சென்றது. என் வீட்டில் நிகழ்ந்த இந்த எல்லா எதிர்மறை சம்பவங்களும், தற்கொலை செய்வதுதான் இந்த 'மனம் வருந்தும் குழப்பங்கள்' யாவும் முற்றுபெறுவதற்கு சிறந்த வழி என்று என்னை முடிவெடுக்க வைத்தது.

## தற்கொலையிலிருந்து இரட்சிப்பு

என் வாழ்க்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய அந்த நாளை நான் இன்னும் நினைவு கூறுகிறேன். ஆம், 1955-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ஆம் தேதி, மிகுந்த மனவேதனையில் ஆழ்ந்ததினால் விரக்தியுடன் நான் என் வீட்டை விட்டு வெளியேறி சென்ற நாள் அது. "இதுதான் இந்த வீட்டில் என் இறுதி நாள். சிறிது நேரத்தில் நான் இவ்வுலகை விட்டு கடந்து சென்று விடுவேன். என் பெற்றோரின் அன்பு முகங்களை இனி என்றும் காண மாட்டேன். எந்த வாசலின் வழியே நான் வெளியே செல்கின்றேனோ அதே வாசலுக்குள் உருக்குலைந்த, நசுங்கின உயிரற்ற உடலாக உள்ளே சுமந்து கொண்டு வரப்படுவேன்" என்று அங்கலாய்த்தேன். என்னுடைய ஊர் பக்கமாக, அதிக வேகத்துடன் கடந்து செல்லும் விரைவு இரயில் வண்டியின் முன்னே குதித்துவிட வேண்டுமென்று

என் இருதயத்தில் தீர்மானித்தேன். எந்த நிலையிலும் மரணத்தை தவற விட்டு விடக்கூடாது என்றும், என் சரீரம் அடையாளம் தெரியக் கூடாத அளவுக்கு இரயில் எஞ்சினின் சக்கரங்களுக்கடியில் முழுவதும் நசுங்கிவிட வேண்டும் என்றும் உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினேன். எப்படியோ தேவன் என் தாழ்வில் என்னை நினைத்தருளி தம் கிருபையினால் என் வாழ்வை மீட்டெடுக்க சித்தம் கொண்டார்.

என் வாழ்க்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அந்த நேரத்தில், காவல்துறையில் பணிசெய்து கொண்டிருந்த என் சித்தப்பா திரு. அலெக்ஸ் ஜி.ரத்தினம் அவர்களை கர்த்தர் என் பாதையின் குறுக்கே வரச் செய்தார். அவர் காவல்துறையில் பணி செய்பவராய் இருந்தாலும், கிறிஸ்துவை தன் இரட்சகராக அறிந்திருந்தார். எப்பொழுதெல்லாம் அவர் என்னை சந்தித்தாரோ, அப்பொழுதெல்லாம் மகா இரட்சகர் பற்றியும், கோர சிலுவையில் அவர் செய்த மாபெரும் தியாகத்தைப் பற்றியுமே பேசுவார். அப்பொழுதெல்லாம் அவை என் மனதில் பதியவேயில்லை. அந்த நாளிலும்கூட, ஆண்டவர் மனுக்குலத்தின் மக்கள் ஒவ்வொருவருக்காகவும் தாங்க முடியாத வேதனைகளை சிலுவையில் சகித்ததின் மூலம் மகா மீட்பை சம்பாதித்ததைக் குறித்து விளக்கினார். என் சித்தப்பாவிற்கு ஒரு துளியளவும்கூட என் தற்கொலை திட்டத்தைப் பற்றிய முன் உணர்வு கிடையாது. என் மனச்சோர்வின் உச்சக்கட்டத்தில், என் வாழ்க்கையை முடித்துக் கொள்ள நான் திட்டமிட்டிருந்த அந்த நேரத்தில், அவருடைய வார்த்தைகள் என் காயப்பட்ட இருதயத்தில் **கீலேயாத்தின் பிசின் தைலமாக** எனக்கு அமைந்தது.

அவருடைய ஆறுதலான வார்த்தைகள் என்னைத் தேற்றியதால், "சித்தப்பா, தேவன் என் தேவைகளையெல்லாம் சந்திப்பாரா?" என்று ஆவலாய் வினவினேன். அவர் "ஆம்" என்று பதிலளித்தார். "என் தேவைகளை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "வீட்டுக்குத் திரும்பிப் போய், ஆண்டவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, அவரிடம் உன் உள்ளத்தின் உண்மையான நிலையை முதலாவது வெளிப்படுத்தச் சொல். அதன்பிறகு அவருடைய இரத்தத்தால் உன்னைக் கழுவி, அவருடைய பிள்ளையாக்கும்படி வேண்டிக்கொள். அவர் அப்படியே செய்வார். மேலும், அவர் மனதுருகி உன் இருதயத்தின் வேண்டுதல்களையெல்லாம் உனக்கு நிறைவேற்றுவார்" என்று சொன்னார். இந்த வார்த்தைகள் என் உள்ளத்தின் ஆழத்தில், ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கியது. அவர் கொடுத்த ஆலோசனையை செயல்படுத்த தீர்மானித்து, என் வீட்டிற்கு மீண்டும் நடையைக் கட்டினேன்.

என் சிறிய வீட்டில், அனைத்து காரியங்களுக்கும் பயன்படுத்தும் அந்த ஒரே அறையில் நான் முழங்கால்படியிட்டு என் சித்தப்பா சொல்லிக் கொடுத்த சிறிய ஜெபத்தை ஏறெடுக்கையில், என் இருதயத்திற்குள்ளே ஏதோ ஒன்று நிகழத் தொடங்கியது. மூடிய என் கண்களுக்கு முன்னே, ஒரு குறிக்கோளுமற்ற என் முழு கடந்த காலங்களையும் என் குறைவுகளையும் கண்டேன். அவைகள் எந்தெந்த வருடங்களில் எப்படி நடந்ததோ அதே வரிசையாய் அப்படியே எனக்கு வெளிப்படுத்தப்பட்டது. என் கறைப்பட்ட கடந்த காலத்தை இயற்கைக்கப்பாற்பட்ட விதத்தில் மிகத் தெளிவாகக் கண்டேன். நான் ஒன்றும் அப்படி மன்னிக்க முடியாத பெரிய குற்றங்களை செய்ததில்லை. இக்கால பாவ சிற்றின்பங்களின் தரத்தோடு அவற்றை ஒப்பிடுகையில், இக்காட்சிகளில் நான் கண்ட என் மீறுதல்கள் உண்மையில் மிக **அற்பமானவைகளே.** ஆயினும், மிகப் பெரிய **குற்ற உணர்வுடன்,** பின்வரும் வேத வாக்கியத்தின்படி வேதனையுற்றேன்.

> அவர் (பரிசுத்த ஆவியானவர்) வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.
>
> *யோவான் 16:8*

ஆறுதல் பெற முடியாத அந்த நிலையில், என் கடந்தகால தவறுதல்களுக்காக புலம்பி அழுதேன். என்னை மன்னித்து, ஒரு புத்தம் புதிய தூய வாழ்க்கையை எனக்கு அருள வேண்டுமென்று இறைவனிடம் மன்றாடினேன். ஏறக்குறைய நான்கு மணி நேரம் இந்த நிலை நீடித்தது. அதன்பிறகு ஒரு விவரிக்க முடியாத சமாதானம் என் இருதயத்தை நிரப்பினது. அதுவரை நான் அனுபவித்த வேலையின்மை, தேர்வுகளில் தோல்வி போன்ற வேதனைகள் இருப்பினும், **எல்லாப் புத்திக்கும் மேலான இந்த தேவ சமாதானமானது** *(பிலிப்பியர் 4:6,7)* ஒவ்வொரு பிரச்சனையும் ஏற்கனவே தீர்க்கப்பட்டு விட்டதைப் போலவும், ஒவ்வொரு தேவையும் சந்திக்கப்பட்டு விட்டதைப்போல வும் என்னை உணர வைத்தது.

இந்த அனுபவத்தை அடக்க முடியாமல், பரவசத்துடன், என் அறையைவிட்டு ஓடி, என் அம்மாவிடம், "அம்மா, நான் தேவனை சந்தித்தேன்" என்று கூச்சலிட்டேன். அதற்கு என் அம்மா, "என் மகனே, இதை நீ எனக்கு சொல்லத் தேவையில்லை, உன் முகப் பிரகாசமே அதை வெளிப்படுத்துகிறது" என்று உடனடியாக பதிலளித்தார்கள். ஆஹா! அந்த நாளில் எவ்வளவு ஆனந்தம் என் உள்ளத்தை நிரப்பியது. உன்னத இரட்சகரின் **மாட்சிமை பொருந்திய கிருபையால்,** ஐம்பத்திரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இந்த இரட்சண்யத்தின் சந்தோஷம் *(சங்கீதம் 51:12)* எனக்கு என்றும் குறையவேயில்லை.

## மாபெரும் ஆசிரியரால் கற்பிக்கப்படுதல்

கர்த்தர் தம் அளவற்ற இரக்கத்தினால், விசுவாசப் பாதையில் என்னை உற்சாகப்படுத்த சித்தம் கொண்டார். என்னை நெருக்கிக் கொண்டிருந்த எல்லாத் தேவைகளையும் அறிந்து, நம்பிக்கையற்ற என் அபயக் குரலுக்கு பதிலளிக்கத் தொடங்கினார். என் **பட்டப்படிப்பை (B.Sc.)** முடித்து, ஒரு பணியில் சேர்ந்து, என் தகப்பனையும், என் தாயையும் எல்லாவிதத்திலும் பராமரிக்க வேண்டும் என்பதற்காக என் படிப்பைத் தொடர வேண்டும், சிறந்த முறையில் பல்கலைக்கழகத் தேர்வுக்கு ஆயத்தப்பட வேண்டும் என்ற ஆர்வம் உடனடியாக ஏற்பட்டது. அந்தோ! பாடப் புத்தகங்களின் பக்கங்களை புரட்டின போதோ, அவை விளங்காததாகவும், எனக்கு புரியாதவைகளாகவும் இருந்ததைக் கண்டு மிகவும் சோர்ந்து போனேன். இதற்குக் காரணம், நான் கல்லூரியில் பயின்ற காலங்களில், அப்புத்தகங்களை தொடுவதே அரிதாயிருந்தபடியினால் தான். உதவியற்ற நிலையில், மனக்கிலேசத் துடன் மிதமிஞ்சி கண்ணீர் வடித்தேன். என் கண்ணீர் தணிக்கப்பட முடியாத நிலையில் எவ்வித பயனுமின்றி தொடர்ந்தது.

அதன்பிறகு, ஓர் இரவில், **"நான் உனக்கு கற்பிப்பேன்"** என்ற அழுத்தத்துடன்கூடிய ஆறுதல் நிறைந்த ஒரு குரலைக் கேட்டு திடுக்கிட்டேன். நான் சுற்றும் முற்றும் பார்த்தபோது, ஒருவரையும் காணவில்லை. எனினும், என் நாற்காலியின் அருகில் யாரோ நிற்பது போல் உணர முடிந்தது. மிகுந்த பாசத்துடன் அந்த குரல், ஒரு குறிப்பிட்ட பாடம் சம்பந்தப்பட்ட புத்தகத்தை எடுத்துக்கொள்ள பணித்தது. பிறகு, வியக்கத்தக்க வகையில் சரியாக ஒரு கல்லூரி பேராசிரியர் போதிக்கும் அதே முறையில் அந்த குரல் எனக்கு கற்பிக்கத் தொடங்கியது. மனித விரல்களால் புரட்டப்படுவதைப் போலவே புத்தகத்தின் பக்கங்கள் விசித்திரமாக என் கண் முன்னே பக்கம் பக்கமாகப் புரட்டப்பட்டன. நான் அந்த புத்தகத்தின் 50 பக்கங்களை முடிக்கும் வரை இது தொடர்ந்தது. பிறகு அந்த குரல், "இது போதும், நாளை தொடருவோம்" என்றது. இந்த பயிற்சி, ஒவ்வொரு பாடப் பகுதியும் முழுமையாய் முடியும்வரை தினந் தோறும் தொடர்ந்தது.

**கண்ணுக்குப் புலப்படாத இந்த ஆசிரியர்** மற்றும் அவர்மூலம் பெற்றுக்கொண்ட கல்வியினால் நான் பெரும் பூரிப்படைந்தேன். ஒரு மாணவன் தன்னுடைய கல்லூரியில் எல்லா வகுப்புகளிலும் அமர்ந்தி ருந்து ஆசிரியர் கற்றுக் கொடுப்பதை கேட்டிருந்தாலும் அவை எல்லா வற்றையும் கிரகித்துக் கொண்டான் என்று உறுதியாக சொல்ல முடியாது. ஆனால், என்னுடைய இந்த அனுபவம் முற்றிலும் மாறு



சகோதரர் தினகரன் பட்டம் பெற்றபோது, சென்னை பல்கலைக்கழகம் (1955).

பட்டது. ஒரு நாளைக்கு 50 பக்கங்கள் என்கிற விதத்தில் கற்பிக்கப்பட்ட அனைத்துமே என்னுடைய மூளையில் உடனடியாகப் பதிந்தது. ஒவ்வொரு முறையும் வெவ்வேறு பாடங்களை அந்த குரல் எனக்கு கற்பித்தபோதிலும், ஏற்கனவே நான் படித்த பகுதிகள் எந்த சூழ்நிலை



சகோதரர் தினகரன், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் பணியாற்றியபோது (1957),
சகோதரர் தினகரன் முதல் வரிசையில் வலதுபுறம் கடைசியில் அமர்ந்துள்ளார்.

யிலும் என் மனதிலிருந்து மறைய மறுத்தது. ஆ! அது ஒரு விந்தையான மறக்க முடியாத நூதன நிகழ்ச்சியாகும்.

முடிவில், பல்கலைக்கழகத் தேர்வு எழுதும் வேளை வந்தபோது, என் வெற்றியைப் பற்றிய உறுதி எனக்கு இருந்தது. ஒவ்வொரு பாடத்திற்கான தேர்வு எழுதும்போதும், ஆண்டவரால் அருளப்பட்ட ஒரு ஆழ்ந்த தெய்வீக நம்பிக்கை என் ஆவியை உற்சாகப்படுத்தியது. எனவே நான் அனைத்து எழுத்துத் தேர்வுகளையும் மிகச் சிறப்பாக செய்து முடித்தேன்.

சில நாட்களுக்குப் பிறகு செயல்முறைத் தேர்வுகள் தொடர்ந்தன. இயற்பியல், வேதியியல் பாடங்களுக்கான செயல்முறைத் தேர்வுகளுக்காக ஆய்வு கூடத்திற்குள் நுழையவிருந்த கடைசி தருணத்தில், அதே குரல், ஒரு குறிப்பிட்ட செய்முறை விளக்கத்தைக் கருத்தூன்றி படிக்கவில்லை என்று என்னை எச்சரித்தது. கடைசி நிமிட நேரத்தில் அவற்றை படித்து ஆயத்தப்பட இந்த எச்சரிப்பு உதவியாய் இருந்தது. இந்த நிகழ்வு இரண்டு செயல்முறைத் தேர்வுகளிலும் வித்தியாசமான முறைகளில் நடந்தது. உண்மையாகவே, இரண்டு செயல்முறைத் தேர்வுகளிலும் 100% மதிப்பெண்கள் பெற்றேன்.

இத்தகைய தெய்வீக அனுபவங்களுக்குப் பிறகும், பல்கலைக் கழகத் தேர்வு முடிவுகள் அறிவிக்கும் தேதி நெருங்க நெருங்க என் இருதயம் படபடக்கத் தொடங்கியது. உண்மையை சொல்லப் போனால் முழு நேரமும் முழங்கால்படியிட்டு பரம தகப்பனிடம் என் கலக்கத்தை ஒப்படைக்க ஆரம்பித்தேன். ஒருநாள், அதே தெய்வீக பிரசன்னம் என்னை சூழ்ந்து கொண்டு, அதே இனிமையான உறுதியளிக்கும் குரலில், "நீ எந்த தரத்தில் தேர்வு பெற விரும்பு கிறாய்?" என்று தெளிவாக கேட்டது. உடனே நான், "ஆண்டவரே! நான் முதல் தரம் பெற தகுதியற்றவன். ஏனெனில், என் கல்லூரி நாட்களில் நான் சரியாகவே படிக்கவில்லை; மூன்றாம் தரம் மதிப்பெண் எடுத்தால், எங்குமே எனக்கு வேலை கிடைக்காமல் இந்த உலக வாழ்வில் பிழைக்கவே முடியாது. ஆகவே, தயவு செய்து **உயர்ந்த இரண்டாம் தர மதிப்பெண்** தாரும்; நான் உமக்கு நன்றியுள்ள வனாக இருப்பேன்" என்றேன். "அருளப்பட்டது" என்று ஒலித்தது அந்த குரல். தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, சரியாக அவ்வாறே ஆயிற்று.

தேவன் கிருபையாக என் தந்தை பணிபுரிந்த பள்ளியில் பயிற்சி பெறாத ஒரு ஆசிரியராக பணிபுரிய எனக்கு ஒரு வேலையைக் கொடுத்தார். அதன்பின்பு, இந்தியாவிலேயே மிகப்பெரிய வங்கி ஒன்றில் அலுவலராக சேர்ந்தேன். இந்த அற்பமான ஆரம்பத்திலிருந்து கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அந்த வங்கியில் உயர்ந்த பதவிகளுக்கு என்னை உயர்த்தினார். **அவருடைய கிருபையினாலும் ஏற்ற சமயத்தில் விளங்கும் தெய்வீக உதவியினாலும்**, பதவி உயர்வுக்கான ஒவ்வொரு வங்கித்துறை தேர்வுகளிலும் எளிதாக தேர்ச்சி பெற முடிந்தது.

## விருப்பங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர்

இந்த வேளையில் இடைவிடாது என்னை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட வேத வசனத்தைக் கூற விரும்பு கிறேன்.

> கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.
>
> *சங்கீதம் 37:4*

தொழில் ரீதியாக ஒரு **பொறியாளராக** மாற வேண்டும் என்ற என் கனவை நான் முற்றிலும் மறந்தபோதிலும், மறுமைக்குட்பட்ட என் பெற்றோருடைய மற்றும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்த ஆசையை தேவன் ஒருபோதும் மறக்கவில்லை. **இன்று அவருடைய தெய்வீக**




Dr. பால் தினகரன் (இணை வேந்தர்), Dr. டி.ஜி.எஸ். தினகரன் (வேந்தர்), இந்திய அரசின் மாண்புமிகு அமைச்சர் ஸ்ரீ அர்ஜுன்சிங் அவர்களிடமிருந்து பல்கலைக்கழக அந்தஸ்தை அக்டோபர் 10, 2004 அன்று கல்லூரிக்காக மகிழ்வுடன் பெற்றபோது.

**இரக்கத்தினாலும், கிருபையினாலும் 5,400 மாணவர்கள் கொண்ட ஒரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் வேந்தராக (தலைவராக) நியமிக்கப்பட்டுள்ளேன்.** என்னுடைய மாணவ பருவத்தில் எந்தவொரு பொறியியல் கல்லூரியிலும் இடம் கிடைப்பதற்கு தகுதியற்றவனாக நான் கருதப்பட்டிருந்தாலும், அதற்கு முரணாக, ஒரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் தலைமை பதவியில் அவர் என்னை வைத்திருக்கிறார். இன்று நூற்றுக்கணக்கான பொறியாளர்களுக்கு பட்டங்களையும், சமுதாயத்தில் பெருமதிப்பிற்குரியவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டங்களையும் நான் வழங்க சட்டப் பூர்வமான உரிமையையும், தகுதியையும் எனக்கு அருளியுள்ளார்.

சர்வ வல்ல தேவன் என் பேரில் எவ்வளவு நினைவாயிருக்கிறார் என்பதை எண்ணி அப்படிப்பட்ட ஒவ்வொரு பட்டமளிப்பு விழாவிலும் கணக்கிலடங்கா நன்றியுடன் உணர்ச்சிவசப்பட்டு எனக்குள்ளேயே அழுவதுண்டு. என் விருப்பத்தை, நான் நினைப்ப




மாண்புமிகு அமைச்சர் ஸ்ரீ A.R.அந்துலே அவர்கள்,
Dr. தினகரனிடமிருந்து (இடது பக்கத்தில்) கௌரவ டாக்டர் பட்டம் பெறும் காட்சி.
Dr. பால் தினகரன் (வலது பக்கத்தில்) .

தற்கும் மேலாக நிறைவேற்றுவதில் அவர் கண்ணும் கருத்துமாயிருந்ததை என் ஆவியில் நான் மிகுந்த தாழ்மையாக உணர்வதுண்டு.

ஆம், நான் இருக்கிறது கிருபையின் தொடுதலினாலேயே!

# இயற்கைக்கப்பாற்பட்ட தொடுதல்

# 2

*பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன டைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியா விலும், பூமியின் கடைசிப் பரியந்தமும், எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள்.*

*அப்போஸ்தலர் 1:8*

*1955*, பெப்ரவரி *11* அன்று தற்கொலை பாதையில் சென்று கொண்டிருந்த என்னை, அருமை ஆண்டவர் சந்தித்தபின், வேதாகமமும், அதிலுள்ள ஜீவவார்த்தைகளும் மெய்யாகவே எனக்கு அப்பமும், ரசமுமாக மாறின. **பரிசுத்த வேதாகமத்தை நான் பேரார்வத் துடன் படிக்க ஆரம்பித்துவிட்டபடியால், திருமறையின் பக்கங்களை நான் அதிகமாகவும் தவறாமலும் திரும்பத் திரும்ப படித்ததால், ஏழு வேத புத்தகங்கள் பழமையாகிவிட்டன.** தற்போது நான் உபயோகிப்பது எட்டாவது வேதாகமம். வேதத்தை வாசிக்கையிலே, தேவனுடைய பரிசுத்தவான்களின் வாழ்வில் காணப்பட்ட குறிப்பிட்ட ஒரு குணாதிசயம் எப்போதும் என்னை வியக்க வைத்தது. ஒவ்வொரு நாளும் தேவனோடு நடப்பதும், பேசுவதும், சஞ்சரிப்பதுமான அவர்களது அனுபவமே என்னை அப்படி வியக்க வைத்தது. பின்வருபவை குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளாகும்.

ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில்,...

*ஆதியாகமம் 5:24*

...நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.

*ஆதியாகமம் 6:9*

ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான் (II நாளாகமம் *20:7*, ஏசாயா *41:8*, யாக்கோபு *2:23*). மோசேயோடே கர்த்தர் முகமுகமாய் பேசினார் (யாத்திராகமம் *33:11*, எண்ணாகமம் *12:8*).

நானும் அவ்வாறே கர்த்தரோடு சஞ்சரித்து ஐக்கியம் கொள்ள வேண்டும் என்ற ஒரு பெரும் உந்துதல் எனக்குள் உருவாயிற்று. ஆகவே, ஒருபுறம் வங்கியின் அலுவலக பொறுப்புகளோடு பல வருடங்களாக இரவும் பகலும் என் ஓய்வு நேரங்களில் தேவனின் முகத்தை தேட ஆரம்பித்தேன். அதேசமயம் என்னுடைய சாட்சி கொடுத்தலும் பிரசங்கித்தலும் ஒருங்கே தொடர்ந்தன. எனது நற்செய்தி ஊழியம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், இறைவனோடு நடக்க, பேச, சஞ்சரிக்க வேண்டுமென்ற என் உள்ளத்தின் ஆவலாகிய தாகம் தணியவேயில்லை.



ஆசீர்வதிக்கப்பட்ட அப்போஸ்தலர் Dr.T.L.ஆஸ்போர்ன் (U.S.A.) அவர்களுடன் சகோதரர் தினகரன் மனந்திறந்து உரையாடுகிறார் (1985).

தேவ மனிதர் Dr.T.L.ஆஸ்போர்ன் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து மதுரைக்கு 1961ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வந்த போது, **தேவனை காண வேண்டும், அவரோடு நடக்க வேண்டும்** என்ற என் ஆவிக்குரிய தாகம் திடீரென்று உச்சக் கட்டத்துக்கு உந்தப்பட்டது. அவரது கூட்டங்களைப் பற்றிய விளம்பரங்களில், 'ஜீவிக்கும் கிறிஸ்துவினால் செயல்படும் அற்புதங்களை வந்து பாருங்கள்' என்ற வாசகம் எனக்கு சவாலாய் அமைந்தது. உடனடியாக நான் என் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் ஏறத்தாழ 200 மைல்கள் பயணம் செய்து கூட்டங்களின் கடைசி இரண்டு நாட்களில் கலந்து கொண்டேன்.

அங்கு என் சொந்த கண்களால் நான் கண்ட யாவும் என்னை பரவசப்படுத்தியது. ஆம், முடவர் நடப்பதையும், குருடர் காண்பதையும், குஷ்டரோகிகள் சுத்தமாவதையும் மேலும் பல அற்புதங்களையும் கண்டேன். இந்த தேவ மனிதர், 20 நிமிடங்கள் மட்டுமே பிரசங்கித்து, அடுத்த 20 நிமிடங்களுக்கு பொதுவான ஜெபத்தை திரள் கூட்ட மக்களின் விடுதலைக்காக ஏறெடுத்தபோது, இப்படிப்பட்ட அற்புதங்கள் நடந்தன. இறுதி நாளில் அவர், "தேவனை நோக்கிக் கதறி, பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டால் நான் செய்வதை நீங்களும் செய்ய முடியும்" என்று திரள் கூட்டத்தின் மத்தியில் இருந்த தேவ ஊழியர்களுக்கு அறைகூவலிட்டார். இந்த

வார்த்தைகளின் சவாலை ஏற்று, அந்த பரந்த மைதானத்தில் எரிக்கும் சூரியனுக்குக் கீழ், சுடும் மணலின்மேல் முகங்குப்புற விழுந்து, கர்த்தரிடம் கண்ணீருடன் "தேவனே, இதே வல்லமையையும், அபிஷேகத்தையும் எனக்கும் தாரும், இந்த தேசத்தையே நான் அசைப்பேன்" என்று கதறினேன்.

**பரிசுத்த ஆவியைப்** பற்றிய ஒரு துண்டு பிரதி எல்லோருக்கும் வழங்கப்பட்டது. உண்மையோடு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைத் தேட அது எனக்கு ஒரு கிரியா ஊக்கியாக அமைந்தது. பிறகு, வேதாகமத்தை நான் வாசித்துக் கொண்டிருந்தபோது, பின்வரும் வசனம் பலத்த உறுதியுடன் என் கண்முன் தோன்றியது:

> நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிற வராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.
>
> *அப்போஸ்தலர் 10:38*

ஆண்டவராகிய இயேசுவைப் போலவே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டுமென்ற அடக்க முடியாத பேராவலை இந்த வசனம் எனக்குள் கொண்டு வந்தது. 'சர்வவல்ல தேவனின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் தேவையென்றால், எனக்கு எவ்வளவு அதிகம் தேவைப் படும்?' என்று ஆழ்ந்து சிந்திக்க தூண்டப்பட்டேன். **இந்த ஈவை பெற்றுக் கொள்ள எதையும் தியாகம் செய்யவும் கிரயத்தை கொடுக்கவும் ஆயத்தமானேன்.** என் வாழ்வை அலசி ஆராய்ந்து, பரிசுத்த ஆவியானவர் என்மேல் இறங்கி வருவதற்கு தடையாயிருப்பதாக நான் கருதிய அனைத்தையும் சுத்திகரித்தேன்.

இந்த திருப்புமுனையில் 'தேவ மனிதர்' போதகர் ஜே.எஸ். லெமியூர் அவர்களையும் அவர்கள் துணைவியாரையும் சந்திக்கும் வாய்ப்பை தேவன் எனக்குத் தந்தார். தாகமுள்ள ஆத்துமாக்களுக்கு பரிசுத்த ஆவியை இறக்கிக் கொடுக்கும் தனித்தன்மை வாய்ந்ததொரு ஊழியத்தை அவர்கள் செய்து வந்தார்கள். நான் பரிசுத்த ஆவியின் நிறைவை பெறுவதற்காக குறிப்பாகவும் தொடர்ந்தும் பிரார்த்தனை ஏறெடுப்பதாக வாக்குக் கொடுத்தனர். அது எனக்கு உற்சாகத்தைக் கொடுத்து, பின்வரும் வாக்குத்தத்தம் என்னில் நிறைவேற வழி வகுத்தது.

> உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.
>
> *எரேமியா 29:13*

1962 அக்டோபர் 9ஆம் நாளில், நான் அவர்களோடு இணைந்து, நள்ளிரவு 12 மணி வரை, **போராடி ஜெபித்துக் கொண்டிருக்கும்போது**, பரிசுத்த ஆவியின் நிறைவை பெற முடியாததால், அங்கலாய்ப்பில், ஆண்டவரிடம், "தேவனே, நான் உம்மைக் காண வேண்டும், உம்மோடு உரையாட வேண்டும் என்று எத்தனை ஆண்டுகளாக விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறேன். என் விண்ணப்பங்களுக்கு நீர் செவிகொடுக்கவேயில்லை. பரிசுத்த ஆவியையும் எனக்கு அருள வில்லை. ஒரு வெட்டுண்ட, வறண்ட கிறிஸ்தவ வாழ்வு இனி எனக்கு இவ்வுலகில் தேவையில்லை. **ஒன்று பரிசுத்த ஆவியைத் தாரும் இல்லையென்றால் என் உயிரை எடுத்துவிடும்**" என்று உளறிக் கொட்டினேன். இந்த விரக்தி நிறைந்த வார்த்தைகளை கவனித்து ஆடிப் போய்விட்ட லெமியூர் தம்பதியினர் என் விண்ணப்பத்திற்கு உடன்படவில்லை, நானோ அர்த்தத்துடன் தான் சொன்னேன்.

ஆயினும், அடுத்த நாள் 1962 அக்டோபர் 10, என் வாழ்வில் மறக்க முடியாத நாளாக மாறிற்று. என் அலுவலகத்தில் ஏற்பட்ட வேலை பளுவின் காரணமாக நான் தாமதமாக இரவு 9.30 மணிக்கு வீடு வந்தேன். என் களைப்பினிமித்தம், துரிதமாய் இரவு உணவை முடித்து, படுக்கைக்குச் செல்லுவது மட்டுமே என் தீர்மானமாயிருந்தது. எனினும், தேவன் என்னை சந்திப்பதற்காக அந்த சரீர பெலவீன வேளை யையே தெரிந்து கொண்டார். இரவு குடும்ப ஜெப வேளையில், நாங்கள் முழங்கால்படியிட்டபோது, போதகர் லெமியூரிடம், மெல்லிய குரலில், "என் தகப்பனார் ஜெபிக்கும்போது, அந்த ஜெபத்தைக் கேட்க என் சரீர பெலனுக்காக ஜெபியுங்கள்" என்று வேண்டினேன். போதகர் லெமியூர் என்னை தொட்டு, தேவன் என்னை பெலப்படுத்துமாறு மென்மையான குரலில் ஜெபித்தார். அவ்வளவு தான் எனக்கு தெரியும்.

## கர்த்தராகிய இயேசுவின் தரிசனம்

என் கண்கள் மூடியிருந்தும், திடீரென்று பரலோகத்திலிருந்து இறங்கிய ஒரு பேரொளி, அந்த அறை முழுவதையும் நிரப்பிற்று. உடனடியாக, **இயற்கைக்கப்பாற்பட்ட ஒருவருடைய** பிரசன்னத்தை என்னால் உணர முடிந்தது. என் சோர்வுகள் மறைந்து, புதிதாய் மலர்ந்த ஒரு ரோஜாப்பூவைப் போன்ற புத்துணர்வு பெற்றேன். என் உடல் முழுவதும் இறங்கிய இந்த புத்துணர்ச்சி எங்கிருந்து வந்தது என்று வியந்தேன். பிறகு 'சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்தது மாயிருக்கிற சந்தோஷம்' (I பேதுரு 1:8) என்மேல் பரவி, எனக்குள் ஊடுருவி நிரப்பிக் கொண்டேயிருந்தது. இந்த சந்தோஷம் எங்கிருந்து வருகிறது என்று எனக்குள் வியந்தேன். காரணம் ஆண்டவரை சந்திக்க இயலாத நிலையில் மனச்சோர்வை மட்டுமே என் இருதயம் பல ஆண்டுகளாக அறிந்திருந்தது.

ஆனால், இந்நாளிலோ, நிலைமை முற்றிலும் மாறுபட்டிருந்தது. இது ஒரு தெய்வீக சந்திப்பானதால், பித்து பிடித்தது போன்றதொரு மகிழ்ச்சி என் நம்பிக்கையற்ற நிலையை முற்றிலும் மாற்றியது. ஆம், வார்த்தைகளினால் விவரிக்க முடியாத அன்பும், மனதுருக்கமும் நிறைந்தவராய் என் முன்னே தோன்றிய இராஜாதி இராஜா, ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்துவை நான் முகமுகமாய் தரிசித்தேன்.** அவருடைய பார்வையை ஒரு பாலூட்டும் தாய் தன் குழந்தையை அங்கீகரித்த பார்வைக்கு மட்டுமே ஒப்பிட முடியும்.

இயேசுவின் புன்முறுவலுக்கு பிரதிபலிப்பாக ஏற்பட்ட மகிழ்ச்சி அடக்க முடியாத சிரிப்பாக எதிரொலித்தது. பிறகு ஆண்டவராகிய இயேசு பேசத் துவங்கினார். **நான் எவ்வாறு அந்த ஏழு ஆண்டுகளும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், அவரையும் நாடி ஜெபித்தேன் என்பதை ஞாபகப்படுத்தினார்.**

சரியாக, அந்த குறிப்பிட்ட தேதி, நாள், மன்றாடிய இடம், என் ஜெபத்தின் நேரம் மற்றும் ஒவ்வொரு விண்ணபத்திலும் நான் உபயோகித்த வார்த்தைகள் இவற்றைகூட வரிசை முறையில் நினைவு படுத்தினார். இது எனக்கு மிகவும் வியப்பாயிருந்தது. இப்படியாக 1962 அக்டோபர் 9ஆம் தேதி நள்ளிரவு வரை நான் செய்த ஒவ்வொரு ஜெபத்தையும் நினைவுபடுத்தினார். பிறகு புன்முறுவலோடு "நான் தான் இயேசு, இந்த வேண்டுதல்களையெல்லாம் கேட்டு, உன்னை ஆசீர்வதிக்க நானே நேரடியாக வந்துள்ளேன்" என்றார். ஆஹா! இந்த பரலோக பூரிப்பின் நிலையில் அடுத்த மூன்று மணி நேரமும் அவருடைய மகிமையின் பிரசன்னத்திலேயே மூழ்கியிருந்தேன்.

இதன்பிறகு, அவரின் கெம்பீரமான முகம் மெதுவாக என் முன்னே நெருங்கியது. எழுச்சி மிகுந்த ஒரு பயமும் வியப்பும் என் உள்ளத்திற்குள் பொங்கி எழுந்தது. ஓர் உண்மையைக் குறித்து என் உள்ளத்தில் உணர்த்தப்பட்டேன். "தினகரன், எத்தனையோ வருடங்கள் அருமை ஆண்டவரைக் காண காத்துக் கொண்டிருந்தாய், அவரும் நேரடியாக உன்னை ஆசீர்வதிக்க வந்திருக்கிறார். ஆனால் இந்த மாபெரும் சந்திப்பிற்காக நன்றி கூற நீ கவனம் செலுத்தவில்லையே. 'நன்றி தேவனே' என்று சொல்லக் கூடாதா?" என்று உணர்த்தியது. இந்த நன்றிகெட்ட தன்மை எனக்கு மாபெரும் குற்ற உணர்ச்சியைக் கொண்டு வந்தது.

பிறகு உண்மையாகவே, மனந்திருந்திய இருதயத்தோடு "நன்றி ஆண்டவரே" என்று தமிழில் முணுமுணுத்தேன். **திடீரென்று முற்றிலும் புரியாத மொழியில் நான் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன்.** என் நாவை சற்று நிலைப்படுத்தி, ஆங்கிலத்தில் நன்றி கூற முயன்றும் மறுபடியும் அவ்வாறே நிகழ்ந்தது. எனக்கு தெரிந்த மொழிகளில் அவருக்கு நன்றி சொல்ல எத்தனை அதிகமாய்

முயற்சித்தேனோ, அத்தனை அதிகமாய் இந்த நூதன அனுபவம் தொடர்ந்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் வேடிக்கையான நிலையை கவனித்து, "மகனே, நான் தான் நீ அறியாத பல பல மொழிகளில் என்னை துதிக்க உன்னை இயக்குகிறேன், இதுதான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம்" (ஏசாயா 28:11) என்று இந்த நித்திய வார்த்தைகளால் என்னை அமைதிப்படுத்தினார். அத்துடன் என் குழப்பம் முற்று பெற்றது.

அவர் இன்னும் என் பக்கமாய் நெருங்கி வந்தபோது, **"என் மகனே, இவ்வுலகம் என் அன்பையும், மனதுருக்கத்தையும் பற்றி கேள்விப் பட்டிருக்கிறது. அவற்றை ஒரு மனிதனுடைய வாழ்வில் நடைமுறையில் கண்டதில்லை. 2000 ஆண்டுகளுக்கு முன் நான் இவ்வுலகில் வாழ்ந்த போது எனக்குள் இருந்த அதே மனதுருக்கத்தின் ஆவியினால் உன்னை இன்று நிறைத்துக் கொண்டிருக்கிறேன். இதேவித மனதுருக்கத்தினால் அசைக்கப்பட்டு ஒவ்வொரு முறையும் என் மக்களுக்காக நீ எதைக் கேட்டாலும் அது கொடுக்கப்படும்"** என்றார். அப்பொழுது நம்ப முடியாத ஒரு நிகழ்வு நடைபெற்றது. **என் இருதயத்திற்குள் ஒரு கதவு போன்று திறக்கப்பட்டு, அவர் உள்ளே நுழைந்து மெதுவாக என் உள்ளத்திற்குள் அமர்ந்து விட்டார். அவருடைய உருவமைப்பு முழுமையாக என் உள்ளத்திற்குள்ளே பதிந்து என் உயிரோடு இரண்டறகலந்தது.** அந்த நேரத்தில் எனக்கு ஏற்பட்ட பரவசத்தை வார்த்தைகளால் ஒருபோதும் விவரிக்கவே முடியாது.

மூன்று மணி நேரத்தை என் பரம எஜமானின் பாதபடியில் செலவழித்த பின் என் கண்களைத் திறந்தபோது அது அதிகாலை 1.15 மணி ஆக இருந்தது. என் தந்தையும் மற்றவர்களும் அந்த முழு நேரத்திலும் என்ன நிகழ்ந்தது என்று கேட்டார்கள். இயல்பான நிலையில் என் நாவை அசைத்து பேச முயன்றும் என்னால் இயலவில்லை. ஒரு நோட்டு புத்தகத்தை கேட்டு வாங்கி, "நான் இயேசுவைப் பார்த்தேன், இப்பொழுதும் காண்கிறேன், என்னால் பேச முடியவில்லை" என்று எழுதினேன். எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் பூரித்தார்கள்.

## ஆவிக்குரிய மறுரூபம்

இந்த தெய்வீக தூய அனுபவத்திற்கு பின்விளைவாக, இரண்டு விதத்தில் ஆச்சரியமான மகத்தான மாற்றங்கள் என் ஆவிக்குரிய வாழ்வில் தோன்றியது. முதன்மையானதும், தலைசிறந்ததுமானதும் என்னவென்றால், என் தனி ஜெபத்தை நாடி தேவைகளுடன் வரும் மக்கள் என்னை அணுகும்போது, **தேவனுடைய ஆவியினால்** நான் நிரப்பப்படுகிறேன். அதே வேளையில் இயேசு கிறிஸ்து தாமே, என் அருகில் இருக்கின்ற உண்மையான உணர்வு தானாகவே ஏற்படுகிறது.

நான் அவர் முன்பாக நின்று கொண்டோ அல்லது முழங்காலில் நிற்கும் பாவனையிலோ அல்லது என் உள்ளத்திற்குள்ளே அமர்ந்து கொண்டோ அவரை நோக்கிப் பார்ப்பேன். இது என் ஜெப வேளையை அர்த்தமுள்ளதாகவும், என் முழு கவனத்தை கவர்ந்து இழுப்பதாகவும் அமைந்துள்ளது.

சில சமயங்களில் இந்த அன்பினால் கட்டப்பட்டு மணிக் கணக்காக, எளிதாக 6 முதல் 8 மணி நேரம்வரை கடந்து செல்வதை மறந்து அவருடன் தொடர்ந்து உரையாடிக் கொண்டிருப்பேன்.

எனக்கு ஏற்பட்ட இரண்டாவது பெரும் மாற்றம் **மனதுருக்கத்தின் ஆவி**. 'மனதுருக்கம்' என்ற வார்த்தைக்கு அகராதியில் காணப்படும் பொருள் 'பிறனின் பெரும் துயரத்தில் அந்த நபரோடு இணைந்து சகித்தல்' என்பதாகும். ஆண்டவருடைய மனதுருக்கத்தால் எப்பொழு தெல்லாம் ஆட்கொள்ளப்படுகிறேனோ அப்பொழுதெல்லாம் அதுபோன்ற உணர்ச்சிதான் என்மீது முழுமையாக அமருகிறது. ஒவ்வொரு முறையும் மற்றவர்களுக்காக நான் மன்றாடும்போது என்னையும் அறியாமல் என் கன்னங்களில் கண்ணீர் வடிகிறது. அந்த நபரின் வேதனைகள் என்னிடம் விவரிக்கப்படும்போது அதே வேதனைகள் என் மீதும் என்னை வாதிப்பது போன்றும் உணருவேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும்கூட ஒவ்வொரு முறையும் வெவ்வேறு விதமான நோய்களினாலும், வாழ்வின் பிரச்சனைகளி னாலும் தன்னிடம் வருகிற மக்களைப் பற்றி எவ்வாறு ஒன்றித்து உணர்ந்திருப்பார் என்பதை அந்நேரத்தில் என்னால் எளிதில் யூகிக்க முடியும் (மத்தேயு *9:36, 14:14, 15:32, 20:34*, மாற்கு *1:40-42; 6:34*, லூக்கா *7:13,14*, யோவான் *11:35*). பெருந்துயரத்தில் இருக்கும் அந்த நபருக்காக நான் ஏறெடுத்த என் விண்ணப்பங்களுக்கு பதில் கொடுக்கும்வரை என் ஆவியில் அவரை விடாமல் பிடித்துக் கொள்ளுவேன்.

உலகின் எல்லாப் பகுதியிலிருந்தும் தினந்தோறும் என் ஜெபத்தை நாடி அநேக கடிதங்கள் வருகின்றன. சிலர் தங்கள் நெருக்கடியான சூழ்நிலைகளில் ஒரு முக்கியமான முடிவு எடுக்க தெளிவான வெளிப் படுத்துதலுக்காகவும், வேறு சிலர் தங்களுடைய பிரச்சனைகளுக்கு பொதுவான முறையில் ஒரு தீர்வு காணவும் எனக்கு எழுதுகிறார்கள். அந்த கடிதங்களை நான் வாசித்து ஜெபிக்க ஆரம்பித்தவுடன் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு கிறிஸ்துவின் மனதுருக்கம் எனக்குள் பொங்கி எழும். 'ஞானத்தைப் போதிக்கும் வசனம்', 'அறிவை உணர்த்தும் வசனம்' ஆகிய இரு வரங்களின் வழியாக அவன் அல்லது அவளுடைய பிரச்சனையை சரியாய் அறிந்து கொள்ளவும் அதற்குத் தேவையான தேவனுடைய வார்த்தையை கொடுக்கக்கூடிய ஆற்றலையும் அவரே தருகிறார்.



சகோதரர் தினகரன், லூக்கா 4:40-ன்படியே ஜனங்களுக்காக தனித்தனியே மிகுந்த மனதுருக்கத்தோடு ஜெபிக்கும் காட்சி.



ஆண்டவர் இயேசுவின் மனதுருக்கத்தால் தொடப்பட்டு சகோதரர் தினகரன் மார்பிலே சாய்ந்து மக்கள் கதறும் காட்சி.







பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்கப்பாற்பட்ட விதத்திலே வெளிப்படும் நேரம். சகோதரர் தினகரன் தனி நபரின், குடும்பங்களின் முழு வாழ்க்கை சரிதையையும், ஜெபவிண்ணப்பங்களையும் திரள் கூட்டத்தார் மத்தியிலே வெளிப்படுத்தும் காட்சி. ஒரு சிறு தவறும் இல்லாமல், மிக சரியாக கொடுக்கப்பட்ட இந்த வெளிப்படுத்துதல்களே, மக்களை மாபெரும் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரும்படியாகவும், தேவனிடத்தில் நெருங்கி சேரும்படியாகவும் ஈர்க்கின்றன.



ஒவ்வொரு பிரார்த்தனைக் கூட்டத்தின் முடிவிலும் சகோதரர் தினகரன் அவர்களின் தொடுதலுக்காக ஜனங்கள் வரிசையில் காத்திருக்கிறார்கள். பின் நாட்களில் தேவன் தன்னையும் பயன்படுத்த போகிறார் என்பதை அறியாத நிலையில் அவரது மகன் பால் தினகரன், அவர் அருகே நின்றுகொண்டு மிகுந்த ஆச்சரியத்துடன் மக்களை பார்க்கும் காட்சி.

ஒவ்வொரு நற்செய்தி பெருவிழாவிற்கும் போவதற்குமுன்பே, அங்கு கூடி வரப்போகிற மக்களுக்கு கிறிஸ்து திருமறையில் வாக்குப் பண்ணியிருக்கும் ஆசீர்வாதங்கள், சுகங்கள், மேலும் விடுதலைக்காக, அவர்களுடைய எதிர்பார்ப்புகளை சந்திக்க என்னையே ஆயத்தப் படுத்திக்கொள்வேன். ஆகவே, சில நாட்கள் உபவாசத்துடன் ஜெபத்தில் தொடர்ச்சியாக தேவனின் பாதத்தில் அமர்ந்து காத்திருந்து அந்த நாட்களிலேயே அந்த பெருவிழாவில் வழங்க வேண்டிய என்னுடைய செய்திகளையும் ஆயத்தம் செய்வேன். அப்படி காத்திருக்கும் வேளைகளில் பரிசுத்த ஆவியின் விசேஷித்த ஒரு அபிஷேகம் என்மேல் வரும். கெத்செமனே தோட்டத்தில் நம் அருமை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜெபிக்கும்போது நிகழ்ந்தது போன்று, அழியும் ஆத்துமாக்களுக்காக எழுந்து வரும் மகா பெரிய துக்கம் எனக்குள்ளே உருவாகும். அந்த வேளையில் மெய்யாகவே நானும் கெத்செமனே தோட்டத்தின் அனுபவத்தை உணர்வது உண்டு.

இறுதியாக, செய்தியளிக்க மேடைக்கு செல்லும்பொழுது, ஆண்டவரின் ஆசீர்வாதங்களை பெறுவதற்காக ஆவலோடு காத்தி ருக்கும் முகங்களைப் பார்த்தவுடன் என் உள்ளம் என்னை அழுத்தி சொல்லும், "தினகரன், இந்த எல்லா மக்கள் மேலும் ஆசிகளைக்

கொண்டுவரும் தனிப்பட்ட பொறுப்பு உன்னிடமே உண்டு". இது ஒரு புனிதமான நேரம் மட்டுமல்ல, மகா வேதனையின் நேரமாகவும் தோன்றும். பிறகு ஆண்டவருடைய மனதுருக்கம் சக்திவாய்ந்த நதியாய் என் மூலம் பெருக்கெடுத்து ஓடி ஒவ்வொரு ஆத்துமாவையும் திருப்தியாக்கும்.

ஆண்டவரிடமிருந்து வந்த இந்த விசேஷித்த சந்திப்பிற்குப் பின், மிகுந்த மகிழ்ச்சியோடு என் உலக வேலைக்கு சென்றும், என் ஓய்வு நேரங்களிலெல்லாம் தேவை நிறைந்த மக்களுக்காக ஆண்டவரிடம் மன்றாடியும் அதன்மூலம் இன்னும் அதிகமதிகமாக பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றேன். அதே சமயத்தில் ஆண்டவரின் தரிசனங்களை அவ்வப்பொழுது பெற்று, அதினிமித்தம் வேதாகம சத்தியங்களை அறிந்து ஆசீர்வாதம் பெற்று வந்தேன். இது உண்மையாகவே பரலோகத்திலிருந்து வரும் 'மன்னா'வை உண்பது போன்றேயிருந்தது.

## பரிசுத்த ஆவியின் வரங்களை நோக்கி

ஒருநாள் எங்களுடைய ஆலயத்திலுள்ள மூப்பர்கள் மரணப் படுக்கையிலிருந்த ஒரு வாலிபனுக்காக ஜெபித்து வர திட்டமிட்டனர். என்னுடைய தகப்பனாரும் அவர்களோடு செல்ல அழைக்கப்பட்டிருந் தார்கள். நானும் அவர்களோடு சென்றேன். அந்த இளம் வாலிபன் உண்மையாகவே சாகும் தருவாயில் இருந்தான். ஜெபிப்பதற்காக மூப்பர்கள் அனைவரும் அவனுடைய படுக்கையை சுற்றி முழங்கால் படியிட்டனர். என்றாலும் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஜெபம் செய்ததைக் கேட்டு நான் ஸ்தம்பித்துப் போனேன். "ஆண்டவராகிய இயேசுவே, துக்கத்திலிருக்கும் இந்த குடும்பத்தைத் தாங்கி ஆறுதல் தாரும்" என்று ஜெபித்தனர். அந்த வாலிபன் குணமாகி எழும்ப வேண்டுமென்று அவர்கள் ஜெபம் செய்யாமல் அதற்கு மாறாக அந்த வாலிபன் உயிரோடு இருக்கும்போதே அவனுடைய பெற்றோர் மற்றும் உறவினர்களின் நொறுங்கிய இருதயத்தை ஆறுதல்படுத்தும் படியாக ஜெபம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த சுகவீனமான வாலிபன் ஏற்கனவே மரித்துவிட்டான் என்று எண்ணி விட்டார்கள். இது என்னை அதிகமாய் கலங்கச் செய்தது. என்னையும் அறியாமல் அந்த வாலிபனின் வியாதிப் படுக்கையின் அருகிலிருந்து இவ்வாறு நான் புலம்ப ஆரம்பித்தேன்.

"ஆண்டவராகிய இயேசுவே, மரணப் படுக்கையில் இருப்ப வரையும்கூட மிக எளிதாக தங்களுடைய விசுவாசமான ஜெபத்தினால் உயிரோடு கொண்டு வரும் பிற நாடுகளிலுள்ள தேவனுடைய பரிசுத்தவான்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். தேவ ஊழியம் அவசியமாகத் தேவைப்படும் இந்தியாவில் மட்டும் ஏன் அத்தகைய

தேவ ஊழியர்களை நீர் எழுப்பவில்லை? தயவு செய்து எலியாவைப் போன்ற தீர்க்கதரிசிகளை இந்தியாவிலும் எழுப்பும்'' என்று கண்ணீர் விட்டேன். உடனே பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த அபிஷேகம் என்மீது வந்தது. இடிமுழக்கம் போன்ற கர்த்தரின் குரல் திரும்பவும் திரும்பவுமாக ''நீயே அந்த மனிதன்! நீயே அந்த மனிதன்!'' என்று என்னுள் கூறியது. இதைக் கேட்டவுன், ''நான் மிகவும் சாதாரண மனிதன் ஆயிற்றே! இது எப்படி என்னால் ஆகும்'' என்று எனக்குள் வியப்புடன் நடுங்கிக் கொண்டிருந்தேன்.

பரிசுத்த ஆவியின் விசித்திரமான இந்த இடைப்படுதலின் சிறப்பினை முழுமையாக அறிய முடியாததால், பரிசுத்த ஆவியைப் பெறும்படி வாஞ்சித்த என்னை, வழி நடத்திக் கொண்டு வந்த போதகர் லெமியூரின் வழிநடத்துதலை மீண்டுமாக நாடினேன். அவர் சிரித்த வாறே, பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டினார் (*I கொரிந்தியர் 12:8-10*). அவர், ''சகோதரனே, ஆண்டவரை உங்களோடு வைத்திருக்கிறீர்கள். பரிசுத்த ஆவியானவரும் உங்கள்மீது இருக்கிறார். எனவே, இப்பொழுது பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களையும் உங்கள் மீது பொழியும் படி அவரை நோக்கி நீங்கள் கதற வேண்டும். அவற்றைப் பெற்றுக் கொண்டபிறகு, பாதிக்கப்பட்ட மக்களை விடுவிக்கும் அருஞ்செயலை செய்யும் வல்லமை வந்துவிடும்'' என்று சொன்னார். அதன்படி அந்த வேத வாக்கியங்களை திரும்பத் திரும்ப வாசித்த போது, **அந்த ஒன்பது வரங்களையும் பெற வேண்டுமென்ற என் வாஞ்சை என் ஆத்துமாவை அப்படியே பிடித்துக் கொண்டது.** எனவே நான் அதைப் பெறுவதற்காக 24 மணி நேரமும் தொடர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தேன்.

## பரலோகத்திற்கு முதல் பயணம்

அநேகமாக ஒரு மாதம் கடந்த பிறகு, ஒரு காலை வேளையில், அலுவலகம் செல்வதற்காக தயாராகிக் கொண்டிருந்தேன். இன்னமும் நேரம் இருப்பதை உணர்ந்தவனாய், அலுவலகத்தில் வெட்டியாக பொழுதைக் கழிப்பதைவிட இந்த எஞ்சிய நேரத்தை ஜெபத்தில் கழிக்க முடிவு செய்தேன். எனவே, என் எளிய வீட்டிலிருந்த உபயோகிக்கப்படாத சமையலறையில் ஜெபிக்கும்படியாக முழங்கால்படியிட்டேன். அந்த சிறிய இடைவேளையில் பரிசுத்த ஆவியானவர் என்னை மிகவும் சிறப்பான விதத்தில் சந்திக்க முற்பட்டார். சர்வ வல்லமையுள்ள பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட நான் ஒரு நெருப்பு பந்து என்மீது விழுவதைப் போல உணர்ந்தேன். உண்மையாகவே பரிசுத்த ஆவியின் நிறைவினால் நான் என்னையே மறந்து போனேன்.

பரத்திலிருந்து ஒரு சத்தம் என்னை ''இங்கே (பரலோகம்) வா'' என்று சொல்லக் கேட்டேன். பிறகு புரிந்து கொள்ள முடியாத

வேறொரு சம்பவம் நடந்தது. என் ஆவி இந்த சரீரத்தை விட்டு வெளியேறுவதைக் கண்டேன். என் உணர்ச்சி விவரிக்க முடியாத ஒன்றாயிருந்தது. நான் முழங்காலிலிருந்தபடியே, பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களினால் என்னை நிரப்பும்படி அடக்க முடியாத கண்ணீரோடு ஜெபத்தில் மூழ்கியிருப்பதைக் காண முடிந்தது. மறுபக்கம் அதே விசேஷித்த நேரத்தில் என் சரீரத்திற்கு அருகில் நான் நின்றுகொண்டு என் சரீரத்தை நோக்கி வியப்புடன் பார்ப்பதைக் கண்டேன். இந்த இரு வெவ்வேறு நிலைகளிலும் என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை சரீரத்தில் என்னால் தெளிவாக உணர முடிந்தது. ஒரு பரம கரம் பரலோகத்திலிருந்து என் அருகில் வந்திறங்கியது. ஒரு நொடியில் என்னையும் அறியாமல் அந்த உள்ளங்கையில் உறிஞ்சி கொள்ளப்பட்டேன். பிறகு அந்த கரம் என்னை ஏந்தி கொண்டவாறே விண்வெளிக்குள் நகர்ந்தது.

அந்த கரமானது கடந்து செல்லும்போது வழியில் முதலாவது பரந்த கடல் போன்ற மேகங்கள், பிறகு நட்சத்திரங்கள் வந்தன. உலகத்திலிருந்து பார்க்கையில் மிகச் சிறியதாக தோன்றும் நட்சத்திரங்கள், அளக்க இயலாத மாபெரும் கரடு முரடான மலைச் சிகரங்கள்போல் காட்சியளித்தன. திடீரென்று பெரிய பரப்பளவுள்ள ஒளிமயமான நகரம் போன்ற ஓர் இடம் வந்தது. மெய்யாகவே கடைசியாக நான் பரலோகம் வந்தடைந்துவிட்டேன் என்று எனக்குள் உணர்ந்தேன்.

இந்த இடம், சுட்டெரிக்கும் இவ்வுலகின் சூரிய ஒளிபோல் இராமல், தனித்தன்மை வாய்ந்த இயற்கைக்கப்பாற்பட்ட பேரொளியால் மின்னியது. கோடானகோடி மக்கள் ஆண்டவராகிய இயேசுவின் பேரின்ப பிரசன்னத்தில் மெய்மறந்திருந்தனர். மேலும் இலட்சக்கணக்கான தேவதூதர்கள் ஏறுவதும், இறங்குவதுமாயிருந்தார்கள். ஆண்டவராகிய இயேசுவின் சிங்காசனம் முழு பரலோகத்தின் மையப் பகுதியில் அமைந்ததாய் தோன்றியது. எப்பக்கத்திலுமுள்ள மக்கள் ஆண்டவராகிய இயேசுவைக் கண்டபோது அறிவுக்கெட்டாத வினோதமான அனுபவத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள் ஆவியில் அவருடன் 'அன்பின் கயிறு' களால் கட்டப்பட்டதை உணர்ந்தார்கள். ஒரு அதிசயமும், அற்புதமுமான காட்சியாயிருந்தது. அண்டசராசரங்களிலேயே, **பரலோகம் தான் மிகச் சந்தோஷமான இடம்** என்பதில் சந்தேகமில்லை.

இந்த பயணம் முடிவுக்கு வந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக அந்த கரத்திலிருந்து நான் இறக்கப்பட்டேன். அவர் புன்முறுவலுடன், "உனக்கு என்ன வேண்டும்" என்ற ஒரு பெரிய கேள்வியை எழுப்பினார். தயக்கமின்றி

உடனடியாக "ஆண்டவரே, எனக்கு பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களும் வேண்டும்" என்று பதிலளித்தேன். ஆண்டவர் உடனே புன்னகை பூத்தார். ஆயினும், பதில் ஒன்றும் சொல்லாததால் வெம்பி போனேன். அதன்பிறகு என் பின்புறத்திலிருந்து ஒரு குரல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம், "ஆண்டவரே, அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்" என்று உம்முடைய வசனத்தில் கூறியிருக்கிறீரே (மத்தேயு 9:37), இங்கே ஒரு வாலிபன் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்காக பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற எந்த தியாகத்தையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறான். அவன் விரும்புகிற வண்ணமாகவே நீர் அவனுக்கு ஆவியின் வரங்கள் ஒன்பதையும் கொடுத்தாலென்ன?" என்று பரிந்து பேசியது. இந்த சம்பவம் 45 நிமிடங்களுக்கு நீடித்தது.

ஆண்டவராகிய இயேசு தன் சிங்காசனத்திலிருந்து திடீரென்று எழுந்து "நாம் பிதாவிடம் போகலாம்" என்று சொல்லி, அவர் மறைந்தபோது இந்த பரிந்துரை தடைப்பட்டது. அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று அறியாமல் முழுவதும் கைவிடப்பட்டவனாகவும், உதவியற்றவனாகவும் இருப்பதை உணர்ந்தேன். இம்மட்டும் என்னைத் தூக்கி வந்த கரம் மீண்டும் தோன்றி என்னை சுமந்து கொண்டு பரலோகத்தின் வேறொரு இடத்திற்கு கொண்டு சென்றபோதுதான் என் மனப்பாரம் நீங்கியது.

## மாபெரும் யேகோவாவின் பிரசன்னத்தில்

முன்பு விவரிக்கப்பட்டதான பரலோகத்தின் பகுதியை விட வெகு தூரத்தில் அமைந்துள்ள இந்த இடம் முற்றிலும் வேறுபட்டதாய் காட்சியளித்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிங்காசனத்தைக் கொண்ட அந்த இடத்தில் காணப்படும் மக்களின் குதூகலம், ஆரவார சத்தங்கள் தேவ தூதர்களின் அசைவாடுதல் இவற்றிற்கு பதிலாக இந்த இடத்தில் **பரிசுத்தமும், பயபக்தியும் நிறைந்த அமைதியும்** நிலவியது. இந்த இடம் பிரகாசமான ஒளியாலும், எல்லாப் பக்கங்களிலும் பனிமூட்டமுள்ள மலைகளாலும் சூழப்பட்டிருந்தது போல் இருந்தது. ஒளிவீசும் கோளம்போல காணப்பட்டதின் மத்தியில் வானத்தையும் பூமியையும் தொடும் ஒரு மாபெரும் சிங்காசனம் தோன்றியது. அந்த சிங்காசனத்தில் ஒரு மனிதனைப் போல் தோற்றமளிக்கும் கெம்பீரமான உருவத்தை பார்க்க முடிந்தது. **அந்த சிங்காசனம் ஓர் அற்புத ஒளியினால் சூழ்ந்திருந்தபடியால்,** சிங்காசனத்தில் அமர்ந்திருந்த பிரம்மாண்டமான தோற்றமுள்ளவரை பிரகாசமான மேக மூட்டம் மறைத்துக் கொண்டிருந்தது. அந்த முழு காட்சியும், பின்வரும் வேத வசனங்களை எனக்கு நினைவுப்படுத்தியது.

*...அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்.*

I தீமோத்தேயு *6:15,16*

இந்த வேத வசனங்களின்படி, ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபின் தேவனாகிய உன்னதமான யேகோவாவுடன் ஏற்படுத்தப்பட்ட ஒரு சந்திப்பாக அமைந்திருந்தது (யாத்திராகமம் *3:16*).

கீழ்க்கண்ட வேத வசனத்தின்படி, சிங்காசனத்தில் வீற்றிருந்தவர் கெம்பீரமானவராக இருந்தார் என்று எளிதாக ஆமோதிக்க முடிந்தாலும்,

*...ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டேன்;...*

*ஏசாயா 6:1*

அவருடைய ரூபத்தை தெளிவாகக் கண்டுகொள்ள இயலவில்லை. உடன்தானே, ஒரு இடிமுழக்கம் போன்ற குரல் "உனக்கு என்ன வேண்டும்?" என்று சிங்காசனத்திலிருந்து முழங்கியது. இந்த குரல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மென்மையான, இனிதான, அன்பு நிறைந்த குரலுக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது. **இக்குரல் மின்னலுக்கும் இடிமுழக்கத்திற்கும் ஒத்திருந்தது**.

நான் ஆவியில் இருந்தாலும், அக்குரல் என்னைப் பொடியாக்கி ஊதிவிடும் என்று நினைக்குமளவுக்கு பயங்கரமாயிருந்தது. ஆயினும், நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு முழு விடுதலையுடன், "தேவனே, எனக்கு பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களும் வேண்டும்" என்று பதிலளித்தேன். ஏறத்தாழ ஐந்து நிமிடங்களுக்கு சிங்காசனத்திலிருந்து ஒரு பதிலும் வரவில்லை. பின்பு அவரிடமிருந்து, "உனக்கு பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்கள் வேண்டுமா அல்லது நான் வேண்டுமா?" என்று மற்றுமொரு கேள்வி வந்தது. காலம் தாழ்த்தாது, இதுவரை என்னை வழி நடத்தின குரல் என் பின்னேயிருந்து தயக்கமின்றி உடனே ஆலோசனை கொடுத்தது. "ஆண்டவரே, (சிங்காசனத்தில் வீற்றிருந்தவரிடம்) நீர் எனக்கு வேண்டும்" என்று சொல்ல என்னை ஏவியது. எனக்குள் இருந்த எல்லா பெலத்தையும், தைரியத்தையும் திரட்டி, நடுங்கும் குரலில் நான், "தேவனே, நீரே எனக்கு வேண்டும்" என்றுரைத்தேன். நான் இதை சொன்ன மாத்திரத்தில், என் பதில் அவரை மிகவும் பிரியப்படுத்தியது என்று அவருடைய அசைவுகளிலிருந்து எளிதாக புரிந்து கொண்டேன்.

இந்தக் கட்டத்தில், **நான் உறுதியாக உணர்ந்ததென்னவென்றால் வெண்மையான சிங்காசனத்தில் வீற்றிருந்தவர் நம்முடைய பரம பிதாவாகிய உன்னதமான யேகோவா தவிர வேறு யாருமில்லை** என்றும், எனக்காக வேண்டுதல் செய்து, ஒவ்வொரு முக்கியமான கட்டத்திலும் எனக்கு ஆலோசனை கொடுத்தவர் கீழே குறிப்பிட்டுள்ள வேத வாக்கியத்தின்படி, விலைமதிப்பற்ற **தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரே** என்றும் அறிந்தேன்.

நீங்கள் பேசவேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார்...

லூக்கா *12:12*

என் முன்னே, மற்றுமொரு பளிச்சிடும் காட்சி வெளிப்படுத்தப் பட்டது. ஆம், சிங்காசனத்திலிருப்பவரின் மார்பில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் முகம் ஒரு நொடிப்பொழுது வெளிப்படுவதை போல் நான் கண்டேன். (யோவான் 1:18). அவருடைய முகத்திலிருந்து பலதரப்பட்ட வண்ண ஒளிக்கதிர்கள் ஜொலிக்க, அழகிய புன்னகை வந்தது. அந்த புன்னகையால் நான் முற்றிலும் பிரமித்துப் போனேன். அந்த ஒளிக்கதிர்கள் அப்படியே வந்து என்னைத் தாக்கி சூழ்ந்து கொண்டது. இது மெய்யாகவே உன்னதமான **யேகோவாவின் இயற்கைக்கப்பாற்பட்ட ஒரு தொடுதல்.** நான் என்னையே மறந்து போனேன். சிங்காசனம், மாட்சிமையான யேகோவா மற்றும் அவருடைய குமாரனின் புன்னகை தவழும் முகம் இவை மட்டுமே என் மனதில் தெரிந்தன. அடுத்தகணமே, என் ஆழ்ந்த மன்றாட்டுகளை ஆரம்பித்த என்னுடைய அறையில் மீண்டும் நான் இருப்பதை உணர்ந்தேன்.

அந்த நாளின் மீதமுள்ள நேரம் முழுவதும், வீட்டிலும் சரி வங்கியிலும் சரி என்னால் எந்த வேலையையும் செய்ய இயலவில்லை. பரலோகத்திலும் தேவனுடைய சிங்காசனத்தின் முன்னும் நான் கண்ட பரவசமூட்டும் காட்சிகள் மீண்டும் மீண்டும் என் முன்னே பளிச்சிட்டன. "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்ட ஆண்டவரின் குரலும், யேகோவாவின் குரலும், என் செவிகளில் கொந்தளிக்கும் கடலில் பொங்கி எழும் அலைகளைப் போல மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

இதுவே எனது பரலோக தரிசனங்களில் முதன்மையானது ஆகும். அந்நாள் முதற்கொண்டு பரிசுத்த ஆவியின் வரங்கள் என் வாழ்க்கையில் செயல்படத் தொடங்கின. அந்த வரங்கள் முதன் முதலாக என் வாழ்வில் செயல்படத் துவங்கிய நிகழ்ச்சி என் மனதில் இன்றும்கூட பசுமையாக உள்ளது.

திரித்துவ தேவனின் ஆசீகளைப் பெறும் பாக்கியம் கிடைத்த அதே நாளில் திரு. சாமுவேல் என்ற என்னுடைய மாமாவை சந்திக்க வேண்டியதாயிருந்தது. அவருடைய குடும்பத்தை தேவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்று ஜெபிப்பதற்காக என் மாமாவுடன் முழங்கால் படியிட்டபோது, வல்லமை நிறைந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இறங்கியது. **என் நாவு முற்றிலும் புரியாத பாஷையில் பேசத் துவங்கியது. எனது நாவு தன்னிச்சையாக இயங்கி புரியாத அந்த மொழியின் அர்த்தத்தை என் தாய் மொழியில் அதுவும் கோர்வையாக கொடுப்பதைக் கேட்டு இன்னும் மலைத்துப் போனேன்.** கன்னங்களில் கண்ணீர் வடிய, சற்று நேரம் இவ்வாறு இது தொடர்ந்தது. தேவனின் அந்த தூய சந்திப்பின் நேரம் முழுவதிலும் எனக்கு என் நாவை கட்டுப்படுத்தவே முடியவில்லை.

ஆவியானவரின் அசைவாடுதல் முற்றுப்பெறும்போது, என் மாமாவும், அவரது முழு குடும்பத்தினரும்கூட கண்ணீரில் இருப்பதைக் கண்டேன். அவர்கள் ஒருமனதாக, சர்வவல்ல தேவன் தான் தங்களுடன் பேசினார் என்றும், அவர்களை அழுத்தும் பிரச்சனைகளை **அந்நிய பாஷையாலும் வியாக்கியானத்தினாலும்** வெளிப்படுத்தினார் என்றும் பரவசத்துடன் அறிக்கை செய்தார்கள். அவர்களுடைய சோர்வுகள் அனைத்தும் மறைந்து விட்டதாக உணர்ந்தனர். அப்பொழுதுதான் நான், தேவன் எனக்கு இரண்டு விலையேறப் பெற்ற வரங்களை அருளியுள்ளார் என்று கீழ்க்காணும் வேத வாக்கியத்தின்படியே உணர்ந்தறிந்தேன்.

> ...வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.
>
> I கொரிந்தியர் *12:10*

> வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது.
>
> II பேதுரு *1:20*

அந்த இரண்டு வரங்களும் நாற்பது வருட காலங்களுக்கும் மேலாக என்னைத் தொடர்ந்தும், கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனம்போல் தீர்க்கதரிசன வரத்துடன் இணைந்தும் என் ஊழியத்தில் செயல்படுகின்றன.

> ...பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.
>
> *அப்போஸ்தலர் 19:6*

என் வேண்டுதல்களைக் கேட்டு, அபாத்திரனாகிய என்மேல் இவற்றையும், இன்னும் மற்ற விலையேறப்பெற்ற வரங்களையும் வழங்கின நம் பரம பிதாவிற்கு எப்படி நான் நன்றி சொல்வேன்? மெய்யாகவே, நானிருப்பது தேவ கிருபையினாலேயே.

# மகிமையின் தொடுதல் 3

*...தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணி னவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;*

*I கொரிந்தியர் 2:9*

தரிசனம் என்பது இரண்டு விதங்களில் நமக்கு கொடுக்கப் படலாம். இந்த உலகத்தில், நம்மையே மறந்து ஆழ்ந்த ஜெபத்தில் மூழ்கியிருக்கும்போது, பரலோகம் திறந்திருப்பதை காண்பதற்கு தரிசனம் உதவ முடியும். அடுத்ததாக, நம்மை பரலோகத்திற்கு ஆவியில் எடுத்துச் செல்ல கர்த்தர் தீர்மானித்து, அவருக்கு பிரியமானதை வெளிப்படுத்த தரிசனத்தை பயன்படுத்துகிறார். யாருக்கு வேண்டுமானாலும் தேவன் பரலோக தரிசனங்களை கொடுக்க முடியும் என்பதற்கான முக்கியமான காரணங்களை ஆண்டவரோடு நான் நடந்த வாழ்விலிருந்து கண்டுபிடித்து, கீழே குறிப்பிட்டுள்ளேன்.

## 1. தேவன்மேல் நாம் கொண்டிருக்கும் தாகத்தைப் பற்றிய அங்கீகரிப்பு

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் போன்று **தேவனோடு நடக்கும் அனுபவத்தை பெறுவதற்கு இருதயத்தில் எழும்பும் தீராத வாஞ்சையே தேவனின் முகத்தை கருத்தோடு தேட நம்மை உந்தும்.** சர்வவல்லமை யுள்ள தேவன், ஒரு சங்கோஜமான நிலையில் யாக்கோபிடம் கெஞ்ச வேண்டியதை, பின்வரும் வசனம் விளக்குகிறது.

*அவர் (தேவன்): நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார்.*

*ஆதியாகமம் 32:26*

அதே காரியம் இன்றும்கூட கண்ணீர் நிறைந்த நம் ஜெபங்களுக்கு விடையாக சம்பவிக்கலாம்.

## 2. தேவனின் மனதுருக்கம்

ரோமர் *5:5*, சங்கீதம் *112:4*-ல் உள்ளபடி, பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கும்போது, தேவனுடைய அன்பும் மனதுருக்கமும் நம் இருதயங்களை நிரப்புகிறது. உடைந்த உள்ளமுள்ள வர்களின் விடுதலைக்காக நாம் மன்றாடி ஜெபிக்கும்போது, இந்த மனதுருக்கம் உண்மையான அங்கலாய்ப்புடன் அந்த நபர் விடுவிக்கப்

படும்வரை தேவனையே பிடித்துக் கொள்ள பெலனை தருகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் தெய்வீக தவிப்பும் பெருமூச்சும் நம் இருதயத்திலிருந்து பெருகி, யோபுவைப் போல் "தேவன் என் வேதனைகளை நேரடியாக விசாரிக்க மாட்டாரா?" என்ற ஏக்கமும் வியாகுலமும் உண்டாக செய்கிறது. இதை கீழ்க்கண்ட வசனத்தில் பார்க்கிறோம்.

> நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்து சேர்ந்து, என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய் வைத்து, காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்.
>
> யோபு *23:3,4*

இப்படிப்பட்ட நெருக்கமான சூழ்நிலைகளில் நம் முறையீடு களைக் கவனித்து அவற்றை தீர்த்துவைப்பதற்காக ஆவியில் நம்மை பரலோகத்திற்கு கொண்டு போக அவர் ஒருவேளை இரக்கப் படலாம்.

*1965*ஆம் ஆண்டு, பெங்களூர் என்ற பட்டணத்தில் இருந்தேன். அப்பொழுது நாங்கள் குடும்பமாக "சுவிசேஷ ஜெபக்கூடம்" என்ற சபைக்கு தேவனைத் தொழுதுகொள்ள செல்லுவோம். அச்சபையின் போதகர் மறைதிரு. K.R.பால், மிகுந்த தேவ பக்தியுள்ளவர். ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனை முடிந்தவுடன் துக்கம் தொண்டையை அடைக்க அவர் என்னிடம் வந்து, "என் மைத்துனர், திரு.சுவாமி, நோய்வாய்ப்பட்டு என் வீட்டில் மரணத்தருவாயிலிருக் கிறார். ஜீவனற்றவர்போல் காணப்படுகிறார். அவர் மீண்டும் உயிர்பெற, வீட்டிற்கு வந்து ஜெபிக்க முடியுமா?" என்று கேட்டார். உடனே நான் சம்மதிக்க, அவருடைய வீட்டிற்கு நாங்கள் விரைந்து சென்றோம்.

மெய்யாகவே, கை விரல்கள் நீலநிறமாக மாறி வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இருந்தார் திரு.சுவாமி. அவருடைய மனைவி, தன் இரண்டு பிள்ளைகளையும் கரங்களில் பிடித்துக் கொண்டு துக்கம் நிறைந்த வெளிறிய முகத்துடன் இருப்பதைக் கண்டேன். உடனே என் இருதயத்தில் மிகுந்த மனதுருக்கத்தோடு, திரு.சுவாமியின் ஜீவனை மீண்டும் அனுப்புமாறு தேவனிடம் கதறினேன். பரிசுத்த ஆவியானவர் என்னை வல்லமையாய் நிறைத்தார். நமது அன்பின் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் முன் தோன்றி "நீ என்ன செய்ய முயற்சிக்கிறாய்?" என்று கேட்டார். நான், "ஆண்டவரே, திரு.சுவாமியின் மனைவியும் பிள்ளைகளும் அழும் காட்சியை என்னால் தாங்க முடியவில்லை. எனக்கு அவருடைய ஜீவன் திரும்ப வேண்டும்" என்றேன். ஆண்டவர் ஒன்றும் பேசாமல் அங்கிருந்து மறைந்தார். "வா நாமும் போகலாம்"

என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லும்வரை தனிமையை உணர்ந்தேன்.

அடுத்து, ஆண்டவர் பரலோகத்தின் பொற்தள வீதிகளில் உலாவுவதை கண்டேன். ஆவியில் நானும் அவரைப் பின் தொடர்ந்தேன். அவர் தன்னுடைய சிங்காசனத்தில் அமர்ந்தபொழுது, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். நான் மறுபடியும், "ஆண்டவரே திரு.சுவாமியின் உயிரைத் திரும்பவும் எனக்குத் தர வேண்டும்" என்றேன். அப்பொழுது அவர், திரு.சுவாமியின் மனைவியிடம் ஒரு தனிப்பட்ட செய்தியை கொடுக்குமாறு வெளிப் படுத்தி, இதை அவர்களிடம் சொல்லுவாயா?" என்று கேட்க, தயக்கமின்றி அதற்கு ஒப்புதல் தெரிவித்தேன். பிறகு பரலோகம் முழுவதும், "திரும்பிப் போ, அவர் உயிரோடிருக்கிறார்" என்று அவருடைய வார்த்தை எதிரொலித்தது.

அடுத்தகணம், என் உடைகளெல்லாம் வியர்வையினால் நனைந்த வனாய் நான் திரு.சுவாமியின் படுக்கையருகில் காணப்பட்டேன். 75 நிமிடங்கள் நான் அவ்வாறு மெய் மறந்து ஜெபத்திலிருந்துள்ளேன். திரு.சுவாமி எப்படி இருக்கிறார் என்பதைக் காண அவர் பக்கமாகத் திரும்பினேன். எத்தனை அருமையான காட்சி! ஏற்கனவே அவர் எழுந்து உட்கார்ந்து தன் சகோதரி திருமதி பால் அவர்களிடம் "எனக்கு சாப்பிட ஏதேனும் கொடுங்கள், பசியாயிருக்கிறேன்" என்று கூறிக் கொண்டிருந்தார். அதே நாளில், சபையின் மாலை ஆராதனைக்கு அவர் வந்து முதல் வரிசையில் அமர்ந்திருந்த காட்சி, சபை மக்களுக்கு மிகுந்த பரவசமளித்தது! ஆம், கர்த்தருடைய மனதுருக்கம் அவருடைய கரத்திலிருந்து அதிசயமான கிரியைகளை நாம் காணச் செய்கிறது (*சங்கீதம் 111:4*).

## 3. தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு தம்முடைய தெய்வீகத் திட்டங்களை வெளிப்படுத்துவதில் தேவனுடைய வாஞ்சை

தம்முடைய தீர்க்கதரிசிகளுடன் பேசசர்வ வல்லமையுள்ள தேவன் விரும்புகிறார் என்பதை வேதம் விவரித்து சொல்லுவதாவது:

> கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.
>
> ஆமோஸ் 3:7

பின்வரும் வசனத்தின்படி, சோதோம் பட்டணத்திற்கு நியாயத் தீர்ப்பை அனுப்புமுன் தம் தீர்க்கதரிசியாயிருந்த ஆபிரகாமுக்கு (ஆதியாகமம் 20:7) அதை வெளிப்படுத்தும்படி, கர்த்தர் தாமே பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார் என்று பார்க்கிறோம்.

*நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?*
*ஆதியாகமம் 18:18*

இதுபோன்றே, ஒரு தேசத்தைக் குறித்தோ தனிப்பட்ட ஒரு நபரைக் குறித்தோ அல்லது ஒரு குழுவினரைக் குறித்தோ, பரலோகத்தில் தீர்மானிக்கப்பட்ட சம்பவங்களை பூலோகத்தில் நிறைவேற்றுவதற்காக நம்மைப் பரலோகத்திற்கு கொண்டு சென்று நம்முடன் உரையாடுகிறார். அது நம் சொந்த தனிப்பட்ட வாழ்வைப் பற்றியோ அல்லது நம்மோடு தொடர்பு கொண்டவர்களின் வாழ்வை பற்றியோ அல்லது நமது ஊழியத்தில் நம்மோடு தொடர்பு உடையவர்களின் வாழ்வைப் பற்றியோ இருக்கலாம். பரலோகத்தைத் திறந்து நாம் அவரை பார்ப்பதற்கோ அல்லது நம்மை பரலோகத்திற்கு கொண்டு சென்று நம்மோடு உரையாடுவதற்கோ தேவன் இந்த மூன்று விதமான வேறுபட்ட முறைகளை வெளிப்படுத்துகிறார்.

**பரலோக தரிசனங்களை** பெற்றுக் கொள்ள ஆர்வத்தோடு இருப்போருக்கு முக்கியமான சத்தியங்களை நான் இங்கு பட்டியலிடட்டும். பரலோக தரிசனத்தை உண்மையாய் பெற்று கொள்ள இவை இன்றியமையாதவை.

## அ) பரலோகத்தின் உண்மைத் தன்மை

*என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.*

*யோவான் 14:2,3*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் காலத்தால் அழியாத இந்த வார்த்தைகள், பல நூற்றாண்டுகளாக, உலகத்திலுள்ள கோடானகோடி மக்களுக்கு தங்களுடைய மரணத்திற்குப் பிறகு தொடரும் வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கையை கொடுக்கின்றன. அழியும் ஆசைகள் நிறைந்த இந்த லௌகீக உலகம், நரகமாகிய படுகுழியின் பின்னணியின் இருளில் இயங்கிக் கொண்டிருப்பதால், கிறிஸ்துவினுடைய இந்த ஜீவனுள்ள வார்த்தைகள் மின்னிப் பிரகாசிக்கும் வைரமாயிருக்கிறது.

ஒருமுறை, புகழ் பெற்ற தத்துவ ஞானி ஒருவர், தன் மரணப் படுக்கையில் இருந்தபோது, “நான் ஏன் இவ்வுலகத்திற்கு வந்தேன் என்றும், இங்கு எவ்வாறு வாழ்ந்தேன் என்றும், இப்போது எங்கே போய் கொண்டிருக்கிறேன் என்றும் அறியேன்” என்று அவர்

வியப்புடன் கூறியதை பத்திரிகை ஒன்றில் வாசித்தேன். இதுவே பொதுவாக மனுக்குலம் அனைத்தின் அங்கலாய்ப்பின் அழுகுரல். இதற்கு முற்றிலும் மாறாக, ஆண்டவராகிய இயேசுவுக்கு தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்தவர்களோ, மிகுந்த பரவசத்தோடும், எதிர்பார்ப்போடும் இவ்வுலகை விட்டு செல்கின்றனர். **அப்படிப்பட்டவர்களின் கடைசி மூச்சு அடங்கும் அந்த தருணத்தில், மேற்கூறப்பட்டபடி பரலோகத்திலிருக்கும் கிறிஸ்துவின் வார்த்தைகள் மெய்யாகவே அவர்களுக்கு உண்மையாகிவிடுகிறது.**

பரலோகத்தின் உண்மை தன்மையை என் வாழ்க்கையில் ருசித்த ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை எப்பொழுதும் பத்திரப்படுத்தி வைத்துள்ளேன். சென்னையில் திரு.S.T.ஜெபராஜ் என்ற ஒரு நல்ல நண்பர் எனக்கு இருந்தார். அவர் தேவனுடைய ஊழியர் மீது மிகுந்த அன்பு காட்டினதால், நான் அவர்மீது பெரு மதிப்பு வைத்திருந்தேன். துரதிஷ்டவசமாக, அவர் மிகவும் நேசித்த தன்னுடைய பக்தியுள்ள மனைவியை திடீரென்று இழந்தார். யாராலும் அவரை உண்மையிலே தேற்றவோ அல்லது ஆறுதல்படுத்தவோ முடியவில்லை. எனவே நாங்கள் அனைவரும் மனமுடைந்து போனோம்.

இந்த நேரத்தில்தான், ஒருநாள் நான் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, என்னை பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல பரிசுத்த ஆவியானவர் விருப்பம் கொண்டார். விலையேறப்பெற்ற நமதருமை ஆண்டவரை நான் சந்தித்தேன். நான் ஜெபித்துக் கொண்டிருந்த அநேக காரியங்களை குறித்து என்னிடம் அவர் பேசிக் கொண்டிருந்தார். பிறகு ஆச்சரியவிதமாக, பரலோகத்திலுள்ள கோடிக்கணக்கானோர் மத்தியில் அவர் ஒரு நபரை சுட்டிக்காட்டி, “இவர்களை உனக்கு அடையாளம் தெரிகிறதா?” என்று கேட்டார். அவர்களை சற்று கூர்ந்து கவனித்தபோது, என் நெருங்கிய நண்பர், திரு.S.T. ஜெபராஜ் அவர்களின் மனைவி என்று எளிதாக கண்டுகொண்டேன். ஆண்டவரிடம் என் நினைவு கூறுதலை உறுதிப்படுத்திக் கொண்ட போது, “அவர்களிடம் பேச விரும்புகிறாயா?” என்று அவர் கேட்டார். உடனடியாக, “ஆம் ஆண்டவரே” என்றேன்.

ஆண்டவர் தமது சர்வ வல்லமையினால் அவர்களை தம்முடைய பிரசன்னத்தில் இருக்கும் பேரின்பத்திலிருந்து வெளியே வரச் செய்து, தன் முழு கடந்த காலத்தையும் நினைவுகூரும்படி செய்தார். என்னை அடையாளம் கண்டு கொண்டு, உலகத்தில் எங்களுக்கிருந்த ஐக்கியத்தை நினைவுகூருவதில் சந்தோஷமடைந்தார்கள். கிடைத்த நேரத்தை வீணாக்காமல் உடனே நான் “இன்றும்கூட உங்கள் கணவர் உங்கள் பிரிவால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்” என்று கூறினேன். அவர்கள் புன்முறுவலுடன், “தயவுகூர்ந்து என்னுடைய வேத புத்தகத்தின் பின்புறத்தில் நான் அவர்களுக்காக வைத்திருக்கும்

கடிதத்தை எடுத்து வாசிக்கச் சொல்லுங்கள்; நான் பரலோகம் வருவதற்கு முன்பாக எழுதிய அக்கடிதம் அவருடைய எதிர்காலத்தைக் குறித்து அவருக்கு இருக்கிற அனைத்து கவலைக்குரிய கேள்வி களுக்கும் விடை தரும்" என்றார்கள். நான் பேச்சற்றுப் போனேன். பரலோகத்திலிருந்து வந்தவுடனே திரு.S.T.ஜெபராஜ் அவர்களுக்கு இச்செய்தியைக் கூறினேன். அவரும் காலதாமதமின்றி அந்த கடிதத்தை அவருடைய மனைவியின் வேத புத்தகத்திலிருந்து கண்டெடுத்தது, பரலோகத்தில் எனக்கு தெரிவித்தபடியே நடந்தது. மிகுந்த கண்ணீ ரோடும் பேராவலுடனும் அந்த கடிதத்தை வாசிக்கும்போது அவர் மிகவும் சந்தோஷப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டார். தன்னுடைய பரம அழைப்பைப் பற்றிய முன் உணர்வு அவருடைய மனைவிக்கு இருந்தபடியால் தான், அதை எழுதியிருக்கக்கூடும். இந்த குறிப்பிட்ட சம்பவத்தின்மூலம் பரலோகத்தின் உண்மைத் தன்மையை நானும் அறிந்து கொண்டேன்.

## ஆ) பரலோகத்தின் மகத்துவம்

பரலோகத்தின் மகத்துவத்தை மனுஷனுடைய சிந்தனையின் சக்தியினால் அணு அளவும் அளவிடமுடியாது என்றே வேதாகமம் பின்வரும் வசனத்தில் கூறுகிறது.

> ...தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணி னவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.
>
> I கொரிந்தியர் 2:9

இதே கருத்து, சங்கீதம் *31:19*-லும், ஏசாயா *64:4*-லும் உள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் ரஷ்யாவின் முதல் விண்வெளி வீரர் திரு.யூரி காகரின், விண்வெளி கப்பலில் சென்றபோது, விண்வெளி யானது மினுமினுக்கும் நட்சத்திரங்களாலும், கிரகங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, தன்னையும் அறியாமல் "ஆஹா! என்ன காட்சி!" என்று வியந்தார். திரு.யூரி காகரின், தேவன் பேரிலும் இயற்கைக்கப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் பேரிலும் சிறிதேனும் நம்பிக்கையற்றவர். ஆயினும், சிருஷ்டி கர்த்தா நட்சத்திரங்களையும், கோளங்களையும் வரிசைப்படுத்தியிருக்கும் விண்வெளியின் அழகைக் கண்டபொழுது தனது ஆச்சரியத்தையும், பிரமிப்பையும் அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. **விண்வெளியை சிறிது நேரம் பார்த்தாலே இவ்வளவு அழகில் திக்கு முக்காடினால், தேவனுடைய கைவேலையாகிய பரலோகம் எவ்வளவு பிரமிக்கத்தக்கதாக இருக்கும்!**

## இ) தேவனின் வாசஸ்தலம்

பின்வரும் வேத வாக்கியங்களின்படி, பரலோகம் சர்வ வல்ல தேவனுடைய வாசஸ்தலமாக உள்ளது:

*வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்.*

*சங்கீதம் 115:16*

ஆண்டவராகிய இயேசு, தேவனை அழைக்கும் விதத்தை நமக்கு கற்பித்ததாவது:

*...பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,...*

*மத்தேயு 6:9*

*நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார். தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்.*

*சங்கீதம் 115:3*

மனிதர்களாகிய நாம் இந்த உலகத்தில் பிறந்து வளருகிறபடியால், நம்முடைய அறிவு, மண்ணின் சாயலையுடையதாய் இருக்கிறது. ஆகவே, **பரலோகம் நமக்கு ஒரு மறைபொருளாகவே உள்ளது.**

சில ஆண்டுகளுக்குமுன், அமெரிக்க ஐக்கிய நாட்டில் கலிஃபோர்னியா என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய விண்வெளி ஆய்வுக் கூடம் பற்றி ஒரு சர்வதேச மாதாந்திர பத்திரிகையில் ஒரு செய்தி வெளியானது. அதில், அந்த ஆய்வு கூடத்தின் தலைவர் மிகுந்த குதூகலத்துடன், "ஒவ்வொருநாளும், மிகப் பெரிய தொலை நோக்கு கருவிகளின் உதவியால் வானங்களை அலசிப் பார்த்துக் கொண்டேயிருக்கிறோம். ஆச்சரியமூட்டும் காரியம் என்னவென்றால், தினமும் ஏறத்தாழ ஐந்து அல்லது ஆறு புதிய நட்சத்திரங்களைக் கண்டுபிடிக்க முடிகிறது" என்று குறிப்பிட்டிருந்தார். அப்படியென்றால், தேவனுடைய வானத்தில் எத்தனை எண்ணிலடங்கா நட்சத்திரங்கள் இருக்கக் கூடும்! நட்சத்திரங்களின் எண்ணிக்கையே இப்படி எண்ணிலடங்காததாய் இருக்குமென்றால், அவைகளைத் தாங்கும் விண்வெளியின் வான மண்டலம் எவ்வளவு பரந்ததாயிருக்கும்! அப்படியென்றால் பரலோகம் எவ்வளவு விவரிக்க முடியாததாய் இருக்கும்!

1969 ஜூலை 20ஆம் தேதி, மனிதன் முதன்முறையாக சந்திரனில் இறங்கியபோது, அவ்விண்வெளி வீரர்கள் மூலம், சந்திரனின் தரைப் பகுதியில் உள்ள மறைபொருள்களை வெளிப்படுத்தும் வண்ணம் அதன் சீதோஷ்ண நிலை மற்றும் மனிதன் அங்கு வாழ இயலுமா போன்ற கேள்விகளுக்கு விடை கிட்டும் என்று உலகமே மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்தது. இதை மனதில் கொண்டு அந்த விண்வெளி வீரர்களை சந்திரனின் தரைப்பகுதியிலுள்ள பாறைத் துண்டுகளை எடுத்துவர பணித்தனர். அப்பாறைத் துண்டுகளை எல்லாவித தீவிர சோதனைகளுக்குட்படுத்தியும், ஆழ்ந்த ஆராய்ச்சிகளுக்குப் பின்னர், "சந்திர பாறை துண்டுகள் எதையும் பேச மறுக்கின்றன" என்று விஞ்ஞானிகள் வியந்து கூறினர்.

ஆம், அப்பாறைகள் எந்த மூலப் பொருட்களால் உண்டாயிற்று என்ற உண்மையை அவர்களால் ஆராய்ந்து கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த காரியமே இப்படியென்றால், தேவனுடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தின் அமைப்பு எப்பேர்ப்பட்டதாயிருக்கும்!

## 4. பரிசுத்த ஆவியானவர், பரலோகம் செல்வதற்கான தேவனின் வாகனம்

அமெரிக்க ஐக்கிய நாட்டில் விண்வெளி ஆராய்ச்சி ஸ்தலமான NASAவிலிருந்து விண்வெளிக்கு கொண்டு செல்லும் சக்திவாய்ந்த ஏவுகணைகளை காணும் வாய்ப்பை மனுக்குலம் பெற்றிருக்கிறது. அந்த ஏவுகணைகள் நெருப்பையும், புகையையும் கக்கிக்கொண்டே விண்வெளிக்கு ஏறுவதை ஒவ்வொரு முறையும் காண்பது எத்தனை பயங்கரமான காட்சி. விண்வெளிக்குள் ஊடுருவிச் சென்று சுழலச்சு முனையை அடைந்தபின், விண்வெளிக் கப்பல் விடுவிக்கப்பட்டு, நிலவின் ஈர்ப்பு சக்தியால் இழுக்கப்படுகிறது. நிச்சயமாகவே, நம் கண்களுக்கு இது அதிசயமாய் உள்ளது. மெய்யாகவே இது ஒரு விஞ்ஞான விந்தை தான்! சக்தி வாய்ந்த ஏவுகணையின் உதவியின்றி, அந்த விண்வெளிக் கப்பல் நிலவை சுற்றியுள்ள கோளப்பாதையில் நுழைவதை எதிர்பார்க்க முடியாது.

இந்த உவமைக்கு ஒப்பாக, **தேவனின் வாசஸ்தலத்தை பார்வையிட நம் மனித ஆவியை (ஆத்துமாவை) பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல சக்தி வாய்ந்த, இயற்கைக்கப்பாற்பட்ட ஏவுகணை 'பரிசுத்த ஆவி' நமக்கு தேவைப்படுகிறது.** அவர் தம்முடைய இரக்கத்தால் கிருபையாய் முன்வந்து தம் வல்லமையுள்ள பரிசுத்த ஆவியினால் நம்மை பெலப்படுத்தி பரலோக தரிசனங்களை உண்மையாய் பெற்றுக் கொள்ள நம் மனித ஆவியை (ஆத்துமாவை) அவர் தம்முடைய விருப்பத்திற்கும், சித்தத்திற்கும் ஏற்றபடி, பரலோகத்திற்குள் எடுத்துச் செல்கிறார்.

பின்வரும் வசனங்களில் அப்போஸ்தலனாகிய யோவான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, **பரலோகம்** என்னப்பட்ட ஆவிக்குரிய ராஜ்யத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவையும், தேவனாகிய பிதாவையும் பிரத்தியட்சமாக தரிசித்ததாக தெளிவான உறுதியுடன் தெரிவிக்கிறார்.

> கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது: நான் அல்பாவும், ஒமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்...
>
> வெளி *1:10,11*

உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று.

வெளி *4:2,3*

விரும்பும்போதெல்லாம் தேவன் நம்மை பரலோகத்திற்கு எடுத்துச்சென்று, அதேவிதமாக பூவுலகிற்கு மீண்டும் கொண்டு வந்து சேர்க்க, தேவன் நமக்கு ஈவாக அருளியிருக்கும் அற்புதமான பரிசுத்த ஆவியான வருக்காக அவருக்கு நன்றி.

## 5. பரலோகவாசிகள் (பரலோகத்தில் வாசம் செய்வோர்)

### 5.1 (தேவனே) தேவன் தாமே அங்கே வாசம் செய்கிறார்

நிலவில் மனிதன் காலடி வைத்தபோது, நிலவின் பகுதியில் மனித குலத்தின் உருக்கொண்டவர்களையோ அல்லது வேறுப்பட்ட வாழ்க்கை முறைகள் கொண்ட மற்ற உயிரினங்களையோ சந்திக்க நேரிடும் என்று உலகத்தின் சில பகுதிகளிலுள்ள மக்களால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. எனவே, அவர்களிடம் ஒரு ஏமாற்றம் காணப்பட்டது. ஆனால், **பரலோகத்தில் தேவன் என்று அழைக்கப்படும் ஒரு சிறந்த நபர் நம்மை வரவேற்க காத்துக் கொண்டிருக்கிறார்.** வேத வாக்கியம் அவரை இவ்வாறு வர்ணிக்கிறது.

தேவன் ஆவியாயிருக்கிறார்,...

யோவான் *4:24*

அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய மகத்துவத்தை இவ்வாறு விளக்கியுள்ளார்.

...அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

I தீமோத்தேயு *6:15,16*

தானியேல் என்னும் பெரிய தீர்க்கதரிசி மாட்சிமையுள்ள தேவனை தரிசித்து பின்வருமாறு விவரித்தார்.

நான் பார்த்துக் கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும், அவருடைய

சிரசின் மயிர் வெண்மையாகவும், பஞ்சைப் போலத் துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது.

தானியேல் 7:9

ஆம், இந்த மகத்துவமுள்ள தேவனே நம்மை பரலோகத்தினுள் வரவேற்க காத்துக் கொண்டிருக்கிறார்.

## 5. 2 தேவனுடைய பரிசுத்தவான்கள்

தேவன் எங்கே இருக்கிறாரோ அங்கே அவருடைய பரிசுத்தவான்களும் இருப்பார்கள் என்றே வேதம் கூறுகிறது (உபாகமம் 33:2, யோவான் 12:26, யூதா 15). பரலோகத்தில் இருக்கும் அவருடைய பரிசுத்தவான்கள் எப்படி தோற்றமளிக்கிறார்கள் என்று வேத வாக்கியங்களின் மூலம் பார்ப்போம்.

தேவனை, **ஆவியானவர்** என்று திருமறை மிகத் தெளிவாக விவரிக்கிறது. அப்படியானால், மரணத்திற்குப் பிறகு இவ்வுலகத்திலிருந்து ஆண்டவரோடு இருக்க பரலோகத்திற்கு கொண்டு போகப்பட்ட பரிசுத்தவான்களின் தோற்றம் எவ்வாறு இருக்கும் என்ற கேள்வி எழும்புகிறது.

இதைப்பற்றிய சரியான விளக்கம் மத்தேயு 17:1-5 வரையுள்ளது. மறுரூப மலையில் ஆண்டவராகிய இயேசுவின் சீஷனாகிய மீனவனாக இருந்த பேதுரு, இயேசு தன் உண்மையான பரலோக மகிமையால் மறுரூபமாக்கப்படும்போது, அவரைப் பார்த்து பிரமித்துப் போனதை கீழ்க்காணும் வேத வாக்கியம் கூறுகிறது.

அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று.

மத்தேயு 17:2

**மறுரூபமாக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின்** இரு புறங்களிலும் போற்றுதலுக்குரிய இரண்டு தேவனுடைய தீர்க்கதரிசிகளாகிய மோசேயும் எலியாவும் காணப்பட்டனர். II இராஜாக்கள் 2:11-ன்படி, எலியா மாம்சத்தோடும் இரத்தத்தோடும் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர் (ஆதியாகமம் 5:24-ன்படி, அடுத்தவர் ஏனோக்கு). பெரிய தீர்க்கதரிசியாகிய மோசே மறுபக்கத்தில் நின்று கொண்டிருந்தார். மோசே பிற மனிதரைப் போலவே மரித்து தேவனாலே அடக்கம் பண்ணப்பட்டவர் (உபாகமம் 34:6). ஆயினும், அவரும் எலியாவும் பேதுருவின் சரீரப் பிரகாரமான மாம்சக் கண்களுக்கு முன் காணப்பட்டபோது, தோற்றத்தில் ஒரேவிதமாகவும், அடையாளம் கண்டுகொள்ளக் கூடியவர்களாகவும் இருந்தனர். எனவே, யாதொரு சந்தேகமுமின்றி பேதுருவால் அவர்களை இன்னார் என்று அறிந்து கொள்ள முடிந்தது.

பூமியிலிருந்து, பரலோகவாசிகளாக சென்றிருக்கும் எவரும், இவ்வுலகில் வாழும்பொழுது, என்ன தோற்றத்தோடு இருந்தார்களோ, மரித்தபின்பும் அப்படியே இருப்பதால் அவர்களை எளிதாக அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்று நாம் புரிந்துகொள்ளலாம். இந்த புத்தகத்தின் மூலம் நம் முழு முயற்சியிலும் **பரலோக தரிசனங்களை** உண்மையாய் பெற்றுக் கொள்ள இந்த முக்கிய சத்தியங்களை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நமது அருமை இரட்சகராகிய கிறிஸ்து, அவருடைய உயிர்த்தெழுதலுக்குபின், மகிமையின் சரீரத்தை உடையவராயிருந்தாலும். மாம்சத்தோடும், இரத்தத்தோடும்கூடிய சரீரமுடையவராகவே காட்சியளிக்கிறார் (லூக்கா *24:39,40*). இயேசு கிறிஸ்து, எலியா, ஏனோக்கு ஆகிய மூவர் தவிர உலகத்திலிருந்து பரலோகத்திற்கு சென்றுள்ள மற்ற பரலோகவாசிகள் யாவரும் மாம்ச சரீரத்தில் அல்ல, ஆவியில் இருக்கிறார்கள். ஆகையால், உலகத்தின் மக்களைப் போல் அவர்களுக்கு போஷாக்கான உணவோ, கவனிப்போ தேவையில்லை.

## 6. அவர்களுடைய பொழுதுபோக்கு எப்படி

சங்கீதம் *16:11*, தேவனை ஆராதிக்கும் மக்கள் இவ்வுலகத்தில் பெறும் சந்தோஷத்தை விளக்குகிறது.

> ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.
>
> சங்கீதம் *16:11*

இதே சந்தோஷம் பரலோகத்திற்கும் பின் தொடர்ந்து அவர்களை அதில் மூழ்கியிருக்கச் செய்கிறது. காரணம், அவர்கள் மகிழ்ச்சியின் ஊற்றாகிய சர்வவல்ல தேவனின் நேரடிப் பார்வையில் இருக்கிறார்கள். தேவ பிரசன்னத்தில் அவர்கள் இருப்பதால், அவர்கள் பரிபூரண ஆனந்தத்தில் ஆழ்ந்து மெய் மறந்து போவதால் பசி, தாகம் போன்ற சரீர தேவைகளுக்காக கவலைப்பட அவசியமில்லை. இந்த சந்தோஷமும் மகிழ்ச்சியும் முழுமையாக அவர்களுக்குள் இரண்டறக் கலந்துவிடுகிறபடியால், வேறு எந்த மாம்ச சம்பந்தப்பட்ட இன்பங்களையும் தேடவேண்டிய அவசியமில்லை.

இதற்கு இணையாக, என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து மூன்று மணி நேரம் இந்த உலகத்திலேயே எப்படி என்னையே மறந்து, ஆண்டவருடைய பிரசன்னத்தில் மகிழ்ந்து கொண்டிருந்தேன் என்பதை நான் விளக்கிக் கூறட்டும். நான் ஏற்கனவே கூறியதுபோல, *1962* அக்டோபர் *10* அன்று இயேசு கிறிஸ்துவை நான் தரிசித்த நாளில், பரிசுத்த ஆவியின் பலத்த அபிஷேகத்தால் வல்லமையாய் நிறைந்தேன்.

இயேசுவை முகமுகமாய் சந்தித்தபோது, **சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்தது மாயிருக்கிற மகத்துவத்தால்** என் இருதயம் நிறைந்தது (I பேதுரு *1:8*). மூன்று மணி நேரம் இந்த பேரின்பத்தைத் தொடர்ந்து பெற்றேன். அந்த தரிசனம் முடிந்து வெளியே வந்த பின், உண்மையாகவே அவருடைய பிரசன்னத்தில் மெய்மறந்தவனாய், என்னையும் என் வீட்டில் என்னை சுற்றிலும் நடந்து கொண்டிருந்த காரியங்களையும் உணராமல் எப்படி அவ்வளவு நேரமும் இருக்க முடிந்தது என்பது எனக்கு மிகுந்த வியப்பைக் கொடுத்தது.

இதைப்போலவே பரலோகத்திலுள்ள ஒவ்வொரு ஆத்துமாவும், **சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமான சந்தோஷத்தினால்** எப்பொழுதும் மெய்மறந்த நிலையிலிருப்பர். எனவே நேரம் போகாத நிலை, பசி, தாகம், உலகப் பிரகாரமான பொழுதுபோக்கு போன்ற வைகளுக்கு அங்கு அவசியம் இல்லை.

## 7. அவரைத் தவிர வேறு எண்ணமின்மை

தேவன் பரிசுத்தமுள்ளவர். நம்மை அவர் பரிசுத்தப்படுத்தவும், சுத்திகரிக்கவும் அதிகமான ஆர்வமும், பொறுப்பும் கொண்டவர் (*லேவியராகமம் 22:32, எபிரெயர் 12:14*). எனவே பரலோகத்தில், நம்மை சுத்திகரிப்பவரின் பிரசன்னத்தில் இருக்கும்போது, உலக சிற்றின்பங்களை நம் மனம் தேடி செல்லாது. **தேவனாகிய பரிசுத்த ஆவியுடன்** இங்கு ஆவியில் எந்நாளும் வாசம் செய்ய இணைக்கப்பட்டு விடுகிறோம்.

தீர்க்கதரிசியான மோசே, இவ்வுலகில் சஞ்சரித்த காலத்திலே அந்த நாற்பது நாட்களிலும் உணவு, தண்ணீர் போன்ற தேவைகளை அவர் உணரவேயில்லை. தேவன் அவரை தம்மோடு வைத்துக் கொண்டார். பின்வரும் வசனம் இதை கூறுகிறது:

> கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கைப் பலகைகளாகிய கற்பலகைகளைப் பெற்றுக்கொள்ளும்படி நான் மலையில் ஏறினபோது, நாற்பது நாள் இரவும் பகலும் மலையில் தங்கி அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தேன்.
>
> உபாகமம் 9:9

ஆகவே, தேவ பிரசன்னம் நிறைந்த பரலோகத்தில் ஆகாரமோ, தண்ணீரோ நமக்கு தேவைப்படாது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அங்கே, **அதே மோசேயினுடைய தேவனின் பிரசன்னத்தில் நாமும் ஆவியில் சஞ்சரிப்போம்.**

## 8. ஆவியில் பரலோகத்திற்கு பயணம் செய்யும் அனுபவம்

ஒரு தனி நபரின் ஆவி பரலோகம் கொண்டு போகப்பட்டு திரும்பவும் பூமிக்குக் கொண்டு வரப்படுகிற அனுபவம் மெய்யாகவே

புரிவதற்கு அரிதானது. எப்படி சக்திவாய்ந்த ஏவுகணையானது விண்வெளி கப்பலை வெளிக்கோள பாதைக்கு தூக்கிக் கொண்டு போகிறதோ, அதேபோல்தான் இந்த அனுபவமும் இயற்கைக்கப் பாற்பட்ட பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே முடியும். ஆம், வல்லமையுள்ள பரிசுத்த ஆவியானவர் ஒரு மனுஷனின் ஆவியை மேலோங்கிய பரலோகத்திற்குள் உயரே எழும்பும்படி இயக்குகிறார். ஒரு மனித ஆத்துமா பரலோகத்திற்கு பிரயாணம் செய்யும் அனுபவம் உண்மையிலேயே இரகசியமாகவும், விளங்காததாகவும் இருக்கிறது என்பதை அப்போஸ்தலனாகிய பவுலே பின்வரும் வாக்கியத்தில் அதை அறிக்கையிடுகிறார்.

> *...மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ அதை அறியேன்;...*
>
> II கொரிந்தியர் *12:2-4*

என்றாலும் இந்த அனுபவங்கள் யாவும் **இயற்கைக்கப்பாற்பட்ட சர்வ வல்ல தேவனால், தெய்வீக பிரசன்னத்திற்குள் உட்பட்டு மட்டுமே வாய்க்கும்.** கீழ்க்காணும் வாக்கியங்கள் அதை தெளிவாய் விளக்குகின்றன.

> *...நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.*
>
> *எரேமியா 23:24*

> *ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்;...*
>
> *அப்போஸ்தலர் 17:28*

ஏவுகணையும், விண்வெளி கப்பலும் விண்வெளியிலுள்ள தெரியாத இடங்கள் வழியே செல்லுகையில், பரிசுத்த ஆவியானவர், **எங்கும் வியாபித்திருக்கும் தேவனுடைய பாதையில் உங்களை** சரியாக பயணம் செய்ய வைக்கிறார். எவ்வளவு பாதுகாப்பான நித்தியமான பாதையின் வழியாக நாம் அந்த பரலோகத்திற்கு பிரயாணம் பண்ணுகிறோம்!

## 9. ''மனுஷ ஆவி''யின் எதிர்மறை பங்கு

நம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டிய மற்றுமொரு முக்கியமான உண்மை என்னவெனில், **மனிதனின் ஆவி** நம் வாழ்க்கையில் இருந்துகொண்டு, 'பரம தரிசனங்களுக்கு' பதிலாக **போலியான காட்சிகளைக்** காட்டி செயல்படலாம். நம் அனுதின வாழ்வில் உண்மை நிலையை ஆராய்ந்து பார்க்கும்படியாக மகா உன்னதமான தேவனின் கரங்களிலிருந்து **மனித ஆவி** பரிசாக கொடுக்கப்பட்டுள்ளது என்பதை கீழ்க்காணும் வேத வசனங்கள்மூலம் நாம் காணலாம்.

*மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்.*
*நீதிமொழிகள் 20:27*

*மனுஷனுடைய ஆவி அவன் பலவீனத்தைத் தாங்கும்;...*
*நீதிமொழிகள் 18:14*

அதேசமயம், தேவனுக்கும் நமக்கும் உள்ள நெருங்கிய தொடர்பில் அது இடைபட்டு, நாம் **தவறாகப் புரிந்து கொள்ளவும்** வழி வகுக்கக் கூடும். பின்வரும் வேத வசனங்களின்படி **தீர்க்கதரிசன வரத்தின்** செயல் பாட்டையும் அது பாதிக்கலாம்.

*கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும், தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின் பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ!*
*எசேக்கியேல் 13:3*

*தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்;...*
*நீதிமொழிகள் 28:26*

பரிசுத்த ஆவியானவர் பரலோகத்தின் சத்தியங்களை வெளிப் படுத்திக் கொண்டிருக்கும்வேளையில், **மனுஷ ஆவியின்** தலையீட்டின் காரணமாக, மாபெரும் கேடுகளும், தவறான முடிவுகளும்கூட பின் விளைவுகளாகலாம். மனுஷ ஆவியின் குறுகிய அறிவாற்றலால், இயற்கைக்கப்பாற்பட்ட பரலோகத்தின் காரியங்களை நிர்ணயிக்க முயன்றால், பெருத்த நாசம் வருமளவிற்கு தவறுகள் ஏற்படலாம். இதையே **மனமருட்சி** என்று கூறலாம். அதாவது, நமது மனம், குறுகிய அறிவாற்றலோடு, பரலோகத்தின் அமைப்பை கற்பனை செய்ய முயற்சிக்கிறது (*யோவான் 3:31*).

இந்த புத்தகத்தை வாசித்து கொண்டிருக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் உண்மையான பரலோகத்தை குறித்து எந்த பாரபட்சமின்றி நமக்கு வெளிப்படுத்த, இந்த சில முக்கியமான **திறவுகோல்களை** மனதில் கொண்டிருக்க வேண்டும்.

ஆம், பரலோகம் ஒரு மகத்துவமான இடம். பின்வரும் பக்கங்களில் நீங்கள் அதை அறிந்துகொள்வீர்கள்.

# நித்திய வாழ்வின் தொடுதல்

# 4

*அவர் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார்; எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே...*

*லூக்கா 20:38*

நாம் **மறுபடியும் பிறந்த** அந்த நாள் முதற்கொண்டே, நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக மனதார ஏற்றுக் கொண்ட (யோவான் *1:12*) நமது பரம தகப்பனை எப்போது காண்போம் என்று பரலோகத்திற்கு அழைக்கப்படும் நாளுக்காக நாம் ஏக்கம் கொள்ளத் தொடங்குகிறோம். பின்வரும் வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் இதே கருத்தை கூறுவதை காணலாம்:

*ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்;*

II கொரிந்தியர் *5:2*

*ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்;*

*பிலிப்பியர் 1:23*

தேவன் பரலோகத்தை, 'தம்மில் அன்பு கூருகிற' தன்னுடைய பிள்ளைகளுக்கென்றே (I கொரிந்தியர் *2:9*) **நித்திய வீடாக** (பிரசங்கி *12:5*) எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்க (I தெசலோனிக்கேயர் *4:17*) ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார்.

## பரலோகத்திற்கு நுழைவு சீட்டு

**நித்திய வீட்டிற்குள்** ஒரு நபர் நுழைவதற்கு சர்வவல்ல தேவன் விதிக்கும் முக்கியமான நிபந்தனை **பரிசுத்தமாகும்.** 'பரிசுத்தமில்லாமல் ஒருவனும் (என்றைக்கும்) தேவனை தரிசிப்பதில்லை' என்பதையே வேதபுத்தகமும் வற்புறுத்துகிறது (எபிரெயர் *12:14*). தேவனும், "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (I பேதுரு *1:16*) என்று நமக்கு கட்டளையிடுகிறார். அதே வேளையில் கிருபையுள்ள ஆண்டவர், அவரே நம்மை பரிசுத்தப்படுத்தவும் விரும்புகிறார் என்பதை கீழ்க்காணும் வசனம் தெளிவாகக் கூறுகிறது:

*...நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.*

லேவியராகமம் *22:32*

தேவாதி தேவனிடமிருந்தே 'பரிசுத்தத்தை' எதிர்பார்த்து, அதைப் பெற்றுக் கொள்வது எத்தனை நம்பிக்கையளிக்கிறது. ஆம்! பரிசுத்த தேவன் தங்கியிருக்கும் ஸ்தலமாகிய பரலோகத்திற்குள் செல்வதற்கு 'பரிசுத்தம்' என்பது மிக இன்றியமையாத தேவையாயிருக்கும்போது, பரிசுத்தமாய்மாறவேண்டுமென்று எவனொருவன் வாஞ்சிக்கிறானோ, அவனை அவரைப் போலவே பரிசுத்தமாக்கவும் அவர் ஆயத்தமாயிருக்கிறார் என்பதை கீழ்க்கண்ட வசனம் கூறுகிறது:

> ...அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.
>
> I யோவான் *4:17*

**அவரைப் போலவே** இருக்க வேண்டுமென்று இருதயத்தில் கொழுந்துவிட்டெரியும் ஆவல்கொண்ட எவரையும் பின்வரும் வசனம் அப்படியே மாற்றும்.

> அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.
>
> I யோவான் *3:3*

மோசேயின் நியாயப்பிரமாணமானது, உலகத்தின் பாவத்திற்கு பரிகாரமாக இரத்தம் சிந்துதல் அவசியம் என்பதை அழுத்தம் திருத்தமாக கூறுகிறது,

> மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது;...
>
> லேவியராகமம் *17:11*

> ...இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.
>
> எபிரெயர் *9:22*

ஆம், இந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே சர்வவல்லமையுள்ள தேவன், மனுஷ ரூபமெடுத்து 'இயேசு' என்ற பெயரில் இவ்வுலகத்திற்கு வந்தார் (I தீமோத்தேயு *3:16*). ஒவ்வொரு மனிதனையும், மனுஷியையும் பாவத்திலிருந்து மீட்கும்படியாக முழு உலகத்தின் பாவங்களையும் தம்மேல் சிலுவையில் சுமந்து தமது இரத்தத்தை சிந்தினார் (அப்போஸ்தலர் *20:28*).

"அவருடைய (தேவனுடைய) குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (I யோவான் *1:7*) என்ற வசனம் அதை தெளிவாக விளக்குகிறது. எனினும், இந்த பரிசுத்தமாக்குதலாகிய செயல் முறையை பூரணப்படுத்தவும், பாவ சுபாவத்தை வேரோடே பிடுங்கும்படியும் **சுட்டெரிக்கும் ஆவியை** (பரிசுத்த ஆவி) தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். இந்த மறுரூபமாக்கப்பட்ட ஆத்துமாக்களின் **நித்திய வீட்டை** குறித்து இப்பொழுது பார்ப்போம்.

## முதல் வானத்தைப் பற்றிய ஒரு பார்வை

II கொரிந்தியர் 12:2-ல் அப்போஸ்தலனாகிய பவுல் 'மூன்றாம் வானம்' பற்றி பேசுவதால், முதலாம், இரண்டாம் வானங்கள் இருக்கின்றன என்பது விளங்குகிறது.

முதன்முறையாக நான் பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெறும் வாஞ்சையில் பரலோகத்திற்கு அழைத்து செல்லப்பட்டபோது, தேவன் தமது இரக்கத்தினால் முதல் வானத்தை பற்றிய ஒரு தரிசனத்தைக் கொடுத்தார். ஆஹா! 'உபத்திரவங்களும், துக்கங்களும்' நிறைந்த இவ்வுலகத்தைக் காட்டிலும் அது எத்தனை வித்தியாசமாக இருந்தது! (யோவான் 16:33).

**எங்குப் பார்த்தாலும் மகிழ்ச்சி, துதி போன்றவையே காணப்பட்டது.** மதிய வேளையில் காணப்படும் சூரிய வெளிச்சம்போல, அந்த இடம் முழுவதும் நிறைந்து காணப்பட்ட பிரகாசமான வெளிச்சம், அங்கு வசித்த எவருக்கும் வருத்தம் அளிக்கவில்லை. 'தேவன் ஒளியாயிருக் கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை' (I யோவான் 1:5) என்று வேதம் சொல்லுகிறது. **தேவனுடைய வாசஸ்தலமாக பரலோகம் எப்போதும் வெளிச்சமாக இருப்பதால், அங்கு எவ்வளவேனும் இருளில்லை.** அந்த ஒளி மிக இதமாக இருப்பதால், அதின் ஆளுகைக் குள் வரும் எவரும் புத்துணர்ச்சியின் அனுபவத்தை முழுவதுமாக பெறலாம்.

## நிலப்பரப்பு

உலகத்திலுள்ள ஒரு கோடைகால வாசஸ்தலம்போல் காட்சி யளித்த முதலாம் வானம் நிச்சயமாகவே என்னை ஆச்சரியத்திற்குட் படுத்தியது. அங்குள்ள குன்றுகள், பள்ளத்தாக்குகள், சிற்றாறுகள், ஓடைகள் போன்றவை அப்படிப்பட்ட உணர்ச்சியைக் கொடுத்தன. முதலாம் வானத்திற்குள்ளே வரும் ஆத்துமாக்கள் உலகத்தின் ஏதோ ஒரு பகுதியில், இதுவரை பார்த்திராத ஒரு சுற்றுலா ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்திருப்பதைப்போல் உணருகிறார்கள். புதிய இடம் போன்ற உணர்வு தோன்றுவதில்லை. இந்த வேளையில் சற்று நம் கவனத்தை வேறு பக்கம் திருப்பி, தங்களுடைய கடைசி மூச்சை விட்டபிறகு, ஆத்துமாக்கள் எந்தெந்த விதங்களில் பரலோகத்தை வந்தடைகிறார் கள் என்பதைப் பற்றி பார்ப்போம்.

## பரலோகத்தின் வாசல்

இந்த உலகத்தில் கிறிஸ்துவை நேசித்து, அவருக்காக வாழ்ந்த பலருடைய ஆத்துமாக்கள் வித்தியாசப்பட்ட பல விதங்களில்

பரலோகத்தை சென்றடைவதை நான் பலமுறை கண்டிருக்கிறேன். அக்காட்சிகளைப் பற்றி நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

## அ) வானத்தை எட்டும் ஏணி

...இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிற வர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.

ஆதியாகமம் 28:12

சில பரிசுத்தவான்கள் மரிக்கும்போது, அவர்கள் சரீரத்திலிருந்து பிரியும் ஆத்துமாவானது இப்படிப்பட்ட ஒரு ஏணி இருப்பதைக் கண்டு, அதிலே அவர்கள் ஏறுவதைப்போல தரிசனம் காண்பார்கள். அப்படியே மகிழ்ச்சியோடு ஏறி தேவ பிரசன்னத்தை அடைவார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் திரு. F.F.பாஸ்வொர்த் என்ற புகழ்பெற்ற பரிசுத்தவான் இருந்தார். அவருடைய ஜெபத்தினால் அற்புதங்களை பெற்றவர்கள் ஏராளம். அவருடைய மரணப் படுக்கையிலே, சூழ இருந்தவர்களைப் பார்த்து அவர், “அங்கே பாருங்கள், பரலோகத்திலிருந்து ஒரு ஒளிக்கீற்று கீழே இறங்கி வருவதைக் காண்கிறேன், நான் அதன்மேலே செல்லுகிறேன்” என்றார். சொல்லியவாறே அடுத்தக்கணம் அவர் தன் கண்களை மூடினார், கடந்து சென்று விட்டார்.

## ஆ) அக்கினி ரதம்

அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோ கத்திற்கு ஏறிப்போனான்.

II இராஜாக்கள் 2:11

மேலே குறிப்பிட்ட வசனத்தின்படி, சிலர் தங்களுடைய மரண நேரத்தில் ஒரு பரம ரதம் அவர்களை சுமந்து செல்ல பரலோகத்தி லிருந்து இறங்கி வருகிறதை காண்கிறார்கள்.

பல வருடங்களுக்கு முன்பு சென்னை பட்டணத்தில் தேவ மனிதராகிய திரு.பால் தியோபிலஸ் சுப்ரமணியம் என்ற பக்திமான் வாழ்ந்து வந்தார். அவருடைய முதிர் வயதில் ஒரு நாள், ஜுரத்தின் மத்தியிலும் தன்னை திடப்படுத்திக்கொண்டு சென்னை கிறிஸ்தவ கல்லூரியிலுள்ள சிற்றாலயத்தில் பிரசங்கித்துவிட்டு சோர்வுடன் வீட்டிற்கு திரும்பி வந்து மிகுந்த களைப்புடன் படுத்திருந்தார். திடீரென்று அவர், “என்னை பரலோகத்திற்கு கொண்டு செல்ல ஒரு தங்க ரதம் இங்கு வாசற்படியில் வந்து காத்திருக்கிறது. தயவுசெய்து

என்னைத் தூக்கி அதில் கிடத்துங்கள்" என்று கூற அவருடைய உயிர் உடனே பிரிந்தது.

## இ) மேகங்களுடனே எடுத்துக் கொள்ளப்படுதல்

> இவைகளை அவர் (இயேசு) சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப் பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது.
>
> *அப்போஸ்தலர் 1:9*

> ...கர்த்தருடைய வழி சுழல்காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது; மேகங்கள் அவருடைய பாதத்தூளாயிருக்கிறது.
>
> *நாகூம் 1:3*

உலகின் பல பாகங்களிலுள்ள ஆயிரக்கணக்கான வியாதியஸ்தர்கள் குணமடைய கடுமையாய் உழைத்த ஒரு ஊழியக்காரி தன்னுடைய மரணப்படுக்கையில் இருந்தார்கள். அவர்களுடைய முடிவு வேளை வந்தபோது ஒரு தெய்வீக ஒளி அவர்கள் முகத்தில் பிரகாசித்தது. அவ்வொளி அவர்கள் சரீரம் முழுவதிலும் பரவியது. அப்பொழுது தேவ பிரசன்னம் ஒரு மேகத்தைப் போல் அந்த அறை முழுவதையும் நிரப்பிற்று. அவர்களுடைய ஜீவன் அந்த பிரசன்னத் திற்குள் உறிஞ்சிக் கொள்ளப்பட்டு சமாதானமாக அவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

## ஈ) சுற்றமும், நட்பும் சூழ

> அன்றியும் மோசே எலியா என்னும் இரண்டுபேரும் மகிமை யோடே காணப்பட்டு, அவருடனே சம்பாஷணைபண்ணி, அவர் எருசலேமிலே நிறைவேற்றப் போகிற அவருடைய மரணத்தைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.
>
> *லூக்கா 9:30,31*

இயேசு கிறிஸ்துவை மரணத்திற்கு ஆயத்தப்படுத்தவும், அவரை மீண்டும் பரலோகத்திலே வரவேற்கவும், மறுரூபமலையில் மோசேயும், எலியாவும் இறங்கி வந்ததுபோலவே, உலகத்தில் இருக்கும்போது கிறிஸ்துவை நேசித்து, பின்னர் மரித்துப்போன அவர்களுடைய அருமையானவர்கள், மரண நேரத்தில் பரலோகத் திலிருந்து இறங்கி வந்து அவர்களை மோட்சத்திற்கு அழைத்துக் கொண்டு போவதை அநேகர் உணர்ந்ததும், சொல்வதும் உண்டு.

2001ஆம் ஆண்டு, திருநெல்வேலியிலுள்ள தங்களுடைய தாய் வழி தாத்தா திரு.K.S.தங்கசாமி அவர்களுடைய வீட்டிற்கு சென்று விடுமுறை நாட்களை கழிக்க, என் பேரப் பிள்ளைகள் திட்டமிட்டனர். அந்த செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற அவர், பிள்ளைகள் அங்கு

தங்கும் நாட்களில் வசதியாகவும், சந்தோஷமாகவும் இருப்பதற்காக பல ஒழுங்குகளைச் செய்ய ஆரம்பித்தார். ஒருநாள் தண்ணீர் தொட்டியை சுத்தம் செய்வதற்காக வேகமாக வீட்டிற்கு மேலே ஏறினார். அந்தோ பரிதாபம்! அவர் வழுக்கி கீழே விழுந்தார். எதிர்பாராதவிதமாக, அவருடைய தலை தரையில் மோதி உடனே அவர் மரணத்தை சந்தித்தார்.

அந்த வேளையில் நான் வெகுதூரத்தில் புதுடில்லி என்ற பட்டணத்திலிருந்தேன். இந்த செய்தி வந்தபோது நானும் என் மனைவியும் நொறுங்கி போனோம். ஏனெனில், அவர் மிகுந்த பாசமுள்ள ஒரு மனிதர். அவருடைய மனைவி பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பே மரணமடைந்திருந்தபடியால், அவருடைய பிள்ளைகளுக்கு உண்மையான ஆறுதலும், தேறுதலும் அருளப்பட வேண்டுமென்று நான் முழங்கால்படியிட்டு ஆண்டவரிடம் கதறி மன்றாடினேன்.

அந்த நேரத்தில், ஆண்டவர் எனக்குத் தமது மிகுந்த கிருபையால் கொடுத்த, ‘அறிவை உணர்த்தும் வசனத்தின்’ செயல்பாட்டின்படி, மரண நேரத்தில் அவருக்கு என்ன நேர்ந்தது என்பதை காணச் செய்தார். அவரது ஆத்துமா சரீரத்திலிருந்து வெளியே வந்தபொழுது அவருக்கு என்ன நிகழ்ந்தது என்பதை அவரால் யூகிக்க முடியவில்லை. அவருடைய ஜீவனை எடுத்த அந்த எதிர்பாராத விபத்தையும், அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும், கீழே கிடந்த சரீரத்தையே அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில், பல ஆண்டுகளுக்கு முன் மரித்துபோன அவருடைய துணைவியாரின் மென்மையான குரலை அவர் கேட்டார். ‘அப்பா, மிகவும் வலிக்கிறதா?’ என்று அவர்கள் சொன்ன வார்த்தைகள் அவருடைய செவிகளில் விழுந்தது. அந்த இனிய குரலை 12 ஆண்டுகளாக அவர் கேட்டிராதபடியினால், அந்த குரலை கேட்டவுடன் அவருக்கு தூக்கிவாரி போட்டது. அந்த குரல் வந்த திசையை நோக்கி அவர் திரும்பியபோது, அங்கே அவருக்கு இரண்டு மடங்கு ஆச்சரியம் காத்திருந்தது. அங்கே அவருடைய துணைவியாரை மட்டுமல்ல, ஆண்டவராகிய இயேசுவையும் அவர்களோடு நிற்கக் கண்டார். மிகுந்த சந்தோஷத்தோடு காணப்பட்ட அவரை அவருடைய அருமையான துணைவியாரும் விலையேறப் பெற்ற ஆண்டவரும் அப்படியே பரலோகத்திற்கு அழைத்து சென்றுவிட்டனர்.

ஆம், இந்த உலகத்தைவிட்டு பிரியும் நேரத்தில், முன்பு உலகத்தில் அவர்களை நேசித்த அன்பானவர்களோடு ஒரு சந்திப்பு ஏற்படும் போது, அந்த வேதனையின் நேரம் பரவசத்தையும், ஆறுதலையும் தரக் கூடியதாய் மாறுகிறது.

## உ) வழித்துணை தூதர்கள்

பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகா முடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்;..

லூக்கா 16:22

இந்த வசனத்தின்படி, தூதர்கள் உலகத்திற்கு வந்து பரலோகத்திற்கு ஆத்துமாக்களை அழைத்து செல்கிறார்கள்.

பல வருடங்களுக்கு முன்பு திரு.தேவநேசன் ஜான் என்ற கண்ணியமான ஒரு மனிதர் வேலூரில் வாழ்ந்து வந்தார். எனக்கு அவரைத் தெரியாது. தன் மூத்த மகன் மரணத்திற்கேதுவாக நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும், அவனுக்காக ஜெபிக்க வேண்டு மென்றும் அவர் எனக்கு கடிதம் எழுதியிருந்தார். ஆண்டவர் எனக்கு கொடுத்த வெளிப்படுத்துதலின்படி, "ஐயா, உங்கள் மகனின் ஜீவனை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்ற முடியாது. ஆயினும், அவன் ஆண்டவரிடம் செல்லும் முன்பதாக உங்களுக்கு இரண்டு அடையா ளங்கள் கொடுக்கப்படும். அதாவது அவன் திடீரென்று உங்களை நோக்கி: "அப்பா, அம்மா தயவுசெய்து அழாதீர்கள், என்னை பரலோகத்திற்கு அழைத்துச் செல்ல ஒரு தேவதூதன் வந்திருக்கிறான். நான் அவனோடு போகிறேன்" என்று கூறுவான். அதற்குப்பின்பு அவனுக்குப் பிடித்த ஒரு குறிப்பிட்ட பாடலை சொல்லி, உங்கள் அனைவரையும் பாடும்படி கேட்டுக் கொள்ளுவான். அப்படியாக நீங்கள் அனைவரும் பாடும்போது, அவனுடைய ஆத்துமா நித்திய வாசஸ்தலத்திற்குள் ஒரு தேவதூதனால் அழைத்து செல்லப்படும். இவைகளே உங்கள் மகன் பரலோகத்திற்குதான் செல்லுகிறான் என்பதற்கான அடையாளங்கள். எனவே, உங்களை தேற்றிக் கொள்ளுங்கள்" என்று அவருக்கு பதில் எழுதினேன். நான் எழுதிய படியே, இந்த இரண்டு காரியங்களும் அப்படியே நடந்தபோது, அந்த பெற்றோர் தங்களுடைய துக்கத்திலும், மிகுந்த ஆறுதல் அடைந்தார்கள்.

## ஊ) கர்த்தராலே வரவேற்கப்படுதல்

அவன் (ஸ்தேவான்) பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையை யும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிற தையும் கண்டு; அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதை யும் காண்கிறேன் என்றான்.

அப்போஸ்தலர் 7:55,56



சகோதரர் தினகரன், 1990ஆம் ஆண்டு இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்காக தன் உயிரையே தந்த சகோதரன் திரு.E.ஜார்ஜ், தன் அருமை தந்தை திரு.S.துரைசாமி அவர்களுடன்.

தனக்காகவே மரிக்கும்படி தைரியமாய் துணிந்து நின்ற ஸ்தேவானுடைய ஆத்துமாவை வரவேற்கும்படி, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து பரலோகத்தில் காத்துக் கொண்டிருந்தார்.

ஒருமுறை நான் மிகவும்நோய்வாய்ப்பட்டு, ஆபத்தான ஒரு அறுவை சிகிச்சை வழியாக கடந்து செல்ல நேர்ந்தது. மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நான், பெலவீனமாக இருந்தேன். எனக்கு திரு.E.ஜார்ஜ் என்ற ஒரு சகோதரர் இருந்தார். அவர் என்னையும் இயேசு அழைக்கிறார் ஊழியத்தையும் அதிகமாய் நேசித்தபடியால், தன்னுடைய உலக வேலையை ராஜினாமா செய்துவிட்டு, இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் முழுநேர ஊழியராக இணைந்தார். ஊழியத்தில் அவர் அனைத்துத் துறைகளிலும் முக்கியமாக, எனக்காக உலகமெங்கிலும் பெரிய நற்செய்திக் கூட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் பெரிதும் உதவியாக இருந்தார்.

என்னுடைய ஆபத்தான நிலையைக் கண்டு, துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியாததால், எதிர்பாராதவிதமாக இருதய நோய் அவரை பலமாகத் தாக்கி நான் இருந்த அதே மருத்துவமனையில் அவர் மரித்துப்போனார். மருத்துவர்களின் ஆலோசனையின்படி, அந்த அதிர்ச்சியான மரண செய்தி எனக்கு தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் மருத்துவமனையில் நான் படுத்திருக்கையில் ஒரு தரிசனத்தைக் கண்டேன். எப்போதும்போல் அவர் நன்றாக வஸ்திரங்கள் உடுத்தி பரலோகத்திற்கு மேலே செல்வதைக் கண்டேன். அவருக்காக காத்திருந்த தேவதூதன் ஒருவன் அவரை பெயர் சொல்லி அழைத்து, "வாருங்கள், ஆண்டவராகிய இயேசு உங்களுக்காக ஆவலுடன் காத்திருக்கிறார்" என்று கூறி அவரை இயேசுவிடம் அழைத்துச் சென்றான். இயேசு கிறிஸ்து அவரை அன்போடு அரவணைத்து, "என் மகனே, உலகத்தில் நீ எனக்காக செய்த பற்பல நற்காரியங்களில் மிகவும் சிறந்தது, நீ அநேக நற்செய்திக் கூட்டங்களை சிறப்பாக ஒழுங்கு செய்து, அதன்மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் என்னிடம் வரும்படி செய்ததுதான். நல்லது, உண்மையும், உத்தமுமான ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய், உன்னை அநேகத்தின்மேல் அதிகாரியாய் வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (*மத்தேயு 25:21*) என்று கூறினார்.

இவ்வாறு கூறி, அவரை அன்போடு அரவணைத்துக் கொண்டார். இந்த அரவணைப்பினிமித்தம் அவருடைய முகத்தில் பிரதிபலித்த சந்தோஷத்தை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது.

## கண்ணாடிக் கடல்

அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது;...

வெளி *4:6*

நாம் சற்றுமுன் பார்த்ததுபோல, திரு.E.ஜார்ஜ் அவர்களை பரலோகத்தில் நேரடியாக ஏற்றுக் கொண்டபிறகு, தேவன் அவரிடம் "நான் இப்பொழுது உனக்காக பரலோகத்தில் ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிற இடத்திற்கு உன்னை அழைத்து செல்வேன்" என்று கூறுவதைக் கேட்டேன். இவ்வாறு கூறியபின், கண்ணாடிக் கடல் வழியே அவர் அழைத்துச் செல்லப்படுவதைக் கண்டேன். இளைப்பாறுதல் தரும் அந்தக் கடலின் தண்ணீர் அவருடைய எல்லா சோர்வையும் நீக்கிவிட்டது. உலகத்திலிருந்த நாட்களில் அவர் கடந்து சென்ற துன்பங்களைக் குறித்த ஞாபகம் கொஞ்சம்கூட இராதபடிக்கு அவர் முற்றிலுமாய் விடுவிக்கப்பட்டதை என்னால் காண முடிந்தது. அவரது முகம் தெய்வீக சந்தோஷத்தினால் மின்னி ஒளி வீசத் தொடங்கியது. அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் என்னிடம், "பரலோகத்திற்கு வருபவரது மனதிலிருந்து, உலகத்தில் அவர்கள் அனுபவித்த வியாகுலம் நிறைந்த கடந்த கால நினைவுகளெல்லாம் இப்படித்தான் நீக்கப்படுகின்றன. **கண்ணாடிக் கடலைக் கடக்கும் அந்த**

**நேரத்தில் உலகில் நடந்த யாவற்றையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள். அவர்களது மனம் முற்றிலும் புதுப்பிக்கப்படுகிறது"** என்று கூறினார்.

*அவர் கண்ணாடிக் கடலின் தண்ணீர்களூடே கடந்து சென்ற பிறகு, முற்றிலும் புதியதொரு இடத்திற்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். இயற்கைக்கும் அப்பாற்பட்ட கிறிஸ்துவின் வல்லமையினால், ஏற்கனவே பரலோகத்திலிருந்த ஒரு கூட்ட ஆத்துமாக்கள் அவருக்கு முன்பாக சேர்ந்து வருவதைக் கண்டு நான் வியந்து போனேன். ஏற்கனவே பரலோகத்திற்கு கடந்து சென்றிருந்த எங்களது நெருங்கிய உறவினர்கள் அவர்கள். அப்போது அவருக்கு இவர்களுடன் ஒரு மாபெரும் மறுசந்திப்பு கிடைத்தபடியால் பேரின்பமடைந்தார். இந்தக் காட்சிக்குப்பின் நான் அவரை தொடர முடியவில்லை.*

ஆண்டவர் எவ்வளவு கிருபையுள்ளவர்! நம்முடைய சந்தோஷம் சகல அம்சங்களிலும் நிறைவாக இருக்கும்படி அவர் விரும்புகிறார் *(யோவான் 15:11; 16:24; 17:13).*

## நம் பரலோக தந்தை பராமரிக்கிறார்

*இன்னும் ஒருமுறை இதைப் போன்றே, பரலோகத்தில் ஒரு பள்ளத்தாக்கு போன்று காணப்பட்ட ஒரு இடத்தில் தேவனோடு நான் நடந்து கொண்டிருந்தபொழுது, மலையுச்சிபோல் காணப்பட்ட இடங்களில் இருந்த சிறிய வீடுகளைப் பார்த்து உண்மையில் ஆச்சரியப்பட்டேன். கண்களை விரிவாய் திறந்து பார்த்தபொழுது, அங்கு யார் வசிக்கிறார்கள் என்பதை அறியும் ஆவலில் ஆண்டவரிடம் திரும்பினேன். அந்நேரம் ஆண்டவரின் முகம் வெகு கரிசனையுள்ளதாக மாறுவதைப் பார்த்தேன். அவர் "மகனே, உலகத்தில் ஏராளமான மக்கள், வறுமையிலும், நிறைவேற்றப்படாத பற்பல தேவைகளோடும் வாழுகிறார்கள். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33) என்று நான் அவர்களுக்கு வாக்குக் கொடுத்திருந்தபோதிலும், அத்தியாவசிய தேவைகள்கூட சந்திக்கப்படாமல் அநேகர் மரித்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட சில விசுவாசிகள், சொந்த வீடுகள் வாஞ்சித்தும் அந்த வாஞ்சை நிறைவேறாமலேயே மரித்து விடுகிறார்கள். அவர்களை மகிழ்விக்கவே, இத்தகைய கட்டடங்களை பரலோகத்தில் கொடுத்துள்ளேன்.* **அவைகளில் அவர்கள் மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறார்கள்.** *மட்டுமின்றி, என்னுடைய பிரசன்னமும் இந்த சிறிய குடியிருப்புகளில் அவர்களோடு இருப்பதால் அவர்களுடைய மகிழ்ச்சியும் பரிபூரணமடைகிறது.*

*ஆம், பூமியில் நமக்கு கிடைக்காமல் போன உரிமையான எதிர்பார்ப்புகளை கவனமாக நிறைவேற்றவே,*

நம்மை ஆதரிக்கும் தகப்பனாக நம் தேவன் பரலோகத்தில் இருக்கிறார்.

## அளக்கமுடியாத பரந்த இடம்

அதி உன்னத தேவனின் 'இரத்தத்தால் கழுவப்பட்ட' பிள்ளைகள், முடிவிலே போய் சேரும் இடம் தான் பரலோகம் என்பதை நாம் உணர வேண்டும். எனவேதான், அது எத்தனையோ காலமாக ஆத்துமாக்களை அதனுள் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. ஆம், கோடான கோடி ஆத்துமாக்கள் பரலோகத்தில் இருப்பதால் அது எவ்வளவு பரந்த இடமாக இருக்கக்கூடும் என்பதை எளிதாகக் கற்பனை செய்ய முடியும்.

ஒருமுறை, கர்ஜிக்கும் கடலலைகள்போல், அடுத்தடுத்து என் வாழ்க்கையில் நிகழ்ந்த சோதனைகளாலும், வேதனைகளாலும் உண்டான மன நெருக்கத்தினால் ஆவியில் நான் சோர்வுற்றிருந்தேன். ஆண்டவர் தன்னுடைய மிகுந்த இரக்கத்தினால் என்னை பரலோகத்திற்கு எடுத்து சென்று அவருடைய சிங்காசனத்திற்கு அருகில் நிற்கச் செய்தார். அவருடைய சிங்காசனத்தைச் சுற்றி பெரிய நட்சத்திரங்களும், விண்கோள்களும் மற்றும் அவரால் படைக்கப்பட்ட அனைத்தும் சுழன்று கொண்டிருந்தன. அவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் அவருடைய சிங்காசனத்திற்கு முன் வந்து மிகுந்த பயபக்தியுடன் அவரைப் பணிந்து, பின்பு, தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட கோள பாதையை அடைவதை போல் இருந்தது. இயற்கையின் சிருஷ்டிப்பின் மீது அவருக்கிருந்த பெரிய அதிகாரம் என்னை பிரமிக்க வைத்தது. சங்கீதக்காரனுடன் சேர்ந்து பின்வருமாறு அவரை மாட்சிமைப்படுத்தத் தோன்றியது.

> உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.
>
> *சங்கீதம் 8:3,4*

அப்போது ஆண்டவர் என் பக்கமாய் திரும்பி என்னை பார்த்த பார்வை, "முழு அண்டசராசரத்தையும் என்னால் இவ்வாறு கவனிக்கக் கூடுமானால், உன்னுடைய சின்னஞ்சிறு பாரங்களை என்னால் கவனிக்க முடியாதா?" என்ற அர்த்தத்தை மறைமுகமாக என்னிடம் சொல்லுவதுபோல் தெரிந்தது.

பிறகு, அப்போஸ்தலர்களுள் ஒருவரான பேதுருவை ஆண்டவர் அழைத்து, "பேதுருவே, தினகரனை அழைத்துச் சென்று அவருக்கு பரலோகத்தில் உள்ள இடங்களைக் காண்பி" என்று கூறினார். மிகுந்த

அன்புடனும், பாசத்துடனும் பேதுரு என்னை அழைத்துச் சென்று பரலோகத்தின் பலதரப்பட்ட இடங்களைக் காண்பித்தார். ஒவ்வொரு இடமும் எனக்கு புதியதாகவும், பரவசப்படுத்துவதாகவும் இருந்தது. ஒவ்வொரு இடத்திலும் நான் கண்ட பேரழகும், அமைதியும் விவரிக்க இயலாதவை. அப்போது, அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய் செய்திருக்கிறார் *(பிரசங்கி 3:11)* என்ற வசனத்தை நினைவு கூர்ந்தேன். இவ்விதமாக பல இடங்களை எனக்கு காண்பித்துக் கொண்டிருக்கும்பொழுதே, தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட விசுவாசக் குறைவு, சந்தேகம், அவநம்பிக்கை போன்றவற்றிற்காக ஆண்டவரால் எச்சரிக்கப்பட்டவராயும், மற்ற பல்வேறு சம்பவங் களையும் என்னிடம் விவரித்து சொல்லிக் கொண்டே வந்தார். இறுதியாக, "இப்படிப்பட்ட விசுவாசத்தில் பெலவீன சந்தர்ப்பங் களை சந்தித்த நானே, முடிவில் பரலோகம் அடைந்தேனானால், உங்களால் அதை செய்ய முடியாதா என்ன? எனவே திடமனதா யிருங்கள். ஆண்டவர் தம்முடைய பெரிதான இரக்கத்தினால், அதேவிதத்தில் உங்களுக்கும் உதவி செய்வார்" என்றார். நான் மிகவும் உற்சாகப்படுத்தப்பட்டேன். அதே வேளையில், பரலோகத்தில் நான் கண்ட காட்சிகள் யாவற்றினிமித்தம் என்னுடைய சொந்த கவலை களையும், வேதனைகளையும் முற்றிலுமாய் மறந்து, விவரிக்க முடியாத சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டேன்.

கிறிஸ்துவின் சிங்காசனத்திற்கு நேராக நான் திரும்பியபோது, ஆண்டவர் என்னிடம், "என் மகனே, இங்கேயே தங்கிவிட விரும்புகிறாயா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார். "ஆம், ஆண்டவரே நான் இங்கேயே இருக்க விரும்புகிறேன். என்னை உலகத்திற்குள் திரும்ப அனுப்ப வேண்டாம்" என்று பதிலுரைக்க எண்ணினேன். துயரற்ற, சந்தோஷமான சூழ்நிலை உண்மையாகவே அப்படி மயக்குவதாயிருந்தது. உள்ளத்தின் ஆழத்தில் உலகத்திற்கு திரும்பி செல்வதை வெறுத்தேன்.

அந்த வேளையில் தானே பரிசுத்த ஆவியானவர், ஆறுதலைத் தேடியும், துக்கம் துன்பங்களிலிருந்து வெளிவர உதவியைத் தேடியும், உலகத்திலுள்ள இலட்சக்கணக்கான மக்கள் சேர்ந்து எழுப்பும் அபல குரல்களை என் காதில் விழச் செய்தார். இந்தக் குரல்கள் என் மனதினுள் ஒரு வினாவை எழுப்பியது. "என் ஆண்டவரின் மனதுருக்கத்தினால் நிறைந்து, நான் போய் அவர்களை தேற்றவில்லையென்றால் வேறு யார் இதை செய்வார்கள்?" என்று. உடனடியாக ஆண்டவரிடம், "ஆண்டவரே நான் போய் அவர்களை தேற்றட்டும்" என்றேன். அவரும் என்னை அனுப்பி வைத்தார்.

எனினும், பரலோகத்தில் நான் பார்த்த பல்வேறு இடங்களை என்னால் மறக்கவே முடியவில்லை. மைல் கணக்கான தூரத்தில்

பரந்திருந்த பலதரப்பட்ட வெண்ணிறப் பூக்கள், கீதம் பாடும் மரங்கள், ஜீவ தண்ணீரைக் கொடுக்கும் நீரோடைகள் யாவுமே இந்த உலகத்தை பொறுத்தவரை விசித்திரமானதே.

## கர்த்தருக்குள் மகிழ்ச்சி

*...உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.*

*சங்கீதம் 16:11*

*...கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்..*

*நெகேமியா 8:10*

ஆம், மேற்கண்ட இந்த வேத வாக்கியங்களுக்கு ஏற்ப, அவருடைய சமுகத்திலிருந்து வெளிப்படும் பிரசன்னமானது, பரலோகத்திலுள்ள எல்லா ஆத்துமாக்களையும் எப்பொழுதும் அவருடைய ஆளுகைக் குட்படுத்தி வைத்திருக்கிறது. **தேவனுடைய ஈடுஇணையற்ற அன்பின் பிரசன்னத்தில் மெய்மறந்து இருக்கிறார்கள்.**

அதேசமயத்தில் சிலுவையில் வெளிப்பட்ட அவருடைய அன்பை ஞாபகப்படுத்துவதற்காக, இருதயத்தில் நன்றியுணர்வு பொங்க அவர்மேல் துதியைக் குவிக்கிறார்கள். எப்பொழுதும் பாடிக் கொண்டேயிருக்க ஏவப்படுகிறார்கள் என்பதை கீழ்க்கண்ட வசனத்திலிருந்து அறிகிறோம்.

*...ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,*

*வெளி 5:9*

*...அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்..*

*வெளி 5:12*

சில வேளைகளில் இந்தவிதமாக தேவனைத் துதிப்பவர்கள், உலகில் அவர்கள் வாழும்போது உபயோகித்த தங்களுடைய தாய் மொழியிலேயே துதிக்க எழுச்சியடைகிறார்கள். ஒவ்வொருவரும் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு இதை நல்ல வாய்ப்பாக உணருகிறார்கள். ஆம், திடீரென்று ஒரு கூட்ட ஜனங்கள் தம் தாய் மொழியில் இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய வல்லமை யினால் உந்தப்பட்டு அவரை துதித்து பாடத் தொடங்குகிறார்கள். இலட்சக்கணக்கான மக்கள் அவர்களோடு இணைந்து, அதே

மொழியில் தேவனைத் துதித்துப் பாடுவது ஒரு பரவசமான காட்சியாயிருக்கிறது.

அந்த வழியே கடந்து செல்லும் தேவ தூதர்களும் அந்த குறிப்பிட்ட மொழியில் பாடுபவர்களோடு இணைந்து தேவனை துதிக்கும் காட்சி ஓர் எழுச்சியைக் கொடுக்கிறது. அப்படி செய்யும்பொழுது அவர்களை சூழ்ந்திருக்கும் மரங்களும் அதே மொழியில் துதிக்க ஆரம்பிக்கின்றன. உண்மையிலேயே, இந்தக் கணக்கற்றோருடன் சேர்ந்து **சிங்காசனத்தில் வீற்றிருப்பவரை** பரிசுத்த சிந்தையோடு தொழுதுகொள்ள உங்கள் இருதயம் வழிந்தோடும். அப்பொழுது சங்கீதக்காரனாகிய தாவீதின் கூற்றை நினைவுகூற வற்புறுத்தப்படுகிறோம்.

இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.

*சங்கீதம் 22:3*

## பரிபூரணத்தின் தேவன்

கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்;...

*சங்கீதம் 138:8*

இவ்வுலகில் அநேகர் சரீர குறைபாடுகளுடன் மரிக்கின்றனர். எனினும் பரலோகத்தில் அவர்கள் ஆவியின் ரூபத்தில் பரிபூரண நிலையில் காட்சியளிக்கிறார்கள்.

விழுப்புரம் என்னும் நகரத்தில் வாழ்ந்த திருமதி தனம் சுவாமிநாதன் என்ற அன்பு சகோதரியை நான் அறிவேன். தீர்க்கதரிசன வரம் மற்றும் பல வல்லமையுள்ள வரங்களுடன் கர்த்தரால் வல்லமையாக உபயோகப்படுத்தப்பட்டவர்கள். அவர்கள் அதிகம் படித்தவர்களல்ல. ஆனால் ஆவியில் மிகுந்த பெலன் பெற்றவர்கள். அவர்களது வலது முழங்கையின் கீழ்ப்பகுதி உருவாகாமலேயே யிருந்தது. அவர்களது கனிதரும் ஊழியம் முடிந்தபின் இவ்வுலக வாசஸ்தலத்தை விட்டு கடந்து போய் விட்டார்கள்.

ஒருமுறை அவர்களை நான் பரலோகத்தில் சந்தித்தேன். ஒவ்வொரு வகையிலும் அவர்களுடைய ஆவிக்குரிய உடல் முழுமை அடைந்திருந்தது. இடது கையைப் போலவே வலது கையும் நன்றாக இருந்தது. மகா உன்னத தேவனின் உன்னத பெலத்தால், அவர்கள் என்னை அடையாளம் கண்டுகொண்டபொழுது, அவர்கள் முகத்தில் என்ன சந்தோஷம் பிரதிபலித்தது! அவர்கள் தன் கரங்களை நீட்டி என்னை ஆசீர்வதித்தபோது எல்லாவிதத்திலும் அவைகள் பரிபூரண மடைந்திருந்ததைக் கண்டேன். ஆம், குறைபாடு என்பது பரலோகத்தில் இல்லை.

## சிறு பிள்ளைகள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலிருந்தபொழுது, சிறு பிள்ளைகளை அவர் ஆசீர்வதிக்கும்படி அவரிடம் கொண்டு வந்தனர். அவரை தொந்தரவுபடுத்தக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் அவர்களை சீஷர்கள் தடைசெய்தபோது, அவர், "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடம் கொடுங்கள்; அவர்களை தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது (மாற்கு 10:14) என்றார்.

சிறு பிள்ளைகள் மீதுள்ள அன்பை பரலோகத்திலும் அவர் செயல்படுத்தி வருகிறார். தங்கள் காலத்துக்கு முன் இறந்து போகிற குழந்தைகள் பரலோகத்தில் வளர்க்கப்படுகிறார்கள்.

ஒரு மனித வாழ்க்கை முழு பருவ நிலையை அடைவது 30 வயதில் என்பதை வேதபுத்தகத்தின் பல பகுதிகளிலிருந்து எளிதாக யூகிக்கலாம். சில எடுத்துக்காட்டுகளை காண்போம். யோசேப்பு எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு முன்பாக நிற்கும்போது 30 வயதாயிருந்தான் (ஆதியாகமம் 41:46). தாவீது தன் இராஜ்யபாரப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்போது அவனுடைய வயது 30. தேவனுடைய ஊழியத்துக்கு சேர்க்கப்படத் தேவையான வயது 30. (எண்ணாகமம் 4:3,23,30,35,39,43,46; I நாளாகமம் 23:3).

இந்த பிரகாரமாக, சிறு குழந்தைகள் மரணமடையும்போது பரலோகத்திற்கு தேவ தூதர்களால் (மத்தேயு 18:10) ஏந்திக் கொண்டு செல்லப்படுகிறார்கள். எண்ணிக்கையில் இலட்சங்களுக்கு மிஞ்சிய சிறுவர்கள் ஒருங்கே கூட்டப்பட்டு, உலகத்தில் எவ்வாறு 30 வயது வரை உருவ வளர்ச்சி பெறுவார்களோ அதேவிதமான வளர்ச்சியை பெறசெய்வது கண்களுக்கு இதமானது. ஒரு தனிப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டு, அவர்கள் தூதர்களால் பராமரிக்கப்படுகிறார்கள். மாட்சிமை மிகும் யேகோவாவையும் அவருடைய குமாரனாகிய இயேசுவையும் பற்றிய அறிவு தூதர்களால் அருளப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அவர்களை நேசிப்பதையும், அவர்கள் தனக்கு இன்றியமையாதவர்கள் என்பதையும் வெளிப்படுத்துவதற்காக, இயேசு இந்த இளம் பிள்ளைகள் மத்தியில் தோன்றும்போது, அவர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. பின்வரும் வாக்கியம் அவருடைய அன்பை சிறிதளவாவது உச்சரிக்கிறது:

> ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.
>
> ஏசாயா 49:15



பிரசங்க நேரம். கூட்டம் ஒன்றில் சகோதரர் தினகரனின் மகன் Dr.பால் தினகரன் அவரது ஆங்கில செய்தியைத் தமிழில் மொழிபெயர்க்கிறார்.

ஆம், கிறிஸ்துவின் அன்பு இந்த உள்ளங்களுக்கு தங்களையே மறக்கும் நிலையை ஏற்படுத்துகிறது.

*1961* ஏப்ரல் *1* அன்று, எங்களுக்கு ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. ஆயினும், அவன் அதிக நாட்கள் வாழ முடியாததால் எங்கள் மகிழ்ச்சி தற்காலிகமானதாயிருந்தது. ஒரு குழந்தைச் செல்வத்திற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருந்தபடியால், எல்லோரும் மனமுடைந்தோம்.

குழந்தையின் உடலை புதைப்பதற்காக சுமந்து கொண்டு போகையில், அவன் முகத்தில் ஒரு பெரும் புன்முறுவலைக் கண்டு பிரமித்துப் போனேன். எப்படி ஒரு குழந்தையின் முகத்தில் அர்த்தமுள்ள ஒரு சிரிப்பு காணப்படும் என்பது என் மனதுக்கு கலக்கமாயிருந்தது. "என் மகனே, உன் தந்தைக்கு முன் நீ பரலோகம் சென்று விட்டாய். ஆனால், உன் தந்தை இவ்வுலகத்தில் கவனத்தோடு தூய வாழ்க்கை வாழ்ந்து ஒரு நாளில் பரலோகத்திற்கு வந்து உன்னைக் காண்பேன் என்று வாக்கு கொடுக்கிறேன்" என்று ஏதோ உளறிக் கொட்டினேன்.

ஆண்டுகள் கடந்தன. 'Paul' என்னும் பேர்கொண்ட மற்றொரு மகனை தேவன் தந்தார். அவன் **இளநிலைப்பட்டபடிப்பு** (**B.Sc.** இயற்பியல்) முடித்தபோது, எந்த துறையில் அவன் தன் கல்வியைத்



1989–ஆம் ஆண்டு தனது 27–வது வயதில், சகோதரர் பால் தினகரன் தன்னுடைய முனைவர் பட்டத்தை சென்னை பல்கலைக்கழகத் துணை வேந்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் காட்சி.




Dr. பால் தினகரன் அவர்களுடைய பொது சேவையை பாராட்டும் வகையில், "தேசிய சிறுபான்மையினர் கல்விநல கண்காணிப்புக்குழு"வில் அங்கத்தினராகவும், "அனைவருக்கும் கல்வி" என்ற சிறப்பு திட்டத்தின் ஆட்சி குழுவில் அங்கத்தினராகவும் இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடரவேண்டுமென்று சிந்திக்கலானோம். இதற்காக பல நாட்களாக தொடர்ந்து ஆண்டவரின் வழிநடத்துதலுக்காக ஜெபத்தில் காத்திருந் தேன். ஒருநாள் ஆழ்ந்த ஜெபத்திலிருக்கையில் ஒரு தேவதூதன் என் அறையில் தோன்றினான். இதற்கு முன் பற்பல தேவதூதர்களின் பிரசன்னத்தில் நான் இருந்ததுண்டு. அவர்கள் என் அறையில் நுழைந்த மாத்திரத்தில், தேவனின் வல்லமையான பிரசன்னம், அறை முழுவதையும் நிரப்பும். அவர்கள் எப்பொழுதும் "சர்வவல்ல ஆண்டவரின் பிரசன்னத்திலிருந்து ஒரு செய்தி கொண்டு வந்துள்ளேன்" என்பார்கள்.

ஆனால், இப்போதோ, வழக்கத்திற்கு மாறாக, இந்த பரலோகவாசியான தூதன் என்னிடம் பேசத் தொடங்கியபோது நான் திகைத்து போய் முழுவதும் குழம்பிப் போனேன். ஏனெனில் அவன் என்னை 'அப்பா' என்று அழைத்தான். நான் அவன் முகத்தை கலக்கத்துடன் கூர்ந்து கவனித்தேன். ஏறத்தாழ 20 வருடங்களுக்கு முன் மரித்துப்போன என் குழந்தையின் முகத்தை அப்பொழுது நினைவு கூர்ந்தேன். அவன், "இந்த செய்தி என் தம்பி பால் சம்பந்தமான செய்தியாயிருப்பதால் இதை உங்களிடம் கொண்டு வர ஆண்டவர் என்னைப் பணித்திருக்கிறார்" என்றான். நான் பேச்சற்றுப் போனேன். அவன் கொண்டு வந்த தேவ செய்தியை தொடர்ந்தான். என் மகன் பால் **'வர்த்தக நிர்வாக முதுநிலைப் பட்டம்'** (MBA) பெறவேண்டு மென்றும், பின்னர் அதைத் தொடர்ந்து வர்த்தக நிர்வாகத்தில் முனைவர் பட்டம் பெறும்வரை படிக்க வேண்டுமென்றும் சொல்லி விட்டு மறைந்தான். அவன் சொன்னது அப்படியே நிகழ்ந்தது.

ஆம். தேவனுடைய காரியங்கள் நமக்கு புரியாத புதிராகவே இருக்கிறது. தங்கள் காலத்துக்குமுன் இறந்துபோகும் இள ஆத்துமாக் களின் மீதுள்ள அவரது அன்பு உண்மையாகவே நம்மை உருக்குகிறது.

## கிறிஸ்துவின் பிரசன்னம்

கர்த்தராகிய இயேசு மகிமையான சிங்காசனத்தில் வீற்றிருக்கும் போது, ஆயிரமாயிரம் தேவ தூதர்களால் சூழப்பட்டிருக்கிறார்.

ஒருமுறை நான் ஆண்டவரோடு பரலோகத்தில் நான் நடந்து கொண்டிருக்கும்போது, ஒரு கரகரப்பான குரலில் ஒருவர் தனிமையில் ஆண்டவரைத் துதித்துப் பாடுவதைக் கேட்டேன். "யார் பாடுவது என்று உனக்குத் தெரிகிறதா?" என்று ஆண்டவர் என்னை கேட்டார். எனக்குத் தெரியவில்லை என்றேன். பிறகு அவர் என்னை அங்கே அழைத்துச் சென்றார். யூதர்களின் ஆராதனைக் கூடத்தைப்போன்ற ஒரு அமைப்பில், கண்ணியமான மனிதர் ஒருவர் தன் இரு கரங்களையும் கூப்பி, குரலை உயர்த்தி ஆண்டவரை துதித்துக் கொண்டிருந்தார். அவர்

முகம் தேவனின் அபிஷேகத்தால் ஒளிவீசிக் கொண்டிருந்தது. “இவர்தான் தாவீது ராஜா. அவர் பரலோகம் வந்தபோது, இங்கு என்ன செய்ய விரும்புகிறாய் என்று நான் கேட்டதற்கு, தயக்கமின்றி, “ஆண்டவரே, நான் பூமியில் இருந்த நாட்களில் உம்மை துதிப்பதே என் பேரின்பமாக இருந்தது. அதையே நான் இங்கும் செய்ய விரும்புகிறேன்” என்றார். “அவர் உலகத்தில் இருக்கும்போது எப்படிப்பட்ட இடத்தில் கர்த்தரைத் துதித்தாரோ, அதே வடிவில் இங்கு நான் அவருக்காக செய்துள்ளேன்” என்று என்னிடம் கூறினார். இது மட்டுமல்ல, சில சமயங்களில் மற்ற வேதாகம சத்தியங்கள் பலவற்றைக் குறித்து பேசுவதற்காக நான் தாவீது இராஜாவை சந்தித்துள்ளேன்.

வேறொரு சமயம் இளைஞன் ஒருவன், ஒரு மரத்தினடியிலிருந்து எப்போதும் ஒரு எக்காளத்தைப் பூரிப்புடன் ஊதிக் கொண்டிருப் பதைப் பார்த்தேன். தேவன் என்னிடம் “இவர் பெயர் டாம் பிரவுன். உலகத்திலிருந்தபொழுது, அமெரிக்காவில் சிறந்த எக்காள இசை வல்லுநராய் இருந்தார். தன்னுடைய துறையில் உண்மையான மகிழ்ச்சி கிடைக்காத காரணத்தால், அவர் என்னை ஏற்றுக்கொண்ட நாள்முதல், தேவனுடைய மகிமைக்காகவே தன் இசைக்கருவியை இசைப்பேன் என்று பொருத்தனை செய்து கொண்டார். எதிர்பாராத விதமாக, வெகு விரைவில் ஒரு விபத்துக் குள்ளாகி மரணமடைந்தார். அவர் இங்கு வந்தபோது ‘ஆண்டவரே, வாழ்க்கை முழுவதும் ஓர் எக்காளத்தை உபயோகித்து உம்மைத் துதிக்க விரும்புகிறேன். எனக்கு ஓர் இசைக் கருவியைத் தாரும்’ என்றார். எனவே, எப்போதும் அதையே அவர் வாசித்துக் கொண்டிருக்கிறார்” என்றார்.

பரலோகத்திலுள்ள அந்தவிதமான நபர்களை ஒவ்வொருவராக நினைவுகூர ஆரம்பித்தால் இந்த முழு புத்தகமும் அவ்வித உள்ளக் கிளர்ச்சியூட்டும் எடுத்துக்காட்டுகளால் மட்டுமே நிரப்பப்பட்டு விடும்.

பரலோகத்திலுள்ள மக்களின் மத்தியில் (அளவிடப்பட முடியாத எண்ணிக்கையுடையவர்கள்) கிறிஸ்துவின் பிரசன்னம் எப்போதும் அசைவாடிக் கொண்டிருக்கிறது. பரலோகத்தின் சிங்காசனத்தில் அவர் வீற்றிருந்தாலும், அங்கு வாழும் எல்லா ஆத்துமாக்களும் சிங்காச னத்தில் வீற்றிருக்கும் அவருடைய பிரசன்னத்தை பார்க்கவும் அனுபவிக்கவும் முடியும். ஆயிரமாயிரமான தூதர்கள் சிங்காசனத்திற்கு முன்னே காணப்படுகிறார்கள் (வெளி. 5:11). பூமியிலுள்ள மனு மக்களின் ஜெப விண்ணப்பங்களை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஒரு திசை நோக்கி அவர் தம் பார்வையை செலுத்தும்போது, ஆயிரக்கணக்கான தேவதூதர்கள் அவர் சமுகத்தை விட்டு கிளம்பு கிறார்கள். காரணம், அந்த தேவதூதர்கள் கொண்டு வந்திருக்கும் விண்ணப்பங்களுக்கு அவர் பதில் கொடுத்திருக்ககூடும். அவர்

கொடுத்துள்ள அந்த விண்ணப்பங்களுக்கான பதில்களை, உலகத்தில் வியாகுலத்தோடு ஜெபித்துக் கொண்டிருக்கிற மக்களிடம் தூதர்கள் எடுத்து செல்வார்கள்.

மற்றொரு முறை, அவருடைய சிங்காசனத்தினருகே நான் நின்று கொண்டிருக்கும்போது, உலகமானது தன் கோளபாதையில் சுழன்று கொண்டிருப்பதைப் பார்க்கச் செய்தார். சிறு நெருப்புப் பொறிகள் பூமி உருண்டையிலிருந்து புறப்பட்டு எவ்விடத்திலும் பரவுவதும், அவருடைய சிங்காசனத்திலிருந்து வெளிவரும் ஒரு பெரிய ஒளிக் கதிரானது, அந்த ஒவ்வொரு சிறு நெருப்புப் பொறியையும் சந்திக்கிறதையும் காண முடிந்தது. இந்த அரிய நிகழ்ச்சியைக் குறித்து ஆண்டவர் இவ்வாறு விவரித்தார். "என் ஜனங்கள் எப்பொழுது ஜெபித்தாலும், அவர்களுடைய குரல் ஒர் ஒளிப்பொறிபோல் காணப் படுகிறது. நீ பார்த்த ஒளிக்கற்றைகள் அதை தான் குறிக்கிறது. ஒருவேளை ஆயிரக்கணக்கானோர் ஓரிடத்தில் கூடி ஒரே இடத்தில் ஒருமனப்பட்டு ஜெபிக்கும்போது *(மத்.18:19,20)*, அந்த ஒளிப்பொறி யானது பெரியதாகவும் பிரகாசமானதாகவும் காணப்படுகிறது. என் சிங்காசனத்திலிருந்து புறப்பட்ட ஒளிக்கதிரானது, அந்த பெரிய நெருப்பு பொறியோடு இணையும்போது என் சமூகம் அவர்கள் மத்தியில் இறங்கியிருப்பதை அவர்கள் தெளிவாக உணருகிறார்கள். என்னை நோக்கிக் கூப்பிட்டதின் விளைவாக நிச்சயமாகவே அற்புதங்களை பெற்றுக் கொள்வார்கள்" என்றார். ஆம், நமக்காக எத்தனை கரிசனை காட்டும் தகப்பன் பரலோகத்தில் இருக்கிறார்!

## முதல் வானத்தில் வசிப்போரின் தனித்தன்மை

லூக்கா 23:42,43-ல், சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கள்ளர்களில் ஒருவன், தேவ குமாரனின் பிரசன்னத்தில் தான் இருப்பதை உணர்ந்து கொண்டதைப் பற்றி வாசிக்கிறோம். அவன் தன் உள்ளத்தில் குத்தப்பட்டு, தன் சக கள்ளனிடம் அறிக்கையிடுகிறான், "நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவை களுக்குத்தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" என்று கூறிவிட்டு அப்படியே இயேசுவை நோக்கி: "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான். இயேசு அவனை நோக்கி: "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று மெய் யாகவே உனக்கு சொல்லுகிறேன்" என்றார் *(லூக்கா 23:41-43)*.

இந்த காட்சியை நாம் சற்று ஆழமாக சிந்திப்போம். ஆண்டவரோடுகூட அந்த கள்ளன் மிகக் கொடிய வேதனையோடு சிலுவையில் தொங்கி கொண்டிருந்த அந்த ஒரு சில மணி நேரங்கள் மட்டுமே இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவனால் அறிந்து கொள்ள

முடிந்தது. தேவனைப் பற்றியோ, பரலோகத்தைப் பற்றியோ முன் அனுபவம் அவனுக்கு கிடையாது. இத்தகைய மனிதனுக்கு முதல் வானமே வசதியான இடம். ஏனெனில், அவன் வாழ்ந்து மரித்த உலகத்தைப் போலவே இது தோன்றும். அதே சமயம், கிறிஸ்து வானவர் சிலுவையில் அவனோடு தொங்கிக் கொண்டிருந்தபடியால் அந்த கிறிஸ்துவின் பிரசன்னத்தை இங்கு அனுபவிக்க வசதியாக இருப்பதை அவன் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆம், உலகத்திலிருக்கும்போது ஒருவனுடைய ஆத்துமா அடைகிற ஆவிக்குரிய தகுதிக்கு ஏற்றபடி மாத்திரமே பரலோக வாசஸ்தலத்தில் அவனுக்கு ஆண்டவர் இடத்தை அமைத்துக் கொடுக்கிறார். இல்லையென்றால் சர்வ வல்ல தேவனுடைய மகிமையையும் பிரகாசத்தையும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. நிச்சயமாகவே முதலாம் வானமானது, ஆவிக்குரிய நிறைவு பெற்ற அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் போன்றோருக்கு பொறுத்தமான இடமாக இராது. தன் ஆவிக்குரிய சாதனைகளைப் பற்றி பவுல் பின்வருமாறு சொல்கிறார்:

> *...இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக் கிறார்;...*
>
> *கலாத்தியர் 2:20*

> *... கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்.*
>
> *கலாத்தியர் 6:17*

இந்த விதமான முதிர்ந்த அனுபவங்களைக் கொண்டுள்ள ஆத்துமாக்களுக்காகவே, மற்ற இரு பிரிவுகளை பரலோகத்தில் தேவன் ஏற்படுத்தியிருக்கிறார்.

## பரலோகத்தின் நுழைவாயிலிலுள்ள தூதன்

இந்த அத்தியாயத்தை நான் முடிக்கும் முன், முதல் வானத்தின் நுழைவு வாயிலில் நான் கண்ட தூதனுடன் எனக்கு ஏற்பட்ட ஒரு பயனுள்ள சந்திப்பைப் பற்றி நான் நினைவுபடுத்தட்டும். ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன், உண்மையாகவே அதிக வியாதிப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். சுகவீனத்தின் காரணமாக ஏற்பட்ட சரீர வேதனையைத் தாங்க முடியாமல், மரித்துப்போய் பரலோகத்திற்கு சென்றுவிட வேண்டுமென்று என் உள்ளத்திற்குள் வாஞ்சித்தேன். ஒருநாள் நான் ஜெபிக்கும்போது திடீரென்று ஆண்டவரின் குரல், "இங்கே ஏறி வா" என்று சொல்லக் கேட்டேன். அதன்படியே, பரலோகத்தின் வாசலில் காணப்பட்டேன். இந்த வாசல் வழியே அநேக முறை கடந்து சென்றுள்ளேன். என்றாலும் அந்த நாளில் தான் ஒரு தேவ தூதன் அந்த வாசலின் ஒருபுறம் அமர்ந்து ஒரு சுருளில்

எந்நேரமும் எழுதிக் கொண்டேயிருப்பதைக் காணும்படி பரிசுத்த ஆவியானவர் என் கண்களைத் திறந்தார். நான் போய் அவனருகில் நின்று கொண்டிருந்த போதிலும், கவனம் கலையாமல் தொடர்ந்து சுருளில் அவன் எழுதிக் கொண்டேயிருந்தான். ஆர்வத்தின் மிகுதியினால், அவன் அந்த சுருளில் என்ன எழுதுகிறான் என்று எட்டிப் பார்த்தேன்.

அந்த சுருளில் எழுதிக்கொண்டிருந்த காரியங்கள் மிக சுவாரசியமாக இருந்தது. அதில், ஒரு நபரின் பெயர், பிரசங்கி 6:10-ல் உள்ளபடி, அந்த நபரின் முகவரி, பிறந்த தேதி, அவனோ/அவளோ இப்பூமியில் இறுதி மூச்சை விடும் தேதி, மற்றும் அந்த நபரின் வாழ்வின் முக்கிய சம்பவங்கள் யாவும் பதிவு பண்ணப்படுகின்றன. இத்தகைய சுருள்களில், கோடிக்கணக்கான மக்களின் பெயர்களும் இந்தவிதமாக எழுதப்பட்டிருந்தன. உலகம் முழுவதும் உள்ள பற்பல மக்களைக் குறித்த பலதரப்பட்ட இதே குறிப்புகள் அடங்கிய கோடான கோடியான சுருள்கள் அந்த தூதனுக்கு பின்புறமும் காணப்பட்டன.

ஒரு காரியம் எனக்கு உதயமானது. ஆயுட்காலத்தின் அளவு ஒவ்வொருவருக்கும் வேறுபட்டிருந்தது. சிலருக்கு நீண்ட வாழ்வு என 87 வருடம் கொடுக்கப்பட்டிருக்கும்போது வேறு சிலருக்கு 18 அல்லது 19 அல்லது அதற்கும் குறைவாகவோ கொடுக்கப்பட்டிருந்தது. ஆயுசின் அளவு வேறுபடுவதைப் பற்றி ஒரு விதிமுறை இருப்பதாகத் தோன்றவில்லை. ஆகவே, உண்மையில் குழப்பமடைந்தேன்.

அப்போதுதான் அந்த தேவதூதன் தன் தலையை தூக்கி, மிகுந்த அன்புடன் என்னை நோக்கி, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான். நான் தாமதமின்றி அவனிடம், "ஐயா, என்னுடைய சுகவீனத்தினிமித்தம் நான் மிகுந்த வேதனைக்குள்ளாகி இருக்கிறேன். நான் எப்போது மரித்து இங்கு வருவேன் என்பதை நான் அறிய விரும்புகிறேன், என்னால் எனது சரீர வேதனையை சகித்துக்கொள்ள முடியவில்லை" என்று பதிலளித்தேன். அப்போது அந்த தேவதூதன் மனதுருக்கத்தால் நிறைந்து, எழுந்து நின்று, என்னை அணைத்துக் கொண்டு, "உன்னுடைய வேளை இன்னும் வரவில்லை. நீ பூமியிலுள்ள பல இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு ஆறுதலையும், தேறுதலையும் கொண்டு வர வேண்டும். அதன் பின்னரே, நீ இங்கு அழைக்கப்படுவாய். ஆயினும் இந்த சுகவீனத்திலிருந்து ஆண்டவர் உனக்கு நல்ல ஆரோக்கியத்தையும், சுகத்தையும் தந்தருளுவார்" என்று கூறினான். இந்த வார்த்தைகளினால் நான் அதிகமாய் உற்சாகமடைந்தேன். அதை தொடர்ந்து என்னுடைய ஆரோக்கியத்தையும் நான் பெற்றுக் கொண்டேன். அதற்கு மேலாக இந்த குறிப்பிட்ட பயணத்தின் மூலம், அநேக ஆவிக்குரிய சத்தியங்களையும் நான் கற்றுக் கொண்டேன்.




சகோதரர் தினகரன் அமெரிக்கா சென்று, நீண்ட நாட்களுக்குப் பிறகு 3.11.'85 அன்று சென்னை திரும்பியபோது, அவரது அன்பு மகள் ஏஞ்சல் தினகரன், சென்னை விமான நிலையத்தில் அவரை அன்புடன் வரவேற்கும் காட்சி. (அவள் 21.5.1986 அன்று தன் பெற்றோரை தனியே தவிக்க விட்டுவிட்டு, பரலோகம் சென்றடைந்தார்)

ஒவ்வொரு நபரின் வாழ்நாளின் அளவு வேறுபட்டது என்றும், ஒருபோதும் குறிக்கப்பட்ட அதின் எல்லை மீறுவதில்லை என்றும் தெளிவாக கூறும் கீழ்க்கண்ட வேத பகுதிக்கு பரிசுத்த ஆவியானவர் என் கவனத்தை திருப்பினார்:

> அவனுடைய நாட்கள் இம்மாத்திரம் என்று குறிக்கப்பட்டிருக்கையால், அவனுடைய மாதங்களின் தொகை உம்மிடத்தில் இருக்கிறது; அவன் கடந்துபோகக்கூடாத எல்லையை அவனுக்கு ஏற்படுத்தினீர்.
>
> யோபு 14:5

1986-ஆம் ஆண்டு ஒரு பயங்கரமான கார் விபத்தில் என் அன்பு மகள் ஏஞ்சல் தன்னுடைய 17-வது வயதில் மரித்தபோது, நான் முற்றிலும் மனமுடைந்து போனேன். “நான் தேவனுக்காக இரவும், பகலும் ஊழியம் செய்கிறேனே, எனக்கு ஏன் இப்படிபட்ட இழப்பு நேரிட வேண்டும்?” என்று அழுதேன், கதறினேன், புலம்பினேன். ஆயினும் இந்த உலகத்தில் அவளுடைய வாழ்க்கையின் ஓட்டம் முடிவடைந்ததால், தேவன் என்னுடைய மகளை அழைத்துக் கொண்டார் என்பதை இந்த பரலோக தரிசனத்தின் மூலமாகத்தான் திட்டமாய் அறிந்து கொண்டேன். அவள் வாழ்நாளை நீட்டித்து தரும்படி அவர் தெரிந்துகொள்ளவில்லை. வேதாகமத்திலும் கூட முன்குறிக்கப்

பட்ட வாழ்நாளை ஆண்டவர் நீடித்துக் கொடுத்திருக்கும் சம்பவங்கள் சிலவற்றை மட்டுமே காண்கிறோம் (I இராஜாக்கள் 17:22, II இராஜாக்கள் 4:34,35;13:21, ஏசாயா 38:5, லூக்கா 7:13-15;8:54,55, யோவான் 4:50,51;11:41-44, அப்போஸ்தலர் 9:40,41;20:10).

நான் அறிந்து கொண்ட இந்த சத்தியம் என்னை அதிகமாய் ஆறுதல்படுத்தி, என் துக்கத்தை நான் தாங்கிக் கொள்ள எனக்கு உதவியது. அன்றிலிருந்து இதுபோன்ற இழப்புகளின் மத்தியில் புலம்பி தவிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் ஆறுதல்பெற என்னை தொடர்பு கொள்ளும்போது, நான் கண்ட இந்த பரலோக தரிசனத்தை அவர்களுக்கு சொல்லி அவர்களை ஆறுதல்படுத்துவதுண்டு. இது உண்மையாகவே, ஜனங்களைத் தேற்றுகிறது. குறிப்பாக எனக்கு இந்த தரிசனம், பல வகைகளில் விலையுயர்ந்ததாக இருந்தது.

# ஆறுதலின் தொடுதல்

# 5

*ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின் பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.*

*யோவான் 12:26*

**அறிவை உணர்த்தும் வசனமாகிய வரமானது**, பரிசுத்த ஆவியின் வரங்களில் மிக வல்லமையான வரங்களுள் ஒன்றாகும் *(I கொரிந்தியர் 12:8)*.

எவனொருவன் இந்த வரத்தினால் ஆசீர்வதிக்கப்படுகிறானோ, அவன் எல்லா இரகசியங்களையும் புரிந்துகொள்ளும் ஆற்றலால் பெலப்படுவான் *(நீதிமொழிகள் 28:5)*. இந்த வரத்தின் விளக்கம் கீழே கொடுக்கப்படுகிறது:

*...அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர்...*

*ஏசாயா 11:2*

'கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்' *(நீதிமொழிகள் 1:7)* என்பதால், 'கர்த்தருக்கு பயப்படுகிற பயம்' இந்த வரத்தோடு கையோடு கைகோர்த்துள்ளது.

இந்த வரம், தேவனின் கிரியைகளையும் வேதாகமத்தின் பின்னணியிலுள்ள ஒவ்வொரு மறைபொருளையும் புரிந்துகொள்ள உதவுகிறது. உதாரணமாக, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியில் சஞ்சரித்த நாட்களில், அப்போஸ்தலனாகிய பவுல், அவருக்கு அருகாமையில் அவரோடுகூட எந்த இடத்திலும் இருந்ததில்லை. எனினும், அதற்கு பிறகு அவர் ஆண்டவருடைய ஊழியத்திற்கு அழைக்கப்பட்டபோது *(அப்போஸ்தலர் 9:1-16ல் சொல்லப்பட்டபடி)*, ஆண்டவர் தம்முடைய வாழ்வில் நடந்த முக்கியமான நிகழ்ச்சி களை பவுல் தெரிந்து கொள்வதற்காக, அவற்றை மீண்டுமாக செய்து காண்பிக்க விரும்பினார். அப்படிப்பட்ட ஒரு நிகழ்வுதான், அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே நிறைவேற்றின **பஸ்கா**வாகும். அதைப் பவுல் தான் பார்த்தவிதமாகவே விவரித்து எழுதுகிறார்.

*நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள்*

வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை யாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல் லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

I கொரிந்தியர் *11:23-25*

இது ஆச்சரியமல்லவா? அறிவை உணர்த்தும் வசனமாகிய வரத்தின் மூலமாகவே, பவுல் ஆண்டவரிடமிருந்து அநேக விஷயங்களை கற்றுக்கொண்டார். அவர் மீண்டும் அதை அழுத்த மாகக் கூறுகிறார்,

நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப் படுத்தினார்.

*கலாத்தியர் 1:12*

பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு என்னை எடுத்துச் செல்ல கர்த்தர் விரும்பிய நேரங்களும் உண்டு. அந்த நேரங்களில் நான், அவர்கள் வாழ்க்கை மற்றும் ஊழியம் சம்பந்தப்பட்ட வேத பகுதிகளிலுள்ள (புரிந்துகொள்ளக் கடினமான) சந்தேகங்களை அவர்களிடம் கேட்க அனுமதிக்கப்படுவேன்.

II நாளாகமம் *21:12* என்ற வசனம் எப்போதும் எனக்கு புரியாத புதிராகவே இருந்திருக்கிறது. காரணம் என்னவென்றால், "அப்பொ ழுது தீர்க்கதரிசியாகிய எலியா எழுதின ஒரு நிருபம் அவனிடத்திற்கு யோராமுக்கு வந்தது; அதில்: உம்முடைய தகப்பனான தாவீதின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நீ உன் தகப்பனாகிய யோசபாத்தின் வழிகளிலும், யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் வழிகளிலும் நடவாமல்," என்று அந்தப் பகுதி கூறுகிறது.

தீர்க்கதரிசியாகிய எலியா மாம்சத்தோடும், இரத்தத்தோடும் (அதாவது உயிரோடு) ஒரு அக்கினி இரத்தின்மூலம் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் (II இராஜாக்கள் *2:11*). அப்படியிருக்க, II நாளாகமம் *21:12* கூறுகிறபடி, அநேக வருடங்களுக்கு பிறகு வந்த யோராம் என்ற பொல்லாத யூதாவின் ராஜா, உன்னதமான யேகோவாவின் கட்டளைகளிலிருந்து அதிகமாய் விலகி பொல்லாப்பானதை செய்ததைக் கண்டித்து தீர்க்கதரிசியாகிய எலியா எழுதின நிருபத்தை அவர் எவ்வாறு பெற்றிருக்க முடியும்? மட்டு மல்ல, அந்த யோராம் ராஜாவின் முடிவைக் குறித்து எழுதியிருந்த அனைத்தும் அந்த நிருபத்தில் உள்ளபடியே நிறைவேறியது. இது எப்படி ஆகும்?

"ஏற்கனவே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட எலியா, எப்படி இந்த நிருபத்தை எழுதியிருக்கக்கூடும்?" என்பது தான் என்னுடைய உள்ளத்தில் எழுந்த கேள்வியாகும். இதற்கு பதில் பெற முடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன்.

ஒருமுறை நான் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, எலியாவை சந்திக்கும் வாய்ப்பை தேவன் எனக்கு கிருபையாய் அளித்தார். அப்பொழுது இந்த இரகசியத்தை தெளிவாக்கும்படி நான் அவரிடம் கேட்டுக் கொண்டேன். அவர் கூறியது இது தான். "தேவனுடைய தீர்க்கதரிசியாக பூமியில் நான் ஊழியம் செய்த பொழுது, எப்போதும், தேவனுக்கு முன்பாக நின்று கொண்டிருந் தேன் (I இராஜாக்கள் *17:1*). இப்போதும் நான் பரலோகத்தில் அவருக்கு முன்பாகவே நிற்கிறேன் (சகரியா *4:11,14*, வெளி. *11:4*). மோசேயும் மற்ற தீர்க்கதரிசிகளும்கூட பரலோகத்தில் அவருடைய பிரசன்னத்திற்கு முன்பாக நிற்கிறார்கள். ஆனாலும் அதில் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. பரலோகத்தில் மோசேயும் மற்ற தீர்க்கதரிசிகளும் தங்கள் ஆவியில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு பூலோகத்தின் நிகழ்வுகளைக் குறித்த கவலையோ, அக்கறையோ எந்தவிதத்திலும் இருப்பதில்லை. நானோ இன்னும் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் இருக்கிறேன். ஆகவே, பரலோகத்தில் நடப்பவைகள் குறித்தும், பூலோகத்தில் நடக்கும் காரியங்களைக் குறித்தும் நான் மிகுந்த கரிசனையுடன் காணப்படுகிறேன். எனவே, அந்த நேரத்தில் ராஜாவாகிய யோராமின் பொல்லாத வழிகளைக் குறித்து நான் மிகவும் துக்கப்பட்டு, ஆவியில் கலங்கினேன். நான் அவனைக் கடிந்து கொள்ளும்படியாக கர்த்தர் விரும்பினார். எனவே, அந்த நிருபத்தை நான் தான் எழுதி அவனிடம் ஒப்படைக்கும்படி செய்தேன்" என்றார். எலியாவின் விளக்கத்தைக் கேட்டபின், அந்த நிருபத்தைக் குறித்த என்னுடைய சந்தேகங்கள் நீங்கின.

அவ்வாறே, யோனாவின் புத்தகத்திலும், நமது அருமை ஆண்டவரால் மத்தேயு *12:40*-ல் குறிப்பிட்டுள்ளபடியும், தீர்க்க தரிசியாகிய யோனா எப்படி ஒரு பெரிய மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் இருந்தார் என்பதைக் குறித்து, ஒருமுறை ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தேன். பல நாட்கள் கடந்தபிறகு, என்னுடைய ஜெப வேளையில், "இங்கே ஏறிவா" என்று சொல்லும் தேவ சத்தத்தைக் கேட்டேன். அப்போது முதல் வானத்திற்குமேல் உயர்ந்து காணப் பட்ட பரலோகத்தின் மற்றொரு பகுதிக்கு செல்லும் பாக்கியம் எனக்கு அருளப்பட்டது. அந்த இடமானது, முதல் வானத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாயிருந்தது. அந்த இடத்திலிருந்த தேவனுடைய மகிமை, முதல் வானத்தில் நான் அநுபவித்த மகிமையைவிட மிக அதிகமாக இருந்தது. அப்போது பரிசுத்த ஆவியானவர் இதை, "இரண்டாம் வானம்" என்று நான் உணரும்படி செய்தார்.

## இரண்டாம் வானம்

பரிசுத்த தேவ வாக்கின்படி இவ்வுலகில் ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறவர்கள் அவருக்கு மிகவும் அருமையானவர்கள். காரணம், அவர்கள் அவருக்கு ஊழியம் செய்வதினிமித்தம் வரும் பாடுகளை தங்கள் வாழ்வில் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

> *இப்பொழுது நான் (பவுல்) உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.*
>
> *கொலோசெயர் 1:24*

கீழ்க்காணும் வேத பகுதிகளும் அதே சத்தியத்தை உறுதியாகக் கூறுகின்றன:

> *ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.*
>
> *தானியேல் 12:3*

> *ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால், என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.*
>
> *யோவான் 12:26*

> *சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன.*
>
> *ஏசாயா 52:7*

> *அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்.*
>
> *மல்கியா 3:18*

எனவே, இந்த உலகத்தில் ஆண்டவருக்கென்று ஊழியம் செய்தவர்களை கனத்திற்குரிய இடத்தில் வைக்க வேண்டுமென்று தேவன் மிக கவனத்துடன் இருக்கிறார். அந்த இடம் முதலாம் வானத்திற்கும், மூன்றாம் வானத்திற்கும் இடையில் உள்ளது. சிறிய அளவிலாகிலும் ஆண்டவருக்காக ஊழியம் செய்து, அவருக்காகவும், அவருடைய சுவிசேஷத்திற்காகவும் பாடுகளை பொறுமையாய் சகித்தவர்கள் இந்த இரண்டாம் வானத்தில் வைக்கப்பட்டு, ஆண்டவரால் கனப்படுத்தப்படுகிறார்கள்.

நான் முன்பு விவரித்து கொண்டிருந்த பரலோகக் காட்சிக்கு இப்போது திரும்புவோம். தேவன் குட்டையான ஒரு நபரை எனக்கு அறிமுகம் செய்து, "இவர் தான் யோனா, இவரிடம் உன் கேள்விகளைக் கேள்" என்றார்.

அந்த மனிதரின் எளிமையான தோற்றத்தைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். "ஐயா, நீங்கள் உலகத்தில் வாழும்போது, ஒரு பெரிய மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் இருக்கையில், எப்படி உணர்ந்தீர்கள்?" என்று கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே, "அது மிகுந்த வேதனையான அனுபவம். அந்த மீனின் வயிற்றிலுள்ள ஜீரண அமிலங்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் என்னை சூழ்ந்து கொள்ளும். நான் அதில் மூழ்கிப் போவேன். அந்த அமிலம் என்னை ஜீரணிக்க முயற்சிக்கும்போது, என் சரீரத்தில் தாங்க முடியாத எரிச்சல் உண்டாகும். அந்த கொடிய வேதனையிலிருந்து வெளிவர எனக்கு உதவிசெய்யும்படி என் முழுபெலத்தோடும் தேவனை நோக்கி கூக்குரலிடுவேன்.

அப்பொழுது மிகவும் ஆச்சரியப்படும் விதத்தில் 'தேவ கிருபை' இன்னொரு திசையிலிருந்து வந்து மீனின் ஜீரண அமிலத்திலிருந்து என்னை மீட்கும்படி சூழ்ந்து கொள்ளும். கண்ணுக்கு புலப்படாத அந்த இரசாயனத் திரவம்போன்ற தேவகிருபை என்னை மூடி ஆற்றித் தேற்றும். அத்துடன் அந்த எரிச்சல் நின்றுபோகும். 'அப்பாடா', என்று நான் விடுதலையோடு பெருமூச்சுவிட்ட சிறிது நேரத்திற்குப் பிறகு, அதே அமிலங்கள் மறுபடியும் என்னை வேதனைப்படுத்தும்படி என்னை சூழ்ந்து கொள்ளும். நானும் கதறுவேன். அப்பொழுது, மறுபடியும் தேவ கிருபை வந்து எனக்கு உதவி செய்யும். அவ்வாறே மீண்டும் மீண்டும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது" என்று கூறினார்.

யோனா மூன்று நாட்கள் இரவும் பகலும் அந்த பெரிய மீனின் வயிற்றில் இருந்தபொழுது கர்த்தருடைய இரக்கத்திற்காகவும், கிருபைக்காகவும் அவரிடத்தில் கதறியதை யோனா *2:8*-ல் வாசிக்கலாம். கீழ்க்காணும் வேத வசனத்தின்படி, தேவகிருபை தான் அச்சமயங்களில் அவரை சூழ்ந்து காத்தது.

> ...கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்.
>
> *சங்கீதம் 32:10*

ஆம், தேவகிருபை தான் யோனாவை பாதுகாத்தது (II கொரிந்தியர் *12:9,10*). அந்த பெரிய மீனின் வயிற்றிலிருந்து சுரந்த ஜீரண அமிலத்தின் தாக்குதலை எதிர்கொள்ள அவரை திடப்படுத்தினது.

ஆண்டவருக்காக வாழ்ந்து ஊழியம் செய்தவர்கள், அவருடைய ஆறுதலின் பிரசன்னத்தில் தேற்றப்படும் பரலோகத்திலுள்ள

இரண்டாம் வானத்திற்கு கடந்து செல்ல 'அறிவை உணர்த்தும் வசனமாகிய' வரம் மிகவும் உதவியாயிருக்கிறது.

ஒருமுறை சிம்சோன் பரலோகத்தில் இருப்பதை குறித்த சந்தேகம் எனக்குள் எழுந்தது. என்னுடைய குறுகிய அறிவின்படி, பின் வாங்கிய மனிதனாக அவன் இவ்வுலகத்தை விட்டு சென்றதால், எபிரெயர் *11:32-34*-ல் உள்ள வல்லமையான விசுவாச வீரர்களின் பெயர் பட்டியலில் அவருடைய பெயரும் இடம் பெற்றிருப்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

ஒருநாள் நான் சிம்சோனையும் சந்திக்க உதவி செய்யும்படி கர்த்தர் சித்தம் கொண்டார். சிம்சோன் ஒரு உயரமான நபராகவும், அவருடைய முகம் தேவ அன்பை வெளிப்படுத்துவதாகவும் இருந்தது. அவருடைய அந்த தெய்வீக அன்பு என்னை பரவசப்படுத்தினது. அவர் என்னிடம் பேசினபோது, அவரிடமிருந்து மிகுந்த மனதுருக்கம் என்னை நோக்கி கடந்து வருவதை உணர்ந்தேன். பரிசுத்த ஆவியின் ஏவுதலின்படி அவர் அந்த இரகசியத்தை என்னிடம் விளக்கினார். "மெய்யாகவே, பெலிஸ்தர்களால் என் இரண்டு கண்களும் பிடுங்கப் பட்டு, என் பார்வையை இழந்தபோது, கர்த்தருடைய பரிசுத்த அழைப்பிலிருந்து விலகி சென்றதினிமித்தம், ஒரு பெரிய குற்ற உணர்வும் துக்கமும் என்னை நிறைத்தது. என் வாழ்வில் வல்லமையை தந்து கொண்டிருந்த தேவனுடைய அபிஷேகமும் என்னைவிட்டு விலகி சென்றபோது, அது என்னால் தாங்கக்கூடாததாய் இருந்தது. **தேவனுக்கேற்ற துக்கத்துடனும்**, மெய்மனஸ்தாபத்தோடும் கர்த்தரை நோக்கி கதற ஆரம்பித்தேன்" *(II கொரிந்தியர் 7:10)*.

"என்னால் இயன்றதெல்லாம், ஆ... கர்த்தராகிய ஆண்டவரே இந்த ஒரு விசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, என்னை பலப்படுத்தும் *(நியாயாதிபதிகள் 16:28)* என்று கதறுவதுதான். அந்த பரிதாபமான நிலையில் நான் ஜெபித்த ஜெபத்தை கர்த்தர் கிருபையாய் கேட்டருளினார். மறுபடியும் இயற்கைக்கப்பாற்பட்ட அந்த தெய்வீக பெலன் முழுவதுமாய் எனக்குள் திரும்பும்படி செய்தருளினார். அத்துடன் அவருடைய இரக்கம் முடிந்துவிடவில்லை. ஒரு நொடிப்பொழுதில் அவர் என்னை மன்னித்து, என் பின்மாற்றத்தையும் மறந்து *(எரேமியா 3:22)* என் பணியை நிறைவேற்றி முடித்தவுடன் என்னை பரலோகத்திற்கு கொண்டு வந்தார்".

அதன்பின்பு, பரிசுத்த ஆவியானவர் என் உள்ளத்தில் பேசினார். "இயேசு கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டு அவருடைய வேதனைகளை கவனித்துக் கொண்டிருந்த கள்ளனுக்கு என்ன நேர்ந்தது என்று உனக்கு நினைவிருக்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவனுடைய குமாரன் என்ற உணர்வை பெற்றவனாக, அவருடைய இரக்கத்திற்காக கதறி, 'ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்' என்று கண்ணீரோடு வேண்டிக்கொண்டான். கிருபையும், இரக்கமும்

நிறைந்த ஆண்டவராகிய கிறிஸ்து அதே இடத்திலேயே அவனுடைய எல்லாப் பாவங்களையும் மன்னிக்க சித்தமானார். மட்டுமல்ல, 'இன்றைக்கு நீ என்னோடுகூட பரதீசில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்' என்று அவனுக்கு மனதுருகி உறுதியும் அளித்தார். ஆம், 'என்னை நினைத்தருளும்' என்று கேட்ட கள்ளனுக்கு மறுவினாடி, கண்ணிமைக்கும் நேரத்திற்குள் ஆண்டவர் அவனுடைய எல்லாப் பாவங்களையும் நீக்கி, பரலோகத்தினுள் பிரவேசிப்பதற்கு தகுதியுள்ளவனாக அவனை மாற்றினார் (லூக்கா 23:42,43). அதே காரியம்தான் சிம்சோனுக்கும் நடந்தது. 'ஆண்டவரே, என்னை நினைத்தருளும்' என்று அவன் உண்மையாய் கதறினபோது அவனுடைய எல்லா மீறுதல்களும் நீக்கப்பட்டு முற்றிலும் மன்னிக்கப்பட்டன" (எபிரெயர் 8:12). இதை நான் கேட்டபோது என்னுடைய எல்லா சந்தேகங்களும் மறைந்தன.

பரலோகத்தில் இரண்டாம் வானம் என்ற பகுதியில், தமிழ் நாட்டை சேர்ந்த ஓர் அற்புதமான பிரசங்கியாரை நான் சந்திக்கும்படி ஆண்டவர் கிருபை செய்தார். அவர் சுவிசேஷத்தை முழு நிச்சயத்தோடு பிரசங்கித்துக் கொண்டிருந்தாலும், அவருடைய பிரசங்கங்களில் சமூக சீர்திருத்தங்களும் இரண்டறக் கலந்திருந்தன. சமுதாயத்தின் நிலை பற்றிய செய்திகளும், சமுதாய தீமைகளை குறித்தும் அவர் எப்பொழுதும் பேசுவார்.

ஆண்டவரால் நான் அவரிடம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, சுவிசேஷ பிரசங்கத்தில் சமுதாய செய்திகளை அவர் கலந்தமைக்காக குற்ற உணர்வுடன் காணப்பட்டார். பரிசுத்த ஆவியை அவர் பெற்றுக் கொள்வதில் அலட்சியமாய் இருந்ததைக் குறித்து மிகவும் வேதனையும் பட்டார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற தன்னையே தாழ்த்தி, வாஞ்சித்து பெற்றிருந்தால், தன் ஊழியம் ஆண்டவரின் வல்லமையையும், கிருபையையும் அதிகமதிகமாய் பெற்று எல்லா இடங்களுக்கும் பரவியிருக்குமே என்று மிகவும் துக்கித்தார். அவர் என்னிடம், "பரிசுத்த ஆவியின் உறுதியான நிறைவை பெற்றுக்கொள்ளாத என்னை, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவ தற்காக தேவன் உபயோகிக்கிறார் என்று பெருமை கொண்டிருந்தேன். ஆனால், நான் மட்டும் என்னையே தாழ்த்தி, ஆவியின் நிறைவை வாஞ்சித்துப் பெற்றிருந்தால், இன்னும் எத்தனை வல்லமையாய் என்னால் சுவிசேஷத்தை பிரசங்கித்திருக்கக் கூடும்" என்று புலம்பினார். அப்பொழுது அவர் என்னை ஆசீர்வதித்து, "மகனே, உன்னை தேவனுக்கு முன்பாக தாழ்த்திக் கொண்டு பரிசுத்த ஆவியை நீ பெற்றுக் கொண்டது எனக்கு அதிக சந்தோஷம். இப்போது சரியான பாதையில் நீ போய் கொண்டிருக்கிறாய். முன்னேறிச் செல். நிச்சயமாக, ஆண்டவர் உன்னை மென்மேலும் பயன்படுத்துவார்" என்று கூறினார்.

இந்த தரிசனம், நான் கடந்தகால மகிமையில் திருப்தியடைந்து ஓய்ந்து விடாதபடி, பரிசுத்த ஆவியின் அளவில்லாத அபிஷேகத்திற்

காக என் வாழ்நாள் முழுவதும் இன்னும் அதிகமதிகமாய் ஏங்கும்படி உதவி செய்தது (*யோவான் 3:34*).

## ஆறுதலின் ஸ்தலம்

இங்கிருக்கும் ஆத்துமாக்கள், பொங்கி வழியக்கூடிய ஆறுதலினாலும், தேறுதலினாலும் எந்நேரமும் சூழப்பட்டிருப்பதே இந்த இடத்தில் உண்டாகும் அசாதாரண அனுபவமாகும். இந்த தேவனுடைய ஊழியர்கள், விவரிக்க முடியாத இன்னல்களையெல்லாம் கிறிஸ்துவுக்காகவும் அவரது ஒப்பற்ற சுவிசேஷத்திற்காகவும் இப்பூமியில் அனுபவித்துள்ளனர். எனவே, நீதியுள்ள தேவன் எல்லாவிதத்திலும் என்றென்றும் அவர்களை ஆற்றித் தேற்றுவதற்கு பரலோகம் தான் மிக சரியான இடமென்று அறிந்திருக்கிறார். II கொரிந்தியர் *1:3* என்ற வசனம் தேவனை, "இரக்கங்களின் பிதா என்றும், சகலவிதமான ஆறுதலின் தேவன்" என்றும் விளக்குகிறது. இரண்டாம் வானத்தில் இதைத்தான் தேவன் செய்கிறார்.

பெரிதளவில் பாராட்டப்பட்ட இந்தியாவின் பரிசுத்தவான் **சாது சுந்தர் சிங்** அவர்களுடன் சிறிது நேரம் செலவிடும் சந்தர்ப்பங்களை இந்த இரண்டாம் வானத்தில் ஆண்டவர் எனக்கு கிடைக்க செய்தார். அவர் முகத்தில் பிரதிபலிக்கப்பட்ட தெய்வீக சந்தோஷம் விவரிக்க இயலாதது. ஒரு காலத்தில் அவர் ஆண்டவருக்காக இவ்வுலகில் அதிகமாக பாடுபட்டிருக்கிறார் என்று ஒருவராலும் யூகிக்க முடியாது. எப்போதும் அவருடைய முகத்தில் ஒரு இயற்கையான புன்முறுவலும், சந்தோஷமும் பிரதிபலித்துக் கொண்டே இருக்கிறது.

ஒருமுறை அவர் பகிரங்கமாக, "பரலோகத்தில் கிறிஸ்துவுக்காக பாடநுபவிக்க வாய்ப்பு இல்லையென்றால், அவருக்காக தொடர்ந்து பாடுகளில் சந்தோஷமடைய என்னை நரகத்திற்கு அனுப்பும்படி கெஞ்சிக் கேட்பேன்" என்று அறிவித்ததாக கூறப்படுகிறது. அவருக்காக பாடநுபவிப்பதை சந்தோஷமாகக் கருதும் இத்தகைய பரிசுத்தவான்கள், கிறிஸ்துவின் மீதும் அவரது சுவிசேஷத்தின்மீதும் கொண்டுள்ள உயர்ந்த சிந்தையும் பற்றியெரியும் அன்பும்தான் எவ்வளவு பெரியது (*யாக்கோபு 1:2, அப்போஸ்தலர் 5:41*)!

'சகலவித ஆறுதலின் தேவன்', இரண்டாம் வானத்திலுள்ள அத்தகைய பரிசுத்தவான்களை சுற்றிலும் அலை அலையாய் தம்முடைய ஆறுதலை அனுப்பிக் கொண்டேயிருக்கிறார். *லூக்கா 16:25, சங்கீதம் 94:19*-ன்படி அவர்கள் உண்மையாகவே தேற்றப்படுகிறார்கள்.

உண்மையான ஆறுதலுக்கு ஈடான ஓர் ஒப்பனையாக ஏற்கப்படாவிட்டாலும், என் வாழ்விலிருந்து ஓர் எடுத்துக்காட்டை நான் இங்கு சொல்லட்டும். நான் என் முதல் ஆண் குழந்தையை இழந்தபொழுது நானும் என் இளம் மனைவியும் முழுவதுமாக மனம்

உடைந்து போனோம். வீட்டிலுள்ள பெரியவர்கள், உதக மண்டலம் என்று சொல்லப்படும் மலை வாசஸ்தலத்திற்கு எங்களை அனுப்பி வைத்தார்கள். நாங்கள் பயணம் செய்த பழமையான புகைவண்டி மலை ஏற்றத்திற்கேற்றவாறு சிறியதாக அமைக்கப் பட்டிருந்தது.

மலைகளினூடே மெதுவாக ரயில் வண்டி ஏறுகையில், குளிர்ச்சியான காற்று எங்களுடைய சோர்ந்துபோன உடல்களுக்கு புத்துணர்ச்சியைக் கொடுத்தது. மலைச்சாரல்களின் இரு பக்கங்களிலும் பல நிறங்களில் காட்சியளித்த பூக்கள் வழிமுழுவதும் எங்கள் கவனத்தை ஈர்த்தபடியால் உண்மையிலேயே நாங்கள் மெய் மறந்து அவைகளையே தொடர்ந்து ரசித்துக்கொண்டு வந்தோம். இருபுறமும் பெரிய பாறைகளுக்கிடையே ரயில் நகரும்போது, அவைகளில் பொறிக்கப்பட்டிருந்த வாசகங்களாலும், சுற்றுலாத் துறை அமைத்திருந்த விளம்பரப் பலகைகளாலும் தொடர்ந்து தொடப் பட்டோம். அந்த வாசகங்கள், ‘கவலையை மறந்துவிடு’, ‘சிரி’, ‘மகிழ்ச்சியாயிரு’ போன்றவையேயாகும். உண்மையாகவே இந்த உபகரணங்களெல்லாம் சிறிது நேரமாவது எங்கள் துயரத்தை மறக்கச் செய்தது. அந்த மலைப் பகுதியில் காணப்பட்ட புதியதொரு சுற்றுப்புற சூழ்நிலை, எல்லா விதத்திலும் எங்கள் மனதிற்கு முழு ஆறுதலையும், தேறுதலையும் கொடுத்தன.

ஆயினும், நான் முன் கூறியபடியே, இரண்டாம் வானத்திலுள்ள ஒவ்வொரு தேவஊழியனுக்கும் இறைவன் கொடுக்கும் பரலோக ஆறுதலுக்கு இவைகள் எந்த விதத்திலும் ஈடாகாது. எனினும் சோர்ந்துபோன தேவனுடைய ஊழியக்காரரின் ஆத்துமாவிற்கு நேரிடுவது எங்களுடைய இந்த அனுபவத்தைப் போன்று இருந் தாலும், அது இயற்கைக்கப்பாற்பட்ட விதமாகவே நடைபெறுகிறது.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார் என்று வேதம் சொல்லுகிறது (சங்கீதம் *135:14*). அதையே இந்த இரண்டாம் வானத்தில் உள்ளவர்களுக்கு அவர் செய்கிறார்.

இந்த உலகத்தில், தேவனாகிய நம் பரம பிதா, எப்போதும் நம்மோடிருக்கவும், நம்மைத் தேற்றவும் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை (யோவான் *14:16,17*) நமக்கு அருளியிருக்கிறார். “ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்;” என்று தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்கு பண்ணியதைப்போலவே நம்மை தேற்றுகிறார் (ஏசாயா *66:13*).

*1986*-ஆம் ஆண்டு ஒரு கொடிய கார் விபத்தில் எங்களுடைய அருமை மகள் ஏஞ்சலை இழந்தபோது, நாங்கள் குடும்பமாக எப்படி எல்லாவிதத்திலும் நொறுக்கப்பட்டோம் என்பதை நான் இன்னும் நினைவு கூறுகிறேன். ஏறத்தாழ ஆறு வாரங்களாக ஆறுதலடை யாமல், அடக்கக்கூடாமல் அழுதுகொண்டிருந்தோம். ஒருநாள்

வழக்கமான காலை ஜெப நேரத்தில் நாங்கள் முழங்கால்படியிட்டபொழுது பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்து, எங்களை அளவில்லாமல் நிரப்பினார். அதைத் தொடர்ந்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் இனிய குரலில் எங்களை ஆற்றித் தேற்றினார். ஏதோவொரு இயற்கைக்கப்பாற்பட்ட செயல் எங்கள் ஆத்துமாவுக்குள் ஏற்பட்டு அதன் விளைவாக எங்கள் துக்கம் சந்தோஷமாக மாறிற்று *(யோவான் 16:20)*.

அவ்வாறே **இயேசுவின் மனதுருக்கம் இரண்டாம் வானம் முழுவதிலும் எப்போதும் பாய்ந்து, எந்த தேவ ஊழியனையும் என்றைக்குமே துக்கத்திற்கு இடங்கொடுக்காதபடி வைத்துக் கொள்கிறது.** பரலோகத்தில் இந்த பகுதியிலிருக்கும் கணக்கற்ற தேவ மக்கள் நிச்சயமாகவே ஆசி பெற்றவர்கள். ஏனெனில், அவருக்காக பொறுமையுடன் இவ்வுலகில் சகித்த தங்கள் கஷ்டங்கள், இதய வேதனைகள் இவற்றிற்காக இவர்கள் தேவனாலேயே நேரடியாக ஆறுதல் பெறுகிறார்கள்.

## மூன்றாம் வானம்

பின்வரும் வேத பகுதி மூன்றாம் வானம் பற்றிய காட்சியை வெளிப்படுத்துகிறது.

> மேன்மை பாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே; ஆகிலும் கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் சொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான். அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார். அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன். அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.
>
> II கொரிந்தியர் *12:1-4*

இந்த இடத்தில் நிறைந்துள்ள தேவ மகிமையை, வார்த்தைகளால் விவரித்து எழுதவே முடியாது. இவ்வுலகத்தில் **தேவனோடு நடக்கும்** சிலாக்கியத்தையும் அனுபவத்தையும் பெற்றவர்கள் மட்டுமே அவரது மகிமையின் பிரசன்னத்தை இந்த மூன்றாம் வானத்தில் தாங்கவும் அகமகிழ்ந்து அனுபவிக்கவும் முடியும். ஏனோக்கும் நோவாவும் **தேவனோடு நடந்தார்கள்** என்று வேதம் கூறுகிறது *(ஆதியாகமம் 5:24; 6:9)*. ஆபிரகாம் **தேவனுடைய சிநேகிதன்** என்னப்பட்டார் *(II நாளாகமம் 20:7, ஏசாயா 41:8, யாக்கோபு 2:23)*. எனவே அவர் தேவனோடு நடந்தார்.

ஒரு மனிதன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல கர்த்தர் மோசேயோடே **முகமுகமாய்** பேசினார் (யாத்திராகமம் 33:11, எண்ணாகமம் 12:8). பவுல் அப்போஸ்தலன் இவ்வுலகத்தில், தான் எல்லாவிதத்திலும் ஆண்டவரைப் போல நடக்க முயற்சித்ததாக அறிவிக்கிறார். (I கொரிந்தியர் 11:1, கலாத்தியர் 6:17; 2:20). அவர் தேவனோடு மிக நெருக்கமாய் வாழ்ந்தபடியால், தேவனுடைய சித்தத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்ப பரலோகத்திற்கு போவதும் வருவதும் அவரால் முடிந்தது (II கொரிந்தியர் 12:1-4). அதைப் போலவே யோவான் **தேவனுடைய மார்பில் சாய்ந்திருந்தவர்** (யோவான் 13:23; 19:26; 20:2; 21:7,20). அவரும்கூட வெளிபடுத்தின விசேஷம் 4:1-ன்படி, கர்த்தரால் பரலோகத்திற்கு அழைக்கப்பட்டிருக்கலாம். இவ்வுலகத்தில் **தேவனோடு நெருங்கி நடக்கும்** அனுபவத்தை பெற்றவர்கள் மட்டுமே பரலோகத்தில் 'மூன்றாம் வானத்தில்' அவரது மகிமையான பிரசன்னத்தை சந்திக்கவும், அதில் மகிழ்ந்திருக்கவும் முடியும்.

இயேசு கிறிஸ்துவும்கூட தம்மோடுகூட நெருங்கி நடந்தவர்களுக்கு தம்மோடு இருக்கும்படியான சிலாக்கியத்தை வழங்குமாறு கீழ்க்காணும் வசனத்தின்படி, பிதாவிடம் வற்புறுத்தி, குறிப்பாகக் கேட்கிறார்.

> பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்.
>
> யோவான் 17:24

எனவே, அவரோடுகூட எந்நேரமும் இருக்க வேண்டுமென்ற தணியாத தாகம் கொண்டவர்களும், கிறிஸ்துவின் பிரசன்னத்தை இவ்வுலகிலேயே அனுபவித்து வந்தவர்கள் மாத்திரமே 'மூன்றாம் வானத்தில்' தேவ பிரசன்னத்தை உணரவும் அவரில் மகிழ்ந்திருக்கவும் முடியும்.

## பரலோக ஆலோசனை சபை

பரலோகத்தில் 'பரலோகத்தின் நியாய சங்கம்' என்ற ஒன்றை தேவன் நிறுவியிருக்கிறார் என்பதாக தானியேல் 7:10 மற்றும் வெளி 20:4 கூறுகிறது.

> அன்றியும் நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது...
>
> வெளி 20:4

தேவனோடு சஞ்சரித்த பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், மூன்றாம் வானத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாசம் செய்யவும்,

புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு வேறொரு பகுதியில் இருப்பிடம் அளிக்கப்பட்டிருப்பதும் சுவாரஸ்யமான கவனத்திற் குரியவைகளாகும். எனினும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருடைய திருவுள சித்தத்திற்கேற்ப, உலகத்தில் நடைபெறப் போகும் சம்பவங்களைக் குறித்த காரியங்களை தனிப்பட்ட முறையில் இவர்களோடு கலந்தாலோசிப்பதைக் காணமுடியும்.

மூன்றாம் வானத்தை, முதல் முறையாகக் காணும் பாக்கியத்தை நான் பெற்றபோது, பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை தேவன் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். தீர்க்கதரிசிகளாகிய எலியா, ஏனோக்கு இவர்களின் சரீர தோற்றத்தை கண்டு அசந்து போனேன். வேத வாக்கின்படி, இவர்கள் இருவரும் மரணத்தைக் காணாமல் தேவனால் எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் (ஆதியாகமம் *5:24*, எபிரெயர் *11:5*, II இராஜாக்கள் *2:11*). உலகிலிருந்து பரலோகத்திற்கு கடந்துபோன பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் இவ்வுலகிலிருந்த போது அவர்கள் கொண்டிருந்த சரீர தோற்றத்திலேயே காணப்படு கிறார்கள். என்றாலும் இந்த இருவரும் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் நீண்டகாலம் பரலோகத்தில் தங்கிவிட்டபடியால், அவர்களது உடல்கள் தங்கம்போல் மின்னுகின்றன. மோசே, நாற்பது நாட்கள் சீனாய் மலையில் தேவனோடு இருந்தபின் அவர் முகம் பிரகாசித்ததுபோலவே, அவர்களுடைய முகங்கள் மின்னுகின்றன என்பதை கீழ்வரும் வசனங்கள் கூறுகிறது.

> ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேயைப் பார்க்கும்போது, அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டு, அவன் சமீபத்தில் சேரப் பயந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டார்கள். மோசே அவரோடே பேசும்படிக்கு உள்ளே பிரவேசிக்கும் வரைக்கும், முக்காட்டைத் திரும்பத் தன் முகத்தின்மேல் போட்டுக் கொள்ளுவான்.
>
> *யாத்திராகமம் 34:30,35*

மூன்றாம் வானத்தில் நான் இன்னும் ஆண்டவரோடிருக்கை யிலே, எலியா ஆண்டவரிடம் "தேவனே, நான் உலகத்துக்கு திரும்பி போக வேண்டிய வேளை வந்து விட்டதா?" என்று நேரடியாக கேள்வி எழுப்பினார். இதே போன்ற கேள்வி ஏனோக்கிடமிருந்தும் எழுப்பப்பட்டது. இவர்களிருவரிடமும் ஆண்டவர், "இல்லை, இன்னும் வரவில்லை, காத்திருங்கள்" என்று கூறினார். வெளிப் படுத்தின விசேஷம் *11:4*-ல் உள்ளபடி, எலியாவும் ஏனோக்கும், குறிக்கப்பட்ட காலத்தில் உலகத்திற்கு வந்து இரத்த சாட்சிகளாக மரிக்க வேண்டியதாயிருக்கிறது (வெளி *11:7,8*).

மோசேயின் தோற்றம் கெம்பீரமாய் காட்சியளிக்கிறது. அவருடைய முகம், ஏறக்குறைய நம் அன்பு நிறைந்த அருள்நாதர் இயேசுவின் முக சாயலுக்கு ஒத்திருந்தது. ஒரே ஒரு வேறுபாடு

என்னவெனில், நாற்பது ஆண்டுகளாய் இஸ்ரவேல் மக்களை அவர் வழிநடத்தி வந்தமையால், அவர் முகத்தில் **இரும்பு போன்ற ஒரு உறுதி** பிரதிபலித்தது. நமது ஆண்டவராகிய இயேசுவின் முகமோ **'அன்பும் மனதுருக்கமும்'** நிறைந்ததாயிருக்கிறது.

இந்த பூவுலகில் இயேசுவோடுகூட சஞ்சரித்த புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், மூன்றாம் வானத்தின் மற்றொரு பகுதியில் காணப்படுகிறார்கள். இயேசுவின் சீஷர்கள் மற்றும் பவுல் போன்றோரை அங்கு காணமுடியும்.

பரிசுத்த பவுலின் தோற்றத்தை மற்றவர்களுடன் ஒப்பிடுகையில், ஒரு தனிப்பட்ட வேறுபாட்டை காணலாம். பவுலினுடைய ஆத்துமா மட்டும் மூன்றாவது வானத்தில் இயேசுவின் மற்ற சீஷர்களுடன் இருந்தாலும், அவரை பார்க்கும்போது பூமிக்குரிய சரீரத்தில் அவருக்கு காணப்பட்ட பலதரப்பட்ட தழும்புகள், பரலோக சரீரத்திலும் தெளிவாக தாங்கப்பட்டு வருகின்றன. அப்போஸ்தலனாகிய பவுலினுடைய இந்த சிதைந்துபோன தோற்றத்தைப் பற்றி நான் சிந்திக்கையில், ஆண்டவராகிய இயேசு தாமே, இந்த அற்புத காட்சியின் அர்த்தத்தைப் பற்றி என்னிடம் விளக்கினார். "பவுல் ரோம போர்ச்சேவகர்களின் கைகளிலிருந்து மரண தீர்ப்பைப்பெற்று, பிறகு பரலோகம் வந்தபோது, உலகத்தில் அவன் போராடி எனக்காக வேதனை அனுபவித்ததை எண்ணி என் உள்ளம் அவன்பால் பொங்கினது (I கொரிந்தியர் *15:10*, II கொரிந்தியர் *11:23-28*, II தீமோத்தேயு *3:10,11*). பூவுலகில் எனக்காக அனுபவித்த சொல்லி முடியாத இன்னல்களை நான் காணாதவர் போலிருக்க விரும்ப வில்லை. ஆகவே, என்னுடைய இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமை யால், உலக சரீரத்தில் பவுலுக்கிருந்த தழும்புகளையும், காயங்க ளையும் அவனுடைய பரலோக சரீரத்திலும் அப்படியே பாதுகாத்து வைத்திருக்கிறேன்" என்று கூறினார். அப்போஸ்தலனாகிய பவுல் அடக்கமுள்ளவராகவும் அமைதியானவராகவும் காணப்பட்டாலும், அந்த காயங்களின் காட்சியானது இருதயத்தை உடைக்கிறதும், உருக்குவதாகவும் இருக்கிறது.

மற்றும் ஒரு முறை பரலோகத்திற்கு நான் எடுத்துச்செல்லப்பட்டு, அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அறிமுகமானது என் நினைவிற்கு வருகிறது. அவர் பேசத் தொடங்கினார். நான் கேட்டுக் கொண்டே யிருந்தேன். இவைகளையே என்னிடம் பேசினார்.

அ) பவுலாகிய நான் வாலிபனாயிருந்தபோது பூமியிலே மிகவும் அகங்காரம் பிடித்தவனாக இருந்தேன். அதற்கு காரணம், புகழ்பெற்ற பரிசேயனும் வேதபோதகனுமான கமாலியேலிடம் நான் வேத பிரமாணங்களை கற்றுக் கொண்டதுதான் (அப்போஸ்தலர் *22:3; 5:34*).

ஆ) வேதப்பிரமாணங்களையும், கற்பனைகளையும் மட்டுமே அறிந்திருந்த நான், முழு உலகிலும் உள்ள சகலவற்றையும் கற்றுத் தேறிவிட்டேன் என்ற மனதிருப்தியில் இருந்தேன்.

இ) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய போதனைகள் என் காதில் விழுந்தபோது என்னால் அதை ஜீரணிக்கவே முடியவில்லை. கோபத்தால் வெகுண்டு எழுந்தேன். நான் ஒரு உண்மை யூதன் என்றும், ஒரு எபிரெயன், ஒரு பரிசேயன், பென்யமீன் கோத்திரத்தை சேர்ந்தவன், எட்டாம் நாள் விருத்தசேதனம் பெற்றவன் என்றும் பெருமையாக எண்ணினேன் (II கொரிந்தியர் 11:22, பிலிப்பியர் 3:5).

ஈ) எனவே, அவர்கள் எல்லோரையும் அழிக்கத் துணிந்து விட்டேன் (அப்போஸ்தலர் 22:4; 26:11, கலாத்தியர் 1:13, I தீமோத்தேயு 1:13, பிலிப்பியர் 3:6). நான் அவர்களை சித்ரவதை செய்து ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தைத் தூஷிக்கும்படி, அவர்களை கட்டாயப்படுத்தினேன். ஒருசிலரை கொலையும் செய்திருக்கிறேன்.

உ) இத்தகைய ஒரு திட்டத்தின்போது தான் பரலோக தேவசந்திப்பைப் பெற்றேன். பரலோகத்திலிருந்து வந்த ஒரு அற்புத பேரொளியால் தாக்கப்பட்டேன். நான் எங்கேயிருந்தேன் என்று எனக்கே தெரியவில்லை. ஆண்டவரின் சத்தம் என் தலையை சுற்றச் செய்தது. அது அவ்வளவு அன்பினால் நிறைந்திருந்தது! இவ்வளவு அன்பு நிறைந்த குரலை நான் என் வாழ்நாளில் ஒருபோதும் கேட்டதேயில்லை. எனவே அந்தக் குரல் 'சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?' என்று கேட்டவுடனே அக்குரலில் இருந்த வேதனை என் கல்லான இருதயத்தை உருக்கி விட்டது. இந்த பரம நபர் யாராக இருக்க முடியும் என்று அறியும் பேரார்வம் உண்மையில் எனக்கு ஏற்பட்டது. ஆகவே, 'ஆண்டவரே, நீர் யார்?' என்ற கேள்வியை எழுப்பினேன். 'நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே' என்று அக்குரல் பதிலளித்தபோது என் இருதயம் சுக்குநூறாய் உடைந்தது (அப்போஸ்தலர் 9:1-6). நான் மிகவும் அழ ஆரம்பித்தேன். என் இதயத்தில் இவர்தான் தேவனுடைய குமாரன், வரப்போகும் மேசியா என்ற உறுதியான நம்பிக்கையைப் பெற்றேன். எனவே தடையின்றி எங்கும் சென்று எல்லோரிடமும் 'இயேசுவே தேவனுடைய குமாரன்; சீக்கிரத்தில் வரப்போகும் மேசியா' என்று சொல்லத் தொடங்கினேன் (அப்போஸ்தலர் 9:20). வேறு ஒருவரும் இப்படிப்பட்ட அன்பின் தற்சொரூபமாக இருக்கவே முடியாது என்பதுதான் என் உறுதியான நம்பிக்கை.

ஊ) அன்றிலிருந்து இயேசு எனக்கு எல்லாவற்றிலும் எல்லாமுமானார். அவர் என் ஜீவனுமானார் (பிலிப்பியர் 1:21). எல்லா அப்போஸ்தலரும் திருமணமானவர்கள் (I கொரிந்தியர் 9:5, லூக்கா 4:38). என் அன்பும், அர்ப்பணமும் ஆண்டவருக்கென்று முழுமையானதும் சிறப்பானதாகவும் இருந்ததால் விவாகம் செய்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவேண்டும் என்ற ஆவல் எனக்கு சிறிதும் ஏற்படவில்லை (கலாத்தியர் 2:20).

எ) 'தேவகிருபையின்' சுவிசேஷத்தை (அப்போஸ்தலர் 20:24) அவர் கட்டளையின்படியே முழு உலகத்திற்கும் கூற வேண்டும் என்பதே என்னுடைய வாழ்வின் தீவிர வாஞ்சையாயிருந்தது. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்... அவர்களில் பிரதான பாவி நான்" (I தீமோத்தேயு 1:15).

ஏ) உபத்திரவங்கள் எனக்கு ஒரு பொருட்டாகவே தெரிய வில்லை. கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் நான் பட்ட உபத்திர வங்களை வரிசைப்படுத்தி எழுதியுள்ளேன் (II கொரிந்தியர் 11:23-38). நான் கொல்லப்படும்படி கல்லெறியப்பட்டபொழுது அது என்னை வேதனைப்படுத்தவோ மனதை சற்றும் பாதிக்கவோ இல்லை. காரணம், கடின இருதயமுள்ள அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு எப்படி சுவிசேஷத்தைக் கொண்டு வரலாம் என்ற சிந்தனையிலேயே என் மனம் அச்சமயங்களில் ஈடுபட்டிருந்தது (அப்போஸ்தலர் 14:19). எனவே நான் அந்த சரீர வேதனையை உணரவே இல்லை. கப்பல் சேதமடைந்து கடலில் மிதந்து கொண்டிருக்கும்போது, 'நான் கடற்கரையை அடைந்தவுடன் சுவிசேஷத்தைப் பரப்ப இன்னும் என்ன செய்யலாம்?' என்று ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். எனவே தனிமையை உணரவில்லை. மெலித்தா தீவில் இருக்கும்போது ஒரு விரியன் பாம்பு என் கையைக் கவ்விக்கொண்டிருந்தபோதும் அதை உதறித் தள்ளிப் போட்டு, 'ஒருவேளை மீண்டும் சுவிசேஷத்தைக் கொண்டு வரும் வாய்ப்பு நமக்குக் கிடைக்காமற்போனால் எப்படி அந்த தூரமான தீவிலுள்ள மக்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு வருவது' என்று ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேன் (அப்போஸ்தலர் 28:4,5). 'ஆகிலும், அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன் என்று நான் சொல்லவில்லையா?' (அப்போஸ்தலர் 20:24). நீங்களும் அவ்வாறே இருக்கவேண்டும். வேறு எந்த எண்ணமும் உங்களை கவலைக்குள் அமிழ்த்த முடியாது.

ஐ) எனக்கு மரண தண்டனை தீர்ப்பு கொடுக்கப்பட்டு நான் ரோமாபுரியில் இருந்தபோதும்கூட அங்கிருந்து என்னால் இயன்ற வரை சுவிசேஷத்தை பிரசங்கித்தேன் (அப்போஸ்தலர் 28:30,31). என் மரணத்திற்குப் பிறகு, எப்படி சுவிசேஷத்தையும், சபையையும் கொண்டு செல்வது என்பது பற்றிய எல்லா வழிமுறைகளையும் தீமோத்தேயுவுக்கு விளக்கினேன். எப்பொழுது வேண்டுமானாலும் இவ்வுலகத்தை விட்டுப்போக நான் ஆயத்தமாயிருந்தேன்.

ஒ) மரண தண்டனை நிறைவேற்றப்படும் நாள் வந்தபோது, நான் சிறிதும் பயப்படவேயில்லை. ஒரு போர்வீரன் உறையிலிருந் தெடுக்கப்பட்ட வாளைத் தூக்கி கொண்டு, என்னை குனியச் சொன்னது மட்டுமே என் நினைவிலிருக்கிறது. திடீரென்று இயேசுவை தரிசித்தேன், என்னையே நான் மறந்து போனேன். காரணம், நமது ஆண்டவராகிய இயேசுவின் பிரசன்னத்தில் நான் மூழ்கிவிட்ட

படியால், சிரச்சேதம் செய்பவன் எப்படி தன் வாளால் என் தலையை துண்டித்தான் என்ற உணர்ச்சியே எனக்கு சிறிதும் இல்லை. ஆம், கடைசிவரையிலும் உலகம் முழுவதிற்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் என்பதே என் வாஞ்சையாயிருந்தது.

திருமறையானது, ஆண்டவரை 'சகலவிதமான ஆறுதலின் தேவன்' (II கொரிந்தியர் *1:3*) என்று விவரிக்கிறது. ஆம்! யாரையும், எவரையும், எந்த சூழ்நிலையிலும் அவரால் ஆறுதல்படுத்த முடியும் என்று கீழ்க்காணும் வசனம் கூறுகிறது:

> என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது.
>
> *சங்கீதம் 94:19*

மேலும் பரிசுத்த ஆவியானவர் கீழ்க்காணும் வசனங்களில் 'தேற்றரவாளன்' என்று அழைக்கப்பட்டு வர்ணிக்கப்படுகிறார்.

> நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால், அவரை பெற்றுக் கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.
>
> யோவான் *14:16,17*

இவ்வுலகில் ஆண்டவருக்காக பாடநுபவித்திருந்திருப்போமானால், பரிசுத்த ஆவியானவர் தம்முடைய பரிசுத்த ஆறுதலோடு பரலோகத்திற்கும் தொடருகிறார் என்பதை பின்வரும் வேத வசனம் விளக்குகிறது.

> இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.
>
> கொலோசெயர் *1:24*

ஆகவே, திடன்கொள்ளுங்கள். நாம் அவருக்காகவே வாழ்ந்து, அவரையே சேவிப்போமானால், இவ்வுலகிலும், பரலோகத்திலும் தேவன் நமக்கு ஆறுதல் செய்கிறவராயிருக்கிறார்.

# வாழ்வின் இறுதிவரை தொடுதல்

# 6

*தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.*

*யோபு 42:2*

*கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.*

*சங்கீதம் 33:6*

மனிதன் தன்னுடைய எதிர்காலம் தனக்கு எவைகளைக் கொண்டுவரும் என்பதை தெரிந்துகொள்ள, பேராவலும், மிகுந்த எதிர்பார்ப்பும் கொண்டிருக்கிறான். ஒரு குறிப்பிட்ட முறையில்தான் தன் வருங்காலம் அமைக்கப்படவேண்டுமென்று அவன் வாஞ்சிக்கிறான். ஆனால், தேவனின் சிந்தையோ இதனுடன் ஒத்துப்போக மறுக்கிறது. முடிவில் ஆண்டவருடைய சித்தமே நிலைநிற்கிறது. பின்வரும் வசனம் இதை விவரிக்கிறது:

*மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்.*

*நீதிமொழிகள் 19:21*

மகா யேகோவாவும்கூட, பின்வரும் திருமறை வாக்கியத்தின் மூலம் இதே கருத்தினை சுட்டிக் காட்டுகிறார்:

*அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வ காலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்...*

*ஏசாயா 46:10*

இந்த பிரதான காரணத்தினால் தானோ என்னவோ, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நமக்கு பின்வருமாறு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்துள்ளார்.

*உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.*

*மத்தேயு 6:10*

மேலும், அவர் தாமே கெத்செமனே தோட்டத்தில் மன்றாடியதுபோல, **அவருடைய சித்தத்தையே பிரதானமானதாக** ஏற்றுக் கொள்ள நமக்கு வழியைக் காண்பித்துள்ளார்.

...ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்றார்.

மாற்கு 14:36

ஆம், கர்த்தர் நித்தியமாக அறிவித்திருக்கிறார்.

என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக் கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.

ஏசாயா 55:8,9

என் சொந்த ஜீவியம், ஊழியம் இவைகள் சம்பந்தப்பட்ட தேவனுடைய தரிசனங்களையும் மற்றும் முழு மனுக்குலத்திற்கும் தேவன் வைத்திருக்கும் வெளிப்படையான திட்டங்கள், அதாவது, **வெள்ளை சிங்காசன தீர்ப்பு** போன்றவைகளையும் நான் பெற்றிருக் கிறேன். உங்கள் எதிர்காலத்தைக் குறித்த ஒவ்வொரு காரியத்திலும் தேவனுடைய வழி நடத்துதலுக்காக நீங்கள் முழுவதும் அவரையே சார்ந்திருப்பதற்காக, உங்களை உற்சாகப்படுத்தவே இப்படிப்பட்ட தரிசனங்களை இந்த அத்தியாயத்தில் உங்கள் முன் வைக்க பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டேன். ஆம், **அவரும் அவருடைய தீர்மானங்கள் மட்டுமே எந்த விஷயத்திலும் நமக்கு முடிவானவை.** அவருடைய முடிவு, என்றென்றைக்கும் நிலைநிற்கும், நம்முடைய நன்மைக்காகவே இருக்கும்.

## பரலோகத்தின் ஆலோசனை சபை

20.7.1967 அன்று, கர்த்தர் தமது இரக்கத்தினால் என்னை பரலோகத்திற்கு கொண்டு சென்றார். ஒரு தங்க மேஜைக்கு முன்பாக இருந்த ஒரு தங்க நாற்காலியில் ஆண்டவர் வீற்றிருக்கக் கண்டேன். அவருக்கு முன் நின்று கொண்டிருந்த என்னைப் பார்த்து அவர் ஒரு வினாவை எழுப்பினார். "என்னை சேவிப்பதற்காக முழுநேர ஊழியம் செய்ய நீ வருவாயா?" என்றார். அந்த வேளையில் நான் வங்கியில் ஒரு முக்கியமான பொறுப்பில் இருந்தேன். எனவே, எனக்கு தேவையான எல்லா சௌகரியங்களையும் வங்கியானது மிகுந்த அன்போடு கொடுத்திருந்ததால், முறையிடுவதற்கு ஒன்றுமில்லை. என் உள்ளத்திலோ ஆண்டவருக்கு எதிரான ஒரு குறைபாடு அந்த நேரத்தில் இருந்தது. அதை நான் விளக்கிக் கூறட்டும்.

நான் பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டு போகப்பட்டதன் முக்கிய காரணம், நான் சரீரத்தில் மிகவும் சுகவீனமாயிருந்தபடியால், ஆண்டவர் என்னை ஆசீர்வதித்து, என்னுடைய சரீரத்தில் அவருடைய

சுகமளிக்கும் தொடுதலையும் கொடுத்து அனுப்புவாரென்று எண்ணியிருந்தேன். மேற்கூறப்பட்ட இந்த கேள்வியை அவர் எனக்கு முன் வைத்தபோது, நான் சுகம் பெறவில்லை. எனவே, மிகுந்த ஏமாற்றமடைந்து உள்ளுக்குள் நொந்துபோய், சற்று கடினமாக, "இல்லை, நான் வரமுடியாது" என்று பதிலளித்தேன்.

அவர் கொடுத்த இந்த சந்தர்ப்பத்தை உடனடியாக நான் மறுத்ததின் தெளிவான காரணத்தைக் கூறும்படி அவர் புன்னகையுடன் விசாரித்தார். நான் அவரிடம், "ஆண்டவரே, என்னைப் போன்ற அநேகரை உம்முடைய ஊழியத்திற்கு நீர் அழைத்திருக்கிறீர். அவர்களில் அநேகர், தங்களுடைய அத்தியாவசிய தேவைகள் உலகத்தில் சந்திக்கப்படாமல் பரிதாபமான நிலையிலிருக்கிறார்கள். அநேகருக்கு சரியான உடைகள், காலணிகள்கூட இல்லை. மேலும், அவர்கள் வறுமையிலும், பணத் தேவையிலும் எப்பொழுதும் உழலுகிறார்கள். நான் பணிசெய்யும் என் வங்கியோ என் உலகத் தேவைகளையெல்லாம் நிறைவாய் சந்திக்கிறது. வசதியாக நான் வாழ்கிறேன். நான் ஏன் வேலையை உதறித் தள்ளிவிட்டு, இந்த வசதிகளையெல்லாம்விட்டு, உமக்காக முழு நேர ஊழியம் செய்ய வேண்டும்?" என்று வினவினேன். அவர் புன்சிரிப்போடு எனக்குக் கொடுத்த பதில், உண்மையாக என்னை உலுக்கியது.

அவர், "என் மகனே, நீ குறிப்பிட்டு சொன்ன இந்த மக்களை நான் என் முழுநேர சேவைக்கு அழைக்கவே இல்லை. அவர்களுடைய ஆரம்ப ஊழியங்களில் கிடைத்த வெற்றி, அதாவது ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவது, மக்கள் சரீர குணமடைவது, பிசாசுகள் வெளியே துரத்தப்படுவது போன்றவற்றை சந்தித்தவுடனேயே உணர்ச்சிவசப் பட்டு விடுகிறார்கள். **ஜெபத்தில் காத்திருந்து, முழு நேர ஊழியத்தை ஆரம்பிப்பது என் திருவுளச் சித்தத்தின்படி தானா என்பதை அறியாமல், 'தேவன் கொடுத்த பணிகளை' அவசரப்பட்டு ராஜினாமா செய்து விடுகின்றார்கள்.** தங்கள் குடும்பத்தைப்பற்றிய பொறுப்பையே முழுக்க முழுக்க மறந்துவிட்டு, முழுநேர ஊழியத்திற்குள் தங்களையே தள்ளி விடுகிறார்கள். (I தீமோத்தேயு *5:8*). உலக வேலையை விட்டு வெளியே வரும்படி ஒருநாளும் நான் அவர்களை அழைக்கவில்லை. அவர்கள் எடுத்த சொந்த முடிவைக் கொண்டு ஒருதலைப்பட்சமாக என் கழுத்தின்மேல் அமருகிறார்கள். நான் அவர்களை அழைக்காத படியால் அவர்களை கவனிக்கும் பொறுப்பு எனக்குரியதல்ல. **நான் ஒருவரை அழைத்தால் அவனை/அவளை கட்டாயம் பராமரிப்பேன்.**"

எங்களுக்குள் இத்தகைய பேச்சு வார்த்தை சுமார் ஒரு மணிநேரம் நிகழ்ந்தது. இறுதியாக இறைவன் என்னிடம், "ஒருவேளை இவைகள் யாவற்றையும் உனக்கு அருளினால், என் முழு நேர சேவைக்கு நீ உன்னை ஒப்புக் கொடுப்பாயா?" என்று இன்னொரு நேரடி வினாவை

எழுப்பினார். ஆனால் இந்த கடினமான சூழ்நிலையிலிருந்து வெளியேற வேறு வழியே இல்லை. எனவே, கீழே காணப்படும் இந்த நான்கு வாக்குறுதிகளும் எனக்கு வேண்டும் என்று சற்று அமைதியாக இருந்துவிட்டு கூறினேன்:

*1. ஆண்டருடைய ஊழியத்திற்கு நான் எங்கு சென்றாலும், அவர் என்னுடன் வரவேண்டும்.*

*2. உலகத்தின் எப்பகுதியிலும் தேவ செய்தியை கொடுப்பதற்காக மக்கள் முன்பாக நான் நிற்கும்போதெல்லாம் அவரும் என்னருகில் வந்து நிற்க வேண்டும்.*

*3. பிரசங்க மேடையிலிருந்து கூட்டத்தின் மக்களுக்காக நான் என்ன வேண்டிக் கொண்டாலும், அவரிடமிருந்து பதில் அருளப்பட வேண்டும்.*

*4. என் குடும்பத்தை மனசமாதானத்தோடு நடத்துவதற்கும், அதே சமயத்தில் ஊழியத்தையும் செய்வதற்கு ஏதுவாக, என் வீட்டில் எதுவும் குறைவுபடக் கூடாது.*

என் பதில் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்தது. அமைதியாக ஒரு தங்கத்தினாலான சுருளை எடுத்து, அதில் பின்வருமாறு எழுதினார், "இயேசு கிறிஸ்துவாகிய நான், இன்று என் மகன் டி.ஜி.எஸ்.தினகரனுக்கு பின்வரும் இந்த நான்கு காரியங்களுக்கு வாக்குக் கொடுக்கிறேன்" என்று எழுதினார் **(நான் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்துக் காரியங்களையும் அப்படியே எழுதினார்).** அதற்குக் கீழே "பதிலாக என் மகன் தினகரன், என் முழு நேர சேவையைச் செய்வதாக எனக்கு வாக்குக் கொடுக்கிறான்" என்றெழுதி அந்த சுருளின் முன் பக்கத்தின் வலது புறத்தில் அவர் கையொப்பமிட, இடது புறத்தில் நான் கையொப்பம் போடுவதற்கு அவருடைய இறகைக் கொடுத்தார். நானும் கையொப்பம் இட்டேன்.

நான் பரலோகத்திலிருந்து வீடு திரும்பியபோது, பரவசத்துடனும், சந்தேகம் இல்லா உறுதியுடனும், என் உலக வேலையை ராஜினாமா செய்துவிட்டு, ஆண்டவருடைய முழுநேர ஊழியத்தில் அடியெடுத்து வைக்க முனைந்தேன். இந்த பாதையின் வழியே முன்னேறிச் செல்ல ஆழ்ந்து சிந்திக்கையில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தார். "அவருடைய முழுநேர ஊழியத்திற்கு ஆண்டவர் உன்னை அழைத்திருக்கிறார் என்பது உண்மை. ஆனால், **எப்பொழுதிலிருந்து** என்று சொன்னாரா?" என்று வினவினார். காரணம், அவர் எல்லாவற்றையும் செய்ய ஒரு நேரம் வைத்திருந்தார் *(பிரசங்கி 3:1)*. அதைத் தொடர்ந்து, "என் மகனே, இவ்வுலகத்தில் நீ வேலையின்மை, வறுமை, வியாதி, கடன் தொல்லை, அவமானங்கள் முதலியவற்றால் அதிகமாய் பாடு அனுபவித்துள்ளாய். நீதியுள்ள தேவனாய் முதலில்

தேவன் இந்த எல்லா இன்னல்களுக்கும் சரியாக ஈடுசெய்த பிறகு, உன்னை உலக வாழ்வில் உயர்த்துவார் (ஏசாயா 61:7). அதன்பின்புதான் அவர் உன்னை முழுநேர ஊழியத்திற்கென்று அழைப்பார்" என்று கூறினார். ஆஹா! இதுவே தேவனின் அழைப்பிலுள்ள உண்மையையும், ஞானத்தையும், அது நிறைவேற தேவன் தீர்மானிக்கும் நேரத்தை பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலால் காணவும் என் ஆவிக்குரிய கண்கள் திறந்தன. தேவன் குறித்திருந்த அந்த நாளுக்காக காத்திருக்க நான் ஒப்புக் கொண்டேன்.

அன்றுமுதல் ஒவ்வொரு ஆண்டும் அதேநாளில், அதாவது ஜூலை 20 அன்று, நான் ஆண்டவரால் எடுத்துக் கொள்ளப்பட்டு பரலோக ஆலோசனை சபைக்கு முன்பாக நிறுத்தப்படுவேன். உலக ரீதியில் இது ஒரு நிர்வாக சபைக் கூடுகை போன்று இருக்கும். தேவனின் இடது பக்கத்தில் பழைய ஏற்பாட்டு வல்லமையுள்ள தேவ தாசர்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றவர்கள் காணப்படுவார்கள். இதேவிதமாக புதிய ஏற்பாட்டின் வல்லமையான தேவனுடைய பரிசுத்தவான்களாகிய பவுல், இயேசுவின் சீஷர்கள் மற்றும் அவர்களோடுகூட கடைசிக்கால பரிசுத்தவான்கள் வலது பக்கத்தில் அமர்ந்திருப்பார்கள். கர்த்தர் அவர்கள்முன் என்னை நிறுத்தி, "இவர் என் மகன் தினகரன். இவர் ஒரு வங்கியில் பணியாற்றுகிறார். நான் என் முழு நேர ஊழியத்திற்காக அவரை அழைத்திருக்கிறேன். எனினும், அவரை இந்த ஆண்டும் வங்கியில் பணி தொடருமாறு முன்மொழிகிறேன். ஆனால் அதனுடன் சேர்ந்து என் ஊழியத்தையும் பகுதிநேர ஊழியமாக செய்வார். அவரது ஊழியத்தை நான், அற்புதங்கள், அடையாளங்கள் அதிசயங்கள் மூலம் உறுதிப்படுத்து வேன். எனவே, இந்த ஒழுங்கு உங்களுக்கு ஏற்புடையதா?" என்று கேட்பார். அவர்கள் அனைவரும் உரத்த சத்தத்துடன் "நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம்" அல்லது "ஆம் ஆண்டவரே" என்று பதிலளிப்பார்கள். அவருடைய ஊழியத்தை நிறைவேற்ற தேவையான விசேஷித்த கிருபை, அபிஷேகம் இவற்றை பெற என்மீது தம் கரங்களை வைத்து ஆசீர்வதித்து வங்கி ஊழியத்துடன் இணைந்து ஆண்டவருடைய ஊழியத்தையும் நிறைவேற்ற இன்னும் ஓராண்டுக்கு விரிவுபடுத்தி அனுப்புவார். ஒவ்வொரு வருடமும் இச்சம்பவம் நிகழும்.

இறுதியாக, ஜூலை 20, 1984 தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தை ஆரம்பித்து அதன்மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பு அளிக்கும் கல்வியை பெற்று தங்களுடைய வாழ்வில் எந்த தடையுமின்றி ஆண்டவரை பின்பற்ற ஏதுவாக இருக்கும் என்பதை அன்று நினைவுபடுத்தினார். எனவே, தாமதிக்காமல் உடனே இதில்




கோயம்புத்தூரில் (தென் இந்தியா) ஏறக்குறைய 700 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து விரிந்து காணப்படும், காருண்யா பல்கலைக்கழகத்தின் சிறப்பான காட்சி

இறங்கி செயல்படும்படி கட்டளையிட்டார். 20.7.1984 அன்று அவர், "மகனே, இப்பொழுது நீ உன் வேலையை விட்டுவிடலாம்; நான் உன் ஊழியத் தேவைகளையும், குடும்பத் தேவைகளையும் சந்திப்பேன்" என்றார். முழுநேர ஊழியம் செய்ய, முழு இருதயத்தோடு, அவரைப் பின்பற்றுவேனென்று தீர்மானித்தேன். என் தேவைகளை மனதார சந்திக்கும்படி தேவனும் என்மீது கிருபைகூர்ந்து உண்மையுள்ளவராகவே இருந்திருக்கிறார்.

ஆம், பரலோகத்தில், மூன்றாம் வானத்தில் பரலோக ஆலோசனை சபை என்று இருக்கிறது. தேவன் எப்பொழுதெல்லாம் குறிப்பிட்ட காரியங்களைப் பற்றி தீர்க்கதரிசிகளோடு கலந்தாலோசிக்க விரும்புகிறாரோ, அப்பொழுதெல்லாம் அந்த சபை கூடுகிறது என்பதை இப்படியாக அறிந்து கொள்ளலாம்.

> கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.
>
> ஆமோஸ் 3:7

## இரத்த சாட்சிகளின் ஆத்துமாக்கள்

பழைய ஏற்பாட்டு நாட்களில் ஒருவன் பாவம் செய்வானானால் மிருக ஜீவன்களை பலிகொடுத்து அவற்றின் இரத்தத்தின் மூலமாகப் பாவ மன்னிப்பு பெற்றுக்கொள்ளும் முறை கையாளப்பட்டது. லேவியராகமம் 17:14ன்படி, **சகல மாம்சத்திற்கும் இரத்தம் உயிராயிருக்கிறது** என்ற அடிப்படையில் இந்த பழக்கம் உண்டாயிருந்தது. ஒரு நபர் கொலைக் குற்றம் சாட்டப்படும்போது அல்லது மற்றவனது கபடற்ற இரத்தத்தை சிந்துவதால் குற்றம் சாட்டப்படும்போது அவன் தன் பாவ நிவிர்த்திக்காக 'உயிருக்குப் பதில் உயிர்' கொடுக்க வேண்டும். பின்வரும் விளக்கத்தின்படி,

> வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன்.
>
> யாத்திராகமம் 21:23

நான் இந்தியாவிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். ஆங்கிலேயர் ஆட்சிபுரிந்த அந்நாட்களில் மிருகபலி அனுமதிக்கப்பட்டிருந்தது. (இப்பொழுது இது நிறுத்தப்பட்டுள்ளது). மிருகபலி ஆண்டுக்கொருமுறை சடங்காக எங்கள் கிராமத்தில் நிகழ்வதை கவனித்துள்ளேன். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஆடுகள், காளைகள், சேவல்கள் கொண்டுவரப்படும். பூசாரியானவர் அந்த பலிக்கான மிருகத்தை மற்றவர்களை பிடிக்கச் செய்து அதன் தலையை மட்டும் ஒரு பிரத்தியேகக் கத்தியால் வெட்டுவார். அந்த உடலிலிருந்து இரத்தம் மிகுந்த வேகத்துடன் பீறிட்டுப் பாயும். சேவலானது, தன்னுடைய தலை பிரிந்து போய்விட்டதைக்கூட உணராமல்,

தலையற்ற உடலோடு பறந்து தப்பிச் செல்ல முயன்று கொண்டிருக்கும். தங்கள் தலை போய்விட்டதையும் உணராமல், கூட்டத்துக்குள்ளே எல்லோரையும் தள்ளிக்கொண்டு ஓடும்போது, வலிமைமிக்க தன்னார்வத் தொண்டர்கள் பெருத்த முயற்சியுடன் அந்த தலையற்ற ஜந்துக்களின் உடல்களைக் கட்டுப்படுத்தி அமைதிப்படுத்த முயற்சிப்பர். அப்படியாக அந்த தலையற்ற உடல்கள் பார்ப்பதற்கே பயங்கரமாயிருக்கும். அந்த தலையற்ற மிருகங்கள், பறவைகளின் சரீரங்களை முழுவதும் அடக்கி உணர்வற்றுப் போக செய்வதற்கு அவர்களுக்கு நேரமும் அதிகம் செலவாகும்.

மனித வரலாற்றில் பக்தியுள்ள ஆபேல் தன் சொந்த சகோதரனாகிய காயீனால் கொல்லப்பட்ட உலகத்தின் முதல் கொலை சம்பவம் நிகழ்ந்தபோது, இதே காரியம் தான் நடந்திருக்கும் (ஆதியாகமம் *4:7*, எபிரெயர் *11:4*).

தன் சொந்த சகோதரனை காட்டுத்தனமாகக் கொன்ற காயீனை கர்த்தர் கடிந்து கொண்டதை பின்வரும் வேதவசனம் காட்டுகிறது.

> அதற்கு அவர் (தேவன்): என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது.
>
> ஆதியாகமம் *4:10*

மரணம் யாவருக்கும் கசப்பானதே (I சாமுவேல் *15:32*). ஒரு நபர் நியாயமின்றியும், கொடூரமாகவும் தன் காலம் நிறைவு பெறுவதற்குமுன் கொல்லப்பட்டால், மேலே கூறப்பட்டபடி அவன் பாவியோ அல்லது பரிசுத்தவானோ, அவனுடைய சரீரம் அதே வண்ணமாக செயல்பட முயற்சி செய்கிறது. புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் தங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவுக்காக மனமுவந்து அர்ப்பணித்த விதத்தை ஒரு தெளிவான அறிக்கை மூலம் நாம் காணலாம்.

> அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.
>
> அப்போஸ்தலர் *7:59,60*

ஸ்தேவான் போன்ற இரத்த சாட்சிகள் தங்கள் ஜீவனை கிறிஸ்துவுக்காகக் கொடுப்பதைப் பெரும் சிலாக்கியமும், மகிமையுமாக ஏற்றுக் கொண்டபோதிலும் (அப்போஸ்தலர் *5:41*, *20:24*, *21:13*, Iபேதுரு *4:16*), அவர்களுடைய கட்டுப்பாட்டையும் மீறி, அவர்களது குற்றமற்ற இரத்தம் நியாயத்திற்காகக் கதறியிருக்கும்.

இதைப்போன்ற ஒரு காட்சி பின்வரும் திருமறை வசனங்களில் காணலாம்.

> அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.
>
> வெளி *6:9,10*

இவர்களின் இரத்தம் நீதியை மட்டுமே கொடுக்குமாறு கேட்பது இயற்கையான ஒரு நியமம் தான்.

ஆயினும், வேதாகமம் கூறுகிறது; தேவன் தம்மில் தாமே ஜீவனுக்கு ஆதாரமானவர் (யோவான் *5:26*). அவர் எல்லாவற்றையும் உயிரோடிருக்க செய்கிறவர் (1 தீமோத்தேயு *6:14*). கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்திற்குள் வரும்போது, வேதாகமம் சொல்லுகிறது, 'அவருக்குள் ஜீவன் இருக்கிறது" (யோவான் *1:4*). தம்மைக் குறித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பின்வருமாறு கூறுகிறார்;

> ...நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;
>
> யோவான் *11:25*

> ...நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்...
>
> யோவான் *14:6*

எனவே, இரத்த சாட்சிகள் பரலோகத்தையடையும்போது, **அவர்கள் வரவேற்கப்பட்டு, சர்வ வல்லவரின் பலிபீடத்தண்டையில், தனி இடத்தில், பிரத்தியேகமாக வைக்கப்படுகின்றனர்.** இந்த ஆத்துமாக்கள் அந்த இடத்தை அடைந்தவுடன், அவர்களை சுற்றிலும் கர்த்தரின் ஜீவன் ஒரு நதிபோல் எல்லாத் திசைகளிலுமிருந்தும் அதிக அளவிலும் இனிய முறையிலும் பெருக்கெடுத்து ஓடுகிறது. குறித்த காலத்திற்குமுன் ஏற்பட்ட கொடிய மரணத்தைக் குறித்து தங்களையும் அறியாமல் அவர்களுக்கு ஏற்பட்ட கசப்புணர்ச்சிகளை அது அப்படியே உறிஞ்சி விடுகிறது. அதன்பிறகு, அவர்கள் தேவனுடைய ஜீவன் நிரம்பியிருக்கும் இந்தப் புதிய சூழ்நிலையில் குதூகலம் அடைகிறார்கள்.

ஒரு பெரிய தேவ ஊழியர் தன்னுடைய அருளுரையில் கூறிய ஒரு எடுத்துக்காட்டைப் பற்றிப் படித்தேன். அந்த உதாரணம் என் இருதயத்தைத் தொட்டது. அதைப்பற்றிக் கூற முனைகிறேன். லிடியா என்னப்பட்ட ஒரு பெண் அவருடைய சபையிலிருந்தார்கள். மரணம் அவள் வீட்டுக் கதவைத் தட்டியது. மரணம் அவளுக்கு அருமையான

வர்களை ஒருவர்பின் ஒருவராக வெவ்வேறு விதத்தில் பிரித்து சென்றதால், அவள் மனமுடைந்து தனியே விடப்பட்டாள். எப்பொழுதும் **மரணத்தின் துர்நாற்றம்** அவளை சூழ்ந்திருந்தது. 'மரண இருளின் பள்ளத்தாக்கில்'' (சங்கீதம் 23:4) இருப்பதாக உணர்ந்தாள். ஆண்டவர்மேல் இருந்த விசுவாசம் முழுவதும் உடைந்து எந்நேரமும் வியாகுலம் நிறைந்து காணப்பட்டாள். ஒருநாள் தேவனின் குரல், பரிசுத்த ஆவியின்மூலம் அவள் செவிகளில் தொனிப்பதைக் கேட்டாள். ஆவியானவர்: "லிடியா, நீ மரணத்தால் சூழப்பட வில்லை, ஜீவனால் சூழப்பட்டிருக்கிறாய்" என்று கூறினார். ஆண்டவரின் உதடுகளிலிருந்து பிறந்த இந்த ஒரே ஒரு உறுதியான சொல் அவளுடைய முழு சூழ்நிலையையும் முற்றிலுமாய் மாற்றியது. ஆண்டவரின் ஜீவன், உண்மையாக ஒரு திரவ நிலையிலேயே அவளைச் சுற்றிலும் அவளுக்குள்ளேயும் மனித ஆற்றலுக்கு அப்பாற் பட்ட விதத்தில் ஊற்றாய் பெருக்கெடுத்தது. மரணத்தின் மூலம் தன்னுடைய அருமையானவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட அந்த நிகழ்வுகளால் உண்டான கசப்பு மறைந்தது. அதன்பிறகு அவள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்து அவளிடமிருந்து தேவனுடைய ஜீவன் மற்றவர்களிடம் செல்ல ஆரம்பித்தது.

இரத்த சாட்சிகளின் ஆத்துமாக்களுக்கு பரலோகத்தில் இதே அனுபவம் தான் கிடைக்கிறது. **தேவனுடைய ஜீவன் எப்பொழுதும் இந்த குறிப்பிட்ட இடத்தில் பாய்ந்து கொண்டும், மிக வல்லமையுள்ள ஒரு சக்தி அவர்களை சூழ்ந்து கொண்டும் இருக்கிறது. ஆம், இந்த சிறப்பான இடம் தேவ வல்லமை குடிக்கொண்டிருக்கிற சக்தி வாய்ந்த மின் நிலையம் போன்றது.** இந்த இடத்தை சென்று பார்க்க எனக்கு ஆண்டவர் ஒரே ஒரு தருணம் தந்தார்.

திரு. கிளாடி ஈஸ்வர் ராஜ் என்ற வாலிப நண்பர் எனக்கு இருந்தார். அரசாங்கத்தில் நிரந்தர பணியில் அமர்ந்த அவர், வாழ்க்கையிலும் நல்ல நிலையில் இருந்தார். அவருக்கு ஒரு இளம் மனைவியும், மூன்று பிள்ளைகளும் இருந்தனர். என்றாலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, இயேசுவுக்காக ஒரு இரத்த சாட்சியாகவே தான் மரிக்க வேண்டு மென்று அவர் பாரமடைந்ததால், அவருடைய இருதயம் ஆண்டவருக் காக அக்கினியாய் பற்றி எரிந்தது. ஆகவே, திடீரென்று அவர் தன்னுடைய வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஆண்டவரின் ஊழியத்திற்காக வட இந்தியா புறப்பட்டுச் சென்றார். இரத்த சாட்சியாகவே மரிப்பேன் என்று எப்பொழுதும் சொல்லிக் கொண்டேயிருப்பார். எவருடைய மனதையும் அழச்செய்யும் அளவிற்கு தேவனை சேவிப்பதில் அதிகமான இன்னல்கள் வழியாய் அவர் கடந்து சென்றார்.

இறுதியாக அவர் முன்னறிவித்ததுபோலவே, 41 வயதாயிருக்கும் போதே, இரத்த சாட்சியாக அல்ல, சுகவீனமடைந்து இறந்தார். என்னைப் போன்ற நண்பர்கள் அவருடைய மரித்த சடலத்தின்மீது அழுதோம், அவரை அடக்கம் செய்தோம். சவப் பெட்டியிலிருந்த அவருடைய முகத்தை நான் பார்த்தபோது, தன் ஊழியத்திலும், வியாதிப் படுக்கையிலும் அவர் பொறுமையாய் சகித்த வியாகுலங்களின் அகோரத்தை பார்க்க முடிந்தது.

ஒருமுறை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பரலோகத்தில் இரத்தச் சாட்சிகளின் ஆத்துமாக்கள் வைக்கப்பட்டிருந்த அந்த இடத்தை எனக்கு இரங்கி தயவாய் காண்பித்தார். என் நண்பர் திரு.கிளாடி ஈஸ்வர் ராஜ் அவர்களை அங்கு நான் பார்த்து திகைத்துப் போனேன். அவருடைய கடந்த காலத்தை ஆண்டவர் நினைவுகூறச் செய்து, என்னிடம் பேசச் செய்தபோது அவர் கூறினார்; "நான் பரலோகம் வந்தபோது, இயேசு கிறிஸ்து என்னிடம், 'கிளாடி! நீ எனக்காக இரத்த சாட்சியாய் மரிக்க ஆசைப்படுவதாக சொல்லிக் கொண்டேயிருந்தாய். ஆனால் அது நடைபெறவில்லை, எனினும், ரோமர் 12:1-ன்படி, நீ எனக்காக 'ஜீவபலியாய்' மரித்தாய். ஆகவே மற்ற இரத்த சாட்சிகளுடன், பரலோகத்தில் உனக்கு பலன் தரவேண்டும் என்று தீர்மானித்து விட்டேன். எனவே, உன்னையும் அவர்களுடன் வைத்திருக்கிறேன்" என்றார். இப்படித்தான் நான் இங்கு வந்து சேர்ந்தேன்" என்றார் கிளாடி.

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பாடுகளை அனுபவிக்க, தம்மையே சிலுவையில் ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தார்** என்பதைத் தெளிவாக பின்வரும் வேத பகுதியில் காணலாம்.

> இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.
>
> எபிரெயர் 10:10

எபிரெயர் 9:12,13 கூறுகிறது, முழுஉலகத்தின் பாவத்திற்கும் பரிகாரம் செலுத்தும்படியான பலியாக அவர்தாமே தம்முடைய சொந்த இரத்தத்தையே கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனுக்கு முன்பாக அதை ஊற்றுவதற்காக வானாதி வானங்களை அவர் சென்றடைந்தார் (யோவான் 1:29).

கடந்த நாட்களிலும், இப்பொழுதும், இன்னும் வரப்போகும் நாட்களிலும் முழு உலகத்திலுமுள்ள இரத்த சாட்சிகள் யாவருக்கும் பிரதிநிதியாக, சிலுவையில் அவர் கதறினது, ஒரு இரத்த சாட்சியின் கதறுதலாய் பின்வருமாறு அமைகிறது.

> ...என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்...
>
> மத்தேயு 27:46

நிச்சயமாகவே, அவர் ஒரு இரத்த சாட்சி போன்று துண்டிக்கப் பட்டார் என்பதை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் ஏசாயா *53:8*, தானியேல் *9:26* ஆகிய வசனங்கள் கூறுகிறது.

இப்படியாக ஒரு இரத்த சாட்சியின் வேதனையையும் அவனுடைய **ஜீவனுள்ள பலியையும்** அவர் பாராட்டி, பரலோகத்தில் சர்வவல்ல தேவனின் பலிபீடத்தில் அவர்களுக்கென்று ஏற்படுத்தி யுள்ள இடத்தில் அவருடைய மேலான பூரணமான ஜீவனை அவர்களுக்குக் கொடுத்து, **மரண வாசனையை** அவர்களிடமிருந்து நீக்கிவிடுகிறார் (II கொரிந்தியர் *2:16*).

தம்முடைய பரிசுத்தவான்கள் அவர் நிமித்தம் இந்த உலகத்தில் படும்பாடுகளை தேவன் எவ்வாறு புரிந்துகொண்டு பாராட்டுகிறார் என்பதை நம்மால் முழுமையாக மதிப்பிட முடிவதில்லை.

## வாசஸ்தலங்கள்

> என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப் பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.
>
> யோவான் *14:2,3*

மூன்றாம் வானத்தின் ஒரு பகுதியில், ஒரு பெரிய பள்ளத்தாக்கைப் போன்று தென்பட்ட இடத்தில் தங்கத்தால் மின்னிக் கொண்டிருந்த வாசஸ்தலங்கள் கட்டப்பட்டிருப்பதை பார்த்தேன். அவைகளுடைய ஒளியையும், அழகையும் வர்ணிக்க வார்த்தைகளேயில்லை.

பல வருடங்களுக்கு முன் நான் விமானத்தில் இந்தியாவி லிருந்து லண்டனுக்கு பயணம் செய்து கொண்டிருந்தேன். சாயங்கால வேளையில் உலகப் பிரசித்திப் பெற்ற ஆல்ப்ஸ் மலை வழியே விமானம் பறந்து கொண்டிருந்தது. அஸ்தமித்துக் கொண்டிருக்கும் சூரியனின் மஞ்சள் நிறக் கதிர்கள், பள்ளத்தாக்கிலுள்ள உறைந்த பெரிய பனிக்கட்டிகள்மீது விழுந்தவுடன், உண்மையான தங்க முலாம் பூசப்பட்ட பொற்பாளங்களாக மாறி, மலைகள் மேல் மெத்தை விரித்தாற்போன்று அது காட்சியளித்தது. ஆம், மைல் கணக்காக ஒளி வீசி மின்னும் தங்கத் தட்டுகளைப் பார்ப்பது போன்ற உணர்ச்சியை அது எனக்கு கொடுத்தது.

இதே விதமாக இந்த **மகிமையின் வாசஸ்தலங்களும், இவ்வுலகத்தில் அவருக்காக ஊழியம் செய்வதற்காக தங்களையே தியாகம் செய்து, அவருடைய பாதத்தில் அர்ப்பணித்த தம்முடைய விசுவாசமுள்ள**

**சீஷர்களுக்காகவும், தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரங்களுக்காகவும் மகிமையும், மாட்சிமையும் பொருந்திய தேவன் தாமே தம் கையால் அமைத்து ஆயத்தப்படுத்தியுள்ளவையாகும்**. இந்த பிரகாசமான வடிவமைப்புகளைக் கொண்ட அழகும் பேரொளியும் பொருந்திய பொன்னாலான கட்டட அமைப்புகளைக் காணும் எவரும் கொழுந்து விட்டெரியும் உள்ளத்துடன் உரத்த சத்தமிட்டு இவ்விதமாக கூற தூண்டப்படுகிறார்கள்.

> உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!
>
> *சங்கீதம் 31:19*

ஆம், நாம் உத்தமமாய் ஆண்டவரை சேவித்தால், இந்த உலகத்தின் தியாக வாழ்க்கைக்கு பிறகு நம்மை வரவேற்கும்படி, நமக்கு **பரலோக வாசஸ்தலங்களை** அவர் ஆயத்தம் பண்ணியுள்ளார் என்று அறிந்து கொள்வோம்.

## பெதஸ்தாவின் தோற்றம்

ஒருநாள் நான் ஆழ்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கையில், மூன்றாவது வானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டேன். அங்கே ஆண்டவராகிய இயேசுவே என்னை வரவேற்று, அப்போஸ்தலனாகிய பவுலை எனக்கு அறிமுகப்படுத்தினார். பின்பு அவர் பவுலிடம், "இவருக்கு அந்த கட்டட அமைப்பைக் காட்டிவிட்டு திரும்பவும் என்னிடம் அழைத்துக் கொண்டு வா" என்றார்.

அப்போஸ்தலனாகிய பவுலினால் நான் மூன்றாம் வானத்தின் மற்றொரு பகுதிக்கு கொண்டு போகப்பட்டேன். அங்கு பால் போல் தூய்மையானதும், வெள்ளைச் சலவைக் கல்லாலானதுமான ஒரு அழகிய கட்டடம் எனக்கு காட்டப்பட்டது. அதைக் காணும்போது, நான் எனக்குள் ஆச்சரியத்தில் மூழ்கி, அடக்கிக் கொள்ள முடியாமல் "எவ்வளவு விந்தையானதொரு இருப்பிட அமைப்பு இவர்களுக்கு பரலோகத்திலிருக்கிறது" என்று எண்ணினேன். உடனே அப்போஸ்தலன், "இதைச் சுற்றி வந்து இந்த கட்டடம் எந்த முறையில் எழுப்பப்பட்டிருக்கிறது என்று ஆராய்ந்து பாருங்கள். உங்களுடைய பல்கலைக்கழகத்திற்கு அருகே உள்ள வளாகத்தில் நீங்கள் இந்த மாதிரியின்படி ஒரு கட்டடம் அமைக்க வேண்டுமென்று தேவன் பிரியப்படுகிறார். ஏனெனில், உலகம் முழுவதிலுமிருந்து மக்கள் திரண்டு வந்து அங்கு ஜெபிக்க முடியும்" (அனைத்து மாணவர்களும் தங்கும் விடுதியுடன் கூடிய ஒரு பல்கலைக்கழகம் 5,400 மாணவர் எண்ணிக்கையுடன் 700 ஏக்கர் பரப்பளவில் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டிருக்கிறது).



வேதாகமத்தில் உள்ளதுபோன்று 5 மண்டபங்கள் கொண்ட பெதஸ்தா குளம், உடைந்த உள்ளங்கள், நோய் மற்றும் துயரில் வாழ்பவர்களை கவர்ந்து இழுக்கும் பெதஸ்தா சர்வதேச ஜெப மையம், காருண்யா பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகில் உள்ளது.

நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் அதைச் சுற்றி சுற்றிப் பார்த்து, அந்த அமைப்பை நன்கு கவனித்து அதின் நுணுக்கங்களை என் மனதில் பதிய வைத்துக் கொண்டு, பல்கலைக்கழக வளாகத்திற்கு திரும்பி வரும்போது மிகத் துல்லியமாக அவைகளை நினைவுக்குக் கொண்டு வருமளவுக்கு கூர்ந்து கவனித்துக் கொண்டேன். நான் மீண்டும் ஆண்டவரிடத்தில் கொண்டு வரப்பட்டபோது, அவர் என்னிடம் அதே தோற்றத்துடன்கூடிய கட்டிடத்தை காருண்யா பல்கலைக்கழக வளாகத்தில் வடிவமைக்கவும் அதற்கு "பெதஸ்தா சர்வதேச ஜெப மண்டபம்" என்று பெயரிடவும் என்னை பணித்தார். மக்கள் அங்கு வந்து மன்றாடும் ஒவ்வொரு வேளையிலும் தம்முடைய குணமாக்கும் வல்லமையை இரக்கத்துடன் வெளிப்படுத்துவதாகவும் எனக்கு வாக்குறுதி கொடுத்தார்.

அதை கட்டியெழுப்புவதற்கு தேவையான பணத்தை சேகரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் கடினமாக இருந்தாலும், அதை 10.10.1993 அன்று துவங்கிவிட்டோம். ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனை கூட்டங்களுக்கு, உலகின் பல பாகங்களிலுமிருந்தும் மக்கள் திரண்டு வருகிறதைக் காண்கிறோம். என் மகன் பால் தினகரனையும் மற்றும் வரம் பெற்ற தேவ ஊழியர்களையும்,

வியப்படையச் செய்யும் வகையில் இந்த கூட்டங்களில் ஆண்டவர் பயன்படுத்தி வருகிறார். எங்கள் முழு குடும்பத்தின் ஈடுபாட்டுடன் நூற்றுக்கணக்கான ஜெப வீரர்களும் இணைந்து இந்த ஆராதனைகளை திறம்பட நடத்த உதவிக்கரம் கொடுக்கிறார்கள். **எவ்விடத்திலுமிருந்து ஜெபத்திற்காக வருவோருக்கு இயேசு கிறிஸ்துவின் பலத்த வல்லமையின் இரக்கமானது வெவ்வேறான முறைகளில் அற்புதங்களை நிகழ்த்துகிறது.** ஒவ்வொரு முறையும் ஆண்டவராகிய இயேசு எனக்கு முக்கியமான திட்டங்களை கொடுக்குமுன், முதலில் என்னை மூன்றாம் வானத்திற்கு எடுத்து சென்று, தம்முடைய செயல் குறிப்புகளை தெளிவாக விளங்கிக்கொள்ளச் செய்கிறார் என்ற உண்மையை இங்கு தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த வேளையில் அதே வளாகத்தில் நிகழ்ந்த மற்றொரு முக்கிய நிகழ்ச்சியை பரிசுத்த ஆவியானவர் என் நினைவுக்கு கொண்டு வந்தார். 1988 மே மாதத்தில் நாங்கள் கல்லூரிக்கென்று அநேக கட்டட அமைப்புகளை எழுப்பிக் கொண்டிருந்தபடியால், இரவில் சக்தி வாய்ந்த ஒளிவீசும் விளக்குகளை பயன்படுத்தி, காவலர்கள் காவல் காப்பார்கள். அவ்வாறே திரு. A.N. செல்வராஜ் என்ற ஒரு காவலர் எங்களிடம் அச்சமயம் பணிபுரிந்தார். வழக்கம்போல் அவர் ஒரு குறிப்பிட்ட இரவில் தன் கடமைகளை செய்து கொண்டிருக்கும் போது, திடீரென்று மிகுந்த சக்தி வாய்ந்ததும் எங்கும் ஊடுருவிப் பாயக்கூடியதுமான ஒரு பெரிய ஒளிக்கதிர் வானத்திலிருந்து இறங்கி ஒரு குறிப்பிட்ட இடத்தில் விழுந்ததைக் கண்டார். தன்னுடைய கவனம் முழுவதையும் சேர்த்துத் திரட்டி ஆச்சரியத்துடன் அந்த இடத்தை நோக்கிப் பார்த்தார்.

அந்தப் பகுதியின் நிலப்பரப்பில் அந்த வெளிச்சத்தின் மத்தியில் ஒரு உருவம் நின்று கொண்டிருந்ததைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார். அந்த நபரின் முகத்தை நன்கு கூர்ந்து கவனித்தபோது, அந்த உருவம் இயற்கைக்கு மேற்பட்ட விதத்தில் வளர்ந்து கொண்டேபோய் ஒரு நொடியில் இந்த உருவம் பரலோகத்தைத் தொட்டதை பார்த்தார். பயத்தின் மிகுதியால் அவர் முகங்குப்புற விழுந்தார். வெகு நேரம் சென்றபின், அவர் கண்விழித்து எழுந்தபோது அந்தக் காட்சி மறைந்து விட்டதைக் கண்டார். ஆனாலும், ஆண்டவரின் வல்லமை யால் தன் முழு வாழ்வும் மாறியதையும் உணர்ந்தார்.

இந்த சம்பவம் எனக்கும், என் மகன் பால் தினகரனுக்கும் அறிவிக்கப்பட்டபோது, அந்த குறிப்பிட்ட இடத்திற்கு நாங்கள் உடனே விரைந்து சென்றோம். ஓர் இனம் புரியாத பயபக்தி என்னை நிரப்பியது. என் இருதயம் அதிவேகத்துடன் துடிக்க ஆரம்பித்தது. மிகுந்த சிரமத்துடன், என் மகன் பாலுடனும், மற்ற ஊழியர்களுடனும் ஜெபத்தை முடித்துவிட்டு வெளியே வந்தபின், அந்த தரிசன

ஸ்தலத்தில் முழங்காலில் நின்று ஜெபித்த ஒவ்வொருவரும்கூட இதேபோன்ற ஒரு அனுபவம் கிடைத்ததாக பகிர்ந்து கொண்டனர்.

இப்போது பலரின் வேண்டுகோளுக்கிணங்க அதே குறிப்பிட்ட இடத்தில் ஜெபிப்பதற்காக, சில வசதியான அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்த **தரிசன இடத்தில்** ஏறெடுத்த தங்கள் விண்ணப்பங் களுக்கு அற்புத விடுதலையைப் பெற்றவர்களுடைய சாட்சிகள் இங்கு குவிந்த வண்ணம் இருக்கின்றன.

## அவருடைய இரண்டாம் வருகை

ஆண்டவர் மூன்றாம் வானத்திற்கு என்னைக் கொண்டு போக விரும்பியபோது, வெளி *21:1*-ல் உள்ளபடி, இந்த உலகத்தின் முடிவைக் குறித்தும் என்னிடம் பேசினார். பலம் பொருந்திய தேவதூதன் ஒருவன் அவருடைய சிங்காசனத்தருகே தங்கத்திலான எக்காளத்துடன் நின்று கொண்டிருந்தான். அவன், வெளி *11:15* கூறும் மகா பிரதான தூதனாக இருக்கலாம்.

ஆண்டவராகிய இயேசு அதிகாரத்தோடும் வல்லமையோடும் மீண்டும் உலகத்திற்கு வரும்நாள் நெருங்கிக் கொண்டேயிருக்கிற தென்றும் கூறினார். எனினும், அவருடைய இரண்டாம் வருகைக் குரிய தவிர்க்க முடியாத ஒரு பெரிய அடையாளத்தைக் குறித்து கவனித்துக் கொள்ள ஆண்டவர் ஓர் எச்சரிப்பு கொடுத்தார். **அவருடைய இரண்டாம் வருகைக்கு முன், அவர் தம்முடைய அளவில்லாத பரிசுத்த ஆவியை விசேஷித்த முறையில் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள மக்கள் மீது ஊற்றுவதாகக் கூறினார்.** ஒரு பாதி மக்கள் அவருடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவர். அதினிமித்தம் அவர்களுக்குள்ளே அதிகமான மகிழ்ச்சி ஏற்படுவதால், சொல்லி முடியாத சந்தோஷம் பெருகி, ஆண்டவரை அவர்கள் தொழுதுகொள்வார்கள். இந்த புதிய விசுவாசத்தை, அடுத்த பாதியிலுள்ள அவர்களுடைய இன ஜனத்தார் ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவிப்பார்கள். அவர்கள் எழுந்து பூமியிலிருந்து அவர்களை நிர்மூலமாக்கி வேரறுப்பார்கள். ஆவியின் நிறைவுபெற்ற மக்களிடையே எங்கு பார்த்தாலும் கூட்டம் கூட்டமாக மக்கள் கொலை செய்யப்பட்டும், இரத்தம் தண்ணீரைப் போல பாய்ந்து செல்வதும் காணப்படும். அந்த வேளையில்தான், ஆண்டவ ராகிய இயேசு இடைப்பட்டு, அத்தகைய இரத்தம் சிந்துதலுக்கு ஒரு முடிவை அருளுவார்.

## வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

இந்த சந்தர்ப்பத்தில் ஆண்டவர் எனக்கு கொடுத்த அருமையான தரிசனம், வெளி *19:11-15* வரையுள்ள மாபெரும் **வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு** ஆகும்.

சத்திய வேதம், நியாயத்தீர்ப்பின் நாளில், ஒவ்வொரு தனி நபருக்கும் நிகழும் காரியங்களை வரிசைப்படுத்தி (ரோமர் 14:10,12, II கொரிந்தியர் 5:10) கூறப்படுகிறது. நியாயத்தீர்ப்பு என்பது மனுக்குலத்தில் ஒருவரும் தப்பிவிட முடியாத ஒரு சம்பவமாகும். அதே சமயத்தில் உலகம் முழுவதிற்கும் உள்ள கடைசிக்கால தீர்ப்பைப் பற்றியும் மத்தேயு 25:46 நினைவுபடுத்துகிறது.

ஒருமுறை நான் சர்வ வல்ல யேகோவாவின் பெரிய சிங்காசனத்தின் முன் நின்று கொண்டிருக்கும்போது, பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பைப் பற்றிய தரிசனத்தை கண் இமைக்கும் நேரத்தில் காண்பிப்பதாக சொன்னார். முன்பெல்லாம் மகா யேகோவா குறித்து நான் பெற்ற தரிசனங்களில் அவர் எப்படி வீற்றிருக்கிறார் என்பதை பார்த்தேனோ, அதை சிங்காசனத்தில் வீற்றிருப்பதை கண்டேன். அந்த நாளில் முழு உலகமும் அவர் முன்னே திரண்டு கூடியதையும், இதற்கு முன்பு மரித்த ஒவ்வொரு ஆத்துமாவும், மீண்டும் ஜீவன் பெற்று மாம்சத்தோடும், இரத்தத்தோடும் நியாயத் தீர்ப்பை எதிர்கொள்ள கொண்டு வரப்பட்டதையும் கண்டேன்.

நடைபெற்ற விநோதமான முதல் நிகழ்ச்சி என்னவென்றால், உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்து செல்லப்பட்டு தேவனாகிய பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார வைக்கப்பட்டார் (எபேசியர் 1:20,21, கொலோசேயர் 3:1, எபிரெயர் 8:1, 10:12, மாற்கு 16:19). ஆனால் இந்த நியாயத்தீர்ப்பு நாளில் தேவ குமாரனின் சாயல் யேகோவாவின் ஆள் தன்மைக்குள் இரண்டறக் கலந்து ஒரே சாயலை பெற்றுக் கொண்டதை பார்த்தேன். பின்வரும் வேத வசனம் அதைக் குறிப்பிடுகிறது.

> அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்.
>
> I கொரிந்தியர் 15:24

இப்போது சிங்காசனத்தில் ஒரே ஒரு பராக்கிரமமான நபர் வீற்றிருந்தார். **அவருடைய மாட்சிமை மிகுந்த வல்லமையால் நியாயத் தீர்ப்புக்காக அவர் முன்பாக நின்று கொண்டிருந்த கடலெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தை, சிங்காசனத்திலிருந்து புறப்பட்ட ஒரு அதிசயமும் வல்லமையும் உள்ள ஒரு ஒளிக்கதிர், அவர்கள் மேல் சென்று அவர்களை இருபிரிவாகப் பிரித்தது**. ஒரு பிரிவினர் பிதாவாகிய தேவனுக்கு இடது பக்கத்திலும் அடுத்த பிரிவினர் பிதாவாகிய தேவனுக்கு வலது பக்கத்திலும் கூடினர். ஒரு கருமேகம் நிழல்போல் தோன்றி இடது புறமாக நின்றவர்களை தேவ சமூகத்திற்கு அப்பால் வெகுதூரம்வரை தள்ளிக் கொண்டு சென்றது. அந்த ஆத்துமாக்களின் புலம்பலையும்,

கதறுதலையும் என் காதுகளில் கேட்டேன். மத்தேயு 25:41-ன்படி, நித்திய காலமாக அவர்கள் அக்கினிக் கடலுக்குள் தள்ளப்பட்டனர். அந்த திசையில், விவரிக்க முடியாத ஒரு காரிருளைத் தவிர வேறொன்றையும் என்னால் காண முடியவில்லை.

சிங்காசனத்திலிருந்து மனதிற்கு இதமான வேறொரு விசித்திரமான ஒளிக்கதிர் கிளம்பி வந்தது. அவருடைய வலதுபுறத்தில் நின்ற ஆசீர்வதிக்கப்பட்ட மக்களின் தலைகளின்மேல் கடந்து சென்றது. எத்தனை அருமையான காட்சி அது! ஒவ்வொரு ஆணும்/பெண்ணும் தங்கள் அடையாளத்தையும் தனித்தன்மையையும் ஒரு நொடியில் மறந்தார்கள். ஒவ்வொருவருடைய சாயலும் கீழே கூறியிருப்பது போல், தேவ குமாரனாகிய கிறிஸ்துவினுடைய சாயலுக்கு ஒப்பாயிருந்தது.

> நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.
>
> II கொரிந்தியர் *3:18*

இந்த காட்சி நம்புவதற்கே அரிதானதேயாயினும், அது உண்மையானதே என்பதை ஆண்டவர் கீழ்க்காணும் வசனத்தின்மூலம் ஞாபகப்படுத்தினார்.

> நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.
>
> I யோவான் *3:1,2*

அவருடைய பிள்ளைகளுக்காக எத்தனை அற்புதமான காரியங்கள் காத்திருக்கிறது! பிறகு கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் தேவனுடன் வாசமாயிருக்க ஒரு புதிய வானம் தோன்றியது (வெளி 21:1,2).

வேதாகமம் கூறுகிற மற்றொரு அற்புதமான காரியம் என்னவெனில், தம்முடைய பரிசுத்தவான்களுக்கு தேவன் வைத்திருக்கிற **பலன்.** பின்வரும் வேத வசனங்கள் மாட்சிமை மிகும் தேவன் தமது பரிசுத்தவான்களுக்கு பலன் அளிக்கிறவர் என்று வெகு தெளிவாகக் காட்டுகின்றன.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியை களின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது.

வெளி 22:12

பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங் களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும், ஆம் என்று திருவுளம்பற்றுகிறார் என்று சொல்லிற்று.

வெளி 14:13

இதோ கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது.

ஏசாயா 40:10

...அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத்தக்கதாகப் பலனளியாரோ?

நீதிமொழிகள் 24:12

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, அவரது அளவற்ற ஞானத்தை விளக்க ஏசாயா 40:10-ல் வெளிப்பட்டப்படி, ஒவ்வொருவரும் பூமியில் செய்த நற்கிரியைகளுக்கு, இங்கே பலனளிக்கும் விழா ஒன்றினை அவர் ஒழுங்கு செய்திருக்கிறார் என்பது புரிவதற்கரிதான ஓர் ஆச்சரியமான உண்மையாகும். ஆண்டவர் எவ்வாறு ஒவ்வொருவருடைய நற்கிரியைகளையும் தனித்தனியாக ஒன்றையும் தவற விடாமல் ஞாபக புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார் என்பதை நினைத்து நான் ஆச்சரியப்படுவதுண்டு. ஒருமுறை நான் பரலோகத்தில் ஆண்டவரோடு இருந்தபோது, அவர் வேறொரு தனித்தன்மை வாய்ந்த இடத்தை எனக்கு காட்டினார். ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் பெயரிலும் ஒரு **பரிசுத்த பெட்டகம்** போன்ற ஒன்றைப் பார்த்தேன். அவைகளின் எண்ணிக்கை எண்ணிலடங்காததாயிருந்தது. இந்த பெட்டிகளைப் பற்றி நான் விசாரித்தபோது, அவை பரிசுத்தவான் களின் நற்கிரியைகளைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய பெட்டிகள் என்றும், உலகம் முடிவு பெறும் நாளில் அவர்கள் அதற்கான பிரதிபலனைப் பெறுவார்கள் என்றும் சொல்லப்பட்டது. எவ்வாறு நம்முடைய கண்ணீர், பரலோகத்தில் அவருடைய துருத்தியில் வைக்கப்பட்டிருக்கிறது (சங்கீதம் 56:8) என்பதையும், எப்படி நம்முடைய பொக்கிஷங்கள் (நம்முடைய நற்கிரியைகள்) சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் என் நினைவுக்கு கொண்டு வந்தேன்.

*பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.*
*மத்தேயு 6:20*

புதிய வானத்தை அவர் உருவாக்கிக் கொண்டு வரும்போது, அநேக பரிசுத்தவான்கள் நட்சத்திரங்களைப் போல் மின்னிக் கொண்டோ அல்லது மத்தியான வேளையில் பிரகாசிக்கும் சூரியனைப் போன்றோ தங்கள் நற்கிரியைகளுக்கான பிரதிபலனோடு காணப்படுவார்கள். இதைத்தான் பின்வரும் வேத வசனங்கள் விளக்குகின்றன.

*ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.*

*தானியேல் 12:3*

*அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்...*

*மத்தேயு 13:43*

மற்ற பலன்களைப் பற்றிய குறிப்புகள் எனக்கு காண்பிக்கப் படவில்லை.

சுருங்கக்கூறின், மூன்றாம் வானமானது இவ்வுலக வாழ்வின் போது அவரோடு சஞ்சரித்து நடந்தவர்கள் அதேவிதமாக செயல்பட அனுமதிக்கப்படும் இடமாகும். **ஆண்டவர் எப்பொழுதும் அவர்களோடிருந்து, திருச்சபையின் காரியங்களைக் குறித்தும், பரந்த உலகத்தைக் குறித்தும் மேலும் அவருடைய மாபெரும் இரண்டாம் வருகையைக் குறித்தும் கலந்தாலோசித்துக் கொண்டிருப்பார்.** பரிசுத்த ஆவியானவர் தாமே நாமும் அவரோடுகூட நித்திய காலமாய் மூன்றாம் வானத்தில் இருக்க வேண்டுமென்ற ஆழ்ந்த தீர்மானத்தினை நமது இருதயங்களிலும் ஊற்றுவாராக.

# நம் பரம தகப்பனின் தொடுதல்

# 7

*நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்.*

*சங்கீதம் 115:3*

தேவன் **'அதரிசனமானவர்'** என்று வேதாகமம் கூறுகிறது *(எபிரெயர் 11:27)*.

*...மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்;...*

*I தீமோத்தேயு 6:16*

மோசே கர்த்தரின் சிநேகிதன் என்னப்பட்டான் *(யாத்திராகமம் 33:11)*.

*நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார்.*

*யாத்திராகமம் 33:20*

மேலே கூறப்பட்ட வசனங்கள் தேவனை குறித்து சொன்னாலும், தேவனுக்கு ஒரு தோற்றம் உண்டு என்று காட்டும் வேத வசனங்களும் உள்ளன. அப்போஸ்தலனாகிய யோவான், தேவனை பின்வருமாறு வர்ணிக்கிறார்:

*வீற்றிருந்தவர் (சிங்காசனத்தில்), பார்வைக்கு வச்சிரக் கல்லுக்கும், பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்;...*

*வெளி. 4:3*

எசேக்கியேல் தீர்க்கதரிசியும் தேவனின் தோற்றத்தைப் பற்றி இதையே கூறுகிறார்.

*அவைகளின் தலைகளுக்குமேலுள்ள மண்டலத்தின்மீதில் நீலரத்தினம்போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்தச் சிங்காசனத்தின் சாயலின்மேல் மனுஷசாயலுக்கு ஒத்த ஒரு சாயலும் இருந்தது.*

*எசேக்கியேல் 1:26*

தெரிந்து கொள்ளப்பட்ட சில இஸ்ரவேல் சபை மூப்பர்களுக்கு தேவன் தோற்றமளித்ததை மோசே பின்வருமாறு விளக்குகிறார்.

*இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள். அவருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது.*

*யாத்திராகமம் 24:10*

தெரிந்து கொள்ளப்பட்ட சிலருக்கு தேவன் தம்மை அவர்கள் காண்பதற்காக தமது கிருபையையும் இரக்கத்தையும் வெளிப் படுத்துகிறார்.

> ...எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன் (கர்த்தர்); எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்க மாயிருப்பேன்...
>
> *யாத்திராகமம் 33:19*

சர்வவல்ல தேவன், மேற்கூறப்பட்டுள்ள வசனத்தை, மோசே யிடம் தம்மை காண்பிப்பதற்கு முன்பு கூறினதாகும். நாட்கள் கடந்தபின், அவர் மோசேயை நாற்பது நாட்கள் இரவும் பகலும் தம்முடன் இருப்பதற்காக அழைத்து சென்றார். தேவன் மோசேயுடன் **முகமுகமாய்** பேசினார் என்று வேதத்தில் வாசிக்கிறோம் *(எண்ணாகமம் 12:8)*.

புதிய ஏற்பாட்டு காலத்தில் தேவன் தம்முடைய சீஷர்களுள் குறிப்பான சிலருக்கு தாம் விரும்பியபடியே தம்மை வெளிப் படுத்தியதையும் காண்கிறோம் *(மத்தேயு 17:1-6)*. இதே கிருபை இப்பொழுதும் அவருடைய பிள்ளைகளுக்கு அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்து மூலமாய் கிடைக்கிறது. பின்வரும் வேத வாக்கியம் அதை நமக்கு விளக்குகிறது.

> ...பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்னாரென்று அறியான், குமாரனும், குமாரன் அவரை (பிதாவை) எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந் தவிர, வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான் என்றார்.
>
> *லூக்கா 10:22*

ஆம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, எவருக்கும் சிங்காசனத்தி லுள்ள உன்னத தேவனின் தரிசனம் கிடைக்கச் செய்வதற்கு தமக்கு சகல அதிகாரமும் சுதந்திரமும், உரிமையும் உண்டு என்று சந்தேகமின்றி இந்த வசனத்தில் உறுதியளிக்கிறார். இது எவ்வளவு பெரிய சிலாக்கியம்! இப்படித்தான் நானும்கூட சர்வ வல்ல கடவுளைத் தரிசிக்க தயவு பெற்றேன்.

இதற்கு முந்தைய அத்தியாயங்களில், 1962-ஆம் ஆண்டு தேவனுடைய சிங்காசனத்தை எப்படி முதல் முறையாக நான் பார்த்தேன் என்பதை விளக்கியுள்ளேன். அப்பொழுது மிகுந்த பாரத்துடன், பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களை எனக்குக் கொடுக்குமாறு தேவனிடம் கெஞ்சிக் கொண்டிருந்ததையும் இயேசு கிறிஸ்து என்னை தமது தகப்பனிடம் கொண்டு சென்றதையும் குறிப்பிட்டிருக்கிறேன். பிதாவினுடைய மார்பு போன்ற பகுதியில்

ஆண்டவரின் முகம் அற்புதமாக தோன்றியவிதத்தை இன்று நினைக்கும்போதும் அது என்னை பரவசமடையச் செய்கிறது.

மறக்க முடியாத இந்த அனுபவங்களுக்குப்பின் ஒருநாள் ஆண்டவராகிய இயேசு, "ஒரு வினாடி நேரம் என் பிதாவின் திருமுகத்தை தரிசிக்க செய்யும்படி உனக்கு உதவுவேன். அப்பொழுது பிதா எவ்வளவு பெரியவர் என்பதை நீ அறிந்து கொள்ளுவாய்" என்று கூறினார். இவ்வாறு சொல்லிக் கொண்டே இயேசு கிறிஸ்து தேவனின் சிங்காசனத்திற்கு வலதுபக்கம் என்னைக் கொண்டு சென்று, "இங்கேயிருந்து என் பிதாவின் திருமுகத்தை நோக்கிப் பார். அவருடைய திருமுகத்தை மூடியுள்ள பனிமூட்டம் சற்று நேரம் விலகும், அந்த கண் இமைக்கும் நேரத்தில் அவரது திருமுகத்தின் தரிசனம் உனக்கு கிடைக்கும்" என்றார். சர்வ வல்ல தேவனுடைய சிங்காசனத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தபோது மோசே அதேபோல் நின்று கொண்டிருந்ததை விளக்கும் பின்வரும் வேதப்பகுதி, என் நினைவுக்கு வந்தது.

> பின்னும் கர்த்தர்: இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையில் நில்லு.
>
> *யாத்திராகமம் 33:21*

இது ஒரு மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சியாக எனக்கு இருந்தது. எனக்கு காண்பித்த இந்த இரக்கத்திற்காக நான் ஆண்டவரை அனுதினமும் துதிக்கிறேன். சர்வ வல்ல பிதாவை ஒரு நொடிப் பொழுதாகிலும் தரிசிக்கும் இந்த மிகப் பெரிய தருணத்தை பெறுவதற்கு நான் தயங்கவில்லை. அவ்வாறே அவருடைய திருமுகத்தை சூழ்ந்திருந்த அந்த பனிமூட்டம் ஒருகணம் விலகியது. நான் சர்வவல்ல தேவனுடைய திருமுகத்தின் ஒரு பகுதியை ஆண்டவராகிய இயேசுவின் மூலம் பார்க்க அருள்பெற்றேன்.

வாடி உலர்ந்த ஒரு வயோதிபருடைய முகத்தினை நீண்ட தாடியுடன் சுருக்கம் நிறைந்த தோல் முதலியவற்றுடன், தன் முதிர் வயதின் தோற்றமுடையவராய் பூமியில் வயோதிபர்கள் எப்படி இருப்பார்களோ அப்படி ஒருவரை காணப்போகிறேன் என்ற எண்ணத்துடன் இருந்த நான், அவர் அப்படி இல்லை என்று அறிந்து கொண்டேன். அவரது கன்னத்தின் ஒரு பக்கத்தை, அதுவும் கண் இமைக்கும் நேரம் மட்டுமே பார்க்க முடிந்தது. ஆம், அவருடைய கன்னம் மலைகளின்மேல் காணும் உறைந்த பனிக்கட்டிக்கு ஒப்பாக இருந்தது. எந்தவித தோல் சுருக்கமும் அதில் இல்லை. தேவன் என்றென்றும் இளமையான தோற்றத்துடன் இருக்கிறார் என்பதை அது எனக்கு காண்பித்தது. அன்று மலர்ந்த ரோஜாப்பூவைப் போன்ற புத்துணர்ச்சி அதில் காணப்பட்டது. நான் அதிர்ந்து போனேன்! அன்றிலிருந்து தேவனுடைய இந்த வாசகத்தை என்னால் விளங்கிக்



கீழ்க்காணும் வசனத்தின்படியே, ஆண்டவருடைய கிருபையால் தெரிந்தெடுக்கப்பட்டு, குடும்பமாய் உபயோகப்படுத்தப்பட்டு வருகிற சகோதரர் தினகரன் குடும்பத்தினர்.

''தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்;
உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல்
என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்'' (ஏசாயா 44:3)

இடமிருந்து வலம் (அமர்ந்திருப்பது) ஸ்டெல்லா ரமோலா தினகரன், Dr. டி.ஜி.எஸ். தினகரன், திருமதி ஸ்டெல்லா தினகரன், ஷேரன் ஏஞ்சல் தினகரன்
இடமிருந்து வலம் (நிற்பவர்கள்) திருமதி இவாஞ்சலின் பால் தினகரன், சாமுவேல் பால் தினகரன், Dr.பால் தினகரன்.

கொள்ள முடிந்தது. **'இருக்கிறவராகவே இருக்கிறேன்'** என்பதுதான் அது. அவருடைய கண்களின் கருவிழிகள் அசைந்தனவாகத் தெரியவில்லை. மனித வாக்குகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் அது அமைந்திருந்தது.

சில அரிதான சந்தர்ப்பங்களில் மட்டும், பரிசுத்த ஆவியானவர், சர்வ வல்ல தேவனை சிங்காசனத்தில் இருக்கிறவராக தரிசிக்க எனக்கு உதவி செய்திருக்கிறார். அவைகளில் சிலவற்றை நான் உங்களுக்கு சொல்லட்டும்.

1965-ஆம் ஆண்டு, கேரளாவிலுள்ள கொச்சி என்ற இடத்தில், ஒரு வங்கியில் நான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். ஒருநாள் காலை வேளையில், என் மனைவி படுக்கையிலிருந்து எழுந்திருக்க முடியாதபடி அதிக சுகவீனமாய் இருப்பதை கவனித்தேன். நான் மிகுந்த மன வியாகுலத்தோடும், உதவியற்ற நிலையோடும் அவளுடைய படுக்கைக்கு அருகில் முழங்கால்படியிட்டு, அவள் குணமடைய வேண்டுமென்று மன்றாட ஆரம்பித்தேன். அப்போது பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் என்மேல் இறங்கவும், பரலோகம் திறக்கவும் கண்டேன். தேவனின் சிங்காசனத்தையும், **'இருக்கிறவராகவே இருக்கிறேன்'** என்றவர் அமர்ந்திருப்பதையும் காணும்படி அருள்பெற்றேன். வழக்கம்போல் மேகமூட்டத்தால் அவர் மூடப்பட்டிருந்தார். அதற்கு மேலாக வெகுதூரத்தில், சிங்காசனத்தின் உச்சி போன்று காட்சியளித்த இடத்தில் பரிசுத்த அக்கினி எரிவதைப் பார்த்தேன்.

தொடர்ந்து என் மனைவிக்காக கண்ணீரோடுகூடிய ஊக்கமான விண்ணப்பத்தை செய்து கொண்டிருக்கும்போது, இடிமுழக்கம் போன்ற ஒரு குரலுடன், "உன் மனைவி குணமடைந்துவிட்டாள்" என்ற தேவ சத்தத்தை நான் கேட்டேன். தரிசனம் முடிந்ததும், என்மீது இன்னும் அசைவாடிக் கொண்டிருந்த அவருடைய பிரசன்னத்திலிருந்து வெளியே வந்து, சுகவீனமாயிருந்த என் மனைவியைப் பார்க்கும்படி கண்களைத் திறந்தேன். அவளோ ஏற்கனவே முழு சுகம் பெற்று தன் வேலைகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டாள். இது என்னால் மறக்க முடியாத ஓர் அனுபவமாயிருந்தது. எனக்கும் என் மனைவிக்கும் அவரது நேரடி ஈடுபாட்டினால் இரக்கம் காண்பித்து அவளை குணமாக்கினதற்காக என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆண்டவருக்கு நான் நன்றி செலுத்தினேன்.

'ஸ்வீட்டி' என்று பாசமாக அழைக்கப்படும், ஸ்டெல்லா ரமோலா என்ற என் இளைய பேத்தியுடன் நான் நேரம் செலவிடும் போதெல்லாம், என் வாழ்க்கையில் நடந்த மற்றொரு சம்பவத்தை நினைவுகூறுவதுண்டு.

அவளுடைய தாயார், திருமதி இவாஞ்சலின் பால் தினகரன், அவளை பிரசவிப்பதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, அறுவை சிகிச்சை செய்வதா? அல்லது சுகப் பிரசவத்திற்காக காத்திருப்பதா? என்று மருத்துவர்கள் ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். நான் வீட்டில் இருந்துகொண்டே மருத்துவமனையிலிருந்து வரும் செய்திக்காக காத்துக் கொண்டிருந்தேன். அது ஒரு பெரிய அறுவை சிகிச்சையில்லை என்றபொழுதிலும், அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. மிகுந்த கண்ணீரோடு ஆண்டவரை நோக்கிப் பார்த்து, "ஆண்டவராகிய



ஸ்வீட்டி என்ற ஸ்டெல்லா ரமோலா பால்

இயேசுவே, என் மகள் இவாஞ்சலினை ஒரு கொடிய கார் விபத்தில் இழந்தேன். அவளுக்கு பதிலாக நீர் கொடுத்திருக்கிற இந்த இரண்டாவது இவாஞ்சலினின் வாழ்க்கையில் எந்த இடரும் ஏற்பட நான் விரும்பவில்லை. அது எத்தனை சாதாரண காரியமானாலும் அவளை எந்தவித இடருக்கும் அனுமதிக்க மாட்டேன். தயவாக அவளுக்கு சுகபிரசவத்தை கட்டளையிட்டு, நான் சமாதானமாக இருக்க எனக்கு உதவி செய்யும்" என்று ஜெபித்தேன்.

அடுத்த நொடியில், பரிசுத்த ஆவியானவர் பரலோகத்தைத் திறந்தார்; வல்லமையுள்ள தேவனின் மாபெரும் சிங்காசனத்தைக் கண்டேன். கந்தகமும், பாஸ்பரமும் கலந்த புகையோடுகூடிய ஒரு பந்தைப் போன்று பட்சிக்கும் அக்கினியானது, எல்லா வீரியத்தோடும் கூட தேவனுடைய சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வரக் கண்டேன். அது பயங்கர வேகத்துடன், மருத்துவமனையின் திசையை நோக்கிப் போய், பிரசவத்திற்காக காத்திருந்த இவாஞ்சலினுடைய அறையை நிரப்பிற்று.

அடுத்து நான் கண்டது, ஆண்டவராகிய இயேசு என் அறையினுள் அமைதியுடனும் சாந்தத்தோடும் தோற்றமளித்தவராய், அவருக்கே உரித்தான இனிய குரலில், "குழந்தை பிறந்துவிட்டது" என்று சொல்லி மறைந்துவிட்டார். சில நிமிடங்களுக்குப் பின், என் மகன் மருத்துவ மனையிலிருந்து என்னை அழைத்து, "அறுவை சிகிச்சையின்றி பெண் குழந்தை பிறந்துள்ளது" என்றான். நான், "குழந்தை பிறந்த நேரம் எப்போது?" என்று கேட்க, அவன் காலை 10.20 மணி என்று கூறினான். என் முன்னே இருந்த கடிகாரத்தை நான் பார்த்தபோது, அது சரியாக ஆண்டவராகிய இயேசு என்னிடம், "குழந்தை பிறந்துவிட்டது" என்று சொன்ன அதே நேரமாயிருந்தது. அந்த நாளை என்னால் மறக்கவே முடியாது. 1998ஆம் ஆண்டு பெப்ரவரி 5-ம் தேதியன்று தேவனின் மாபெரும் சிங்காசனத்திலிருந்து நான் பெற்றுக் கொண்ட மற்றுமொரு அற்புதம் இது.

1981-ஆம் ஆண்டு மே மாதத்தில், ஆண்டவராகிய இயேசு எனக்கு தோன்றி, ஆயிரக்கணக்கான இந்திய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை பெறுவதற்கான கல்வியை அளிக்கக் கூடிய ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை நிறுவும்படி கட்டளை கொடுத்தார். என்றாலும், நான் எல்லாப் பக்கத்திலும் நெருக்கப்பட்டதினால், மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக என்னால் எந்த முயற்சியும் எடுக்க முடியவில்லை. அந்த கால கட்டத்தில்தான், 1984-ல் ஊழியம் செய்வதற்காக சுவிட்சர்லாந்து நாட்டிற்கு செல்ல வேண்டியிருந்தது. போகும் வழியில் என் குடும்பத்தினருக்கு இஸ்ரேல் தேசத்தை (The Holy Land) காண்பிக்க அழைத்துச் சென்றேன்.

ஒருநாள் காலை, எருசலேம் நகரிலுள்ள ஹோட்டல் ஷாலோமில், என் அறையில், நான் தனித்திருந்து தேவனுடைய வார்த்தைகளை தியானித்துக் கொண்டிருந்தேன். என் குடும்பத்தினர் அனைவரும் வெளியே சென்றிருந்தனர். அச்சமயம் சூரிய ஒளி பிரகாசமாகவும், சுட்டெரிப்பதாகவும் இருந்தது. நான் அந்த அறை ஜன்னல் வழியாய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று அதிலும் மிகப் பிரகாசமான வேறொரு ஒளி பரலோகத்திலிருந்து வெளிப்படுவதைக் கண்டேன். இந்த பிரகாசமான ஒளியில், பரலோகத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் ஒரு பெரிய சிங்காசனம் காணப்பட்டது. அங்கே கெம்பீரமான தோற்றமுடைய ஒருவர் சிங்காசனத்திலிருந்து "சர்வவல்ல தேவனாகிய நான் இப்போது உன்னோடு பேசிக் கொண்டிருக்கிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை கட்டும்படி நான் உனக்கு கட்டளையிட்டிருந் தேன். ஆனால் நீ அதைப்பற்றி இதுவரையிலும் ஒன்றும் செய்யவேயில்லை" என்று சொன்னார். நான் அவரைப் பார்த்து, அவர் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தபொழுது, உண்மையில்

நடுநடுங்கிப் போனேன். அதன்பிறகு அவர் அந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு என்னென்ன காரியங்களை செய்ய வேண்டும் என்பதை படிப்படியாக எடுத்துக் கூறலானார். அந்த பல்வேறு படிகளை அவர் விளக்கமாக கூறி முடிக்க கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆனது. இவற்றை கவனமாகக் குறித்துக் கொண்டு என் மகன் பால் தினகரன் என் அறைக்குள் வந்தவுடன் அவனுடன் அதை பகிர்ந்து கொண்டேன். தேவனுடைய செயல் திட்டங்களை நாங்கள் இருவரும் உட்கார்ந்துஅந்த **படிப்படியான விளக்கங்களை** ஒவ்வொன்றாக குறித்துக் கொண்டோம்.

தேவனுடைய விருப்பத்திற்கும், ஆணைக்கும் ஏற்ப, தேசீய அளவில், சென்னையில் ஒரு மாநாட்டைக் கூட்டினோம். தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்குரிய விவரங்களைப் பற்றி கலந்தாலோசிக்க இந்த மாநாடு 1984ஆம் ஆண்டு, அக்டோபர் 28-ம் தேதியன்று, சென்னையில் கன்னிமாரா ஹோட்டலில் நடந்தது. 200க்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களுமாக பல துறைகளை சார்ந்தவர்கள் ஜாதி, இன, மத வேறுபாடின்றி கலந்து கொண்டது மிகவும் உற்சாகமாயிருந்தது. அங்கு குழுமியிருந்த இருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும், தேவன் தந்திருக்கிற திட்டத்தில் முன்னேறி செல்லும்படி என்னை உற்சாகப்படுத்தினார்கள். அது என் மனதிற்கு மிகுந்த தைரியத்தை கொடுத்தது!

தேவன் தம்முடைய இரக்கத்தினால், வெகு தெளிவாக ஒரு தரிசனத்தின் மூலம் கோயம்புத்தூருக்கு அருகில் சிறுவாணி என்ற இடத்தில் அந்த பல்கலைக்கழகத்தை ஸ்தாபிக்கும்படி வெளிப் படுத்தினார். அந்த இடத்தை, அதற்குமுன் நான் பார்த்திராதபடியால், நாங்கள் குழுவாக சென்று அந்த நிலப்பகுதியை பார்வையிட்டபோது மிகுந்த பரவசமடைந்தோம். தேவன் என்னிடம் நேரடியாக இடைப்பட்டு வழிநடத்தி வந்ததால் மட்டுமே பல்கலைக்கழகத்தை எழுப்ப முடிந்தது.

1985-ல், என்னுடைய இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து போனதால், ஆழ்ந்த துயரத்துக்குள்ளானேன். அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த பேராயர் ஜேம்ஸ் மேத்யூ அவர்களும், மெதடிஸ்ட் சபை பேராயர் பென் ஆலிஃபேன்ட் அவர்களும், சென்னையை சேர்ந்த பேராயர் திரு. M. எஸ்றா சற்குணம் அவர்களும், என் வாழ்வில் அக்கறை கொண்டிருந்த ஒரு சிலருமாக அமெரிக்காவில் நான் மருத்துவ சிகிச்சைபெற எல்லா ஒழுங்குகளையும் செய்தனர். மலேசியாவைச் சேர்ந்த திருமதி & திரு. J.S. தேவராஜ், திருமதி & திரு. ஜேக்கப் சிகாமணி அவர்கள் என்னுடைய பயண ஏற்பாடுகளை பொறுப்பெடுத்தனர். என் மனைவியும், மகன் பாலும் என்னுடன் அமெரிக்கா வந்தார்கள். என் நண்பர்கள் திருமதி & திரு ஆபிரகாம்

மாத்யூ அவர்கள் தங்களது வீட்டில் நாங்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டார்கள்.

ஜுலை 1-ஆம் தேதி 1985-ஆம் ஆண்டு, என்னுடைய பிறந்த நாளன்று நான் மிகவும் சோர்வுடன், 'பிழைப்பதைவிட சாவதே மேல்' என்று மரணத்தை விரும்பினேன். Houston என்னுமிடத்தில் 'த லேக்வுட் சபை' (The Lakewood Church) அதாவது 'த ஓயஸிஸ் ஆஃப் லவ்' (The Oasis of love) என்றழைக்கப்படும் சபையின் போதகரும் தேவ மனிதருமான டாக்டர் ஜான் ஓஸ்டீன் அவர்களும், என்னைப் போன்று மக்கள் மீது மனதுருக்கத்தின் இருதயம் கொண்டிருந்த அவருடைய அருமை மனைவி, திருமதி டோடி ஓஸ்டீன் அவர்களும் என்னுடைய சோர்விலிருந்து என்னை வெளியே கொண்டு வருவதற்காக ஏறத்தாழ ஆறு மணி நேரங்கள் என்னுடன் செலவிட்டனர்.

இரவு 11 மணிக்கு சற்று முன் தான் அவர்கள் என் அறையைவிட்டு சென்றனர். பின்பு, நானும் என் மனைவியும், என் மகன் பாலும் படுக்கைக்கு செல்லுமுன் ஜெபிப்பதற்காக முழங்கால்படியிட்டோம். பரிசுத்த ஆவியானவர் வெள்ளம்போல் வந்து எங்களை நிரப்பி, எல்லா சோர்வுகளையும் எங்களைவிட்டு அகற்றி, தெய்வீகம் நிறைந்த இயற்கைக்கப்பாற்பட்ட சந்தோஷத்தினால் நிரப்பினார். அப்பொழுது பரலோகம் திறந்தது.

தேவனின் மாபெரும் சிங்காசனத்தில், வல்லமைமிக்க பரலோகப் பிதாவானவர் வீற்றிருக்கக் கண்டேன். அவரிடம் ஊக்கமாக விண்ணப்பித்து, இந்தவிதமான வியாதி என்மீது வருவதற்கு ஏதேனும் குறைகள் என் வாழ்வில் உண்டோ என்று தனிப்பட்ட விதத்தில் கெஞ்சிக் கேட்டேன். எல்லாக் குறைபாடுகளையும் சரிசெய்து அதன்பின் சுகம் பெறலாம் என்று ஆர்வமுடன் எண்ணியிருந்தேன். அப்பொழுது தேவனுடைய சிங்காசனத்திலிருந்து ஒரு பலத்த குரல், "என் மகனே, 30 ஆண்டுகளாக நீ என்னை சேவித்துக் கொண்டிருந்தாய், உனக்காகவோ, உன் குடும்பத்திற்காகவோ நீ இதுவரையிலும் எதையும் என்னிடம் கேட்கவில்லை; நீ விரும்பிக் கேட்டவையெல்லாம் ஊழியத்தின் முன்னேற்றத்திற்காக அதிகமான பரிசுத்த ஆவியின் அபிஷேகம், அதிக அற்புதங்கள் போன்றவற்றிற்காகத்தான்! அப்படியிருக்க நான் உன்னைப் பற்றி அதிருப்தியுடன் இருக்கிறேனென்று ஏன் நீயாகவே நினைத்துக் கொண்டு, முடிவாக இந்த வியாதியையும் உன்மேல் வரவழைத்து கொண்டாய்?" என்றார்.

கடந்த 22 ஆண்டுகளாக என்னை தைரியப்படுத்தி வந்திருக்கிற ஒரு மிக முக்கியமான சத்தியத்தை கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார். அவர் கூறியது இதுதான், "என் மகனே உன்னுடைய ஊழியத்தினால் உலகம் முழுவதிலும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள கோடிக்கணக்கான மக்கள், உன்மீது அளவுகடந்த அன்பு வைத்திருக்கிறார்கள். அந்தோ!

அந்த பெருத்த ஆசீர்வாதத்தை நீ நினைப்பதேயில்லை. மறுபக்கத்தில், உத்தமமாய் எனக்கு ஊழியம் செய்கிறவர்களை எப்போதும் குறை கூறுவதையே தொழிலாகக் கொண்ட சாத்தானின் பிரதிநிதிகளான சில மனிதர் உனக்கும், மற்ற என் அன்பு ஊழியர்களுக்கும் எதிராக கொடிய மற்றும் வதந்தியான செய்திகளை பிரச்சார ஊடகங்கள் மூலம் எழுதவோ, பேசவோ முற்படுகின்றனர். அப்படிப் பட்டவர்களுடைய எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணி விடலாம். இந்த தெய்வ பக்தியில்லாத மக்கள் உனக்கும், உன் ஊழியத்திற்கும் விரோதமாக பிரகடனம் செய்யும் பொய்யான வார்த்தைகளை நீ ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருப்பதால் இந்த எதிர்மறையான செய்திகள் உன் உள்ளத்திற்குள் சென்று உன் மனஅமைதியையும், பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தையும் குலைத்துவிடுகிறது. அப்பொழுது பிசாசு உன்னுடைய மற்ற ஆசீர்வாதங்களைத் திருடிக் கொண்டு போவது மிக எளிதாகிவிடுகிறது. இப்படித்தான் சுகவீனங்கள் உனக்கு ஏற்படுகின்றன."

மனிதர்களின் பொறாமையினிமித்தம் அவர்கள் இருதயத்திலிருந்து எழும் எல்லாவித எதிர்மறை குற்றச்சாட்டுகளுக்கும் என் செவிகளை அடைத்துக்கொள்ள அந்த நாளிலிருந்து நான் கற்றுக் கொண்டேன். இந்தவித அநீதியான குற்றச்சாட்டுகளை என் மனதிலிருந்து அப்புறப்படுத்தவும் கற்றுக் கொண்டேன். இவ்வாறு நான் நடந்துகொள்ள ஆரம்பித்த நாள் முதற்கொண்டு, மிகவும் பெரிதான விடுதலையை அனுபவிக்கிறேன்.

சில நாட்களுக்கு முன்பு தான், 1985 ஜுன் மாதம் 23ஆம் தேதியன்று, சிறுநீரகம் வேலை செய்யாததினிமித்தம் ஏற்பட்ட கடினமான சூழ்நிலைகளிலிருந்து விடுபட சோர்வுடன் காத்துக் கொண்டிருந்தபோது ஒரு தேவதூதன் நான் தங்கியிருந்த அறைக்குள் தோன்றினான். அந்த தூதன் என்னிடம், "திரு.தினகரன் அவர்களே, நீங்கள் 1985-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று, சுகம் பெற்று படுக்கையிலிருந்து எழுந்துவிடுவீர்கள்" என்று கூறினான். நான் மிகுந்த பரவசமடைந்தேன்.

1985 ஜுலை 25-ஆம் நாள், மருத்துவமனைக்கு உடனே வருமாறு அழைக்கப்பட்டேன். சிறுநீரக மாற்றமும் செய்யப்பட்டது. என் சரீர முன்னேற்றத்தைப் பற்றி மருத்துவர்கள் மிகவும் திருப்தியடைந்த போதிலும், சாத்தானோடும் அவன் இருளின் சேனைகளோடும் ஒரு பெரிய போராட்டம், ஜுலை 31, 1985 அன்று இரவு, மருத்துவமனை அறையில் ஏற்பட்டது.

இரவு 9 மணி ஆனது. என் மனைவி தொடர்ந்து என்னுடன் மருத்துவமனையில் இருந்ததால் மிகவும் களைத்துப்போய் தூங்கி விட்டாள். செவிலியரும் வேலை நேரம் முடிந்து **இரவு வணக்கம்**

சொல்லிவிட்டு போய் விட்டார்கள். நான் தனிமையில் சிறிதும் உறக்கம் வராமல் காணப்பட்டேன். அந்த குறிப்பிட்ட நேரத்தில், என்னைத் தாக்கி என் மனதை உடைப்பதற்காக, முழு நரகமும் என் அறைக்குள் அவிழ்த்துவிடப்பட்டதுபோல் உணர்ந்தேன். நான் சாத்தானைப் பார்த்தேன். அவன் மிகுந்த பூரிப்புடன் காணப்பட்டான். துணிச்சலுடன் அவன் என்னைப் பார்த்து, "திரு.தினகரன் அவர்களே, உங்கள் உடல் இந்த சிறுநீரகத்தை புறக்கணித்துவிடும். நாளைக்கே பரிதாபமும் துக்கமும் நிறைந்த நிலைக்கு நீர் திரும்புவீர்" என்று அவன் கோடிக்கணக்கான பொல்லாத தூதர்களோடு சேர்ந்து கேலி செய்தான். நான் நொறுங்கிபோய், என்னுடைய உதவியற்ற நிலையை உணர்ந்தேன். மனைவியை எழுப்புவதற்கோ, பணிநேர செவிலியரை கூப்பிடுவதற்கோ சரீரத்தில் சிறிதும் பெலனில்லை, மனதிலும் எந்த எண்ணமும் தோன்றவில்லை. சாத்தானை எதிர்க்கும்படி பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் என்னிடத்தில் இல்லை.

அப்பொழுது, சுமார் ஏழு அடி உயரமுள்ள ஒரு வல்லமையுள்ள தேவ தூதன், என்னருகே வந்து நின்றான். பெரிய பட்டயம் போன்ற ஒன்று அவனுடைய இடுப்பிலே தொங்கிக் கொண்டிருந்தது. அவன் உறுதியான குரலுடன், "திரு.தினகரன் அவர்களே, நான் தான் மிகாவேல், ஆண்டவர் என்னிடம், நீங்கள் இக்கட்டில் இருப்பதாகக் கூறினார். பயப்படாதிருங்கள், உங்களுக்கு உதவி செய்யவே இதோ நான் வந்திருக்கிறேன்" என்றான். அவனுடைய பிரசன்னமானது சாத்தானையும், அவன் கூட்டாளிகளையும் நடுநடுங்க வைத்தது. எனினும் சாத்தான் ஒருபுறம் அல்லது மறுபுறமாக தொடர்ந்து வந்து கொண்டே இருந்தான். மிகாவேல் என்னும் பிரதான தூதனோ எப்பக்கத்திலும் எனக்கு துணை நின்று என்னை பாதுகாத்தான்.

திடீரென்று வானம் திறக்கக் கண்டேன். தேவனுடைய சிங்காசனத்தைக் கண்டு அவர் குரலையும் கேட்டேன். "பயப்படாதே, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு இவர்களின் தேவனாகிய நான் ஒரு புதிய சிறுநீரகத்தை உனக்கு ஈவாக அருளியுள்ளேன். நீ சுகம் பெற்று மீண்டும் என்னை சேவிப்பாய்" என்று கூறினார். நம்பிக்கை அளிக்கும் வாக்குறுதிகளினால் மீண்டும், மீண்டும் என்னிடம் பேசிக் கொண்டிருக்கும்போதே நான் அயர்ந்து தூங்கிவிட்டேன். எனக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவக் குழுவினர் அடுத்த நாள் காலையில் மீண்டும் என்னையும், என் மருத்துவ அறிக்கைகளையும் முழுமையாக ஆராய வந்தனர். அவர்கள் மிகுந்த திருப்தியடைந்து, "திரு.தினகரன் அவர்களே, நீங்கள் பூரண சுகமடைந்துள்ளீர்கள்; இன்று உங்களை வீட்டிற்கு அனுப்புகிறோம்" என்று தீர்மானமாகக் கூறினார்கள். ஆம், 23 ஜுன் 1985 அன்று தூதன் சொன்ன காரியம் துல்லியமாக அவ்வாறே நிகழ்ந்தது. நான் ஆகஸ்டு மாதம் முதல் நாள் 1985ஆம்

ஆண்டு, தேவ கிருபையினால் நோயிலிருந்து விடுதலையாக்கப்பட்ட மனிதனாக அறிவிக்கப்பட்டேன்.

1985, ஜுலை 25ஆம் நாள், பலவழிகளில் எனக்கு மறக்க முடியாத ஒரு நாளாகி விட்டது. காரணம் எதுவுமின்றி, விடியற்காலை 4 மணிக்கு என் தூக்கம் கலைந்தது. நான் எழுந்தபொழுது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய பிரசன்னம் நான் படுத்திருந்த அறையை நிரப்பியது. அவர் என்னருகில் நிற்பதைக் கண்டேன்.

அப்பொழுதுதான், இயேசு அழைக்கிறார் 'இளம் பங்காளர் திட்டம்' என்ற திட்டத்தை உருவாக்கவும், 25 வயதிற்கு கீழுள்ள சிறுவர், சிறுமிகளை அதில் பதிவு செய்தால், 24 மணி நேரமும், 365 நாட்களும் இயங்கும் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்களில் உள்ள ஜெப வீரர்களின் ஜெபத்தினால் அவர்கள் மூடப்படுவர் என்று எல்லா ஆயத்தங்களையும் விவரமாக எனக்கு கற்பித்தார். ஆண்டவர் அளித்த இந்த அற்புதமான திட்டம் இன்று நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு உலகம் முழுவதிலும் ஆசீர்வாதமாக இருப்பது நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. மருத்துவமனையிலிருந்து சிகிச்சைக்காக என்னை 6.00 மணி அளவில் அழைக்கும் வரை இந்த தெய்வீக தரிசனம் நீடித்தது. கீழ்க்காணும் அழியாத தேவனுடைய வார்த்தைகளை நினைவு கூறுகிறேன்:

> இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?
>
> எரேமியா 32:27

ஆம், இதுவரை தேவதூதர்களைத் தவிர மற்ற எல்லாப் பரலோக வாசிகளைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தைப் பார்த்தோம். இப்போது அவர்களைப் பற்றியும் கவனிப்போம்.

# தேவதூதர்களின் தொடுதல்

# 8

*இதோ, ஒருவன் கை என்னைத் தொட்டு, என் முழங்கால் களும் என் உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க என்னைத் தூக்கி வைத்தது. அவன் என்னை நோக்கி: பிரியமான புருஷனாகிய தானியேலே, நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன்; ஆதலால், நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின் பேரில் நீ கவனமா யிருந்து, கால் ஊன்றி நில் என்றான்; இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில் சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்து நின்றேன்.*

*தானியேல் 10:10,11*

ஆயிரமாயிரமான எண்ணிக்கை கொண்ட தூதர்கள் பரலோகத்தின் எல்லா பகுதிகளிலும் இருக்கிறார்கள் (வெளி *5:11*). அவர்களுடைய பணியினைப் பற்றி பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது:

*...(தேவன்) தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார்...*

*எபிரெயர் 1:7*

ஆம், ஆண்டவருடைய வல்லமையினால், தேவ தூதர்கள், அக்கினி ஜுவாலைகளைப்போல எங்கு வேண்டுமானாலும் சென்று அவருக்காக எதை வேண்டுமானாலும் செய்கிறார்கள். திருமறையானது தேவனை, 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' (I யோவான் *4:8,16*) என்று விவரிக்கிறது. ஆண்டவருக்கு **'எல்ஷடாய்'** என்ற ஒரு நாமம் உண்டு. "பால் கொடுக்கும் தாயின் மார்புடைய சர்வ வல்ல தேவன்" (ஆதியாகமம் *17:1*) என்று பொருள்படும். ஆகவே, ஆண்டவருக்கு தங்கள் இருதயங்களைக் கொடுத்து அவருடைய பிள்ளைகளாக மாறியவர்களுக்கு பணிவிடை செய்யும்படி கீழ்க்கண்ட வேதவசனங்களின்படி அவர் தமது தூதர்களுக்கு கட்டளையிட்டுள்ளார்.

*அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.*

*யோவான் 1:12*

இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?

*எபிரெயர் 1:14*

**தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாக நாம் அழைக்கப்பட்டு,** தூதர்களால் பணிவிடை செய்யப்படுவதற்குரிய தகுதியை பெற்றிருக்கிறோம் என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம். யோபு *1:6; 2:1; 38:7* என்ற வேதாகமப் பகுதிகளில் தேவ தூதர்கள் 'தேவ புத்திரர்' என்று அழைக்கப்படுவதை பார்க்கிறோம். அப்படியானால், பரலோகத்திலுள்ள 'தேவபுத்திரர்' நமக்கு பணிவிடை செய்கிறார்கள் என்பது எத்தனை பெரிய பாக்கியமாயிருக்கிறது.

சில வருடங்களுக்கு முன், சர்வதேச சபைகளிலுள்ள ஒரு குறிப்பிட்ட பிரிவின் தலைவரை சந்திக்கும் அரிய வாய்ப்பினை நான் பெற்றேன். இந்தோனேஷியாவிலுள்ள அவருடைய ஊழியர்களுள் ஒருவர், சபைக்காகவும் ஆண்டவருக்காகவும் அவர் எடுத்துக் கொண்ட பிரயாசங்களிலெல்லாம் அசாதாரணமான காரிய சித்தியை பெற்றுக்கொண்டதைப் பற்றி வெகு உயர்வாக என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் சொன்னார், ஒருநாள் அந்த ஊழியரைத் தனியே சந்தித்து அவரிடம் இந்த அற்புத வெற்றியின் இரகசியம் என்ன என்று அவர் கேட்டபோது, அந்த ஊழியன் புன்சிரிப்புடன் பின்வருமாறு பதில் சொன்னாராம். "இது மிக எளிது. எபிரெயர் *1:14*ல் ஆண்டவர், பரலோகத்தின் தூதர்கள் எல்லோரும் இவ்வுலகில் ஊழியம் செய்வதற்காக நம்முடைய கட்டளைக்கு காத்திருக்கிறபடியால், இந்த நாட்டில் எப்பொழுதெல்லாம் எங்கேயாவது ஏதாவது ஒரு காரியம் செய்யப்பட வேண்டுமானால், எனக்கு பிரதிநிதியாக அந்த குறிப்பிட்ட செயலை நிறைவேற்ற ஒரு தேவ தூதனை நியமிக்கும்படி ஆண்டவரிடம் சொல்லி, அந்த காரியம் நடந்தேறிவிட்டது என்ற விசுவாசத்துடன் நன்றி செலுத்தவும் தொடங்கி விடுவேன். நிச்சயமாகவே அந்த தூதன் ஒவ்வொரு முறையும் நேர்த்தியாக தன் பணியை செய்து முடிக்கிறார்" என்று கூறியது உண்மையாகவே ஓர் அற்புதமான வெளிப்பாடு!

## தூதர்களின் உருவத்தோற்றம்

தானியேல் *10:18*-ல் தேவதூதர்கள் 'மனுஷரூபமான' தோற்றம் கொண்டவர்கள் என்றும், எசேக்கியேல் *1:8; 10:8*-ல் அவர்களுடைய கைகள், 'மனுஷர் கையின் சாயலானது' என்றும் வாசிக்கிறோம். எங்கேயும் எவ்விடத்திலும் பறப்பதற்கு அவர்களுக்கு செட்டைகள் இருப்பதைப்பற்றி வெளிப்படுத்தல் *14:6*, எசேக்கியேல் *1:9,11* ஆகிய வசனங்கள் மூலம் அறிகிறோம்.

பல சந்தர்ப்பங்களில் தேவதூதர்களை வெகு அருகாமையில் காணும் பாக்கியத்தை தேவன் எனக்கு கொடுத்ததற்காக நான் ஆண்டவரைத் துதிக்கிறேன்.

பரிசுத்த ஆவியின் வரங்களுக்காக ஊக்கமாக ஆண்டவரிடம் மன்றாடி ஜெபித்துக் கொண்டிருந்த வேளையில்தான், நான் பரலோகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, முதல் முறையாக தூதர்களைக் காணும் சிலாக்கியம் பெற்றேன். முதலாம் வானத்தில் அனுபவ ரீதியாக கோடான கோடி தூதர்களை கண்டேன். பரலோகத்திற்கு உள்ளேயும் வெளியேயும், மேலும் கீழுமாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடும், ஆண்டவரின் பரிபூரண சந்தோஷத்தோடும், சர்வவல்ல தேவன் கொடுத்த கட்டளைகளை நிறைவேற்ற பல இடங்களுக்கு தீவிரமாக சென்று வந்தார்கள்.

அவர்கள் மேலங்கியைக் கொண்டவர்களாகக் காணப்படு கிறார்கள். அந்த அங்கி பிரகாசமாக இருப்பதால், அது அவர்களை மூடும் உடையாகவோ அல்லது ஓர் அடர்த்தியான ஒளிக்கற்றை யாகவோ காட்சியளிக்கிறது. தலையிலிருந்து தோள்பட்டைவரை தொங்கிக் கொண்டிருக்கும் தலைமயிர், தங்கத்தின் நிறமாக இருப்பதால் அவர்களுக்கு அது கூடுதல் அழகைக் கொடுக்கிறது. அவர்களுடைய கண்கள், கைகள் முதலியவை மனுஷர்களைப் போலவே அதுவும் கவர்ச்சி மிகும் நிறத்தில் காட்சியளிக்கிறது. ஒவ்வொரு தூதனும் கெம்பீரமாய் தோற்றமளித்தாலும் அவர்கள் இரக்கம் உள்ளவர்கள். அவர்களுடைய முகங்கள் ஆண்ட வரின் சந்தோஷத்தை பிரதிபலித்துக் கொண்டு எப்பொழுதும் புன்னகை யோடு காணப்படுகிறது. தோள் பகுதியில் இருக்கும் இரண்டு செட்டைகள் இயற்கையான ஓர் உறுப்பாகவே உள்ளன. எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பதற்காக தானாகவே அந்த செட்டைகள் மேலே எழும்பு கிறது. பறப்பதற்கென இந்த செட்டைகள் அவர்களுக்கு தேவை என்பதை என் உள்ளத்தில் கிரகிக்க முடியவில்லை. உருவ அமைப்பில் இயற்கையான ஒரு அங்கமாகவே அந்த செட்டைகள் காணப்பட்டன. இந்த செட்டைகளின் உதவியில்லாமலேயே, அவர்களுக்குள் இயல்பாக இருக்கிற இயற்கைக்கப்பாற்பட்ட திறமையோடு அவர்கள் இங்கும் அங்கும் பறந்து செல்லக் கூடுமென நான் நம்புவேன். நமக்கு உதவி செய்ய எப்போதும் காத்துக் கொண்டே யிருக்கும் அருமையான பரலோக வாசிகள் அவர்கள். நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்!

## தூதர்களின் வகைகள்

வேத பகுதிகளை விளங்கிக் கொள்வதில் எனக்குள்ள குறுகிய ஞானத்துடன், அவர்களை மூன்று விதமாக பிரிக்கலாம் என்று நினைக்கிறேன்.

### 1. சேராபீன்

சேராபீன்களை வேதம், பின்வருமாறு விவரிக்கிறது.

*சேராபீன்கள் அவருக்கு (ஆண்டவரின் சிங்காசனத்திற்கு) மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து;*

*ஏசாயா 6:2*

### 2. கேருபீன்

கேருப் ஒரு சிறப்பான தூதன், சிறப்பான உத்தரவாதங்களை, சிறப்பான திறமைகளுடன் செய்வதற்காக சிருஷ்டிக்கப்பட்டவன். பின்வரும் வேதவாக்கியங்கள் அவைகளை அழகாய் வரிசைப் படுத்துகின்றன:

*நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினாய்.*

*நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; ... சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக் கொண்டிருக்கிறது;...*

*நீ... விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்.*

*எசேக்கியேல் 28:14,13,12*

### 3. தூதர்கள்

தூதர்களைப் பற்றிய விளக்கம் முன்கூட்டியே கொடுக்கப் பட்டுவிட்டது.

## தெரிந்தெடுக்கப்பட்ட தூதர்கள்

இவர்களில் சிலர், மிகச் சிறந்த செயல்களை செய்வதற்காக, ஆண்டவருடைய எதிர்ப்பார்ப்புக்கேற்ப தெரிந்தெடுக்கப்பட்டிருக் கிறார்கள்.

## 1. மிகாவேல்

தேவ தூதர்களின் சேனையின் **பிரதான தலைவன்** தான் மிகாவேல். வெளிப்படுத்தல் *12:7*-ல் விவரிக்கப்பட்டதுபோல், பரலோகத்தின் யுத்தங்களை போரிடுவது இவன்தான். தானியேல் *10:13,21; 12:1*-ல் உள்ளதுபோல் பலங்கொள்ளுகிற பிரதான தூதன் இவன்.

கடந்த அத்தியாயத்தில் தூதன் மிகாவேலுடன் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை தெளிவாகக் கூறியுள்ளேன். ஆம், ஒரு தீவிர மருத்துவ அறுவை சிகிச்சைக்குப்பின், நான் சாத்தானுடைய கைகளில் அகப்பட்டிருந்த இக்கட்டான அதேநேரத்தில் அவன் வந்து என் ஆத்துமாவையும் சரீரத்தையும் பாதுகாத்தான். ராஜரீகத் தோற்றத் துடன்கூடிய கரிசனையும், தனிப்பட்ட பாசமும் கலந்த அவனது நம்பிக்கையான வார்த்தைகள், 'மரண இருளின் பள்ளத்தாக்கிலும்' *(சங்கீதம் 23:4)* என்னை உற்சாகப்படுத்தின. இன்றும்கூட, வியாதியின் பள்ளத்தாக்கின் வழியே நான் கடந்து செல்லும்போது அவன் என்முன் தோன்றி என்னை மகிழ்விப்பதுண்டு. வியாதிப் படுக்கையினருகே அவன் பிரசன்னம் தோன்றும்போது, அந்த அறையிலுள்ள சூழ்நிலையை முற்றிலும் மாற்றிப் போடுகிறது.

## 2. காபிரியேல்

காபிரியேல், விசேஷித்தவர்களுக்கு விசேஷித்த செய்திகளை கொண்டு செல்லும் ஆண்டவருடைய விசேஷித்த தூதுவன். சகரியா என்ற **பிரதான ஆசாரியனுக்கும்**, இயேசுவின் தாயாகிய கன்னி மரியாளுக்கும் நற்செய்திகளைச் சுமந்து வந்தவன் *(லூக்கா 1:11, 26)*. அதைப்போலவே, தானியேல், பரலோகத்திலிருந்து வரும் முடிவை எதிர்பார்த்து காத்திருக்கும்போது, அங்கேயும் காபிரியேல் தான் ஒரு முக்கிய செய்தியை பரலோகத்திலிருந்து அவனுக்கு கொண்டு வந்தான் *(தானியேல் 8:16, 9:21)*.

காபிரியேல் மூலமாக செய்திகளை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களைக் கொடுத்து ஆண்டவர் என்னை ஆசீர்வதித்துள்ளார். பல காரியங்களில், மிகாவேலுடன் ஒப்பிடுகையில், காபிரியேல் பெரும்பாலும் எதிரிடையாகவே அமைந்துள்ளான். மிகாவேல் சுமார் ஏழு அடி உயரமுள்ளவன். ஆனால், மனிதனின் சராசரி உயரத்தையே கொண்டவனாக காபிரியேல் காணப்படுகிறான். எப்பொழுதும் பரலோகத்தின் யுத்தங்களை நடத்திக் கொண்டிருப்பதால் மிகாவேலின் முகம் சற்று உறுதியாகவும், பயத்தை ஏற்படுத்து வதாகவும் காணப்படும். மறுபுறம் காபிரியேலோ எப்போதும் சிரித்தவண்ணம் உற்சாக வார்த்தைகளை கூறிக் கொண்டே இருப்பான். அவனைப் பார்த்த மாத்திரத்தில், எந்த மனுஷனும்/மனுஷியும் உடனே மறுமலர்ச்சியும், புத்துணர்ச்சியும் அடைவார்கள்.

## தூதர்களின் அடையாளக் குறியீடுகள்

லூக்கா *1:13,30*ன்படி, சகரியாவுடனும், கன்னி மரியாளுடனும் ஏற்பட்ட சந்திப்பின்போது காபிரியேல், பேசிய முதல் வார்த்தை 'பயப்படாதே' என்பதுவே.

தேவனின் குடும்பத்தில் **மறுபடியும் பிறந்த** மகனோடும், மகளோடும் உள்ள உரையாடல்களை 'பயப்படாதே' என்ற வார்த்தைகளைக் கொண்டே தூதர்கள் ஆரம்பிக்கிறார்கள். ஒவ்வொரு தூதனும் செய்தியை சுமந்துகொண்டு, இந்த உலகத்திற்கு வருமுன், மகா உன்னத தேவனின் பிரசன்னத்திற்கும், சிங்காசனத்தின் முன்பாகவும் நிற்கிறார்கள். உதாரணமாக, காபிரியேல் சகரியா விடம் கூறுகிறார்,

> ... நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்;
>
> லூக்கா *1:19*

சகரியா, பிரதான ஆசாரிய வகுப்பின் முறைப்படி தேவ சந்நிதியிலே ஆசாரிய ஊழியம் செய்பவனாயிருந்தாலும் காபிரியேல் தூதனை பார்த்தபோது **கலங்கி பயமடைந்தான்** (லூக்கா *1:12*). நமது அனுபவத்திலும் நிகழ்வது அதுவே.

நமது ஜெப அறையினுள் தேவதூதன் நுழையும்போது, அந்த அறை முழுவதும் ஆண்டவருடைய வியப்பூட்டும் பிரசன்னத்தால் நிரம்பும். ஏனெனில், அந்த தூதன் அப்பொழுதுதான் நேரடியாக ஆண்டவரின் சமுகத்திலிருந்து வந்திருப்பான். இயற்கையாகவே நமக்கு நடுக்கம் ஏற்படும்; ஆகவே, அவன் சொல்லும் முதல் வார்த்தை 'பயப்படாதே' என்பதுதான். என்னுடைய அனுபவத்தில், தூதன் முன்னிலையில் நான் நடுக்கம் கொள்ளும்போது எப்பொழுதும் பின்வருமாறு தேற்றுவார்.

"பயப்படாதீர்கள், நான் சர்வவல்ல தேவனின் சமுகத்தில் இருந்து வந்துள்ளேன். ஆண்டவரிடமிருந்து உங்களுக்கு ஒரு நற்செய்தி கொண்டு வந்துள்ளேன். மேலும் நான் துரிதமாக மீண்டும் திரும்ப வேண்டும். உடனே செய்தியை எடுத்துக் கொள்வீர்களா?" என்று சொல்லுவான்.

செய்தியை எழுதிக் கொள்ள, ஒரு பேப்பர் போன்றவைகளைக் கண்டெடுக்க அனுமதிக்குமாறு கெஞ்சிக் கேட்பேன். ஆம், சகரியாவுக்கு ஏற்பட்ட சம்பவம் தான் பரலோகத்திலிருந்து ஒரு தூதன் இறங்கி வந்து நமக்கு முன்பாக தோன்றும்போது, உங்களுக்கும் எனக்கும் இன்று நிகழ்கிறது.

## தூதர்கள் தெய்வீக பாதுகாப்பு கொண்டு வருகின்றனர்

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

*சங்கீதம் 91:11*

அதற்கு அவன்: பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். அப்பொழுது எலிசா விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்.

II இராஜாக்கள் *6:16,17*

கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.

*சங்கீதம் 34:7*

ஏறத்தாழ 42 வருடங்களுக்கு முன் ஓர் இளம் வங்கி அலுவலராக நான் சென்னையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். என்னுடைய வழக்கமான அலுவலக வேலை முடிந்தபின்பு, மாலை நேரங்களில் பிரசங்கிக்கும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வேன். கூட்டங்களின் இறுதியில் என் ஜெபத்தை நாடி வருகிற தனிப்பட்ட நபர்களுக்கு ஜெபித்துவிட்டு, இரவில் தாமதமாகவே என் வீட்டிற்கு திரும்புவேன்.

அவ்வாறு ஒரு நள்ளிரவில், நான் வீடு திரும்பும்போது, நான் பிரயாணம் செய்த அந்த பேரூந்துதான் அந்த வழித்தடத்தில் கடைசி பேரூந்து. புறநகர் பகுதியில், அதாவது நகர்பகுதியிலிருந்து சற்று தூரமான பகுதியில் நாங்கள் வசித்து வந்தபடியால், தேவையான தெரு விளக்குகளும் அங்கு இல்லை. நான் ஏறிச் சென்ற பேரூந்து அந்த இடத்தை விட்டு போனபின்பு, அந்த பேரூந்திலிருந்து வந்த சிறிதளவு வெளிச்சமும் மறைந்தது. எங்கு பார்த்தாலும் இருள் மயம். வீட்டிற்கு எப்படி திரும்பி நடந்து செல்வது என்ற பயம் என்னை பற்றிப் பிடித்தது. அதே பேரூந்திலிருந்து வேறொருவர் இறங்கி, எனக்கு முன்னே நடந்து சென்று கொண்டிருப்பதை நான் கவனித்ததாக நினைவு கூர்ந்தேன். என் முன்னே அவர் நடக்கிறார் என்ற நினைவுடன் அவரோடு சேர்ந்து கொள்ள வேகமாக நடந்தேன்.

அந்த இருளின் மத்தியில் நான் வேகமாக சென்றதால், நெடுஞ் சாலைத் துறையினர், ஒரு புதிய சாலை அமைப்பதற்காக கொட்டி வைத்திருந்த ஒரு பெரிய கருங்கற்குவியலின் மீது மோதி நிலை தடுமாறினேன். என் முகம் ஒரு பெரிய கல்லின் மீது மோத இருந்தது. உடனே கலங்கிப் போனேன். திடீரென ஒரு கரம் என்னைப்

பின்புறமாக இழுத்து, பிறகு மேலே தூக்கி நிறுத்துவதை உணர்ந்தேன். ஒரு பெரிய அழிவு தவிர்க்கப்பட்டதை உணர்ந்தபோது, எவ்வளவு பெரிய விடுதலையை நான் உணர்ந்தேன். யார் என்னை இழுத்துத் தூக்கியிருக்கக் கூடும் என்றறிய சுற்றுமுற்றும் பார்த்தேன். எனக்கு முன்னே, பேரூந்திலிருந்து இறங்கிய அந்த பயணியாகத் தான் இருக்கக் கூடும் என்று எனக்குள் கருதினேன். அப்பொழுது ஒரு பரலோகத்தின் ஒளி என்னைச் சுற்றி பிரகாசிப்பதைக் கண்டு பரவசமடைந்தேன். என் இடது பக்கத்தில் சிரித்தவாறே இயேசு கிறிஸ்துவும், வலது பக்கத்தில் ஒரு வலிமைமிக்க தேவதூதனும் என் கைகளை பிடித்துக் கொண்டு, “வா, நாம் வீட்டிற்கு திரும்பி நடக்கலாம்” என்று கூறினார்கள். நானும்கூட நடக்கத் தொடங்குகையில், இயேசு அநேக காரியங் களைக் குறித்துப் பேசிக் கொண்டே வந்தார். குறிப்பிட்ட ஓர் இடம் வந்ததும், “உன்னுடைய வீடு வந்துவிட்டது, இப்போது நீ போகலாம்” என்று கூறினார். அதன்பின்பு, புன்சிரிப்புடன் இருவரும் மறைந்தார்கள்.

நான் வீட்டுக் கதவை தட்டும்போது, என் மனைவியின் தாயார் வந்து கதவைத் திறந்தார்கள். என்னைக் கண்டவுடன் பேச்சற்று நின்றார்கள். அவர்கள் முகத்தில் அதிர்ச்சியும், ஆச்சரியமும் காணப் பட்டது. அவர்களுக்குப் பின்னே என் அருமை மனைவி ஸ்டெல்லா வும் ஓடி வந்தார்கள். அவர்களும் நின்றுகொண்டு என்னை கூர்ந்து நோக்கினார்கள். அவர்கள் இருவரும் அவ்வாறு நிற்பதன் காரணம் புரியாதிருந்தேன். ஆகவே, அவர்களைக் கடந்து நான் உள்ளே நுழைந்து, “ஏன் என் வழியைத் தடுத்தீர்கள்” என வினவ, அவர்கள் உணர்ச்சி பொங்க, “உங்கள் முகம் பிரகாசிப்பது உங்களுக்குத் தெரியவில்லையா? ஒரு பரலோக வெளிச்சம் உங்கள் முகத்தில் பளிச்சிடுகிறதே” என்று சொன்னார்கள். ஆண்டவராகிய இயேசு வோடும் பலத்த தூதனோடும்கூட இருந்த பிரசன்னத்தால் இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வை என் முகத்தில் கொண்டு வந்திருக்கிறது என்று அறிந்து கொண்டேன்.

ஆம், எல்லாவித சிக்கல்களின் மத்தியிலும் நம்மை பாதுகாக்கும் படி தேவதூதர்கள் எப்போதும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## தூதர்கள் ஆண்டவரிடமிருந்து செய்திகள் கொண்டு வருகின்றனர்

பூமியிலிருந்து வானத்தைத் தொட்டதான ஒரு ஏணியில் தேவதூதர்கள் ஏறுவதையும் இறங்குவதையும் யாக்கோபு தன் சொப்பனத்தில் கண்டான் (ஆதியாகமம் 28:12).

அதே அனுபவத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகிறார்.

*பின்னும், அவர் (இயேசு) அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

*யோவான் 1:51*

சங்கீதம் 65:2-ல் தேவனை "ஜெபத்தைக் கேட்கிறவர்" என்று வாசிக்கிறோம். நம் எல்லோருக்கும் தேவைகளும், ஜெப விண்ணப்பங்களும் உண்டு. எனினும், விசேஷமாக நம்முடைய ஜெபங்களுக்கான பதிலை அனுப்பி வைக்க, தேவன் அவருடைய பரிசுத்த தூதர்களை உபயோகிக்கிறார்.

எங்களுடைய ஊழியத்தில் அதிக ஈடுபாடு கொண்ட ஒரு அருமையான தம்பதியரை எனக்கு தெரியும். சென்னையில் வசிக்கும் அந்த அன்பான சகோதரனின் பெயர் திரு.ஐசக் ராஜகுமார். அவருடைய அன்பிற்குரிய மனைவி திருமதி சுஜரித்தா. அப்பொழுதுதான் பிறந்திருந்த அவர்களது ஆண் குழந்தை மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தது. நான் வங்கியிலிருந்து மாலையில் வீடு திரும்பியபோது இந்த செய்தி மெய்யாகவே என் உள்ளத்தை உடைத்தது. ஆகவே, என் வீட்டில், யாவரும் படுக்கைக்கு சென்றபின், கிட்டத்தட்ட இரவு 11 மணி இருக்கும், அந்த குழந்தையை உயிர்ப்பிக்க வேண்டுமென்று ஆண்டவரிடம் கதறி ஜெபிக்க ஆரம்பித்தேன். அதுபோன்ற வேளைகளில், எனக்கு எப்படி நேரம் கடந்து போகிறது என்று தெரியவே தெரியாது. அடுத்த நாள் காலை 5 மணி ஆயிற்று. ஒரு தேவதூதன் உள்ளே வந்து, "கலங்காதே, குழந்தை உயிருடன் இருக்கிறான்" என்றான். கலங்கிய என் உள்ளத்திற்கு பெரியதொரு அமைதியும், நிம்மதியும் கிடைத்தது. அந்த நாளின் பணிக்காக அலுவலகத்திற்கு செல்லுமுன், சில நிமிடங்களாவது ஓய்வெடுத்துக் கொள்வதற்காக படுக்கையில் சாய்ந்தேன். பிறகு, அந்த அன்பு தம்பதிகளிடமிருந்து, வியப்படையும் வகையில் குழந்தை மீண்டும் உடல் நலம் பெற்றதாக உறுதிப்பட்ட செய்தி கிட்டிற்று. சுகம் பெற்ற நேரம் என்ன? என்று நான் வினவ, "காலை 5 மணி" என்று பதில் வந்தது. ஆம், தூதர்கள் இருப்பது மெய். அவர்களால் பரத்திலிருந்து செய்திகள் கொண்டு வரப்படுவதும் உண்மையே.

## தூதர்கள் நம் தேவைகளை நிவிர்த்தி செய்கிறார்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, இரவும் பகலும் நாற்பது நாட்கள் உபவாசமாயிருந்தபின்பு, தேவ தூதர்கள் வந்து, அவருக்கு பணிவிடை செய்தார்கள் (மத்தேயு 4:11) என்று வேதம் கூறுகிறது. அவருடைய

முழு உடலமைப்பும் வலிமையற்று வாட்டத்தோடு காணப்பட்டிருக்கக் கூடும். இயல்பான வாழ்க்கை பாதிக்கப்பட்டு, நிச்சயமாக அவருக்கு அநேகம் தேவைகள் இருந்திருக்கலாம். அந்த நேரத்தில் தான் தேவதூதர்கள் அவற்றை கொடுப்பதற்காக, அவருக்கு உதவியாய் இருக்க விரைந்து வருகின்றனர்.

ஒருமுறை, பெங்களூர் என்ற பட்டணத்தில் வசித்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் இரவில், நான் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும்போது, என்னுடைய போதகரின் விருப்பத்திற்கிணங்க, தேவையில் இருந்த ஒரு தனிப்பட்ட நபருக்கு ஊழியம் செய்ய சென்றேன். என் வீட்டிற்கு திரும்பி வரும்போது ஏறக்குறைய நள்ளிரவைத் தொடும் வேளையாயிற்று. என் மகன் பால் தூங்கி விட்டான். என் உத்தமமுள்ள மனைவி வழக்கம்போல் எனக்காக காத்துக் கொண்டிருந்தாள். ஆனால், அவளுடைய முகத்தில் ஒரு சோகம் தென்பட்டபடியால் காரணத்தைக் கேட்டேன். அவள் கூறிய காரியம், உண்மையாகவே என்னை கடுந்துயரத்தில் ஆழ்த்தியது. அவள் கூறியது, "நாளைக்கு ஈஸ்டர் பண்டிகை என்றும் நாம் ஆலய ஆராதனைக்கு செல்ல வேண்டும் என்றும் உங்களுக்கு தெரியாதா? நமது சபை சிறுவர்கள் எல்லோரும் புத்தாடை அணிந்தும், வெகுமதிகளோடும் இருப்பார்கள். நமது மகன் பால் மட்டும் பழைய உடைகளில் ஒன்றை உடுத்திக் கொண்டு வெறுங்கையனாக இருப்பான்" என்று சொல்லி வருத்தப்பட்டாள். ஆண்டவரின் ஊழியத்தைப் பற்றிய அக்கறையினிமித்தம் என் மகனையும், மனைவியையும் மகிழ்விப்பதற்காக அவர்களுக்கு அளிக்க வேண்டிய ஈஸ்டர் வெகுமதிகளை வாங்குவதற்கு என் நேரத்தை கொடுக்க முற்றிலும் மறந்துபோனேன்.

மிகவும் தாமதமான இரவு உணவுக்குப் பிறகு என் அருமை மனைவி படுக்கைக்கு சென்றபின், என் படுக்கையின் மேல் முழங்கால்படியிட்டு ஆண்டவரிடம் கதறியழுது, "ஆண்டவரே, உம்முடைய ஊழியத்திற்காகவே, நான் என் குடும்பத்தை விசாரியாமற் போனேன். நாளைக்கு பொழுது விடியும்போதாகிலும் இவர்கள் இருவரையும் மகிழ்விக்க தயவுசெய்து எனக்கு துணை செய்யும். ஏனெனில், என் கையில் பணமேயில்லை" என்று மன்றாடினேன். நீண்ட ஆழமானதொரு விண்ணப்பத்திற்குப் பின், சடுதியில் யாரோ ஒருவர் என்னருகில் நிற்பதை உணர்ந்தேன். கண்களைத் திறந்து பார்த்தபோது, அது ஒரு தேவதூதன் என்று கண்டேன். அவன் அமைதியான குரலுடன், "என்னுடன் வாருங்கள்" என்றான். அவன் பிறகே, அடுத்த அறைக்கு சென்றேன். உதவாத ஆடைகள் சேகரிக்கப்பட்ட ஒரு பழைய பெட்டியை சுட்டிக்காட்டி, அதை திறக்க சொன்னான். முற்றிலும் குழம்பி, தடுமாற்றமடைந்தவனாய் நான்

அவனிடம், பழைய துணிகளடங்கிய அந்த பெட்டியைத் திறப்பதால் எந்த பயனுள்ள நோக்கமும் நிறைவேறப் போவதில்லை என்று பணிவுடன் கூறினேன். அவன் சிரித்துக் கொண்டே அதைத் திறக்குமாறு வற்புறுத்தினான். நானும் கீழ்படிந்தேன். அடுக்கடுக்காய் அவசியமில்லாத துணிகள் இருந்தன. தூதன் "மேலே இருப்பதை முதலில் எடு" என்றான். அப்படியே அதை தள்ளியபோது, ஒரு திகைப்பும், அதே சமயத்தில் இன்பத்தையூட்டும் ஓர் அதிர்ச்சியும் எனக்காகக் காத்திருந்தது. நான் பார்த்த காரியம் என்னை நிலை குலையச் செய்தது. அந்த பழைய துணிகளுக்குமேல் கட்டுக்கட்டாக புத்தம் புதிய ரூபாய் நோட்டுகள் சிதறிக் கிடந்தன. தூதன் சிரித்துக் கொண்டே "இதை உபயோகி, ஈஸ்டர் வாழ்த்துக்கள்" என்று சொல்லி மறைந்தான். அவசரம் அவசரமாக என் மனைவியை நான் எழுப்பி அந்த புது நோட்டு கட்டை அவளுக்குக் காட்டி, எப்போதாவது அங்கு அவற்றை நீ வைத்தாயா என்று கேட்டேன். 'இல்லை' என்று மீண்டும் மீண்டும் அவள் தன் தலையை அசைத்தாள். மறுநாள் எத்தனை குதூகலமான ஈஸ்டர் நாளாக இருந்தது!

நாம் நெருக்கமான தேவைகளோடு இருக்கும்போது ஆண்டவர் தம் தூதர்களை அனுப்பி, இயற்கைக்கப்பாற்பட்ட விதத்தில் நமக்கு உதவுகிறார்.

> என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாங் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.
>
> *பிலிப்பியர் 4:19*

## தேவதூதர்கள் தேவ வல்லமையை சுமந்து செல்கிறவர்கள்

தேவதூதர்கள் பார்ப்பதற்கு தங்கள் பரலோக எஜமானின் (யேகோவா ரொபேகா) சாயலையே பெற்றிருக்கிறார்கள். நம்முடைய சரீர நலத்தில் அக்கறைக் காட்டுகிறவர்களாக இருக்கிறார்கள்.

> ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.
>
> யோவான் 5:4

ஆம், தேவதூதர்கள் சர்வவல்லவரின் குணமளிக்கும் பிரசன்னத்தை தங்களுடன் எப்போதும் சுமந்துகொண்டே இயங்குகிறார்கள்.

மறுபடியும் அது ஒரு நள்ளிரவு, ஒருநாள் அலுவலகத்தில் கடினமாய் உழைத்துவிட்டு திருச்சபை அலுவல்களை முடித்துவிட்டு

வீடு வந்து சேர்ந்தேன். நான் அன்று படுக்கைக்கு சென்றபோது, என்னால் தூங்க முடியாதபடி கடுமையான நெஞ்சுவலியால் அவதிப்பட்டேன். என் மனைவியை எழுப்ப எனக்குத் தோன்ற வில்லை. ஏனெனில், அவள் அண்டை வீட்டாரைத் தொந்தரவு செய்து மருத்துவ உதவியை நாடக்கூடும். அதேசமயத்தில், அந்த வலி என் உயிருக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாகவும் மாறலாம் என்ற மிகப் பெரிய பயம் வேறு. ஆகவே, பரலோகத்தின் எஜமானை நோக்கிக் கதறுவதையே தெரிந்து கொண்டேன்.

நான் ஜெபித்துக் கொண்டிருக்கையில், இந்த அசௌகரியமான உணர்ச்சி பெருகிக் கொண்டேயிருக்கையில், **யாழ்** போன்ற ஒரு விசித்திரமான இசைக்கருவியுடன் தேவதூதன் ஒருவன் என் அறைக்குள் நடந்து வந்தான். அமைதியாக என்னருகில் உட்கார்ந்து இனிமையான ஒரு இசையை மீட்டத் தொடங்கினான். அவன் தொடருகையில், அது 'கீலேயாத்தின் பிசின் தைலம்' (எரேமியா 8:22; 46:11) போல் ஒவ்வொரு வகையிலும் என் ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு இதமாக அமைந்தது. அந்த பாடல்கள் முற்றிலும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் இவ்வுலக வாழ்வினைப் பற்றியதாயிருந்தது. யாழின் அருமையான இசை என் ஆத்துமாவிற்கு ஆறுதலையும், ஒரு சுகமான நித்திரையையும் கொடுத்தது.

காலையில் நான் எழுந்தபொழுது, என்னுடைய எல்லா இருதய வலியும், வேதனையும் அறவே அகன்று போயிருந்தது. அடுத்த 25 ஆண்டுகள் வரை என் இருதயத்தில் எந்தவித தொந்தரவும் வரவில்லை. (எனினும், அந்த தூதனின் கீதத்தை நினைவுபடுத்தி அதை ஓர் இசைத்தட்டாக பின்னர் வெளியிட்டேன்).

## தூதர்கள் ஊக்கமளிக்கிறார்கள்

எலியா தனித்தன்மை பெற்ற தேவனுடைய தீர்க்கதரிசி. ஆனாலும், அவனுடைய தேசத்து ராஜாவின் மனைவி அவனைக் கொலை செய்ய தீர்மானித்து தீட்டிய தீய சதித் திட்டத்தால், அதிகமாய் மனமுடைந்து, அவளுடைய கோபத்திற்கு தப்புவதற்காக வனாந் தரத்தில் ஒளித்துக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் தானே, கர்த்தருடைய தூதன் அவனைத் தட்டி எழுப்பி, "எழுந்திருந்து போஜனம் பண்ணு; நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம்" (I இராஜாக்கள் 19:5-7) என்றான். அந்த போஜனத்தின் பலத்தினால் எலியா எல்லாவிதத்திலும் உற்சாகமடைந்து, தனக்கு நியமிக்கப்பட்ட திட்டத்தைத் தொடர்ந்தான்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவில் தூரமான இடம் ஒன்றில் தேவ ஊழியர்களுக்கான ஒரு சிறப்புக் கூட்டத்தில் நான் பங்கு பெற்றேன். முதல் நாள் கூட்டம் மிக ஆசீர்வாதமாய் இருந்தது. அநேக

தேவதாசர்கள் கலந்து கொண்டனர். அவர்களும் என்னோடு சேர்ந்து ஊழியம் செய்யும்போது, சுகமளிக்கும் ஊழியத்தில் அற்புதங்களும், அடையாளங்களும் நிகழ்வதைக் கண்டோம். அடுத்த நாள் பகல் முழுவதும் நான் மாலை நேரக் கூடுகைக்காக ஆண்டவர் பாதத்தில் காத்துக் கொண்டிந்தேன். அப்பொழுது ஒரு குறிப்பிட்ட குழுவினர், அந்த நாள் மாலைக் கூட்டத்தை தடை செய்வதற்கு திட்டமிட்டுக் கொண்டிருப்பதாக ஒரு சோர்வை உண்டாக்கும் செய்தி எனக்கு வந்தது. எப்படியாவது கூட்டத்தை ஆசீர்வதிக்கும்படி ஆண்டவரிடம் நான் கூக்குரலிட்டேன். கட்டாயமாக உதவி செய்வதாக பரிசுத்த ஆவியானவரும் உறுதியளித்தார். எனினும், நான் கூட்டத்திற்கு போனபோது, ஒரு பெரும் பயம் என் ஆத்துமாவைப் பற்றிக் கொண்டது. எனக்குள் இருந்த மன அமைதியை முற்றிலும் இழந்தேன்.

கூட்டத்திற்கு போய் என்னுடைய நாற்காலியில் அமர்ந்து கண்களை மூடி அந்த இரவு கூட்டத்தில் ஆண்டவரின் ஆசீர்வாதமும் பிரசன்னமும் நிரம்பியிருக்க வேண்டுமென்று நான் ஜெபித்துக் கொண்டிருக்கையில், ஆண்டவர் என் கண்களைத் திறந்தார். வலிமை மிக்க இரண்டு தேவதூதர்கள் கைகளில் உருவிய பட்டயங்களுடன் என் இருக்கையின் இரு புறங்களிலும் பக்கத்திற்கொருவராக நின்று கொண்டிருப்பதை பார்த்தேன். அவர்கள், “தொடர்ந்து பிரசங்கி யுங்கள், கடந்த இரவில் பேசியதுபோலவே இன்றும் பேசுங்கள். ஆண்டவர் எல்லாவற்றையும் பொறுப்பெடுத்துக் கொள்வார்” என்று கூறினர். இந்த வார்த்தைகள் வெகுவாய் என்னை உற்சாகப்படுத்திய தால் கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் மீது பரிவோடும், பாசத்தோடும் பிரசங்கித்தேன்.

என் பிரசங்கத்திற்கு இடையே மிகுந்த பயத்தை என்னில் எழுப்பும் வகையில் தீவட்டிகளோடும் ஈட்டிகளோடும் கூட்டத்தை நோக்கி முரடர்கள் அணிதிரண்டு வருவதைக் கண்டேன். உடனடியாக “தொடர்ந்து பேசுங்கள்” என்று தூதர்கள் சொல்ல, நான் தொடர்ந்து பேசினேன். பிறகு ஆண்டவர் இடைப்பட்டார். ஏதோ ஒன்று நிகழ்ந்தது. ஊர்வலம் நிறுத்தப்பட்டது. தீவட்டிகள் அணைக்கப் பட்டன. அந்த மக்கள் அனைவரும் தரையில் அமர்ந்து, ஆண்டவரின் வார்த்தைகளை கூர்ந்து மெய்மறந்து கவனத்துடன் கேட்க ஆரம்பித் தார்கள். இறுதியாக, ஆண்டவருக்கு தங்களை ஒப்புக் கொடுக்க விரும்புகிறவர்கள் மேடைக்கு முன்பாக வரும்படி அழைப்பு கொடுத்தபோது, அதே மக்கள் கண்களில் கண்ணீருடன் ஆண்டவரின் சமாதானத்தையும், ஆசிகளையும் நாடி முன்னே நடந்து வந்தார்கள். தொடர்ச்சியான அந்த இரண்டு தேவதூதர்களின் உற்சாகமான வார்த்தைகள் மட்டும் நான் பெறாதிருந்தால் இந்த காரியம் அன்று நடந்திருக்காது.

*1990*, ஜனவரி 2-ம் தேதியன்று, என் அறையில் என்னுடைய வழக்கமான காலை தியானத்தில் இருந்தேன். பொதுவாக இரண்டு அல்லது மூன்று மணி நேரம் இது செல்லும். அந்த வேளையில் ஒருவரும் என்னை தொந்தரவு செய்ய மாட்டார்கள். அன்று வழக்கமான நேரத்தைவிட கூடுதலாக ஒன்றரை மணி நேரம் கடந்து விட்டபடியால், நான் அறையைவிட்டு வெளியே வரவேயில்லை யென்று கண்ட என் மனைவி சற்று கவலையுற்று கதவைத் திறந்தாள். வாயில் நுரையோடு தரையிலே நான் விழுந்து கிடந்ததைக் கண்டு என் மனைவி அதிர்ச்சியடைந்தாள். உடனே அருகாமையிலிருந்த ஒரு பொது மருத்துவரின் ஆலோசனைப்படி, வெகுதூரத்திலுள்ளதும், சகல மருத்துவ வசதிகளும் உள்ளதுமான ஒரு மருத்துவமனைக்கு என்னை விரைந்து கொண்டு சென்றாள்.

அனுபவமிக்க மருத்துவர்கள் என் உடலை பரிசோதித்தபோது, சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பதாகவே என் இதயத் துடிப்பு முற்றிலும் நின்று போனதாக ஒருமித்த கருத்தை கூறினர். அதே நேரத்தில் அன்பு போதகர் P.ஸ்டீபன் என்பவர் இந்த வேதனை நிறைந்த செய்தியைக் கேள்விப்பட்டு முழங்கால்படியிட்டு, என்னுடைய ஜீவனை மீண்டும் உலகிற்கு அனுப்பி வைக்க வேண்டு மென்று இறைவனிடம் மன்றாடினார். ஆண்டவர், அவருடைய கதறுதலைக் கேட்டு, மருத்துவக் குழுவினர் என் இருதயத்தை அடித்து அழுத்தி எடுத்த முயற்சிகளுக்கு பலனாய் என் இருதயத்தை திரும்பவும் செயல்பட வைத்தார். அதன்பிறகு பெரிய இருதய அறுவை சிகிச்சையும் செய்து, மருத்துவர்கள் 'கண்ணின் கருவிழி' போல் எழுபது நாட்களளவும் என்னை அக்கறையுடன் கவனித்தார்கள்.

மருத்துவமனையிலிருந்து சிகிச்சைகள் முடிந்து நான் வீட்டிற்கு வந்தபோது, என்னுடைய இடுப்புக்குக் கீழே இரண்டு கால்களும் வலுவிழந்து விட்டது என்பதை உணர்ந்து வேதனையடைந்தேன். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலிருந்து (சங்கீதம் *23:4*) தப்பித்து வீடு வந்து சேர்ந்தபடியால், என் குடும்பத்தினர் சந்தோஷப்பட்டார் கள். எனினும், நானோ ஏறத்தாழ ஆறு மாதங்கள் படுக்கையிலே இருந்து, ஒவ்வொரு சிறு காரியத்திற்கும் மற்றவர்களுடைய உதவி தேவைப்பட்டதால், உற்சாகமும், நம்பிக்கையும் இழந்த நிலையில் எனக்குள் புலம்பிக் கொண்டேயிருந்தேன். ஒருநாள் காலையில் என்னோடு யாரும் இல்லாதபோது, தனிமையான அந்த வேளையை பிரயோஜனப்படுத்திக் கொண்டு, மித மிஞ்சிய வியாகுலத்தோடு மனமுடைந்து கண்ணீரை ஊற்றி, "ஆண்டவரே, இனி என்னால் பிரசங்கிக்க முடியாததால் நான் இனிமேல் உம்முடைய ஊழியத்தில் உமக்கு உபயோகமாயிருக்க முடியாது. என்னையே ஏன் எனக்கு பாரமாக்கி விட்டீர்? (யோபு *7:20*) என்று கதறிக் கதறி அழுதேன்.

சில நிமிடங்களுக்குள், அந்த அறை முழுவதையும் இயற்கைக்கப்பாற்பட்ட ஒரு பிரசன்னம் வெகுவாய் நிரப்பியது. ஓர் அற்புதமான தெய்வீக நபரை என் கண் முன் கண்டேன். அவர் என்னை பார்த்து எழுந்து நிற்குமாறு உற்சாகப்படுத்தினார். "என்னால் முடியாது. நான் விழுந்துவிடுவேன்" என்று முறையிட்டேன். அவரோ, "இல்லை நீ விழவே மாட்டாய், நான் உன்னைத் தாங்குவேன், எழுந்து நில்" என்று உறுதியாக சொன்னார். என்னுடைய இருதயத்திற்குள் ஒரு துணிவையும் பெலனையும் ஏற்படுத்தி, எழுந்து நடப்பது அரிதான பயிற்சியாயிருந்ததால் மறுத்தேன். இறுதியாக, அதிக நேரம் கழித்து, நான் ஒரு புறம் சுவரைப் பிடித்துக் கொண்டு மறுபுறம் அவர் கையில் சாய்ந்து, நொண்டி கொண்டு நடந்தேன்.

இன்றும்கூட அந்த நபர் யார் என்ற உண்மையை தெரிந்து கொள்ள முடியவில்லை. என்னுடைய ஆவிக்குரிய நண்பர்களும், தேவ மனிதர்களும், அது ஒரு தேவதூதனாகத்தான் இருந்திருக்க முடியும் என்று சொன்னார்கள். ஆனால் அநேகர், அவர் பரிசுத்த ஆவியானவர் தான் என்று கூறினார்கள் (II கொரிந்தியர் *3:17*, அப்போஸ்தலர் *8:29*, *10:19*).

## தூதர்கள் ஞானமுள்ள வார்த்தைகளை கொண்டு வருகிறார்கள்

தானியேல் *9:22*-ல் தேவதூதனானவன் தீர்க்கதரிசியாகிய தானியேலிடம், "தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டு வந்தேன்" என்று கூறுகிறான். அநேக வேளைகளில், இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் ஒரு நபரை எப்படி விடுவிக்க முடியும் என்று அறிந்து கொள்வதில் நாம் குறைவுபட்டவர்களாயிருக்கிறோம்.

பல ஆண்டுகளுக்குமுன், ஆந்திர மாநிலத்தில் உள்ள குண்டூர் என்ற இடத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் என் நினைவிற்கு வந்தது. ஒரு மாலை ஆலய ஆராதனையில் போதகரின் வேண்டுகோளுக்கிணங்க, தனி நபர்கள் மீது கைகளை வைத்து விண்ணப்பிக்கவும், அவர்கள் ஆசீர்வதிக்கப்படவும், விடுதலை செய்யப்படவும், பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ளவும் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். கல்வியறிவில்லாத ஒரு சிறுமியின் மீது நான் கரங்களை வைத்தபோது திடீரென்று அவள் பல பாஷைகளைப் பேச ஆரம்பித்தாள். ஒவ்வொருவரும் ஆச்சரியத்தில் திகைப்படைந்தார்கள். ஆண்டவர் அவளை ஆவியினால் அளவில்லாமல் நிரப்பினார். அவளுடைய முகத்தில் காணப்பட்ட ஒளிரும் பிரகாசம் எல்லோருக்குள்ளும் பேரானந்தத்தைக் கொண்டு வந்தது.

இந்த சூழ்நிலையில், வேறொரு சிறு பெண் மிகவும் பரிதாபமான நிலைமையோடு ஜெபத்திற்காகக் கொண்டு வரப்பட்டாள். உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அவளுடைய உடல் முழுவதும், வெறுப்பூட்டும் குணமாக்க முடியாத கொப்பளங்களால் நிறைந்திருந்தன. அவளுடைய தாயார், "ஐயா, சில வருடங்களுக்கு முன், அவள் பெரியம்மையால் பாதிக்கப்பட்டாள். அது அம்மையென்று தெரியாமல் ஒரு மருத்துவர் தவறான மருந்தை அவளுக்கு கொடுத்தார். திடீரென்று அவளுடைய உடல் முழுவதும் சொறி போன்ற கொப்பளங்கள் வெடித்துக் கிளம்பின. லண்டனிலுள்ள வைத்தியர்களும்கூட அவளைப் பரிசோதித்துவிட்டு, இதை குணமாக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது நாங்கள் ஆண்டவரை மட்டும்தான் நம்பியிருக்கிறோம்" என்றாள். "உங்கள் கணவர் எங்கே?" என்று வினவினேன். அவள் பிரதியுத்திரமாக, "அவர் கடவுளை நம்பாதவரானதால் ஆலயத்துக்கு வெளியே நிற்கிறார்" என்றாள். எவ்வாறு இந்த சிக்கலை சமாளிப்பதென்று குழம்பிய நிலையிலிருந்தேன். பிறகு என்னருகில் ஒரு தேவதூதன் தோன்றி, "அவள் கணவனை ஒரு குப்பி எண்ணெயுடன், நாளையத் தினம் உங்களை சந்திக்கச் சொல்லுங்கள். அதை ஜெபித்து, அவரிடம் திரும்பக் கொடுங்கள். அந்த காயங்கள்மீது அவர்கள் அதைத் தடவட்டும்; தேவன் அவளைக் குணப்படுத்துவார்" என்றான். அந்த தாயிடம் நான் இதனை கூறியபோது அவள் பரவசப்பட்டுப் போனாள்.

மறுநாள் காலையில், என் வீட்டிற்கு அந்த சிறுமியின் தகப்பன் ஒரு எண்ணெய் குப்பியுடன் வந்தார். நான் அந்த எண்ணெயை ஜெபித்து அவர்களுடைய மகள் பயன்படுத்துவதற்காக அவரிடம் கொடுத்தேன். அப்பொழுது அந்த மனிதன் "ஐயா, நேற்றிரவு ஆலய ஆராதனையில் நான் இருந்தேன். ஆனால் வெளியே நின்று கொண்டிருந்தேன். நீங்கள் ஒரு கல்வியறிவில்லாத சிறுமியின் மீது உங்கள் கைகளை வைத்தபோது அவள் லத்தீன் பாஷையில் பேசத் தொடங்கினாள். எனக்கு லத்தீன் மொழி தெரியுமாதலால், அவள் பேசியவற்றையெல்லாம் என்னால் முழுமையாக புரிந்து கொள்ள முடிந்தது. அவநம்பிக்கை, ஐயப்பாடு, நிறைந்த என் இருதயத்தில் குத்தப்பட்டேன். ஐயா, இது எப்படியாகும்" என்று கேட்டார். சர்வவல்ல ஆண்டவரின் பரிசுத்த ஆவியின் வல்லமையையும், 'பலமொழிகளில் பேசக் கூடிய வரத்தையும்' பற்றி நான் விவரமாக அவரிடம் கூறியபோது, அவர் உள்ளமுடைந்தார்; ஆண்டவர் முழுவதுமாக அவரை மறுரூபமாக்கினார்.

ஏறத்தாழ, பதினேழு ஆண்டுகளுக்குப்பின் நான் அவர்கள் மூவரையும் ஹைதராபாத் என்ற வேறொரு பட்டணத்தில் நடந்த கூட்டங்களில் சந்தித்தேன். அந்த பெண் ஒரு அழகிய வாலிபப்

பெண்ணாக தன்னுடைய பெற்றோருடன் என்னை வரவேற்றாள். அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. அவர்கள் யாரென்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. அவர்கள் தங்களை எனக்கு அறிமுகப்படுத்திக் கொண்டு, அந்த ஜெப எண்ணெயைஅவர்கள் மகளின் காயங்களின்மீது பூசியபோது எத்தனை அற்புதமாய் அந்த பெண் குணமாக்கப்பட்டாள் என்று விவரித்து சொன்னார்கள். அந்த பழைய அகோரக் காட்சியின் அறிகுறி கொஞ்சங்கூட அவளுடைய உடலில் காணப்படவில்லை என்றார்கள். "நாங்கள் குடும்பமாக இப்பொழுது ஆண்டவருக்கு சேவை செய்கிறோம். இந்த உலகத்திலேயே சந்தோஷமான மக்கள் நாங்கள் தான்" என்று தகப்பனார் சொன்னதைக் கேட்ட நானும் பேருவுவகை அடைந்தேன்.

தேவதூதன் மூலமாக அவர்களுக்காக ஆண்டவரால் எனக்கு கொடுக்கப்பட்ட அந்த ஞானமுள்ள வார்த்தைகளுக்காக நான் உள்ளத்திற்குள்ளே ஆண்டவருக்கு நன்றி கூறினேன்.

## தூதர்கள் இயற்கைக்கு மேற்பட்ட வல்லமை படைத்தவர்கள்

தேவனுடைய இயற்கைக்கப்பாற்பட்ட ஒரு செயல் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஆகும். இதில் உதவி செய்வதற்கு ஆண்டவருக்கு ஒரு தேவதூதன் தேவையே இல்லை.

எனினும், ஒரு தேவதூதன் வந்து, கல்லறையை மூடி வைத்திருந்த பெரிய கல்லின்மீது உட்கார்ந்தபோது, ரோமப் போர் சேவகர்களின் படையையே அது அதிரச் செய்தது.

> அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள்.
>
> *மத்தேயு 28:2-4*

மறுபடியும், அப்போஸ்தலர் *5:19,20* மற்றும் *12:7,10*-ல், சிறைச்சாலைக் கதவுகள் தூதர்களின் கைகளால் திறக்கப்பட்டு அந்த அப்போஸ்தலரை விடுதலை செய்தது என்று வாசிக்கிறோம். தேவ தூதர்கள் சிறைச்சாலைக்குள் பிரவேசித்தவுடன், சங்கிலிகள் அறுந்து விழுந்தன. ஆம், தூதர்களுக்கு இயற்கைக்கு மேற்பட்டதான வல்லமை இன்றைக்கும் உண்டு.

ஒருமுறை, பரலோகத்தில் ஆண்டவரோடு என்னுடைய சந்திப்பும், அவரோடிருக்கும் பாக்கியமும் நீண்ட நேரம் நீடித்தபின்பு, ஆண்டவராகிய இயேசு ஒரு தேவ தூதனிடம், "நீ உலகத்திற்கு

திரும்புகிற வழியில் 'நரகம்' என்ற இடத்தை இவருக்கு காண்பி'' என்று பணித்தார். 'நரகம்' என்ற வார்த்தையே என்னை நடுநடுங்கச் செய்தது. இருப்பினும், தேவதூதன் மிகவும் சலனமின்றி சாந்தமாகவே இருந்தான். பிசாசுகளின் இராஜ்யத்தின் மற்றும் சாத்தானின் தீயசக்திகளின் சேனையை அவன் அச்சமின்றி எதிர்த்து, அங்கு என்னை அழைத்து சென்றான். இவைகள் எல்லாவற்றையும் குறித்து அடுத்துவரும் அத்தியாயத்தில் நீங்கள் வாசிக்கலாம்.

ஆம், நம் வாழ்வில், நமக்கு எதிராகக் கிரியை செய்யும் தீய சக்திகளுக்கும், தடைகளுக்கும் மேலாக முடிவான அதிகாரம் நம் ஆண்டவரிடத்தில்தான் உண்டு. அதை தேவதூதர்கள் பயன்படுத்தி நம்மை பாதுகாக்கின்றனர். எத்தனை பெரிய சிலாக்கியம் இது!

# சோதனைக்காரனின் தொடுதல்

# 9

...பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

I யோவான் 3:8

ஒரு சமயம் புதிய வெளிப்பாடுகளை கொடுப்பதற்காக, என்னை பரலோகத்திற்கு கொண்டு போக ஆண்டவர் சித்தம் கொண்டார். அவருடன் என் உரையாடல் முடிந்தபின்பு, வலிமை வாய்ந்த ஒரு தேவ தூதனை அழைத்து, அவனுக்கு என்னை பூலோகத்திலுள்ள என் வீட்டிற்கு மீண்டும் கூட்டிக்கொண்டு போக கட்டளையிட்டார். அதோடுகூட, "பூமிக்குப் போகும் வழியில் அவருக்கு நரகத்தையும் காட்டி விடு" என்று பணித்தார். 'நரகம்' என்ற வார்த்தையைக் கேட்டவுடன் விவரிக்க முடியாத, அச்சம் என் ஆத்துமாவைப் பற்றிப் பிடித்தது. ஆயினும் உடனே நாங்கள் அங்கு போய் சேர்ந்தோம்.

பரலோகத்துடன் ஒப்பிடக்கூடிய சில காரியங்களையும், அதற்கு எதிர்மாறான சில காரியங்களையும் கண்டு அதிர்ந்தேன். முதலாவது நான் கண்ட முக்கிய எதிர்மாறான காரியம், இருளின் அந்தகாரம். பரலோகமானது, சந்தோஷமும், மகிழ்ச்சியும், திருப்தியும், ஒளிமயமுமான இடம். ஆனால் நரகத்தின் முழு பகுதியிலும் மூச்சுத் திணறுமளவுக்கு இருள் காணப்பட்டது. எவ்விடத்திலும் மங்கலான வெளிச்சம்தான் தெரிந்தது. நரகம் முழுவதுமே மிகவும் சோர்வூட்டுவதாயிருந்தது.

## சாத்தானின் சிங்காசனம்

ஆச்சரியமான வேறொரு இடத்திற்கு தேவதூதன் என்னை அழைத்துச் சென்றான். அதுதான் சாத்தானின் சிங்காசனம். பரலோகத்தில் ஆண்டவரின் சிங்காசனம் எப்படி இருக்குமோ அதே மாதிரி, அதே அழகுடன் அங்கும் இருந்தது. அவனுடைய தூதர்கள் சிங்காசனத்தை சுற்றி சூழ்ந்திருந்தார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவனுக்கு கண் கவரும் அழகு இருந்தது. தேவதூதன் என் காதுகளில் கிசு கிசுத்தான், "அதுதான் 'லூசிபர்', விழுந்து போன தூதன், இப்போது **சாத்தான்** என்றழைக்கப்படுகிறான்" என்று சொன்னான். அவனுடைய தோற்றம் கவர்ச்சியானதும், மனத்தில் பதிவதும், கெம்பீரமுமானதுமாயிருந்தாலும் அவனுடைய முகத்தில் ஒன்று குறைவுபட்டது. பரலோகத்தில் உள்ள ஒவ்வொரு தூதனின் முகத்திலும் காணப்படும் 'சந்தோஷம்' தான் அது. அவன் மனதிற்குள் ஆழமாய் பதிந்துள்ள வருத்தம், கலக்கம், கசப்பு முதலியவை அவன் முகத்தில் பிரதிபலித்தது. வேதாகமத்தின் பின்னணியில் 'சாத்தானை

யும்', 'தள்ளப்பட்ட தூதர்களையும்' பற்றிய பார்வை உண்மையான பயனைத்தரும்.

பின்வரும் வேதவாக்கியங்கள் சாத்தானுடைய **முந்திய மகிமை யையும், வீழ்ச்சியையும்** பற்றி விரிவாகக் கூறுகின்றன.

> ....நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்.
>
> *எசேக்கியேல் 28:12*

> நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்;...
>
> *எசேக்கியேல் 28:13*

> நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்.
>
> *எசேக்கியேல் 28:14*

> ...ஆகையால் நான் உன்னைத் தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப் போடுவேன்.
>
> *எசேக்கியேல் 28:16*

> அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே!
>
> *ஏசாயா 14:12*

இந்த வேத வாக்கியங்கள் யாவும், சாத்தான் பிரதான தூதர்களில் 'கேருபீன்களில்' ஒருவனாக, தேவனோடு அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவுவதற்காக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன் என்றும், அந்த உயர்ந்த ஸ்தானத்தை எப்படி இழந்து போனான் என்றும் வெளிப்படுத்துகின்றன. அவனுடைய **வீழ்ச்சி**க்கு ஒரே காரணமாயிருந்தது **பெருமை**. பின்வரும் வேத வாக்கியம் அதற்கு எடுத்துக் காட்டாக விளக்குகிறது.

> அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது.
>
> *I தீமோத்தேயு 3:6*

'கேருப்' பரலோகத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளப்பட்ட போது, அவனுடன் சேர்ந்துகொண்டு தேவனுக்கு விரோதமாய் கலகம் பண்ணின மற்ற தூதர்களும் பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டார்கள். அவர்கள் **நித்திய சங்கிலிகளினால் கட்டப்பட்டு நியாயத்தீர்ப்பின் நாளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்'** என்று திருமறை கூறுகிறது.

பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தது:

II பேதுரு 2:4

தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்.

யூதா 6

இந்த தள்ளப்பட்ட ஆவிகள், வான மண்டலங்களில் எங்கேயோ வைக்கப்பட்டிருக்கின்றன என்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்கள் குறிப்பிடுகின்றன.

....வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும்....

எபேசியர் 6:12

...ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய...

எபேசியர் 2:2

## சாத்தானின் உருவமைப்பு

என்னுடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் நான் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டு, பல இன்னல்கள், தேவைகள், எதிர்ப்புகள் போன்றவற்றையெல்லாம் சந்திக்க வேண்டியதாயிருந்தது. ஆகவே உபவாசத்துடன்கூடிய ஆழ்ந்த ஜெபத்தோடு, ஆண்டவர் இயேசுவின் முகத்தை தேடினேன். ஒருநாள் நான் ஜெபிக்கும்போது, வேறொரு நபரின் பிரசன்னம் என் அறைக்குள் பிரவேசிப்பதை உணர்ந்தேன். அவன் என் விண்ணப்பத்திற்கு பரலோகத்திலிருந்து விடையை கொண்டு வந்திருக்கும் தேவதூதன் என்று முதலில் கருதினேன். என்றாலும், இந்த வருகையின் பிரசன்னம் என்னை மகிழ்விப்பதாகவோ அல்லது என் பாரங்கள், வேதனைகளிலிருந்து என்னை விடுவிப்பதாகவோ தெரியவில்லை. அதற்கு பதிலாக ஒரு புதுவிதமான சோர்வு, கைவிடப்பட்ட உணர்ச்சி, புறக்கணிக்கப்பட்ட நிலை இவைகளையே கொண்டு வந்தது. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அவனை உண்மையாக கூர்ந்து பார்த்தேன். அப்போதுதான் அவன் சாத்தான் என்று தெளிவாக உணர்ந்து கொண்டேன். **அவன் மிகவும் அழகானவனாயிருந்த போதிலும், அவனுடைய முகம் ஒரு மந்தமான நிலையையும், மனச் சோர்வையுமே பிரதிபலித்தது.**

எனினும், அவன் என்னை அணுகியமுறை எனக்கு மிகுந்த வியப்பைக் கொடுத்தது. நடத்தையிலும், பழக்கவழக்கத்திலும் ஒரு **பூரண மனிதன். அவனுடைய வார்த்தைகள் மனதைத் தொடுபவையாகவும், மெத்த அறிவாற்றல், பகுத்தறிவு நிறைந்ததாகவும் இருந்தது.** அவன் என்னிடம், "ஐயா, நீர் ஆண்டவராகிய இயேசுவுக்கு எத்தனையோ

வருடங்களாக சேவை செய்து வருகிறீர். இருப்பினும், அவரிடமிருந்து நீர் பெற்றுக்கொண்டதுதான் என்ன? துயரம், இழப்புகள், பொருளாதார நெருக்கங்கள், நஷ்டங்கள், அவதூறான பொய்க் குற்றச்சாட்டுகள், இழிச்சொற்கள் முதலியவைதானே. ஆனால் இன்று, நீர் உம்முடைய ஆண்டவரை விட்டு விலகி **எனக்கு** சேவை செய்தால், முழு உலகிற்கும் **என்** நாமத்தினாலே உம்மை மாபெரும் தீர்க்க தரிசி ஆக்கிவிடுவேன். பொன்னும், வெள்ளியும் உம்முடைய பாதத்தில் வந்து கொட்டும். உமது வாழ்க்கை முழுவதிலும் எந்த பிரச்சனையுமே இருக்காது. **என்னுடைய தீர்க்கதரிசி** என்றழைக்கப் படுவீர்" (லூக்கா 4:6,7) என்றான்.

என்னுடைய உபத்திரவங் களைப் பற்றி அவன் என்னவெல்லாம் கூறினானோ அவை என்னை அதிகமாய் தொட்டது. என்னுடைய மனக்கணக்கின்படி, அவன் எனக்கு கொடுக்க முன் வந்தவைகள் மறுப்பதற்கு கடினமாக இருக்கக்கூடிய அளவிற்கு மனதிற்கு கவர்ச்சிகரமாக இருந்தது. மறுபக்கம், சரியான நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்து, 11-2-1955 அன்று, நான் கடந்து சென்ற பரிதாபமான பாதையை ஒருகணம் என் கண்முன் கொண்டு வந்து நிறுத்தினார். என்னையே மாய்த்துகொள்ள, ஓடும் விரைவு ரயிலின் முன்னே குதிப்பதற்காக ரயில் பாதையை நோக்கி நான் விரைந்த காட்சியை எனக்கு காண்பித்தார். மேலும், அவர் அமைதியான குரலுடன், "உன் உயிரை பேரிழப்பிலிருந்து காக்கவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் சொந்த உயிரையே கொடுத்துள்ளார். பிசாசு உனக்கு என்ன செய்தான்?" என்று கேட்டார்.

நான் ஆண்டவரை மறுதலித்து, உலகத்தின் பின்னே ஓடுவதற்காக பிசாசு என்னைச் சுற்றிலும் இந்த கண்ணியை வைத்திருக்கிறான் என்பதை அப்பொழுது தெளிவாக உணர்ந்து கொண்டேன். வேறொன்றையும் யோசிப்பதற்கு இடம்கொடாமல், "இயேசு தான் தன் உயிரையே எனக்காகக் கொடுத்தார். எனக்கும் உனக்கும் சம்பந்தமே இல்லை" என்று பிசாசிடம் கூறி விட்டேன். சாத்தான் என்னை சோதிக்கவும் தன் பக்கமாகக் கவர்ந்திழுக்கவும் முயற்சித்த அப்பேரழிவிலிருந்து அந்த நாளில் ஆண்டவர் என்னை அவ்வண்ண மாக காப்பாற்றினார். **ஆம், அவன் தந்திரமுள்ள சோதனைக்காரன்** (மத்தேயு 4:3, I தெசலோனிக்கேயர் 3:5).

மேற்கொண்டு தொடருவதற்கு முன்பாக, ஒரு வியத்தகு உண்மையை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். தேவ தூதனும் நானும் நரகத்திலுள்ள மெய்யான காரியங்களை சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, சாத்தானாலோ அல்லது அவனுடைய தூதர்களாலோ நாங்கள் அங்கு இருப்பதை சிறிதளவும் உணரமுடியவில்லை. தேவன் தம்முடைய இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமையினால் அவருடைய கைக்குள் நம்மை மறைத்து வைத்திருக்கும் விதத்தை நம்மால் கற்பனைகூட செய்ய முடியாது. பின்வரும் மூன்று வேதவாக்கியங்களும் இதை உறுதிப்படுத்துகின்றன.

*...ஆனாலும் கர்த்தர் அவர்களை மறைத்தார்.*

*எரேமியா 36:26*

*...என்னைத் தமது அம்பறாத் தூணியிலே மூடி வைத்தார்*

*ஏசாயா 49:2*

*...என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்.*

*ஏசாயா 51:16*

நாங்கள் சாத்தானின் சிங்காசனத்தை நெருங்கும்போது அவன் தன்னுடைய நம்பிக்கைக்குரிய ஆயுதப்படை அதிகாரிகளுடன் மிகுந்த கவனத்துடன் ஒரு விவாதத்தில் ஆழ்ந்திருந்தான். இரண்டு முக்கியமான விஷயங்களைப் பற்றி அவர்கள் ஆய்வுரை நடத்திக் கொண்டிருந்தனர். அவையாவன:

## 1. தேசங்களை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்

சாத்தான் அவனுடைய வீழ்ச்சிக்குமுன், தேவ பிரசன்னத்திலிருந்த போது **தெய்வீக ஞானம்** பெற்று அறிவாற்றல் நிறைந்தவனாக இருந்தானென்று பின்வரும் வேதவாக்கியம் கூறுகிறது:

*...., நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்.*

*எசேக்கியேல் 28:12*

இன்றும்கூட இந்த ஞானத்தைத் தன்னுள் வைத்துக் கொண்டிருக்கிறான். தேவதூதனும், நானும் அவனுடைய சிங்காசனத்திற்கு அருகாமையில் இருக்கும்போது, அவனுடைய ஞானமுள்ள வார்த்தைகளைக் கேட்டு மெய்யாகவே அதிசயித்தோம். அவன் தன் தூதர்களுடன் ஆலோசித்து கொண்டிருந்ததிலிருந்து நான் புரிந்துகொண்டதென்னவெனில், அவன் **தனிப்பட்ட நபர்களின் வாழ்விற்குள்** நுழைவதில்லை. அதற்குமாறாக, **தேசங்களையே மொத்தமாக கைப்பற்றுவதற்கு** அவன் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறான். மக்கள் வியப்புடன் அவனைப் பற்றி கூறுவதை வேதம் பின்வருமாறு கூறுகிறது:

*...இவன்தானா பூமியைத் தத்தளிக்கவும், ராஜ்யங்களை அதிரவும் செய்து,*

*ஏசாயா 14:16*

எனவே, உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலும், மிகவும் மோசமான வாழ்க்கை நடத்தும் மக்களைக் கண்டுபிடித்து, அந்த ஒருவன் மூலமாக அந்த நாடு முழுவதின் அதிகாரத்தையும் தனக்கே உரித்தாக்கிக் கொள்வதற்காக, தன்னை பின்பற்றவும், முடிவிலே அந்த தேசத்தையே கைப்பற்றவும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறதை கண்டேன். பின்வரும் வாக்கியத்தின் பொருளை அவன் நன்கு புரிந்துள்ளான்.

*மனுபுத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது, துன்மார்க்கர் எங்கும் சுற்றித் திரிவார்கள்.*

*சங்கீதம் 12:8*

தங்களுடைய பேச்சுத் திறமையினால் முழு தேசத்தையும் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்ளக்கூடிய இப்படிப்பட்ட இரக்கமற்ற, தீமை செய்யத் தயங்காத தலைவர்களை தெரிந்து கொள்ளுவதே அவனுடைய செயல்திறன். பிறகு அந்த தலைவர்களுடைய தடுமாற்றமான செயல்பாடுகள்மூலம், முழு தேசத்தையும் ஆவியிலும், ஆத்துமாவிலும் அழிவான பாதைக்கு நேராக நடத்துகிறான். இறுதியாக தேசம் முழுவதும் சாத்தானின் ஆளுகைக்குள் வந்து விடும். அதன்பிறகு அந்தந்த நாட்டு மக்களுடைய வாழ்விலும் அவனால் புகுந்து விளையாட முடியும்.

## 2. தேவ ஊழியர்களுடைய வாழ்வுக்கு நாசம் விளைவித்தல்

சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் அடுத்த இலக்கு, ஆண்டவருக்காக வல்லமையாய் ஒவ்வொரு நாட்டிலும் உபயோகப்படுத்தப்படும் 'தேவனுடைய ஊழியக்காரர்' என்பதை அறிந்து பெருந்திகில் அடைந்தேன். அவனுடைய விவாதங்களை கவனித்தபோது நான் கலக்கத்தால் கூனிக் குறுகிப் போனேன். இவ்வுலகில் முன்னணியிலுள்ள தேவனுடைய ஊழியர்களில் எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமான சிலரின் பெயர்களை உச்சரித்துக் கொண்டிருந்தான். அந்த ஒவ்வொரு தேவ மனிதனின் வாழ்க்கையில் காணப்படும் குறைகளில் ஏதாவது ஒன்றை அவனால் குறிப்பிட்டு சொல்ல முடிந்தது. அந்த குறிப்பிட்ட பெலவீனத்தை தாக்கினால் போதும், தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாக அவர்களால் தைரியமாக நிற்க முடியாது; அதினிமித்தம் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்விலும், சமுதாய வாழ்விலும் தங்களுக்கு இருக்கும் அந்தஸ்தையும் இழந்து விடுவார்கள் என்று பெருமையோடு பேசிக் கொண்டிருந்தார்கள். சாத்தானுடைய திட்டம் என்னவென்றால், இதன்மூலம் அந்த தேவ ஊழியர்களிடமிருந்து தனக்கு வரக்கூடிய எதிர்ப்புகளையும், தொந்தரவுகளையும் துல்லியமாக அப்படியே துடைத்துப் போட முடியும் என்பதே.

என் வாழ்நாள் முழுவதும் பரிசுத்தமாகவும், தூய்மையாகவும் ஆண்டவரால் அங்கீகரிக்கப்பட்டும் நடப்பதற்கு கீழ்க்கண்ட வசனத்தின்படி நான் பெரிதும் எச்சரிக்கப்பட்டேன்.

> ...நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.
>
> I பேதுரு *1:16*

## நரகத்தில் பல துறைகள்

தேவதூதனும் நானும் சாத்தானின் ராஜ்யத்தில் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். பலவித நாசவேலைகளைச் செய்வதற்காக சிறப்புப்

பிரிவுகள் செயல்பட்டுக் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக, **பொய்யின் ஆவிகள்** (I இராஜாக்கள் *22:23*) உண்மையற்ற விஷயங்களை நம்பச் செய்து, மக்களை திசை திருப்புகின்றன. **வஞ்சிக்கும் ஆவிகள்,** பிசாசின் தூதர்களை ஆண்டவரின் தூதர்கள் என்று மக்கள் தவறுதலாக எண்ணம் கொள்ள தூண்டிவிடுகின்றன (I தீமோத்தேயு *4:1*, II கொரிந்தியர் *11:14,15*). சில குறிப்பிட்ட ஆவிகளுக்கு, பில்லி சூனியங்கள் குறிசொல்லுதல் என்பவைகளில் மக்களை ஈடுபட வைக்கும் வேலை குறிக்கப்பட்டுள்ளது (II இராஜாக்கள் *9:22*, II நாளாகமம் *33:6*). பலவிதமான நோய்களையும், சரீர பெலவீனங்களையும் (லூக்கா *13:11*, அப்போஸ்தலர் *10:38*) மக்களுடைய சரீரத்துக்குள் புகுத்தும் பொறுப்பு மற்ற ஆவிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

**மனுக்குலத்தின் நித்திய அழிவிற்காகவே உருவாக்கப்பட்ட அவனுடைய துறைகளை வடிவமைப்பதில் சாத்தான் ஒருபோதும் திறமையற்ற திட்டங்களை வகுப்பதேயில்லை.**

ஒருமுறை, தன் மருத்துவ சம்பந்தமான நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு மேற்கோள் வாக்கியத்தை மருத்துவப் பணியாளர் ஒருவர் என்னிடம் கூறுகையில், "கோடானகோடியான தீய நோய்க் கிருமிகள் மனித சமுதாயத்தின் உயிர்களை எப்பொழுதும் சூழ்ந்திருந்தாலும், அந்த மனித உயிர்கள் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பது மிகப் பெரிய அற்புதமாகும்" என்று கூறினார்.

நோய்க்கிருமிகள் மட்டும் மனித உயிரை அழிக்கச் செயல்பட்டுக் கொண்டிராமல், தீய சக்திகளும் மனுக்குலத்தையே அழிக்கத் திட்டம் தீட்டி வருகின்றன என்பது உண்மை.

மேலே தொகுத்துக் காட்டியதுபோல், சாத்தானுடைய ராஜ்யத்தில், **நன்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட துறைகள் உள்ளன**. தலைமை தாங்குவதற்கும் வழிநடத்துவதற்கும் ஒவ்வொரு துறைக்கும் ஒரு தலைவர் உண்டு. இந்த எல்லாத் தலைவர்களிலும் **நோய் துறைக்கான** தலைவனின் தோற்றம் மிக பயங்கரமானதாகவும், வெறுப்பூட்டுவதுமாயிருந்தது. அவனுடைய உருவத் தோற்றமே எவரையும் நடு நடுங்கவும், நொறுங்கி விழவும் செய்யும்.

இந்த நோய் துறையினால் வேதனையான அனுபவங்கள் பலவற்றை அடைந்துள்ளேன். அவற்றில் சிலவற்றை நான் இங்கு உங்களுக்கு சொல்லட்டும். ஒருமுறை, கடுமையான நோயினால் நான் தாக்கப்பட்டு, மிகவும் சோர்வுற்றிருந்தேன். நாட்கள் செல்ல செல்ல அது இன்னும் மோசமாகிக் கொண்டே இருந்தது. ஜெபமோ, மருந்துகளோ எதுவும் என்னை இந்த உபாதையிலிருந்து விடுவிப்பதாகத் தெரியவில்லை. பிசாசின் அந்தகாரத்தின் வல்லமையினால் நான் கட்டப்பட்டிருப்பதை தெளிவாக உணர்ந்து மிகவும் சோர்ந்து போனேன். தப்பிக்க வழியே இல்லை.

அப்பொழுது ஒருநாள், விவரிக்க முடியாத ஒரு வியாகுலம் என்னை பற்றிக் கொண்டது. உண்மையாகவே நான் வாழ்க்கைப் பாதையின் முடிவுக்கு வந்துவிட்டதைபோலவே உணர்ந்தேன். ஆண்டவருடைய தெய்வீக இடைப்பாட்டுக்காக கதற ஆரம்பித்தேன். பரிசுத்த ஆவியானவர் அப்பொழுது என்மீது இறங்கினார். நான் ஒரு தரிசனம் கண்டேன்.

அழகாக அமைக்கப்பட்டிருந்த ஒரு சாலையில் நான் சென்று கொண்டிருக்கக் கண்டேன். சடுதியாக அந்த சாலை தொடர்ச்சியின்றி முடிவாகிவிட்ட பயங்கரத்தையும் பார்த்தேன். அந்த சாலையின் முடிவில் காணப்பட்ட ஆழமான ஒரு பள்ளத்தாக்கு என்னை பேரச்சத்திற்குள்ளாக்கியது. பள்ளத்தாக்கின் விளிம்பில் நான் மலைத்துப்போய் நிற்கும்போது, கோடிக்கணக்கான தீய சக்திகள் (நரகத்தில் உள்ள நோய் துறையில் பார்த்ததுபோல) என்னை நோக்கி சைகை காட்டி ஆவேசம் செய்து கொண்டிருந்தன. என்னுடைய இரத்தத்திற்காக கூச்சல் போட்டு அலறிக் கொண்டிருந்தன. “இந்த மனுஷனின் இரத்தம் எங்களுக்கு வேண்டும். இவன் தான் எங்களுடைய அடிமைகளை, ஆண்டவருடைய ராஜ்யத்துக்கு சுதந்தரவாளிகளாக மாற்றிக் கொண்டிருக்கிறான்” என்று அவைகள் கதறின. அந்த ஆழமான பள்ளத்தாக்கையும் தாண்டி அதிக உயரத்திற்கு குதித்து என்னை எட்டிப் பிடிக்க முயற்சித்து கொண்டிருந்தன. நானோ என்ன செய்வதென்றறியாது திகைத்துக் கொண்டிருந்தேன்.

அத்தருணத்தில் தானே பரலோகத்திலிருந்து ஒரு பெரிய கரம் இறங்கி வருவதைப் பார்த்தேன். ஒரு குரல் “இதன்மீது ஏறிக்கொள்” என்று கூறியது. அந்த கரத்தில் நான் ஏறியவுடன், அது என்னை தூக்கிக் கொண்டு அந்த பள்ளத்தாக்கைக் கடந்து சென்றது. பள்ளத்தாக்கிற்குள் இருந்த அந்த கரிய உருவங்கள் மூர்க்கத்துடனும், முழு சீற்றத்தோடும் தங்களால் இயன்றவரை உயரக் குதித்து, அந்த கரத்திலிருந்து என்னை பிடித்து கீழே இழுக்க முயற்சித்ததால் நான் மென்மேலும் நடுக்கம் கொண்டேன்.

ஆனாலும், பள்ளத்தாக்கை கடப்பதற்கு அந்த கரம் அவசரப்படவே யில்லை. அந்த கரிய உருவங்கள் சோர்வுற்று களைப்புறும் அளவிற்கு உயரமாய் தாவுவதற்கு அனுமதித்தது. பள்ளத்தாக்கின் அடுத்த பக்கம்வரை அந்தக் கரம் என்னை நிதானமான முறையில் உயர தூக்கி சென்றது. அங்கே எனக்காக ஒரு வியத்தகு காட்சி காத்துக் கொண்டிருந்தது. பள்ளத்தாக்கின் மறு முகப்பிலிருந்து அழகாக அமைக்கப்பட்டிருந்த மற்றொரு சாலை ஆரம்பமானது. என்னைத் தாங்கிய அந்தக் கரம் மெதுவாக அந்த சாலையின் ஓரத்தில் இறக்கி விட்டபோது ஒரு குரல் “முன்னேறிச்செல், பின்னாகத் திரும்பிப் பார்க்காதே” என்று சொல்லக் கேட்டேன். அதன்பின் அந்த பாதை வழியே மிகக் களிப்புடன் நான் நடந்து சென்றேன். அதோடு அந்த தரிசனம் முடிவுப் பெற்றது.

அதுவரை என்னை சூழ்ந்திருந்த அந்த இருள் இப்பொழுது மறைந்திருப்பதை உணர்ந்தேன். தேவனின் வெளிச்சம் என்னை சுற்றிலும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வெகு விரைவில் நான் குணமடைந்து, என்னுடைய ஊழியத்தை அதே அபிஷேகத்துடனும், வல்லமையுடனும் முன்போலவே தொடர்ந்து செய்யவும் முடிந்தது.

ஒருமுறை என்னுடைய நுரையீரல்களில் விநோதமான ஒரு பிரச்சனை எழுந்தது. வெகு காலமாக அதினால் இன்னலுற்றேன். மருத்துவர்கள், நான் என் கடைசி நேரத்தை அடைந்து விட்டதாகக் கருதினர். மேலும் ஒரு வாரம் மட்டுமே நான் உயிர் வாழ்வேன் என்றனர். இந்த நோயின் கொடூரத்தினால் நான் எலும்பும் தோலுமாகி விட்டேன்.

ஒருநாளிலே, ஒரு கடுமையான இருள் என்னை சூழ்ந்து கொண்டதால் ஆவிக்குரிய ரீதியாகவும், மனரீதியாகவும் தடுமாறிக் கொண்டிருந்தேன். ஆண்டவரிடம் ஜெபிக்கவோ, அவரைத் துதிக்கவோ இயலாதவனாய் தேவ சமுகத்திலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டவன்போல் உணர்ந்தேன். எங்கு பார்த்தாலும் ஒரே இருள் மயம்.

அப்பொழுது என் மனைவியை என்னருகே அழைத்து, நான் என் வாழ்வின் முடிவுநிலையை அடைந்து விட்டதாக உணருகிறேன் என்று சொன்னேன். என் மனைவியோ, தேவன், என் ஊழியத்தைக் குறித்து அளித்திருந்த தீர்க்கதரிசனங்களில் இன்னும் நிறைவேறாமல் இருக்கும் தீர்க்கதரிசனங்களை நினைவுபடுத்தினாள். அதோடு, “அந்தத் தீர்க்க தரிசனங்கள் அனைத்தும் நிறைவேறும்வரை ஆண்டவர் உங்களை எடுத்துக் கொள்ள மாட்டார். நிச்சயம் உங்களை உயிரோடு வைப்பார்” என்று சொல்லி என்னை உற்சாகப்படுத்தினாள். என்றாலும், அவள் அந்த அறையைவிட்டு சென்றபின்பு, நான் தனிமையை அதிகமாய் உணர்ந்து, மீண்டுமாய் எல்லாப் பக்கங்களிலும் அலையலையாய் காரிருளினால் சூழப்பட்டேன். பின்வரும் வசனம் எனக்கு மெய்யாயிற்று:

> சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி, வெகுகாலத்துக்கு முன் மரித்தவர்கள் போல் என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான்.
>
> *சங்கீதம் 143:3*

இத்தகைய நம்பிக்கையற்ற நிலையில் என் கண்களிலிருந்து கண்ணீர் கட்டுக்கடங்காமல் வழிந்தது.

திடீரென்று பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் அந்த அறை முழுவதையும் நிரப்பிற்று. அருள்நாதர் இயேசு என்னருகே தோன்று வதைக் கண்டேன். அவர் நேரடியாக என்னிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டார். “அதிகமான பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், ஆவியின் வரங்களையும் பெற்று, உன்னுடைய ஊழியத்தில் மென்

மேலும் வல்லமை நிறைந்து விளங்குவதற்காக, எந்த அளவிற்கும் வேதனையை சகித்துக் கொள்வேன் என்று நீ அநேக முறை என்னிடம் சொல்லவில்லையா? அப்படியிருக்க, இப்பொழுது நீ எதற்காக அழுகிறாய்? இந்த சிறு வேதனையைக்கூட உன்னால் சகித்துக் கொள்ள முடியாதா?" என்று கேட்டார். உடனே நான் அவரிடம், "ஆண்டவரே, இந்த வேதனை நான் தாங்க கூடாத அளவுக்கு மிகவும் பாரமாயிருக்கிறது, என் முறுமுறுப்பை மன்னித்துவிடும்" என்று சத்தமாக கதறினேன்.

இரண்டாவதாக, அவர் என்னிடம் கேட்ட கேள்வி "ஆவிக்குரிய வட்டாரத்தில் உனக்கு அநேக நண்பர்கள் இருந்தார்கள். நீ எப்பொழுது கஷ்டத்தில் இருந்தாலும் அவர்கள் உன்னோடுகூட இருந்து, அதிலிருந்து விடுதலைபெற உனக்கு உதவுவதாக உனக்கு வாக்களித் தார்களே! அவர்கள் இப்பொழுது எங்கே?" என்று கேட்டார். நான் மிகுந்த மனத்தாழ்மையுடன், "ஆண்டவரே, எனக்கு ஒன்றும் தெரியாது" என்று பதிலளித்தேன். அப்பொழுது ஆண்டவர், "**மனிதன் மனிதனே**. ஆனால், **தேவன் தேவனே** என்று இப்பொழுது நீ அறிவாய். உன் நண்பர்கள் ஒருவரும் உனக்கு உதவும்படி இப்பொழுது வரவில்லை. ஆனால், உனக்கு உதவி செய்யும்படி நானே வந்திருக் கிறேன். ஆகவே எந்த நேரமும் நீ **என்னை** மட்டுமே நம்பி, என்னையே சார்ந்து கொள்ள கற்றுக் கொள்" என்று கூறினார்.

மூன்றாவதாக, அவர் மற்றொரு காரியத்தையும் சுட்டிக் காண்பித்தார். "யோவான் 15:2-ன்படி, நீ ஒரு கனிதரும்செடி. எனவே, எல்லாவிதத்திலும் நீ அதிக கனிகளைக் கொடுக்கும்படி பரமபிதா உன்னை சுத்தம் பண்ணுவது இயற்கையே. பெரும் திரளான மக்களுக்கு விடுதலையையும், சுகத்தையும், ஆரோக்கியத்தையும் கொண்டு வரும்படி நீ தேவனால் பயன்படுத்தப்பட்டு வருகிறாய். நீ இந்தவிதமான அனுபவங்கள் ஊடாக கடந்து செல்லாவிட்டால், என் ஜனங்கள் தங்கள் நோய்ப் படுக்கையில்படும் வேதனைகளை நீ அறிய மாட்டாய். அதனால்தான் நீ அந்த வேதனையின் வழியாக கடந்து செல்லும்படி நான் அனுமதித்தேன்" என்றார்.

இவை அனைத்தையும் சொன்னபின்பு, முடிவாக "இப்பொழுது நான் உன்னை சுகமாக்குவேன். இந்த தலைமுறைக்கு எல்லா விதத்திலும் என்னுடைய சுகமளிக்கும் வல்லமையை நீ சுமந்து செல்லுவாய்" என்று கூறினார்.

உலகத்திற்கு ஒளியாயிருக்கும் (யோவான் 8:12, 9:5) இயேசு கிறிஸ்து, கிருபையாய் எனக்கு அருளிச் செய்த இந்த தரிசனத்தைப் பற்றி நான் என்னவென்று கூறுவேன்? **நோய் துறையின்** பொறுப்பாளியான பிசாசு என் சரீரத்தில் கொண்டு வந்த ஒவ்வொரு துளி இருளையும், ஆண்டவர் முற்றிலுமாக நீக்கி விட்டார். அப்பொழுது ஒரு பிரகாச மான ஒளியை நான் கண்டேன். என் சிந்தனையிலும், சரீரத்திலும் என்

வீட்டிலும் ஒரு அளவற்ற ஆச்சரியமான தெய்வீகப் பிரசன்னத்தை உணர ஆரம்பித்தேன். என்னுடைய எல்லா வியாதிகள், வேதனைகள் மற்றும் காரிருள் ஓடி மறைந்தன. நான் பரிபூரணமாக குணமடைந்து, என் அலுவலகப் பணியையும், தேவ ஊழியத்தையும் மறுபடியும் தொடரலானேன்.

1990ஆம் ஆண்டு ஜனவரி மாதம், இருதய நோய் என்னைத் தாக்கியது. இருதய நோய் வழியாக சென்றபோது, மிகுந்த வேதனையுற்றேன். ஏறக்குறைய பதினைந்து மணி நேரங்கள் எனக்கு அறுவை சிகிச்சை நடந்தது. நான் பிழைப்பேனென்று ஒருவரும் எதிர்பார்க்கவேயில்லை. ஆண்டவருடைய பெரிதான கிருபையினால், நான் பிழைத்துக் கொண்டேன். ஆனால், நாட்கணக்காக ஒருவித **மனபிரம் மையுடனும், திகிலூட்டும் எண்ணங்களுடனும்** காணப்பட்டேன். இரவு நேரங்களில் நான் சிறிது நேரமாவது தூங்குவதற்கு ஏதுவாக எனக்கு அதிக அளவில் மயக்க மாத்திரைகளை கொடுத்தார்கள். இருப்பினும், என்னால் ஒரு நிமிடம்கூட தூங்க முடியவில்லை.

சில நேரத்தில், ஒரு பெரிய மலை உச்சியின்மேல் நான் தனிமையாய் படுத்திருப்பதைப்போன்று உணர்வேன். சில சமயங்களில் தனிமையாய், சீறி வரும் கடல் அலைகளின் மத்தியிலே கைவிடப்பட்டவனாய் கடற்கரையிலே இருப்பதைப் போல உணர்வேன். சில வேளைகளில், சிங்கம், புலி போன்ற பயங்கரமான மிருகங்களின் மத்தியில், அவைகள் என் மேல் உரசிக் கொண்டு செல்வதைப்போலவும் நடுக்காட்டில் நான் அநாதையாய் தவிப்பதைப் போலவும் உணர்வேன்.

மெய்யாகவே, நரகத்தின் அந்தகார சக்திகளின் இந்த பயங்கரமான எதிர்ப்புகளை நான் சந்தித்தேன். இந்த வேதனைகளையும், சித்ரவதைகளையும் தாங்க முடியாது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஆண்டவரை நோக்கி, இவ்வுலகத்திலிருந்து என்னை எடுத்து, அவரோடு பரலோகத்தில் சேர்த்துக் கொள்ள அவரிடம் கெஞ்சிக் கேட்க வேண்டுமென்று எண்ணி விட்டேன். சரியாக அதே வேளையில் என் அறையில் என்மீது முழுமையாக பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். என் அறையில் இருந்த மற்றவைகளெல்லாம் என் கண்களுக்கு மறைந்தன. முழு உலகத்தின் சோகத்தையும் என் மகன் பால் தினகரனின் முகத்தில் பார்த்தேன். அவனுடைய கண்கள் என்னிடம் பின்வருமாறு பேசுவதாக எனக்கு தெரிந்தது. “அப்பா, நீங்கள் உலகத்தைவிட்டுப் போவதைத் தெரிந்து கொண்டால், ஊழியத்தையும், பல்கலைக்கழக பொறுப்புகளையும் என்னால் எவ்வாறு தனியே சுமக்க முடியும்?” அப்பொழுது பரிசுத்த ஆவியானவர், “நீ பரலோகம் சென்று விட்டால், பல்கலைக்கழகம் நிறுவுவதற்காக வாங்கப்பட்ட ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் கடனை யார் திரும்ப செலுத்துவார்கள்?” என்று அழுத்தமாகக் கேட்டதுபோல் எனக்கு தெரிந்தது.



அவர் (இயேசு) வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள் (யோவான் 6:2)
சகோதரர் தினகரன் மற்றும் Dr.பால் தினகரன் நடத்தும் ஒவ்வொரு ''இயேசு அழைக்கிறார்'' பொதுக்கூட்டத்திலும் இத்திருவசனக் காட்சி அப்படியே பிரதிபலிக்கிறது. அப்படிப்பட்ட கூட்டம் ஒன்றை இங்கு காணலாம்.

பரிசுத்த ஆவியானவரின் இந்த ஒரு வருகை என் முழு மனப்பான்மையையும் உடனடியாக மாற்றிவிட்டது. ஆண்டவரிடம் என்னை எடுத்துக் கொள்ளும் என்று கேட்பதைத் தவிர்த்து, அதற்குப் பதிலாக இந்தப் பெருங்கடனை தீர்ப்பதற்காக எனக்கு நல்ல சுகம் கொடுத்து பழைய நிலைக்கு என்னை கொண்டு வாரும் என்று கேட்கும்படி எனக்குள் தீர்மானம் செய்தேன்.

ஒரு பெரிய சமாதானம் பரலோகத்திலிருந்து என் ஆத்துமாவிற்குள் இறங்கியது. என்னை சுற்றிலும் ஆண்டவரின் பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளவும் முடிந்தது. அதுவரை அலையலையாய் எல்லாப் பக்கத்திலும் என்னை விழுங்குவது போன்றிருந்த அந்தகார இருள் முற்றிலுமாக மறைந்தது. வியாதியிலிருந்தும் நான் விடுதலை பெற்றேன்.

ஆம்! நோயைக் கொண்டுவரும் இந்த குறிப்பிட்ட துறை மிகவும் பயங்கரமானது. அத்தகைய சித்ரவதையான அனுபவம் ஒருவனுக்கு மரணத்தையும்கூட கொண்டு வர முடியும்.

2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான் தென்னிந்தியாவிலுள்ள மதுரையில் என் மகன் பால் தினகரனுடன் பொதுக் கூட்டத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது நான் மிகவும் சுகவீனப்பட்டு மூன்று வாரங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தேன். அங்கு வேறொரு புதிய அனுபவத்தை சந்தித்தேன். அதிக வேதனையோடு இருக்கும்போது, வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் முழு சேனைகளும் (எபேசியர் 6:12) மருத்துவ மனையில் என் அறையை தங்களுடையதாக்கி கொண்டிருந்தன. மூன்று நாட்களாக என் ஆவியில் தடுமாற்றத்தை உணர்ந்தேன். என் மகன் பால் தினகரன், எங்கள் மீது அக்கறை கொண்ட ஜெபவீரர்களையெல்லாம் 24 மணி நேர உபவாச ஜெபத்திற்கு அழைத்து, தொடர்ந்து விண்ணப்பங்கள் ஏறெடுக்க ஒழுங்கு செய்திருந்தான். ஆண்டவருக்கு நன்றி. மூன்று நாட்களுக்குப் பிறகு, தீய சக்திகள் யாவும் ஓடி மறைந்தன. படிப்படியாக நான் முழு சுகம் பெற்று, புதிய சுவாசத்தை எல்லாவிதத்திலும் பெற்றேன்.

எப்பொழுதெல்லாம் இப்படிப்பட்ட நெருக்கங்கள் வழியாக நான் கடந்து செல்லுகிறேனோ, அப்பொழுதெல்லாம் என் வாழ்க்கையை பின்வரும் வேத வசனத்தின்படி, ஆராய்ந்து பார்ப்பது என் வழக்கமாகிவிட்டது.

*...தாழ்வுகாலத்தில் சிந்தனைசெய்;*

*பிரசங்கி 7:14*

இந்த தீய சக்திகள் என் வாழ்வில் எப்படி பிரவேசித்தது என்று காண்பிக்கும்படி ஆண்டவரை நோக்கிக் கதறினேன். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் எனக்கு ஒரு வெளிப்பாட்டைக் கொடுத்தார். அதை நான் உங்களுக்கு விவரித்துச் சொல்ல விரும்புகிறேன். என்

அன்பான பெற்றோருக்கு, நான் ஒரே மகன். என்னுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்கள் என்னை மிகவும் அதிகமாக நேசித்தார்கள். என் தகப்பனார் தன்னுடைய ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு, என் தாயாரோடு எங்களுடன் வந்து தங்கினார். அதுவே எங்கள் வாழ்வில் மிகுந்த மகிழ்ச்சியான காலமாகும். இருந்தாலும், அந்த மகிழ்ச்சி அதிக காலம் நீடிக்கவில்லை. முதலாவது என் தாயார் ஒன்றன்பின் ஒன்றாக கடுமையான நோய்களின் வழியாக கடந்து சென்றார்கள். ஒருநாள் இரவில் என் தாயாரைக் கவனித்துக் கொண்டிருந்த பணிப்பெண் என்னை எழுப்பி, "நீங்கள் உங்கள் தாயாரை ஜீவனோடு பார்க்க விரும்பினால், இப்பொழுது என்னோடுகூட வந்து அவர்களை பார்த்துவிடுங்கள்" என்று அழைத்தாள். ஆகவே உடனடியாக என் தாயாரின் அறைக்கு விரைந்து சென்றேன். அங்கே அவர்கள் சுயநினைவற்ற நிலையில் மயக்கத்திலிருந்தார்கள். என் உள்ள உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அவர்கள் அருகில் சென்று, அவர்கள் காதில் "அம்மா" என்று மெதுவாக சொன்னேன். உடனே அவர்கள் தெளிவு பெற்றார்கள். அவர்கள் கண்கள் மூடியிருந்தபொழுதிலும், என்னிடம் மிகவும் அன்புடன், "மகனே, சாப்பிட்டாயா" என்று கேட்டார்கள். நான் பதிலளிப்பதற்கு முன்பாக, மீண்டும் அவர்கள் சுயநினைவை இழந்து போனார்கள். மரணத் தருவாயிலிருந்த அந்த நேரத்திலும், என்மீது அவர்களுக்கு இருந்த அன்பும் அக்கறையும் உண்மையிலே என் இருதயத்தை உடைத்தது.

நீண்ட நாட்கள் அவர்கள் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாளும் அவர்களை சென்று நான் பார்ப்பதுண்டு. அவர்கள் நினைவிழந்த நிலையிலிருந்ததால், அவர்களால் என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. இந்த சமயத்தில் பல மாதங்களுக்கு முன்பே நான் ஒப்புதல் கொடுத்திருந்த சிவகாசியில் மிகப் பெரிய சுவிசேஷக் கூட்டங்களை நடத்துவதற்கு செல்ல வேண்டியதாக இருந்தது. என் தாயார் சுகம் பெறுவதற்கான எந்தவொரு அறிகுறியுமில்லாததால், சமாதானத்துடன் அந்த கூட்டங்களுக்கு செல்ல என்னால் தீர்மானிக்க முடியவில்லை. என்றாலும், மருத்துவர்கள் என்னிடம், "சமாதானத்தோடு போய் வாருங்கள். நீங்கள் திரும்பி வரும்போது நிச்சயமாகவே உங்கள் தாயார் முற்றிலும் சுகமடைந்தவர்களாக இருப்பார்கள்" என்று உறுதியளித்தார்கள். எனவே நான் கூட்டங்களுக்கு கடந்து சென்றேன். கூட்டங்களின் மூன்றாம் நாளில், என் தாயார் மரித்துவிட்டதாக எனக்கு செய்தி கிடைத்தது. எனவே விரைந்து வீட்டிற்கு திரும்பி, கண்ணீரோடு அவர்களை நல்லடக்கம் செய்துவிட்டு, சிவகாசி கூட்டத்தை நிறைவு செய்யும்படி மீண்டும் திரும்பிச் சென்றேன். அது, 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் நாள்.

இதேபோன்ற காரியம், என் தகப்பனாருக்கும் நேரிட்டது. நான் தேவ ஊழியத்தினிமித்தம் வெளிநாட்டிற்கு சென்றிருந்தபோது, எதிர்பாராத விதமாக அவர் கீழே விழுந்து, இடுப்பு எலும்பு முறிந்து விட்டது. என்றாலும் என் உறவினர்கள் அவரை உடனடியாக மருத்துவ மனையில் சேர்த்து அவரை நன்றாகக் கவனித்து வந்தார்கள். ஒரு சிறந்த எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவரின் பராமரிப்பில் இருந்தார். நான் வெளிநாடு கூட்டங்களை முடித்து திரும்பிய பின்னரும் என் தகப்பனார் இன்னும் மருத்துவமனையில்தான் இருந்தார். அவர்க ளால் என்னை பார்க்க முடிந்தாலும், அவர்களால் பேச முடியவில்லை. கண்களிலிருந்து கட்டுக்கடங்காமல் கண்ணீர் வடியும். அந்தக் காட்சி என் உள்ளத்தை உடைக்கும். அந்த சூழ்நிலையிலும்கூட ஈரோடு என்னும் நகரத்தில் நான் கூட்டங்களை நடத்துவதற்கு புறப்பட வேண்டியதாயிருந்தது. மீண்டும் மருத்துவர்கள் என்னிடம், என்னுடைய தகப்பனாருக்கு ஒன்றும் நேரிடாது என்றும் சமாதானத்துடன் போய் வரும்படி உறுதியளித்தார்கள். ஆனால் ஐயோ, அவர்கள் சொன்னதற்கு மாறாக, 1992ஆம் ஆண்டு அக்டோபர் முதலாம் தேதியன்று அவரும் என் தாயாரைப் போன்றே நினைவிழந்த நிலையில் மரித்துப் போனார். நான் திரும்பி வந்தபோது, அவருடைய உயிரற்ற சடலத்தைத் தான் பார்க்க முடிந்தது. நான் கதறி அழுதேன்.

இப்பொழுது, அநேக வருடங்கள் கடந்துபிறகு, நான் மருத்துவ மனையிலிருந்தபடி என் வாழ்வை சோதித்து பார்த்தபோது, பரிசுத்த ஆவியானவர் என் தாய், தகப்பனின் கடைசி நாட்களின் காட்சியை என் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வந்தார். அதன் முக்கியத்து வத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அப்பொழுது ஆண்டவர் என்னிடம், "மகனே, என்னுடைய ஊழியத்தை செய்வதற் காகவே, உன் பெற்றோரை நினைவிழந்த நிலைமையிலும் விட்டு சென்றாய்; என்னைப் பொறுத்தவரையில் உன்னை குற்றப்படுத்து வதற்கு ஒன்றுமில்லைதான்! இருப்பினும், அவர்களுக்கு நீ ஒரே மகன் என்பதால், அவர்களது உள்ளத்தில் உன்னைப் பற்றிய நினைவே அவர்கள் வாழ்க்கையின் மையமாக அமைந்தது. ஆண்டாண்டு காலமாக அவர்கள் உனக்கு காண்பித்த கைம்மாறு கருதாத அன்பிற்கும், பாசத்திற்கும் பிரதிபலனாக, அவர்களுடைய கடைசி தருணத்தில் உனது அன்பிற்காகவும், பாசத்திற்காகவும் ஏங்கினார்கள். அவர்கள் அதை பெறவில்லை என்றதும், அவர்களுடைய உள்ளத்தின் ஆழத்தில் கசந்து கொண்டார்கள். **என் மகனுக்காக எவ்வளவோ செய்தேன். ஆனால், நான் இந்த உலகத்தின் விளிம்பை கடந்து செல்லும்போது, என் அருகிலிருக்கும்படி அவன் கவனமாயிருக்க வில்லையே** என்று மனதிற்குள் யோசிப்பதற்கு கட்டாயப்படுத்தப் பட்டனர். மனதில் இந்த கசப்புடன் உன் தாயாரும், தகப்பனாரும் மரித்தார்கள். இந்த கசப்பானது, உன்னை வாட்டி வதைத்து இந்த எல்லா வேதனையான சூழ்நிலைகளையும் உன் வாழ்க்கையில்

கொண்டு வந்திருக்கிறது'' என்று கூறினார். மெய்யாகவே அந்த வார்த்தைகள் என் உள்ளத்தை உடைத்தது. வேதத்திலுள்ளப் பின்வரும் வசனங்களை அப்பொழுது நினைவு கூர்ந்தேன்:

உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே.

நீதிமொழிகள் 23:22

ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

I தீமோத்தேயு 5:8

நான் ஆண்டவரிடம், ''ஆம், நான் என் பெற்றோரிடம் கேடான சிந்தை கொண்டவன் போல் நடந்துகொண்டிருக்கிறேன்'' என்று அறிக்கையிட்டேன். மருத்துவமனையில் தனிமையில் அமர்ந்து அழுதேன், அழுது கொண்டேயிருந்தேன். என்னை வேதனைப் படுத்திய நோய்க்கு நடுவே, ஆண்டவர் ஒருவரால் மட்டுமே என் வாழ்விலுள்ள ஒவ்வொரு சாபத்தையும் நீக்க முடியும் என்று அவரிடம் இரக்கத்திற்காக கெஞ்சினேன்.

இவ்வாறு நான் மூன்று நாட்கள் அழுத பிறகு, மரித்துப்போன என் தாய் தந்தையரின் மனதிலிருந்த கசப்புகளினால் உண்டான சாபத்தை நீக்குவதாக ஆண்டவர் உறுதியளித்தார். அவர் எனக்கு சுத்தமான, தெளிந்த நல்மனச்சாட்சியையும் மனசமாதானத்தையும் அருளினார்.

அதன்பின், என் மனதுக்கும், ஆத்துமாவுக்கும் கிடைத்த விடுதலை எவ்வளவு பெரியது! என் முழு அறையின் சூழ்நிலையும் மாறிற்று. என் இருதயம் இலகுவாயிற்று! முழு சுகம் பெற்று, விரைவில் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினேன். என் அருமை சகோதர, சகோதரிகளே! நமது எஜமானாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் போலவே நம் வாழ்வை, எல்லா காரியங்களிலும் தூய்மையானதாய் வைத்துக்கொள்வோம். பின்வரும் அவருடைய கூற்று, நம்முடைய வாழ்வின் மாதிரியாகவும் இருக்கட்டும்.

இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.

யோவான் 14:30

## புலம்பும் ஒரு கூட்டம்

'சாத்தானுடைய ராஜ்யத்தின்' மற்றொரு பகுதியில் மனந்திரும்பாமலேயே மரித்துப்போன மக்களின் ஆவிகளைப் பார்த்தேன். அந்த இடத்தில் மங்கலான ஒரு வெளிச்சம், அதாவது மாலை நேர

வெளிச்சத்திற்கு அது ஒத்திருந்தது. இந்த வெளிச்சத்துடன் ஜோடி சேர்ந்தாற்போல் இருள் சூழ்ந்த ஒரு பகுதியும் பின்வரும் வேத வாக்கியங்கள் கூறுவது போலிருந்தது:

> ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.
>
> *மத்தேயு 8:12; 25:30*

கூட்டமாக காணப்பட்ட இந்த ஆவிகள், இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள மறுத்தபடியால், அவர்கள் வந்து சேர்ந்துள்ள இருள் நிறைந்த பரிதாபமான இடத்தை எண்ணி மிகுந்த துக்கத்துடன் புலம்பிக் கொண்டிருந்தன. அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த எல்லாத் தருணங்களையும் உதறித் தள்ளி, இயேசுவால் கொடுக்கப்பட்ட சுவிசேஷ செய்திகளையும் இரட்சிப்பையும் அசட்டை செய்தவர்கள். **அழிந்துபோன இந்த இலட்சக்கணக்கான மக்களின் ஆவிகள்** "ஐயோ! என்னுடைய இரட்சிப்புக்கு கொடுக்கப்பட்ட சிலாக்கியங்களை நிரந்தரமாக நழுவ விட்டு விட்டேனே" என்று ஓலமிட்ட துயரக்குரல், என் உள்ளத்தை சுக்குநூறாக உடைத்தது.

மேலும் இந்த ஆவிகளின் மனதை இன்னும் அதிகமாக பாதிப்பதற்காக, பொங்கி வழியும் மகிழ்ச்சியினாலும், சர்வவல்லமையுள்ள பிதாவின் பிரசன்னத்தினாலும் நிறைந்திருக்கும் பரலோகத்தை அவ்வப்போது எட்டிப்பார்க்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள். பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு அவர்களுக்கு கிடைத்த எல்லா சந்தர்ப்பங்களையும் இழந்துவிட்டதினால் அடைந்த வேதனைகளை மேலும் தூண்டிவிட்டு அவர்களை ஓலமிடச் செய்யவே இப்படி நடத்தப்படுகிறார்கள் *(லூக்கா 16:23)*.

உயர்ந்த பதவிகளில் மிகுந்த செல்வாக்குடன் இவ்வுலகத்தில் வாழுகிறவர்களுக்கும், அறிவாற்றல் உடையவர்களுக்கும் சிலுவையில் இயேசு கிறிஸ்துவால் உண்டான இரட்சிப்பு, இலவசமாய் கொடுக்கப்பட்டும், அதை ஏற்றுக் கொள்வது அவர்களுக்கு மிக அரிதாகி விடுகிறது என்பது நிச்சயமாகவே வருத்தத்திற்குரியதாகக் காணப்படுகிறது. இதைக்குறித்து கிருபையுள்ள ஆண்டவர் இயேசுவும் வியப்புடன் பின்வரும் கருத்தை வெளியிடுகிறார்.

> ...ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது! ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்.
>
> *மாற்கு 10:24,25*

நாங்கள் நரகத்தில், மேலும் தொடருகையில், உலகில் ஒரு குறிப்பிட்ட நாட்டின் தலைவராக மிகவும் வல்லமையோடும் அதிகாரத்தோடும் வாழ்ந்த ஒரு மனிதனுடைய ஆத்துமா நரகத்திற்குள்

வந்து சேருவதைக் கண்டோம். அவர் ஒரு மிகப்பெரிய ஜனக் கூட்டத்தின் நடுவே, எல்லாப் பக்கங்களிலுமிருந்து வந்த மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே, பெரிய மோட்டார் வாகனத்தில் ஊர்வல மாகக் கொண்டு செல்லப்படும் வேளையில், திடீரென்று மறைந் திருந்து அவர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். அந்த ஆத்துமாவுக்கு தன் சரீரம் கொல்லப்பட்டுவிட்டது என்பதை தெளிவாக உணர்ந்து கொள்ள முடியாத நிலை. எப்பக்கத்திலுமுள்ள மக்கள் கூட்டத்தாரின் ஆர்ப்பரிப்பை எந்தவிதத்திலும் அந்த ஆத்துமா இழந்துவிடக் கூடாது என்று சாத்தானின் தூதர்கள் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கிறார்கள். அந்த ஊர்வலம் மேலும் தொடருகிறதென்ற ஓர் எண்ணத்திலேயே அந்த ஆத்துமாவை சாத்தானின் தூதர்கள் மூழ்கச் செய்தனர். எப்படியும், நரகத்தின் வாயிலை நெருங்கியபோது, அந்த பெரிய தலைவரின் ஆத்துமா உள்ளே கொண்டு வரப்பட்டபோது அவரை சுற்றியிருந்த **பொய்யான போற்றுதல்,** திடீரென்று மறைந்தது. அங்கு தங்கியிருந்த நரகவாசிகளின் தீய சக்திகள் எப்பக்கத்திலும் கேலியும் பரியாசமும் செய்து தங்கள் நச்சுத் தன்மையைக் காட்டத் தொடங்கின. அப்பொழுதுதான், தவறாக வழிகாட்டப்பட்ட அந்த ஆத்துமாவுக்கு, தான் முற்றிலுமாக வேறுபட்ட ஓர் இடத்திற்கு வந்திருப்பதும், **தங்குவதற்கும் ஏற்ற இடம்** அதுவல்ல என்றும் மனதில் உதித்தது. அந்தோ! அந்த உணர்வுக்குப் பின் அவர் முகத்தில் தோன்றிய பெருந்துயர், ஏமாற்றம், வேதனை இவைகளை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது. அவை பரிதாபமானதும் நெஞ்சைப் பிளப்பவையுமாயிருந்தது. இது எத்தனை பெரிய வீழ்ச்சி!

## அக்கினிக் கடல்

'சாத்தானின் வாசஸ்தலத்தின்' வேறொரு பகுதியில் ஒரு திரவம் போன்ற அக்கினிக் கடல், மூர்க்கமான அக்கினி ஜுவாலைகளுடன் காணப்பட்டது. பல மனித ஆத்துமாக்கள் இதனுள் சிக்கித் தவிப்ப தையும், வேதனைப்படுத்தப்படுவதையும் கண்டு அதிர்ச்சியடைந்தேன். அக்கினிக் கடலின் சுற்று எல்லையானது உலகத்தில் காணப்படும் வெண்மையான மணல் நிறைந்த கடற்கரை அல்ல. ஆனால் அவை மலைகளுடன்கூடிய பாறைகள். வேதனைப்படும் சில ஆவிகள் கொதிக்கும் அக்கினி ஜுவாலைகளால் இந்த மலைப் பாறைகளின் மீது தூக்கியெறியப்படுகின்றன; அவைகள் தப்பிவிடலாம் என்னும் ஒரு தவறான நம்பிக்கையுடன் மலைப் பாறைகளைப் பற்றிப் பிடித்து முட்டிப்போட்டு மேலே ஏறுகின்ற வேளையில், அந்தோ! இந்த அக்கினி ஜுவாலைகள் உயிரோடு இருப்பதைப் போல் காட்சி கொடுப்பதோடு ஒரு சர்ப்பத்தைப்போல தன் நாக்கை நீட்டிக் கொண்டு மீண்டும் நெருப்புக் கடலுக்குள் இழுத்துக் கொள்கிறது. உதவியற்ற நிலையில் இந்த ஆவிகள் போடும் கொடிய சத்தம் (லூக்கா 16:24) விவரிக்க முடியாதது. அவைகள் எத்தனையோ

நாட்களுக்கு என் காதுகளிலே ஒலித்தும், எதிரொலித்தும் என் வாழ்வை உண்மையாகவே வேதனைப்படுத்தின.

## யூதாஸின் ஆத்துமா

இவையெல்லாவற்றோடுங்கூட, இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் என்ற சீஷனின் மன அமைதியற்றதும், பெருந்துயர் கொண்டதுமான ஆத்துமாவை நான் கூர்ந்து கவனித்த காட்சியை என்னால் மறக்கவே முடியாது.

யூதாசுடைய ஆத்துமா வைக்கப்பட்டிருந்த இடம், நிச்சயமாகவே நரகம் என்றாலும் வெகு தொலை தூரத்தில் ஒரு தனிமையான இடத்தில் உள்ளது. ஒரு தூதனோ, தீய ஆவியோ, அல்லது வேறெந்த நபரின் ஆத்துமாவோ அங்கு போக முடியாது. தேவ தூதன் இப்படியாக கூறினான், யூதாஸின் ஆத்துமா வேதனையான தற்கொலைக்கு பிறகு (மத்தேயு 27:5), நரகத்திற்கு வந்தபோது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நெருங்கிய சீஷர்களிலொருவனாகிய அந்த யூதாஸை இழிவுபடுத்தவும், மனவேதனைப் படுத்தவும், சாத்தான் தனக்கு கொடுக்கப்பட்ட அந்த பெரும் சந்தர்ப்பத்தை நினைத்து மனம் பூரித்துக் கொண்டிருந்தான். பெரு மதிப்பும், விலையேறப் பெற்றதுமான ஒரு நபரை, அதுவும் தேவ குமாரனின் சீஷனே நரகவாசியாகக் கிடைத்து விட்டாரென சந்தோஷமடைந்தான்.

இருப்பினும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, சாத்தானுக்கு ஒரு கண்டிப்பான கட்டளையை பின்வருமாறு கூறினாராம். "சாத்தானே, யூதாஸ் என்னுடைய தள்ளப்பட்ட சீஷன் தான். என்னை காட்டி கொடுக்கும்படி உன்னால் வஞ்சிக்கப்பட்டவன். எனவே அவனுடைய இரத்தப் பழியிலிருந்து உனக்கு முழு விடுதலை கிடையாது. ஆகவே அவனுடைய ஆத்துமாவை சித்திரவதையுள்ள இடங்களிலிருந்து புறம்பாக வை. நீயோ அல்லது உன் தீய தூதர்களோ அவனிடம் சென்று அவனை வேதனைப்படுத்த கூடாது. நீயோ உன் கூட்டாளிகளோ சென்றடைய முடியாத ஒரு தனி இடத்தில் வைக்கப்பட வேண்டும். நிச்சயமாக உலகத்தை நியாயந்தீர்க்கிற என் கடைசி வருகையன்று என் தீர்ப்பு அவன் மீது வரும்" என்று சொல்லியதாக தூதன் என்னிடம் சொன்னான்.

மீண்டும் ஒருமுறை யூதாஸை நான் உற்று நோக்கினேன். உண்மையாகவே வெகு தூரத்திலுள்ள ஒரு மூலையில் அவன் தன்னந்தனியே காணப்பட்டான். அவன் மனஅமைதியற்றிருந்தான். சிறிது நேரம் உட்கார்ந்திருப்பான். பின்பு திடீரென்று குதித்து அலறுவான். "நான் அவரை (இயேசுவை) காட்டிக் கொடுத்தேன், நான் அவரை (இயேசுவை) காட்டிக் கொடுத்தேன்" என்று தன் தலையை அவனுடைய கரங்களுக்கிடைய வைத்து உரத்தகுரலில்

அழுது புலம்புவான். சிறிது நேரம் அப்படியே அமைதியாக உட்கார்ந்து இளைப்பாறுவான். மீண்டும் மாபெரும் தேவ குமாரனை காட்டிக் கொடுத்த அந்த வேதனையான நினைவுகூருதல் தொடரும். அவன் அலறுவான்.

**நரகம் என்பது உண்மையானது, கொடுமையானது என்பதை நான் எழுத்துப் பூர்வமாக புரிந்து கொண்டேன்.**

உள்ளம் உருக்கும் இக்காட்சிகளைக் காண்பித்து முடித்தபின்பு, இந்த இடத்தை விட்டு பூவுலகில் என் வீட்டிற்கு கொண்டுவிடுமுன், தேவதூதன் என்னிடம், "இப்பொழுது வேடிக்கைப் பார்" என்று சொன்னான். மிக மிக மெதுவான குரலில் "இயேசு" என்று கிசுகிசுத் தான். அவ்வளவுதான், உடன்தானே அந்த முழு பிசாசின் சேனையும் குதித்தெழுந்தது முற்றிலும் நிலை குலைந்துபோய், மனபலம் இழந்து சமாளிக்க முடியாமல் திடுக்கிட்டு அசைவற்று நின்றன. செவிகளை மேலும் கவனப்படுத்திக் கொண்டு ஒருங்கே சேர்ந்த குரலில் அவைகள், "அவர் வந்து விட்டாரா? அவர் வந்து விட்டாரா?, காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த அவர் வந்து விட்டாரா?" என்று வினவின. (மத்தேயு 8:29).

ஆம், நம் ஆண்டவராகிய இயேசுவின் நாமம், தீய ஆவிகளை பயத்துடன் நடுநடுங்கச் செய்கிறது. ஆகவே தான், நமது இரக்கமுள்ள இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட போகுமுன், தம் இறுதியான ஆசீர்வாத வார்த்தையை தம்மை நம்புகிறவர்களுக்கும், அவருடைய போதனைகளை பின்பற்றுகிறவர்களுக்கும் பின்வருமாறு சொல்கிறார்:

*...என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்;...*

*மாற்கு 16 :17*

எனக்கு அன்பானவர்களே, பரிசுத்த பவுல் எபேசியர் 6:12-ல் சொல்லுகிறபடி, 'வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு'. இவையெல்லாவற்றி லேயும் இயேசுவின் நாமத்தினாலே பொல்லாத ஆவிகளின் மீது எப்போதும் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருப்போம் (ரோமர் 8:37, I கொரிந்தியர் 15:57, பிலிப்பியர் 2:10,11).

# உண்மையுள்ள உத்தமரின் தொடுதல்

# 10

*நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்க மாட்டார்.* II தீமோத்தேயு *2:13*

மேலே கொடுக்கப்பட்டுள்ள வசனம், "உண்மை" என்ற பதத்திற்கு எல்லாவிதத்திலும் துல்லியமான சத்தியமானதாகும். நம்முடைய உண்மையில்லாத தன்மையை விளக்க, ஓர் உண்மை சம்பவத்தை இங்கு நான் சொல்லட்டும்.

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, சிறுமி ஒருவள், நன்கு உடை உடுத்திக்கொண்டு தன் பெற்றோருடன் தேவாலயத்திற்கு செல்ல ஆயத்தமானாள். அவளது தாயார், அவளிடம் இரண்டு நாணயங்களை கொடுத்து, ஒன்றை ஆலயத்தில் காணிக்கை தட்டு அவளிடம் கடந்து வரும்போது ஆண்டவருக்கு கொடுக்கவும், மற்றொன்றை ஆராதனை முடிந்தபிறகு வரும் வழியில் ஒரு கோப்பை ஐஸ்கிரீம் வாங்கிக் கொள்வதற்காகவும் கொடுத்தார்கள். அச்சிறுமி, மிகுந்த மகிழ்ச்சியோடு பெற்றோருடன் தேவாலயத்திற்கு சென்றாள். அவ்விரு நாணயங்களையும் தன் வலது கையில் வைத்துக் கொண்டு பாதையில் நடக்கும்போது விளையாடிக் கொண்டே சென்றாள். துரதிஷ்டவசமாக, ஓடை ஒன்றை கடந்து செல்லும்போது, ஒரு நாணயம் ஓடையினுள் விழுந்து மறைந்தது. அச்சிறுமி இருதயத்தில் மிகவும் வருத்தத்துடன், "ஆ கடவுளே! உம்முடைய நாணயம் அதோ போய் விட்டதே" என்றாள்.

இவ்விதமாகவே, தேவனையும் தேவனுக்குரியவைகளையும் நாம் நடத்துகிறோம். **தேவனுக்கும், தேவனுடைய காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதில் நாம் உண்மையாயிருப்பது மிக மிக குறைவே. ஆயினும், தேவன் எல்லா சூழ்நிலையிலும் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்.**

மனதை உருக்கும் ஒரு கதையை நான் எப்பொழுதும் நினைவு கூருவதுண்டு. ஒரு குறிப்பிட்ட நகரத்தில், ஒரு விதவைத் தாயார், "ஜேன்" என்ற தன் ஒரே மகளுடன் வாழ்ந்து வந்தார்கள். ஒவ்வொரு நாளும் தன் மகளுடைய படிப்பிற்காக பல மணி நேரங்கள் கடினமாய் உழைத்து, அதில் கிடைக்கும் வருமானத்தில் அவளை படிக்க வைத்தார்கள். அந்த பெண் தன் பட்டப் படிப்பை முடித்தவுடன் மற்றொரு பட்டணத்திற்குச் சென்று, வேலை தேடும்படி விரும்பினாள். அவள் தன் தாயாரிடம், "நான் வேறொரு பட்டணத்திற்கு சென்று அதிகம் சம்பாதித்து பின்பு திரும்பி வந்து நாம் இருவரும் சேர்ந்து வசதியாக வாழலாம்" என்பதாகக் கூறினாள்.

அதேபோல் அவள் ஒரு பெரிய பட்டணத்திற்கு சென்று நல்ல தொரு பணியில் அமர்ந்தாள். ஆயினும், அந்த நகரத்திலுள்ள ஈனமான சில இளைஞர்களால் கவர்ந்து இழுக்கப்பட்டாள். தனக்கு தாயார் என்று ஒருவர் உலகில் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தையே மறந்து போனாள். உலகப் பிரகாரமான பாவ சிற்றின்பங்களில் மூழ்கினாள். இறுதியாக ஒவ்வொரு வகையிலும் தன் அழகையெல்லாம் இழந்த வளாக சமுதாய வாழ்வில் அவள் தேவையற்றவள் என்று தள்ளப்படும் பரிதாப நிலைமைக்கு வந்தாள். மனத்துயரமும் தனிமை உணர்ச்சியும் அவளை வருத்திய நேரத்தில்தான், அவள் தன் தாயின் அன்பை நினைவு கூர்ந்தாள். தன் தாயின் அன்பையும், அரவணைப்பையும் பெற ஏக்கம் கொண்டவளாய் வீட்டிற்கு திரும்பி சென்று தன் தாயை சந்திக்க தீர்மானித்தாள்.

அவள் தன் இல்லத்தை வந்தடைந்தபோது, வீட்டுத் தோட்டம் காய்ந்து போய் கவனிப்பாரற்று இருப்பதைக் கண்டாள். தோட்டத்து வாசல் கதவைத் தள்ளி, தோட்டத்தின் வழியே நடந்து வீட்டை அடைந்தாள். தயக்கத்துடன் படிகள் ஏறிய அவள், முன் கதவு லேசாக திறந்திருப்பதைக் கண்டாள். உள்ளே எட்டிப் பார்த்தபோது, ஒரே இருள். எனினும், வாசல் கதவைத் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்தாள். தன் கண்களை கஷ்டப்படுத்தி தாயார் இருக்கும் இடத்தை தேடி கண்டுபிடிக்க முயற்சித்தபோது, அவளுடைய அருமை தாயாரின் பெலவீனமான குரல், "உள்ளே வா ஜேன், உள்ளே வா" என்று ஒலித்தது. உடனடியாக அந்தக்குரல் வந்த திசையை நோக்கி ஓடி, பட்டினியால் வாடி, நலிந்த உடலுடன் கட்டிலில் தாயார் ஆதரவற்று படுத்திருக்கிறதைக் கண்டாள் ஜேன். தாயாரின் மீது விழுந்து, அவர்களுக்கு முத்தமிட்டு தேம்பித் தேம்பி அழுதாள். தாயார் மிகவும் கஷ்டப்பட்டு பதில் முத்தங்களை அவள் மீது பொழிந்தார்கள்.

ஜேன் தன் தாயாரிடம் வியப்போடு, "அம்மா, இத்தனை வருடங்கள் கழித்தும், உங்கள் ஜேன் தான் மீண்டும் வந்திருக்கிறாள் என்று எப்படி கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டாள். அதற்கு தாய் புன்முறுவலுடன், "என் குட்டி ஜேன் எப்படி தோட்டத்து வாயிற் கதவைத் திறந்துகொண்டு, துள்ளி உள்ளே வருவாள் என்று எனக்குத் தெரியாதா என்ன? ஆஹா, அந்த மென்மையான காலடி ஓசையைக் கேட்பதற்காக நான் இத்தனை ஆண்டுகளாக எப்படி காத்துக் கொண்டிருந்தேன்!" என்று பதிலளித்தார்கள். ஜேனுடைய இருதயம் உண்மையில் நொறுங்கிற்று. தன் வாழ்வில் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்தாள்.

நாம் எவ்வளவு உண்மையற்றவர்களாக இருந்தாலும், ஜேனுடைய தாயாரைப் போலவே ஆண்டவர் தம்முடைய அன்பை நம்மிடத்தில் காண்பிப்பதில் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

## பரிசுத்தத்தில் உண்மை

*நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.* I யோவான் 1:9

இந்த வேத வாக்குக்கேற்ப, எவனொருவன் தன் பாவங்களின் மன்னிப்புக்காக ஆண்டவரிடத்தில் வருகிறானோ, அவன் சுத்திகரிக்கப்பட்டு ஆண்டவரிடத்தில் பலத்தினாலே (I பேதுரு 1:5) பின்வரும் வேத வசனங்களின்படி, காக்கப்படுகிறான்.

*சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.* I தெசலோனிக்கேயர் 5:23,24

திரு. ரிச்சர்ட் நிக்ஸன், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக இருக்கையில் அவருக்கு எதிராக "வாட்டர் கேட் ஊழல்" என்ற பொய் குற்றசாட்டு எழுந்தது. அவருடைய சக ஊழியர்களும், பல அரசியல்வாதிகளும் இந்த ஊழலில் பங்குள்ளவர்களாக பிடிப்பட்டு வெவ்வேறு விதங்களில் தண்டிக்கப்பட்டனர். சிலர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். திரு.நிக்ஸனின் நம்பிக்கைக்குரிய நண்பராகிய திரு.சக் கோல்சன் என்பவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. திரு.கோல்சன் அந்த சிறை வாசத்திற்கு சில நாட்களுக்கு முன்புதான், ஆண்டவரிடம் தன் இருதயத்தை ஒப்புக் கொடுத்திருந்தார். நாட்கள் கடந்தன. அவர் தேவனிடம் தன்னை எப்படியாவது வெளியே கொண்டு வர வேண்டுமென்று பல மாதங்களாக மன்றாடினார். ஒருநாள் அவர் மிகவும் மனமுடைந்து, "தேவன் எங்கே இருக்கிறார்?" என்று கதறும் நிலைக்கு உள்ளானார்.

அந்த வேளையில் தானே, அவரது நண்பர்கள் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியான திரு.ஜெரால்டுஃபோர்டு அவர்களிடமிருந்து ஒரு செய்தியோடு ஓடி வந்தார்கள். அச்செய்தியைக் கேட்ட திரு.கோல்சன் ஸ்தம்பித்து பேச்சற்று நின்றார். ஏனெனில், **ஜனாதிபதி மன்னிப்பு உத்தரவை** கொடுத்திருந்தார். திரு.கோல்சன் ஆண்டவரின் அன்பின் உத்தமத்தை உணர்ந்து, தன்னுடைய எஞ்சிய வாழ்நாட்களை ஆண்டவரின் ஊழியத்திற்காகவே நன்றியுடன் அர்ப்பணித்தார்.

## ஐக்கியத்தில் உண்மை

*தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.* I கொரிந்தியர் 1:9

...எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.
I யோவான் 1:3

ஆம், இவ்விரு வசனங்களுக்கேற்ப, தேவன் நம்மை தம்முடனும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடனும் நாம் ஐக்கியமாயிருப்பதையே விரும்புகிறார். அதை செய்வதில், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். நமது வாழ்வு அவருடைய ஜீவனோடு பிணைக்கப்பட்டிருக்கிறது என்பது கீழே கொடுக்கப்பட்டுள்ள இரு வேத வாக்கியங்களில் அடங்கியுள்ளது.

நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். எபேசியர் 5:30

அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். I கொரிந்தியர் 6:17

ஆம், பரிசுத்த ஆவியானவர், நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை உயிர்த்தெழுந்த ஆண்டவரோடு இணைத்து வைக்கிறார்.

பல வருடங்களுக்கு முன், தேவ ஊழியத்திற்காக நான் சுவிட்சர்லாந்து நாட்டிற்குச் சென்றேன். அங்கு ஊழியம் செய்கையில், இரண்டு சகோதரர்கள் ஜெபத்திற்காக என்னிடம் கொண்டு வரப்பட்டனர். அவர்களுடைய பிரச்சனை மிகவும் விசித்திரமானது. மூத்த சகோதரருக்கு அவ்வப்போது ஒரு வினோதமான தலைவலி வரும். எப்பொழுதெல்லாம் தாங்க முடியாத தலைவலி அவருக்கு தோன்றுகிறதோ, அப்பொழுதெல்லாம், அவர் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் வேதனை நீங்குவதற்காக அருகில் உள்ள சுவரில் போய் தலையை முட்டிக்கொள்வார். அவருடைய இளைய தம்பி, அவரை முழு இருதயத்தோடு நேசித்தவர். தன் அண்ணன் சுவற்றில் போய் தலையை முட்டுவதை தடுப்பதற்காக அண்ணனுடைய கால்களை சுவற்றிலிருந்து பிடித்து இழுப்பார். ஒவ்வொருநாளும் இந்த காரியம் பலமுறை மீண்டும் நடந்தது. நாட்கள் கடந்தபின், எப்பொழுதெல்லாம் அண்ணனுக்கு தலையில் வலி வருமோ, அப்பொழுதெல்லாம் இந்த இளைய சகோதரனுக்கு அதே வலி அவனுடைய கைகளில் தோன்றும். அவனும் வலியால் துடிப்பான். ஆனாலும் தன் அண்ணனுக்கு உதவ ஓடுவான்.

இந்த இரு சகோதரர்கள் பட்டப்பாடுகளை விவரிக்கவே முடியாது. ஆம், அவர்களிடையே இருந்த இந்த அன்பின் பிணைப்பு, **அழுகையின் பள்ளத்தாக்கின் வழியே** நடக்க செய்தது (சங்கீதம் 84:5,6). இவ்வாறான ஐக்கியத்தையே, I யோவான் 1:3ல் விவரித்ததுபோல் தேவன் நம்மோடு வைத்துக் கொள்ள விரும்புகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை "அவருடைய சகோதரர்" என்று அழைக்கிறார் (மத்தேயு 12:49,50, எபிரெயர் 2:11). இந்த உலகில் நாம் துன்பப்படும்

போது அவர் நம்முடைய நெருக்கங்களை தம்மீது ஏற்றுக்கொள்ளு கிறார் *(ஏசாயா 63:9)*.

நம்முடைய பாவங்களை அவர் ஏற்றுக்கொண்டு, அவரே நமக்காகப் பாவமானார் என்று II கொரிந்தியர் *5:21* கூறுகிறது. நம்முடைய தரித்திரத்தை அவர்மேல் ஏற்றுக்கொண்டு, அவரே நமக்காக தரித்திரரானார் *(II கொரிந்தியர் 8:9)*. கலாத்தியர் *3:13*-ல் நாம் வாசிப்பதென்னவென்றால், அவர் மனுக்குலத்தின் சாபம் அனைத்தையும் தம்மேல் ஏற்றுக்கொண்டு, தாமே சாபமானார்.

## வாக்குத்தத்தங்களில் உண்மை

> *அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.* எபிரெயர் *10:23*

> *விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி...* எபிரெயர் *11:11*

> *எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.*
> II கொரிந்தியர் *1:20*

அவருடைய பரிசுத்த ஆவிக்காக ஏங்கும் அனைவருக்கும் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் அருமையான வாக்குத்தத்தத்தை நான் உதாரணமாகக் குறிப்பிடட்டும்.

> *பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.* லூக்கா *11:13*

பதின்மூன்று வயது நிரம்பிய என் பேரன் சாமும், பதினொரு வயது நிரம்பிய என் பேத்தி ஷேரனும், அந்த இளம் வயதிலேயே பரிசுத்த ஆவிக்காக தாகத்தோடு காத்திருந்தார்கள். அவர்கள் தேவனின் வாக்குத்தத்தத்தை விசுவாசித்தார்கள். ஒரு சமயம், ஆண்டவருடைய வல்லமையை எல்லாவிதத்திலும் தாகத்தோடு தேடும் சுவிசேஷகர்களுக்கென்றே ஒரு சிறப்பு கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தோம். அதில், நூற்றுக்கணக்கான அநுபவமிக்க தேவ ஊழியர்களுக்கு மத்தியில் இந்த இரண்டு இளம் பிள்ளைகளும் மண்டியிட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுமாறு தேவனை நோக்கி அழுதது மிகவும் ஆச்சரியமாயிருந்தது. தேவன் மிகவும் இரக்கப்பட்டு, அவருடைய பரிசுத்த ஆவியை இருவருக்கும் தந்தருளினார். இன்று நற்செய்தியைப் பிரசங்கிக்க தங்கள் பெற்றோருடன் உலகம் முழுவதும் செல்கிறார்கள்.

ஆம், பரிசுத்த ஆவி அருளப்படுவதைக் குறித்த தேவனின் வாக்குத்தத்தம் அவர்களுடைய வாழ்வில் எழுத்துப்பூர்வமாக சிறு வயதிலேயே நிறைவேறிற்று.

அதேபோல், ஒவ்வொரு தேவ பிள்ளைக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட பரலோக வீட்டைக் குறித்த ஆண்டவராகிய இயேசுவின் வாக்குத்தத்தமும் நிறைவேறும் என்று எதிர்பார்க்க முடியும் என்பதை பின்வரும் வசனம் கூறுகிறது.

> என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். யோவான் *14:2,3*

"பல வருடங்களுக்கு முன், ஒரு நாத்திகர் என்னிடத்தில் ஒரு கடினமான கேள்வியை எழுப்பினார். அவர், "தினகரன், பூலோகத்தையும், பரலோகத்தையும் பற்றிய **தேவ வார்த்தையின் உண்மையை** நீங்கள் எப்பொழுதும் அழுத்தமாக சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஒருவேளை இந்த தேவ வார்த்தை பொய்த்துவிட்டால், என்ன செய்வீர்கள்?" என்றார். பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு நான், "என் சகோதரனே, வேதபுத்தகமானது, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் கோள்களைப் பற்றிக் கூறியிருக்கிற அனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மையாக உள்ளது. அதேபோல், என் ஆத்துமாவைக் குறித்து அது என்ன கூறினாலும், அதுவும் உண்மையாகத் தான் இருக்க முடியும்" என்று பதிலளித்தேன். அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் சந்தேகமின்றி என் பதிலை ஏற்றுக்கொண்டார்.

என் அருமை சகோதர சகோதரிகளே, பரலோகம் என்று ஒன்று இருக்கிறது, நரகம் என்று ஒன்று இருக்கிறது என்று வேதம் விவரிக்கிறது. இவ்வுலக வாழ்க்கைக்கு பிறகு தேவ பிள்ளைகள் இளைப்பாறுவதற்காக பரலோகம் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. ஆண்டவர், பரலோகத்தை பரிசாக தருவேன் என்று கூறியதில் உண்மையுள்ளவராயிருக்கிறார். பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வாசஸ்தலத்தை ஏற்படுத்தி என்றும் அவருடன் நித்தியகாலமாய் வாழ அவர் கொடுக்கும் பரிசை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் உங்களிடத்தில் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். பின்வரும் அவருடைய வாக்கு, உங்களுக்காகவே என்றும் நிலைத்து இருக்கிறது!

> ... தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.
>
> வெளி *22:17*

# ஆசிரியரைப் பற்றி

Dr. டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள், கடந்த 52 ஆண்டுகளாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தேவ ஊழியராகத் திகழ்ந்தார். தன்னுடைய 20-வது வயதில் தன் வாழ்க்கையை கர்த்தரிடத்தில் அர்ப்பணித்தார். 1962, அக்டோபர் 10-ஆம் தேதியன்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முகமுகமாக தரிசித்து, மூன்று மணிநேரம் அவருடன் உரையாடும் பாக்கியம் பெற்றார். இது அவருடைய வாழ்வில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இயேசு கிறிஸ்துவின் அன்பும், மனதுருக்கமும் நிறைந்தவராகவும், உலகம் முழுவதிலும் கணக்கற்ற உள்ளம் உடைந்தோருக்கு நம்பிக்கையின் சிகரமாகவும் அவர் விளங்கினார். அவர் எங்கெல்லாம் பொதுக்கூட்டங்களில் உரையாற்றினாரோ அங்கெல்லாம் நமது கர்த்தராகிய இயேசுவின் நாட்களில் கூடினதுபோல, கடல் போல் மக்கள் வெகுவாகத் திரண்டனர்.

> அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும்படிக்கும்,
>
> (லூக்கா 6:17).

தேவன் அவ்வப்பொழுது பல தேசங்களைப் பற்றிய தம்முடைய திட்டங்களை அவருக்கு வெளிப்படுத்தியதால், ஆவிக்குரிய உலகில் அவர் 'கிழக்கத்திய தீர்க்கதரிசி' என்று அழைக்கப்பட்டார். எனவே, பல்வேறு நாட்டுத் தலைவர்களின் பெருமதிப்பையும் அவர் பெற்றார்.

தேவன் அவருக்கு கொடுத்திருந்த 20 அம்சங்கள் கொண்ட திட்டங்களுள் மிகவும் சிறப்பானது, 24 மணி நேர ஜெப கோபுர ஊழியம் ஆகும். மக்கள் தங்கள் துயர நேரத்தில் 24 மணிநேரமும் ஜெப உதவி பெறுவதற்கேதுவாய், இந்தியாவின் பல நகரங்களில் 21 ஜெபகோபுரங்களும், வெளி நாடுகளில் 6 ஜெபகோபுரங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன! இவரது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களுக்கு ஆறுதலாய் திகழ்கின்றன. இவரால் 1986-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சர்வதேச உறைவிட காருண்யா பல்கலைக்கழகத்தில் இன்று சுமார் 5,400 மாணவ மாணவியர் பயிலுகின்றனர்.

அவர் திறமை வாய்ந்த ஓர் எழுத்தாளர். அவருடைய புத்தகங்களில் ஒன்றான 'பரிசுத்த ஆவியின் வரங்கள்', மக்களின் வாழ்க்கையில் பெருமளவில் பயனளிக்கிற ஓர் சிறந்த புத்தகம். தேவகிருபையினால் அவருடைய ஊழியத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் கிறிஸ்துவின் அன்பும், மனதுருக்கமும் பாய்ந்து செல்வதினால் அவை ஒவ்வொன்றும் அறிவுக்கெட்டாத விதத்தில் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது.

தேவன், அவருடைய மகன் Dr. பால் தினகரனை இரட்டிப்பான ஆவியின் வரங்களினால் அபிஷேகித்துள்ளார். அவ்வண்ணமே அவரது துணைவியார் திருமதி ஸ்டெல்லா தினகரன், Dr. பால் தினகரனின் துணைவியார் திருமதி இவாஞ்சலின் பால், அவருடைய மூன்று பேரப்பிள்ளைகள் சாம், ஷேரன், ஸ்வீட்டி அனைவரும் ஊழியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உலகின் பல பகுதிகளிலுமுள்ள பங்காளர்களின் உதாரத்துவமான காணிக்கைகளால் இவ்வூழியம் தாங்கப்படுகிறது. பரலோகத்தைப் பற்றிய இந்நூல் அநேகரின் விருப்பத்திற்கிணங்க வெளியிடப்படுவதால் இதனைப் படிக்கும் ஒவ்வொருவரும் அபரிமிதமாய் ஆசீர்வதிக்கப்படுவது உறுதி.



கோடிக்கணக்கானோருக்காக
பிரார்த்தனை செய்யும்
**தினகரன் குடும்பத்தினர்**